# இதயம் சொன்ன விலை



...: ஆசிரியருக்கு ©

IDAYAM SONNA VILAI

By: Jai sakthi

First Edition: August, 2011

No. of Pages: 192

Paper used: 11.6 N.S. Book Print

விலை ரூ. 85/-

THIRUMAGAL NILAYAM
Old No.28, New No.13,
Sucons Apartments,
Sivapragasam Street,
T.Nagar, Chennai-600 017
Phone: 044-24342899, 24327696
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 8939475707
E-mail: saran_saran_2008@yahoo.co.in

Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166, 28446891

# இதயம் சொன்ன விலை

## அத்தியாயம் 1

''நல்லதுக்குத்தானேம்மா சொல்றேன்'' என்றார் திருமலை.

''நல்லதுக்குத்தாம்பா. ஆனா... இதெல்லாம் ரொம்ப யோசிக்க வேண்டிய விஷயம்'' என்றாள் ஜெயந்தி.

''இதப் பாரு ஜெயந்தி! இதைவிட நல்ல வசதியான இடம் நமக்குக் கிடைக்காது. சொல்றதைப் புரிஞ்சுக்கோ'' என்றார் திருமலை.

''அப்பா! வசதியான இடம்னாலே கொஞ்சம் யோசிக்கணும்பா... ஏன் தெரியுமா, நம்ம சக்திக்கு மீறின இடத்தில போய் இறங்கிட்டு நாளைக்கு அதனால வர்ற பிரச்னைகளைச் சந்திக்கிற நிலைமையில சிக்கிக்கக் கூடாது'' என்றாள் ஜெயந்தி.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. நான் விசாரிச்ச வரைக்கும் அங்க இருக்கிற பொண்ணுங்க எல்லாரையும் நல்லாத்தான் வச்சிருக்காங்க. எந்தக் குறையும் இல்ல. நகை, துணிமணி, கார், பங்களா, பெரிய வீடு... இனி என்ன வேணுங்கறே!'' என்றார்.

ஜெயந்தி அப்பாவை ஆதரவாகப் பார்த்தாள். அதே சமயத்தில் இவருக்கு எப்படிப் புரியவைப்பது என்ற கவலையும் அவளுக்குத் தோன்றியது.

''அப்பா! நல்லா வாழ்றதுன்னா என்னப்பா, நகையும் பணமுமா?'' என்றாள்.

''பின்னே... என்னம்மா வேணுங்கறே... அருமையா இருக்கான். பையன் நல்ல நிறமா இருக்கான். நல்ல கெட்டிக்காரனா இருக்கான். ஏதோ தேவையான அளவு படிச்சிருக்கான். வேற என்ன வேணும் உனக்கு?' என்றார்.

பெற்றோரின் கவலை அவளுக்குப் புரிந்தது.

தந்தை திருமலையிடத்தில் பார்வையை இதுவரை செலுத்திக் கொண்டிருந்தவள், மெல்லத் திரும்பித் தாய் லட்சுமியைப் பார்த்தாள்.

'அம்மா, நீயாவது புரிய வைம்மா'' என்றாள்.

லட்சுமி சிரித்தார்.

''ஏண்டி! என்னத்தை புரியவைக்கணுங்கற... உங்கப்பா சொல்றது கரெக்ட் தானே'' என்றார்.

ஜெயந்திக்கு இப்போது யாரிடத்தில் உதவி கேட்பது என்பது புரியவில்லை. ''என்னம்மா நீ இப்படிச் சொல்றே...'' என்றாள்.

''பின்ன... என்ன சொல்வேன்னு எதிர்பார்க்கிற? எங்களுக்குப் பெத்த பொண்ணு நல்லா இருக்கணும். வசதியா இருக்கணும். நல்ல துணிமணி கட்டணும். சாப்பாட்டுக்கு நாளைக்கு என்னடா பண்றதுன்னு இப்ப நாம கவலைப்பட்டுக்கிட்டு இருக்கிறோமே... அந்த மாதிரி கவலையில்லாம இருக்கணும். இப்படி ஒரு இடம்... தானா வலிய வந்து, உங்க பொண்ணை மட்டும் கொடுங்க... வேறு எதுவும் வேண்டாம்னு கேட்கறாங்க. அப்படி ஒரு வாய்ப்பை விட்ரலாமா?'' என்றார்.

ஜெயந்தி கோபமாக அம்மாவைப் பார்த்தாள்.

''அப்போ... உங்களுக்குச் செலவு கம்மிங்கிறதுக்காக என்னை அங்கே தள்ளிவிடலாம்னு பார்க்கறீங்களா?'' என்று கேட்டாள்.





அம்மா கவலையுடன் பார்த்தாள்.

''என்ன நீ தள்ளிவிடறதுன்னெல்லாம் பேசறே. நல்ல குடும்பம்டீ... நாளைக்கு கண்ணைக் கசக்கிக்கிட்டு வந்து நிக்க வேண்டிய நிலைமை இல்லாத குடும்பம். அதைத்தானே பார்க்கணும்'' என்றார் லட்சுமி.

''அது சரி, இன்னொண்ணு சொல்றீங்களே. கண்டிஷன்... அது...'' என்று இழுத்தாள் ஜெயந்தி.

''அது...'' என்று அம்மா திணற... திருமலை இடையிலே புகுந்தார்.

''என்ன, என்ன இப்ப தப்பு பண்றோம்?'' ஒரு தப்பும் செய்யறதில்லை. இருக்கிறத இல்லைன்னு சொல்லப் போறோம். இல்லாததை இருக்குதுன்னுதான் சொல்லக் கூடாது. இருக்கிறதை இல்லைன்னு சொன்னா ஒண்ணும் தப்பு இல்லை'' என்றார்.

''அப்பா! இருக்கிறதோ இல்லாததோ எதை மாற்றிச் சொன்னாலும் நாளை அதனால வரப்போற பிரச்னைகளை சந்திக்கப் போறவ நான்தான்'' என்றாள்.

''இதுக்குத்தான் பொண்ணே, அன்னிக்கே மேலே படிக்க வேண்டாம்னு சொன்னேன். தலையால அடிச்சுக்கிட்டேன்'' என்றார் திருமலை.

''சரிப்பா... எனக்கு யோசிக்க டைம் கொடுங்க'' என்று அந்த சிறிய வீட்டில் இருந்த ஒரே ஒரு சின்ன தனி அறையில் போய் ஒதுங்கிக் கொண்டாள் ஜெயந்தி.

மிக குறைவான வருமானம் உள்ளவர்களுக்காக அரசாங்கம் கட்டிக் கொடுத்த வீடு அது. அதிலேதான் அவர்கள் இருக்கிறார்கள். அதனால் பெரிய அளவில் வாடகைப் பிரச்னை இல்லை என்றாலும்கூட, அவர்கள் பெரிய அளவிலான வசதியுடையவர்களாக வாழ்ந் விடவில்லை.

அப்பா ஏதோ கடையிலே வேலை செய்து கொண்டிருந்தார். அந்த கடையிலே ஏதோ நாலாயிரம் வரை சம்பளம் கொடுத்தார்கள். அந்த நாலாயிரம் சம்பளத்தை வைத்துக் கொண்டுதான் அவர்கள் குடும்பம் நடத்த வேண்டியதிருந்தது.

அம்மா வீட்டில் இருந்தபடியே துணிமணிகள் வைத்துக் கொடுப்பார். இப்போதெல்லாம் ஜாக்கெட்டுக்கே நல்ல வருமானம் வருகிறது. அதனால் இப்போது ஏறி இருக்கிற விலைவாசியில் அவர்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றாலும் அது கைக்கும் வாய்க்கும் சரியான வருமானம் இருக்கிற வாழ்க்கைதான்.

நிச்சயமாக ஜெயந்திக்கென்று அவர்கள் பெரிய அளவில் சேமிப்பு எதுவும் செய்து வைக்கவில்லை. அதனால் அவர்களுக்கு இந்த சம்பந்தம் பெரிய வரப்பிரசாதமாகத் தெரிறது.

ஜெயந்திக்கு என்னவோ, திருமணம் என்ற ஏற்பாட்டிலே பெரிய அளவில் உடன்பாடு இல்லை.

''என்னைப் பேசாமல் விடுங்களேன். நான் என் போக்கிலே வாழ்க்கையை வாழ்ந்து கொள்கிறேன்'' என்று அவள் சொல்கிறாள். அது அவர்களுக்குப் புரியவில்லை.

தேடிப்பிடித்து இப்போது ஒரு வரன் வந்திருக்கிறது. கோயமுத்தூர் நகரத்திலே பெரிய குடும்பமாம். நிறைய கடைகள் இருக்கிறதாம் அவர்களுக்கு. ஏதோ ஸ்வீட் கடையோ என்னமோ சொன்னார்கள். செயின் ஆஃப் ஹோட்டல்ஸ் என்று சொல்வார்களே, அதுபோல அவர்கள் குடும்பத்துக்கு ஏற்ற அளவிலே நிறைய கடைகள் இருந்தன.

அவர்கள் ஏதோ ஒரு கல்யாணத்திலே இவளைப் பார்த்தார்களாம். விசாரித்தார்களாம். இந்த மாதிரி பெண் தான் வேண்டும் என்று வந்திருக்கிறார்கள்.



அவர்கள் குடும்பத்தைப் பற்றி அவளும் விசாரித்தாள். அதில் இருந்து தெரிந்துகொண்ட விஷயங்கள் அவளைப் பயமுறுத்தின. பெற்றோர்களுக்கு அதெல்லாம் புரியவில்லை. வந்திருக்கிற குடும்பம் பெரிய குடும்பம். வசதியானவர்கள். அவர்கள் பெண் எடுத்திருக்கிற குடும்பங்கள் எல்லாமே பெரும்பாலும் வசதியில்லாத குடும்பங்களாகத்தான் இருக்கின்றன. அதனால் தங்களுடைய பெண்ணிற்கு அங்கு யாரும் இழித்துப் பேசுவதற்கு எதுவும் இல்லை. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு கல்யாணத்திலும் அந்தப் பெண்கள் கழுத்து நிறைய நகைகளைப் போட்டுக் கொண்டு காரில் வந்து கூட்டமாக இறங்கி பந்தாவாக இருந்துவிட்டுப் போவதை அவர்கள் முக்கியமாக லட்சுமி ஒரு பொறாமைக் கண்ணோடுதான் பார்த்திருக்கிறார்.

அப்படியொரு குடும்பத்தில் நம்ம பொண்ணைக் கேட்டு வர்றாங்களே என்பதே அவர்களுக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்ததேயொழிய மற்ற எதுவுமே கண்ணுக்குத் தெரியவில்லை.

அதிலும் ஜெயந்தியினுடைய எண்ணப்போக்கையோ பாவங்களையோ அவர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

''என்ன இந்தப் பெண் இப்படிப் பிணாத்துகிறது? இவளுக்கு என்ன வேண்டுமாம். வசதியான வாழ்க்கை வேண்டும். அவ்வளவுதானே... அது கிடைக்கிறது. அழகா எல்லோருடனும் சேர்ந்து சந்தோஷமாகச் சிரித்துப் பேசி கொண்டு வீட்டு வேலைகளைச் செய்து கொண் கோயிலுக்கும் குளத்துக்கும் சினிமாவுக்கும் என்று போ விட்டு வந்து... வாழ்க்கை எவ்வளவு இலகுவா போய்விடும். இங்கே மாதிரி போராட வேண்டிய அவசி இல்லையே. இது ஏன் இந்தப் பிள்ளைக்குப் பு மாட்டேங்கறது'' என்று கணவனிடம் வருத்தப்பட்ட லட்சுமி.

''அதைத்தான் நானும் சொல்றேன்'' என்றார் அப்பா.

''ஒருவேளை இங்க பொய் இப் சொல்றோமே... அது ஏதாவது அவனுக்கு உறுத்தலா இருக்குமோ'' என்று கேட்டார் லட்சுமி.

''ஆமா... நாம என்ன பெரிய தப்பான பொய்யையா சொல்றோம்? ஒரு சின்ன பொய் சொல்றோம்..ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தையே நடத்தலாமாம், அப்படீன்னு அந்த காலத்திலே சொல்லி வச்சிருக்காங்க. நாம என்ன ஒரு சின்னப் பொய் சொல்றோம். இவ போய் அவங்க கரெக்டா நடந்துகிட்டா அந்த பொய்யையும் நாளடைவிலே அவங்க மறந்துடப் போறாங்க'' என்றார் திருமலை.

லட்சுமிக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது.

''இல்லைங்க... என்ன இருந்தாலும் பெரிய குடும்பம். நாளைக்கு இப்படியொரு பொய்யைச் சொல்லிட்டீங்களே... அப்படீன்னு புடிச்சுகிட்டாங்கன்னா?'' என்றார்.

''இருக்கட்டுமடி... அந்த காலத்துல அவங்க கண்டிஷன் வேற. இன்னிக்கு இருக்கிற உலகம் வேற. இவ போய் அவங்களுக்குப் புடிச்ச மாதிரி நடந்துகிட்டா அந்தப் பையனும் இவளுக்குச் சப்போர்ட்டுக்கு வருவான்ல...'' என்றார்.

''ஓ! அதுவும் சரிதான். ஆனா, அவங்களைப் பார்த்தீங்களா... நான் கல்யாண வீட்லதான் பார்த்தேன். இரண்டு மூணு கல்யாண வீட்ல... ஒவ்வொரு ஆம்பளைங்களப் பார்த்தீங்கன்னா... கடோத்கஜன் மாதிரி இருக்கிறாங்க. இந்தப் பையன்தான் அங்க சின்னவனா இருக்கிறான்.

எல்லாரும் சேர்ந்து ஒரு மிரட்டு மிரட்டினாங்கன்னா இவ சுருண்டுருவா. நம்மகிட்ட சாப்பாட்டுக்கு வழி இருக்குதோ இல்லையோ... அவளை அப்படியெல்லாம்



கஷ்டப்படுத்தாம, நல்லபடியா வளர்த்திருக்கோம்'' என்று கவலைப்பட்டார் லட்சுமி.

''இங்க பாரு லட்சுமி. ஏதாவது ஒரு வீட்டுக்கு அவ போய் தான் ஆகணும். நம்மளோடவே இருக்க முடியாது. இல்ல, நம்ம வீட்டோட மாப்பிள்ளை பார்க்கணும்னா ஏதாவது அநாதைப் பையனைத்தான் பார்க்கணும். அவன் வந்து நாலு பேருக்கும் சேர்ந்து தாளம் போடுறதைவிட இவளாவது போய் நிம்மதியா... சந்தோஷமா இருக்கட்டுமே அப்படீன்னு நான் பார்க்கறேன். இந்தப் பொண்ணுதான் புரிஞ்சுக்க மாட்டேங்கறான்னா... நீயும் இப்படியெல்லாம் பேசிக்கிட்டு இருக்கிறே...'' என்றார்.

''சரிங்க. உங்களுக்குத் தெரியும். நீங்க நல்லவரு. நானும் ஏதோ சாப்பாட்டுக்கு வசதியில்லைன்னாலும் உங்களோட நான் நிம்மதியாத்தான் வாழ்க்கை நடத்தினேன். அங்க போய் வசதியிருந்தும் அவளுக்கு நிம்மதியில்லாமப் போயிடக்கூடாது. நிம்மதி ரொம்ப முக்கியம்'' என்றாள் லட்சுமி.

தாயாகிய அவரது மனது மகளின் நிம்மதியை நாடியது.

ஆனால், தந்தையாகிய அவருடைய மனதோ மகளுக்கு வசதியான வாழ்க்கையை நாடியது.

இரண்டு பேருமே மகளுடைய நன்மையைத்தான் நினைக்கிறார்கள் என்பது அந்த அறையில் இருந்து இந்த வாதப்பிரதிவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஜெயந்திக்குப் புரிந்தது. கசப்புடன் புன்னகைத்துக் கொண்டாள்.

சரி, இனி என்ன செய்ய முடியும் என்று... அவள் கைக்கு மீறிப்போகிற விஷயம் என்பதை உணரத் தொடங்கினாள். அப்பா, அம்மா எதுவும் கையில் வைத்திருக்கவில்லை. எப்படியும் கல்யாணம் வேண்டாம் என்றாலும் இவர்கள் கண்டிப்பாக விடப்போவதில்லை.

குறைந்தபட்சம் அவர்களுடைய விருப்பமாவது நிறைவேறும். நிறைவேறட்டும் என்று விட்டு விடலாமா? என்று நினைத்தாள். மாப்பிள்ளையின் போட்டோ கொடுத்திருந்தார்கள். அந்த போட்டோவை எடுத்து வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பையன் நன்றாகத்தான் இருக்கிறார். கண்ணைப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம் என்று சொல்வார்களே. அதுபோல அந்தக் கண்களைப் பார்க்கும்போது அதிலே ஒரு கொடூரமோ அல்லது குறிப்பிட்டுச் சொல்கிற அளவு எதிர்மறைத்தன்மையோ இருக்கவில்லை. எதைச் சொல்லித்தான் நான் மறுக்க முடியும். சரி, நீர்வழிப்படும் புணைபோல் விதிமுறை வழிப்படும் வாழ்க்கை என்று எங்கேயோ ஒரு புறநானூற்றுப் பாடலிலே படித்திருந்தாள். நதியில் செல்கிற அந்தப் புணை தன் விருப்பத்துக்குச் செல்ல முடியாதல்லவா... பெரிய படகோ... மரக்கலமோ... ஏதோ ஒன்று அது தன் விருப்பத்துக்குச் செல்ல முடியாதல்லவா? அது நீரின் போக்கிலேதான் செல்ல வேண்டும். ஏதோ அம்மா அப்பா இதுவரைக்கும் அவர்களுடைய சக்திக்கு ஏற்றவகையிலே தன்னை நன்றாகத்தான் வளர்த்தார்கள். அவர்களுக்கு நாம் எந்த விதத்தில்தான் நன்றி செய்வது. இப்படித்தான் நன்றி செய்ய முடியும் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே லட்சுமி அவளுடைய அறைக்குள் வந்து. ''இந்தா பாரு ஜெயந்தி. நேரம் ஆகுது. எழுந்திரு'' என்றார்.

''போம்மா...'' என்றாள் அவள் சலிப்புடன்.

''சலிச்சுப் போய் பேசறதெல்லாம் ஒண்ணும் ஆகாது. இன்னும் அரை மணி நேரம்தான். தயாராகு'' என்றவுடன்... ''என்னத்தை தயாராவது'' என்று அவள் சலித்துக் கொண்டாள்.

''சுடிதார் போட்டுக்கலாமா...''



''சுடிதாரா? அவங்க குடும்பமே ஒரு பழமையா இருக்கிற மாதிரி தெரியுது. அந்த வாயில் புடவை. காட்டன் புடவை... பார்த்தா பட்டு மாதிரியே இருக்குமே... ம்... எங்க மாமா எடுத்துட்டு வந்து கொடுத்தாரே... அதை எடுத்துக் கட்டு'' என்றார்.

'எங்க மாமா' என்று சொல்கிறபோது அம்மா முகத்திலே தெரிகிற பெருமையைப் பார்த்து அந்த நேரத்திலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''சரிம்மா'' என்றாள்.

பின்னாலே பாத்ரூமிலே... சின்ன வீடாக இருந்தாலும் அங்கே பாத்ரூம் வசதியெல்லாம் இருந்தது. அதிலே அவளது அப்பா ஒரு வாஷ்பேஸின்கூடப் பொருத்தி வைத்திருந்தார். அதில் முகத்தைக் கழுவிக்கொண்டு புடவை உடுத்திக் கொண்டு இருந்த ஒரே ஒரு கவரிங் செயினை எடுத்து மாட்டிக் கொண்டாள்.

காதுக்கு மட்டும் அப்பா இரு முத்துக் கம்மல்கள் வாங்கிக் கொடுத்திருந்தார். அதையும் எடுத்துப் போட்டுக் கொண்டு ஒட்டுப்பொட்டு வைத்து சின்னதாக ஒரு திருநீற்றுக் கீற்றை அந்தப் பொட்டுக்கு மேலே பூசிக் கொண்டாள்.

பூஜை அறையில் அந்த ஒரே அறை தடுப்பில் இந்தப் பக்கம் செல்ஃப்களும் அதேபோல அந்தப் பக்கம் சமையலறை செல்ஃப்களுமான அந்த வீடு இருந்தது. அவர்கள் முதன்முதலில் யாரையோ பிடித்து வாங்கியதால் அடுக்குமாடி வீடாக இல்லாமல் வரிசை வீடுகளாக இருந்தது. அதனால் அவர்களுக்குள்ள அந்த இடம் அவர்களுக்குரிய தாகவே இருந்தது. அதிலும் ஒரு சௌகரியம், அந்த வரிசை வீடுகளில் கடைசி வீடு அவர்களுடையது என்பதால் சுற்று வட்டாரத்தில் கொஞ்சம் இடத்தையும் வளைத்துப் போட்டிருந்தார்கள்.

ஒரு வேலி போட்டு அந்த இடத்திலே சின்ன சின்ன செடிகளையும் பூச்செடிகளையும்கூட வைத்திருந்தார்கள். அதனால் வீட்டை எவ்வளவு அழகாக வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு அழகாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவளும் இப்படி எளிமையாக உடுத்திக் கொண்டிருந் தாலும்கூட, கண்ணாடி முன் வந்து பார்க்கும்போது அழகாகவே இருந்தாள். "நல்லா இருக்கேடீ" என்று அம்மா அவள் கன்னம் வழித்தாள். 'இவ்வளவு எளிமையான புடவையிலேயே இவ்வளவு அழகாக இருக்கிறாளே தன்னுடைய மகள். அவள் அந்த வீட்டிலே போய் பட்டுப்புடவை கட்டி காசமாலை போட்டுக் கொண்டு கைநிறைய வளையல்களைப் போட்டுக் கொண்டு கல்யாணத்துக்கு வந்தால் எப்படி இருக்கும்?' என்ற அந்த ஏழைத் தாயின் மனது ஒரு நிமிடம் அப்படியே கற்பனையில் ஆழ்ந்தது.

அதே சமயத்தில் சர்... சர்...ரென்று நான்கைந்து கார்கள் அவர்கள் வீட்டுக்கு முன்னாலே வந்து நின்றது.

"என்னங்க... வந்துட்டாங்க..." என்று சத்தம் போட்டுக் கொண்டே வெளியே வந்தார் லட்சுமி.

கணவரும் வெளியே வந்தார்.

அந்த நாலைந்து கார்களிலும் இருந்து பத்து பதினைந்து பேர் திபுதிபுவென்று இறங்கினார்கள். பெயருக்கு இரண்டு பேர் மட்டும்தான் பெண்கள். மீதி அத்தனை பேரும் ஆண்கள்.

"என்ன ரெடியா இருக்கீங்களா?" என்று எல்லாருக்கும் மூத்தவர் போல இருந்த அந்தப் பெரியவர் மீசையை நீவிக்கொண்டு அதிரடியாகக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

உள்ளறையிலே ஒரு ஓரமாக ஒரு ஸ்டூல் சேரில் அமர வைக்கப்பட்டு இருந்த ஜெயந்தி, அந்தக் குரலைக்



கேட்டவுடன் நினைத்துக் கொண்டாள், இனிமேல் தன்னுடைய வாழ்க்கை தன்னுடைய கையிலே இல்லை என்று.

பெற்றோர்கள் சொல்லப்போகிற அந்தப் பொய் வேறு அவள் உள்ளத்திலே பெரியதொரு அச்சத்தை விளப்பிக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் ௨

**ஜெ**யந்தி மிக ஆர்வமாக அந்தப் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள். அது ஒரு கவிதைப் புத்தகம். தபுசங்கர் என்ற கவிஞனுடைய பாடல்கள் அந்த கவிதைப் புத்தகத்திலே அமைந்திருந்தன. சின்னசின்ன கவிதைகளாய் காதலின் பல்வேறு பரிமாணங்களை அந்த இளைஞன் சொன்ன விதம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் ஒரு காட்சியை அவன் காதலோடு தொடர்புபடுத்தி அவன் மனம் கவர்ந்தவளைப் பற்றிச் சொல்கிறான்...

'எல்லோரும் ஊஞ்சலாடிக்
கொண்டிருக்கும்போது
இந்த ஊஞ்சல் கத்திக்கொண்டிருக்கிறது.
நீ ஆடும்போது மட்டும் பாடுகிறதே' என்று.

ஜெயந்தி மெல்லச் சிரித்துக் கொண்டாள். சிரித்துக் கொண்டவள், முன்னாலேயும் பின்னாலேயும் பக்கங் களைப் புரட்டினாள். அடுத்து இரண்டு கவிதைகள் அவள் மனதில் பதிந்தன. மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தாள்.

பிறகு கொஞ்ச நேரம் அந்த கற்பனையின் வளத்தில் லயித்துப் போயிருந்தாள்.

அந்தக் கவிஞர் எவ்வளவு மென்மையாக காதல் என்ற உணர்வை வெளிப்படுத்துகிறார். இதையெல்லாம்

சொன்னால் நம்முடைய அம்மா, அப்பாவுக்குப் புரியுமா? இல்லை. ஏதோ ஒரு வீட்டில் தன்னைக் கொண்டுபோய் தள்ளுகிறோம் என்கிறார்களே. அந்த வீட்டுக்குத்தான் புரியுமா? யோசிக்க ஆரம்பித்தாள்.

அவளுக்குப் போன வாரத்தில அந்தக் குடும்பத்தினர் பெண்பார்க்க வந்தது நினைவுக்கு வந்தது. எல்லாரை காட்டிலும் மூத்த அண்ணன் மீசையை நீவிக்கொண்டே உள்ளே வந்தார். நான்கு கார்களிலுமாகச் சேர்ந்து பத்து இருபது பேர் வந்திருந்தார்கள்.

நல்லவேளையாக அவர்கள் வீடு அந்த வரிசையில் கடைசி வீடாக இருக்கதால் முன்னாலும் பக்கத்திலும் இடம் இருக்கதால் அக்கம்பக்கத்தில் இருந்து சேர்களை வாங்கிக் கொண்டு வந்து போட்டு அமர வைத்தார்கள்.

அவள் ஒரு மூலையில் ஒடுங்கினாற்போல அமர்ந்து கொண்டிருந்தாள்.

அந்த இரண்டு பெண்பிள்ளைகள் மட்டுமே உள்ளே வந்தார்கள். அதிலே ஒருவருக்கு ஐம்பது வயதிற்கு மேல் இருக்கும். இன்னொருவருக்கு நாற்பத்தைந்து வயதிற்கு மேலிருக்கும். அவள் அருகில் வந்தார்கள். "என்னப்பா" என்று சிரித்தார்கள்.

அவளும் முழுமையாகவும் இல்லாமல் சிரிப்பே இல்லை என்பது போலுமில்லாமல் மையமாகச் சிரித்து வைத்தாள்.

"நாங்கல்லாம் அந்த வீட்டுக்குப் போனதிலிருந்து சந்தோஷமாத்தான் இருக்கோம். நீயும் அந்த வீட்டுக்கு வந்தேன்னா எல்லா சந்தோஷமும் கிடைக்கும். எங்க வூடு கிராமத்துல இருந்தது. எங்க அப்பா அம்மாவெல்லாம் இப்பவும் கிராமத்துலதான் இருங்காங்க. வீட்டைப் போய் பார்த்தா... உங்களுக்காவது இங்க ஆர்சி போட்டிருக்கு. ஆனா, நாங்க இருந்தது குடிசைதான். என்னமோ நம்ம ஸ்வீட்டுக்கடைக்கார ஐயா... அவங்களுக்கு என்னைப்



பார்த்தவுடனே பிடிச்சுப்போச்சு. சரின்னு கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. நகையெல்லாம் போட முடியாதுன்னு எங்கப்பா ஆரம்பிச்சாரு. உடனே எங்க வீட்டய்யா... நகை யாருக்கு வேணும்னு கேட்டாங்க... 'பொண்ணை மட்டும் குடுங்க. நியாயப்படி எங்க அம்மா அப்பா வந்து கேட்கணும். ஆனா, அம்மா அப்பாவுக்கு வயசாயிடுச்சு. அலைய முடியாது. நாங்களே அண்ணன் தம்பிங்க வந்திருக்கோம். பொண்ணை மட்டும் குடுங்க. வேணும்கிற அளவுக்கு நகை நாங்க போட்டுக்குவோம்' அப்படீன்னாரு. இவ்வளவுதான் தாயி பேச்சுவார்த்தை நடந்தது. அதுக்கப்புறம் அவங்களே செலவு பண்ணி கல்யாணம் பண்ணிக் கூட்டிட்டுப் போனாங்க. இன்னிவரைக்கும் நான் நல்லாத்தான் இருக்கேன். பாரு... மூணு வடம் செயினு, கை நிறைய நகை, துணிமணி. எது வேணும்னாலும் கேட்டா வாங்கிக் குடுப்பாங்க. இப்படி சந்தோஷமாத்தான் இருக்கோம். தாய் பிள்ளைகளா எல்லாம் ஒண்ணா இருக்கிறோம்.

ஆனா... ஒரே ஒரு கண்டிஷன் மட்டும் போட்டாங்க. எல்லாம் ஒண்ணாத்தான் இருப்போம். எக்காரணத்தைக் கொண்டும் குடும்பத்தை மட்டும் பிரிக்க நினைக்கக் கூடாது, அப்படீன்னாங்க. அது ஒண்ணுதான் தாயி அவங்க போட்ட கண்டிஷன்" என்று சிரித்தார் மூத்தவரின் மனைவி.

பேர்கூட இப்போது அவளுக்குத் தெரியவில்லை. வந்தார்கள். போனார்கள்.

"இருக்கிறதுலே இவங்கதான் பெரியவங்க" என்றார் இன்னொரு பெண்மணி.

"ஆமாம். இவ மூணாவது தம்பிக்கு வந்தவ" என்றார் அந்த அம்மையார்.

"நீயும் சொல்லுடி" என்றார்.

உடனே அந்தப் பெண்மணியும், "ஆமாம், தாயி எதுவும் வேணாம் கீணாம்னு சொல்லிறாதே. இதுமாதிரியான

வாய்ப்பு வாழ்க்கையில கிடைக்காது. வந்து பாரு... நாங்க எல்லாரும் சந்தோஷமாகத்தான் இருக்கோம். குழந்தையும் குட்டியும் குஞ்சும் சுத்தி விளையாடிக்கிட்டு இருக்க... பெரிய வீடுன்னு அக்கம்பக்கத்துல எல்லாம் சொல்றாங்க. உண்மையிலேயே எங்க வீடு பெரிய வீடுதான். ஆளுகளும் பெரியவங்கதான். நீயும் வந்து சந்தோஷமா இரு தாயி. எங்களோட– அதிலும் இந்த சின்னது இருக்கே. அது ரொம்ப செல்லம், எல்லாத்துக்கும். பாலகுமாரன்னு பேரே வச்சாங்க. பாலுன்னுதான் நாங்க கூப்பிடுறது. பாலன்தான். சின்னப்பயன்தான்'' என்றார் அந்தப் பெண்மணி.

ஜெயந்தி தலையாட்டிக் கேட்டுக் கொண்டாள். மறுக்கவும் இல்லை. ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

''பாவம். புள்ளை வெட்கப்படுது'' என்று இரண்டு பேரும் அவர்களுக்குள்ளாகவே பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

இதற்குள்ளாக ஆண்பிள்ளைகளிடம் தாய் தந்தையர் என்ன பேசினார்கள் என்பது தெரியாது.

''வா, வந்து ஒரு தடவை வணக்கம் சொல்லிரு'' என்றார்கள்.

அவள் வெளியே வந்து அவர்களெல்லாம் அமர்ந்திருக்கும் இடத்துக்கு நடுவில் வந்து ஒருமுறை வணக்கம் சொன்னாள். எல்லாரும் பார்த்தார்கள். அதிலே ஒரு இளைஞனும் இருந்தான். அந்தப் பெரியவர் லேசாக மீசையை நீவிக்கொண்டார். அந்தப் பையனைப் பார்த்தார். கண்ணாலேயே ஏதோ கேட்டார். அவனும் கண்ணாலேயே ண்ணாலேயே ஏதோ... 



போலிருந்தது. கண்ணு நல்லா பார்க்குதா, காது நல்லா கேட்குதா அப்படீங்கறதெல்லாம் டெஸ்ட் பண்றதுக்காகத் தான் அந்த இரண்டு லேடீஸையும் கூட்டிட்டு வந்திருப்பாங்க. இல்லாட்டி அவங்களைகூட கூட்டிட்டு வந்திருக்க மாட்டாங்க என்று இப்போது அவளுக்கு தோன்றியது.

கூட்டமாக அந்த ஆண்கள் வந்து சென்றதில் இருந்து அவளுக்கு பயம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

பொதுவாகவே இதுநாள் வரை அவள் எந்த பிரச்னையானாலும்... அது என்ன பிரச்னை... பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் நினைப்பாள். ஆனால், இது வாழ்க்கைப் பிரச்னை. வாழ்நாள் முழுவதும் இந்த கும்பலோடு போய் எப்படி இருக்கப் போகிறோம் என்று அவளுக்குத் தோன்றியது.

அம்மாவிடம் மெதுவாகச் சொல்லிப் பார்த்தாள்.

''ஏய், என்னடி நீ... ரொம்ப உன்னை பெரிய மனுஷியா நினைச்சுக்கிறே... நீ என்ன வித்தியாசமான பிறவி. எல்லாரும் மனுஷங்கதானே. உனக்கு என்ன வேணும்? சாப்பாடு, இருக்க இடம், நல்ல துணிமணி, நகைநட்டு, காரு... எல்லாம் குடுக்கிறாங்க. அப்புறம் என்னத்தை வேணுங்கிற. எனக்குப் புரியலடி. நீ இந்த கண்ட கண்ட புஸ்தகங்களைப் படிச்சுட்டு பொழுதை ஓட்டிட்டு... ஏதோ பெரிய இவளாட்டம் பேசித் திரியற. இதையெல்லாம் விட்ரு. இதெல்லாம் இந்த வயசுக்கு நல்லாயிருக்கும். படிக்கிறதுக்கு நல்லாயிருக்கும். கேட்கிறதுக்கு நல்லாயிருக்கும். ஆனால், வாழ்க்கைக்கு உதவாதடி. வாழ்க்கைக்கு... புவ்வாக்கு வழி வேணும்'' என்று ஒரேயடியாகக் கடித்தாள் அம்மா.

'சரி, அம்மாவிடம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. இர்களுக்கெல்லாம் புரியப் போவதில்லை' என்று நினைத்துக் கொண்டாள். ஆனபடி ஆகட்டும் என்று விட்டுவிட்டாள்.

இங்கே இருக்கிறவரைக்குமாவது நல்ல புத்தகங்களை படிக்கலாம் என்று தனது தோழியர் வீடுகளுக்குப் போய்... தான் வழக்கமாக போகிற நூலகத்துக்குச் சென்று புத்தகங்களை கொண்டு வந்து குவித்து விட்டாள். "ஏண்டி... கல்யாணம்னா அது இது... துணிமணிகள் வேணுங்கும். நகை வேணுங்கும். நாலு இடத்துக்குப் போய் அழைக்கிறதுக்கு திட்டங்கள் போடும். நீ புஸ்தகங்களை வாங்கி வந்து குவிச்சுட்டு இருக்கே" என்றாள் அம்மா.

"அம்மா, நீ சும்மா இரும்மா. நீங்க சொல்ற வீட்டைப் பார்த்தா... அந்த வீட்ல போயி இந்த மாதிரி புத்தகங்களை படிக்கவே முடியாது போலிருக்கு. எல்லாரும் கூட்டமாச் சேர்ந்து சோறாக்குவோம். அப்புறம் எல்லாரும் கூட்டமா சாப்பிடுவோம். இதுக்கே நேரம் சரியாயிருக்கும். மத்தியானம் ஓய்வு. ராத்திரி மாப்பிள்ளை வந்துருவாரு. இதே பொழப்பாயிருக்கும் போலிருக்கு. நான் எங்க போயி புத்தகம் படிக்கிறது. ஆசை தீர நான் இங்கேயே படிக்கக்றேன்" என்றாள்.

"ஆமாம... பொட்டப்புள்ளைன்னா என்ன நினைச்சே... பதியம் போட்ட மாதிரிதான். ஒரு இடத்துல நாத்து நட்டு இன்னொரு இடத்துல பிடுங்கிப் போடற மாதிரிதான். அங்க தான் நீ போயி கால் ஊனிக்கணும். அதுதான் உங்க வீடா இருக்கும். அங்க மக்க எப்படி இருக்காங்களோ அதை பார்த்து தான் இருந்துக்கணும்" என்று அம்மா வேறு தினமும் உபதேசம் செய்து கொண்டிருந்தாள்.

"அம்மா! உட்காரும்மா... நான் அங்க போயி பார்த்துக் கிறேன். அதுக்கெதுக்கு இப்ப இருந்தே பிலாக்கணம் வச்சிட்டிருக்கே" என்று இவளும் கூட எரிந்து விழுந்தாள்.

"இல்லடி... உன் நன்மைக்குச் சொல்றேன். தெரிஞ்சுக்கோ" என்றாள் அம்மா.



அம்மா, ஏக குஷியில் இருக்கிறாள். பாவம், அவளுக்கு இவ்வளவு பெரிய இடம் வந்து வாய்த்ததிலேயே வெகு சந்தோஷம். அதனால் அவள் அதைப் பற்றியும், அந்த வீட்டைப் பற்றியும் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

இடையிலேகூட அவளுக்கு லேசான ஒரு சந்தேகம் வந்தது போலும். அப்பாவும் மகளும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலே பரிமாறிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று அந்தக் கேள்வியை கணவனிடம் கேட்டாள்.

"ஏங்க! ஏன் இப்படி ஏழைபாழைங்க வீட்டுலேயே பொண்ணு எடுக்குறாங்க. எதுக்கும் விசாரிக்கக்குங்க. அந்தப் பையனுக்கு நோய் கீய் இருந்து வைக்கப்போவுது" என்று.

அவளுடைய அப்பா சிரித்தார், "பார்த்தியாம்மா... உங்க அம்மாவுக்குச் சந்தேகம்" என்று.

ஜெயந்தி ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகவே சாப்பிட்டாள். "நீங்க ரெண்டு பேருமே பேசி ஏதோ முடிவு பண்ணிக்குங்க" என்றாள். அப்பா, ஏதோ பெரிய ரகசியத்தை கண்டுபிடித்துவிட்டவர் போல மனைவியிடத்திலே சொன்னார்.

"இந்தா பார்டி... எனக்கும் இந்த சந்தேகம் வந்துச்சு. ஏன் குடும்பத்திலே எல்லாம் ஏழைபாழையா பார்த்து பொண் எடுத்துக்கிட்டிருக்காங்கன்னு ஒரு சந்தேகம் வந்துச்சு. அது என்னமோ அவங்க அப்பா சாகிற காலத்துல இவங்ககிட்ட ஒரு வாக்குறுதி வாங்கிட்டார். 'எப்பவும் ஒத்துமையா இருக்கணும். நல்லா வசதியில்லாத பொண்ணுகளா கொண்டு வந்து அதுகளுக்கு வாழ்க்கை குடுக்கணும்' அப்படீன்னு இவங்ககிட்ட வரம் வாங்கிக்கிட்டாராம். அதனால அண்ணன் தம்பிங்க... இன்னிக்கு வரைக்கும் சாதாரண குடும்பத்துலதான் பொண் எடுக்கறாங்களாம்" என்றார்.

''அதுமட்டுமில்லடி...இந்தப் பையனுக்கு ஏதாவது நோய்நொடி இருக்குதா? மோசமான பழக்கவழக்கம் ஏதாவது இருக்குதா? என்னா...காசு இருக்குது பாரு. காசு இருந்தாலே கண்ட பழக்கவழக்கம் வரும். அந்த மாதிரியெல்லாம் ஏதாவது இருக்குதா? அப்படீன்னு எல்லாம் நான் விசாரிச்சுக்கிட்டேன்'' என்று சொல்லவும், அந்தக் கணத்தில் ஜெயந்தியின் மனம் நெகிழ்ந்தது.

பாவம், தன் தாய் தந்தையர்கள் வசதியில்லை என்றாலும் கூட ஏதோ வசதியான இடம் கிடைக்கிறது என்பதற்காக மகளைக் கொண்டு போய் அப்படியெல்லாம் தள்ளிவிட வேண்டும் என்று நினைக்கவில்லை. நன்றாகத்தான் விசாரித்து இருக்கிறார்கள்.

சரி, நானும் இந்த வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்று ஒரு பெருமூச்சுடன் முடிவெடுத்துக் கொண்டாள்.

''என்னடி... பெருமூச்சு விடறே...'' என்று அம்மா கேட்கவும்... ''இல்லை... பாவம் அப்பா... எவ்வளவு தூரம் அலைஞ்சு விசாரிச்சு இருக்காரு?'' என்று சொன்னாள்.

''பின்னே... எங்களுக்கு இருக்கிறதே நீ ஒரே ஒருத்தி. ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணுன்னு... ஏதோ எங்களால முடிஞ்ச அளவுக்கு உன்னை நல்லா வளர்த்திருக்கிறோம். அதுக்காக கடனை கட்ற மாதிரி ஒரு இடத்தில தள்ளிடக் கூடாதுடி. அதுக்காகத்தான் அப்பாவும் இப்படியெல்லாம் விசாரிச்சிருக்காரு. பரவாயில்லை. எனக்கு இருந்த ஒரு சந்தேகமும் தீர்ந்தது. இப்போ மனசு நிம்மதியாயிடுச்சு. தைரியமா இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணலாம்'' என்றார்.

ஜெயந்தி குபீரென்று சிரித்தாள்.

''என்னடி சிரிப்பு'' என்று அம்மா முறைத்தாள்.




''என்னத்தை...பெரிய... நம்ம ஏற்பாடு செய்யறது. நமக்கு ஏற்பாடு செய்யற அளவுக்கு என்ன இருக்கு? எல்லா ஏற்பாடும் அவங்க செய்யறாங்க. நாம விருந்தாளிகளாட்டம் போயி கல்யாணத்தை அட்டெண்ட் பண்ணிட்டு நீங்கள் என்னை அங்க கடாசிட்டு வந்துட வேண்டியதுதான்'' என்று சிரித்தாள்.

பெரிய ஜோக்கைக் கண்டவர்கள் போல அப்பாவும் அம்மாவும் சிரித்து தங்கள் கையாலாகாத்தனத்தை மறைத்துக் கொண்டார்கள்.

அவளுக்கும் பாவமாகத்தான் இருந்தது.

சரி, இவர்கள் சொல்கிறாற்போல... ஒருத்தருக்கு என்னதான் வேணும்? சாப்பாடு, நல்ல துணிமணி, நல்ல நகைநட்டு, காரு...பங்களா எல்லாம் இருக்கே. போதும். அதையாவது அனுபவிச்சு வாழ்றதுக்கு கத்துக்குவோம் என்று இப்பொழுது அந்தப் புத்தகத்தை கையால் லேசாக தடவிக் கொண்டே நினைத்துக் கொண்டாள்.

எப்போதாவது அந்த பாலகுமாரன் வந்து இப்படியெல்லாம் தன்னிடத்தில் கவிதை சொல்லப்போகிறானா... குறைந்தபட்சம் இரண்டு பேருமாக அமர்ந்து இந்தக் கவிதையைப் படித்து ரசிக்கத்தான் முடியுமா, தெரியவில்லையே. என்ன அனுபவங்கள் காத்திருக்கின்றனவோ என்று தோன்றியது.

உண்மையிலேயே அவளுக்கு வாழ்க்கையையே புரட்டிப் போடக்கூடிய அனுபவங்கள் அங்கே காத்துக் கொண்டிருக்கின்றன என்பது அப்போது அவளுக்குத் தெரியவில்லை.

## அத்தியாயம் 3

திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஜெயந்தியின் வீட்டில் இருந்து மொத்தமாக ஒரு முப்பது

பேர் மட்டும்தான் அந்தத் திருமணத்துக்குச் சென்றிருப்பார்கள். ஆனால், மாப்பிள்ளை வீட்டுப் பக்கமோ... எக்கச்சக்கமான பேர்.

ஜெயந்திக்கும் அவள் குடும்பத்தினருக்கும் இதையெல்லாம் பார்க்கப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

திருமலைக்கும் ஜெயந்தியின் அம்மாவுக்கும் மிகவும் மகிழ்ச்சி. தங்கள் மகள் அதிர்ஷ்டக்காரிதான். அதனால்தான் இப்படியெல்லாம் திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது என்று அவர்களுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியிலே அவர்கள் நினைத்தார்கள்.

அம்மா சொல்லக்கூடாது... அந்த நான்கு சகோதரர்களும் இவர்கள் குடும்பத்தினரை எந்தவிதத்திலும் கௌரவக் குறைவாக நடத்தவில்லை. கோவிந்தசாமி, கிருஷ்ணசாமி, நாராயணசாமி... இவர்களுக்கு அடுத்தபடியாக பால காலத்துக்குப் பிறகு ஏதோ பழனிக்குப் போய்விட்டு வந்ததற்குப் பிறகு பிறந்த குழந்தையாம். அதனால் அவனுக்கு பாலகுமாரன் என்று பெயர் வைத்திருந்தார்கள்.

அந்த பாலகுமாரன்தான் ஜெயந்தியின் சாட்சாத் கணவன்.

அவர்களும் இவர்களைக் கௌரவ குறைவாக நடத்தவில்லை. கோவிந்தசாமிதான் எல்லாவருக்கும் மூத்தவர். மற்ற இருவரும் அவருக்குக் கீழே... நாராயணசாமிதான் பாலகுமாரனுக்கு நேர் மூத்தவர். இருந்தாலும் மற்ற மூன்று பேரும் இவனைத் தம்பியாக நடத்தாமல் ஏதோ தங்கள் பிள்ளையைப் போலத்தான் வளர்த்தார்கள்.

நாராயணசாமிக்கும் இவனுக்கும் ஒரு பத்து வருட இடைவெளிதான் இருக்கும். அந்தப் பத்து வருட இடைவெளியில் நாராயணசாமி இளைஞனாக இருந்த போது பாலகுமாரன் அநேகமாக பத்து வயதுக்காரனாக இருந்திருப்பான்.



எனவே, ஒரு குழந்தையைப் போலவே அவனை நடத்தினார்கள். மிகவும் செல்லமாக வைத்துக் கொள்கிறார்கள் என்பது ஜெயந்திக்குப் புரிந்தது. ஜெயந்தியின் தோழியர்கள் மட்டும் ஒன்றிரண்டு பேரை அழைத்திருந்தாள். அவர்களும் எல்லாரும், ''ஜெயந்தி நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரிடி'' என்று வாயைப் பிளந்தார்கள்.

திருமலைக்கும் லட்சுமிக்கும் என்ன விதத்தில் மகிழ்ச்சி என்றால் தங்கள் ஏழ்மையைச் சுட்டிக்காட்டுகிற விதத்தில் எந்த இடத்திலும் கோவிந்தசாமியின் குடும்பத்தினர் நடந்து கொள்வதில்லை என்பதுதான்.

இன்னொரு விஷயத்தையும் ஜெயந்தி அங்கே கவனித்திருந்தாள். யாருமே ஜெயந்தியின் குடும்பத்தைப் போன்ற ஒரு சாதாரணக் குடும்பத்தில் இருந்து பெண் எடுத்தது பற்றி வித்தியாசமாக பேசவோ நினைக்கவோ செய்யவில்லை. ஏனென்றால், கோவிந்தசாமியின் மனைவி, நாராயணசாமியின் மனைவி மற்றும் இன்னொரு சகோதரருடைய மனைவி மூன்று பேருமே மிகவும் வசதியில்லாத குடும்பத்தில் இருந்துதான் வந்திருந்தார்கள் என்பது அவர்களின் உற்றார் உறவினர்கள் வந்திருந்த நிலைமையைப் பார்த்தாலே தெரிந்தது.

அதனால் அந்த விதத்தில் ஜெயந்திக்கு கொஞ்சம் தைரியமாக இருந்தது. பரவாயில்லை, நாளைக்கு பிரச்னை என்றாலும் யாரும் தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை... ஸ்டேட்டஸைக் குறிவைத்துக் கொண்டு பேசப் போவதில்லை என்று எண்ணிக் கொண்டாள்.

உடனே இன்னொரு மனம் அவளைத் தட்டிக் கேட்டது.

'என்னது... இன்னிக்குத்தான் கல்யாணமே நடக்குது. அதுக்குள்ள நாளைக்கு ஏதாவது பிரச்னை வந்தா... அப்படின்னெல்லாம் யோசிக்க ஆரம்பிச்சுட்டே' என்று அவளை அவளே கேட்டுக் கொண்டாள்.

பாலகுமாரன் அவளிடம் இயல்பாக நடந்து கொண்டான். பெண் பார்க்க வந்த அன்றைக்கு போகும்போது அவனைப் பார்த்து தனியா தலை அசைத்து விட்டுப் போனவளல்லவா? இன்றைக்கு இன்னும் இயல்பாகவே நடந்து கொண்டான்.

"ஜெயந்தி! பயப்படாதே. இந்த கூட்டம் பெரிய கூட்டம்னு உனக்கு உள்ளுக்குள்ள நடுக்கமா இருக்கா... என்ன?" என்றான் மெல்லிய குரலில். அவள் ஆமாம் என்பது போல மேலும்கீழும் தலையசைத்தாள்.

"என்ன... எல்லாரும் கல்யாணத்துக்கு ரெண்டுமூணு நாள் இருப்பாங்க. அப்புறம் கிளம்பிப் போய்டுவாங்க. அதுக்கா நீ ஒண்ணும் பயந்துக்காதே" என்றான்.

"இல்ல... பயப்படலை. ஆனால், அன் ஈஸியா இருக்கு" என்றாள் ஜெயந்தி. "இருக்கட்டும். கல்யாணம்னா எல்லாம் அப்படித்தான் இருக்கும். நீ ஜாலியா இரு. லைஃப்ல இது ஒரு தடவைதான் கிடைக்கக்கூடிய விஷயம். இன்னொரு தடவை கிடைக்கக்கூடிய விஷயம் இல்ல" என்றான்.

அவ்வப்போது அவளுக்கு இப்படிப் பேசிப்பேசி தைரியம் கொடுத்துக் கொண்டே இருந்தான். அதனால் ஜெயந்திக்கு கொஞ்ச நேரத்திலேயே அந்தச் சூழ்நிலை பழகிப்போனது. ஆனால், அவள் கலகலவென்று வாயடித்துவிடவில்லை. அமைதியாகவே இருந்தாள்.

கோவிந்தசாமியின் மனைவிகூட, "என்ன, வாயைத் திறக்க மாட்டேங்கற. நீபாட்டுக்கு சந்தோஷமா இரு" என்று சொன்னபொழுது கூட அவள் புன்சிரிப்புடன் தலையாட்டிக் கொண்டாளே தவிர வாயைத் திறக்கவில்லை.

இந்தக் குடும்பத்திலே நுழைந்து ஒவ்வொருவரையும் பற்றித் தெரிந்துகொண்ட பின்புதான், தான் பேசவே ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.



திருமணம் முடிந்தது. பெண்வீட்டுக்குச் செல்வது, மாப்பிள்ளைவீட்டுக்குச் செல்வது என்ற சடங்குகளெல்லாம் நிறைவேறின.

பெண்வீட்டுக்குச் செல்லும்பொழுதுகூட, அவர்கள் குடும்பத்தின் வசதியை நினைத்தோ என்னவோ நிறைய பேர் வரவில்லை. இரண்டு காரில் மட்டும் வந்தார்கள். கொஞ்ச நேரம் இருந்தார்கள்.

அதற்குப் பிறகு பாலகுமாரனையும் ஜெயந்தியையும் அங்கேயே விட்டுவிட்டு அன்று மாலை வந்து அழைத்துக் கொண்டு போனார்கள். இரண்டு நாட்கள் களேபரமாக இருந்தது. இரண்டு நாட்கள் தொடர்ந்து சடங்குகள் இருந்தன. குடத்துத் தண்ணீரிலே மோதிரத்தை எடுப்பது, அப்பளத்தைப் போட்டு உடைப்பது என்பது போக அவர்கள் வீட்டு வழக்கங்களும் நிறைய இருந்தன.

அவைகளை எல்லாம் நடத்திக் கொண்டார்கள்.

எல்லா கூட்டமும் ஓரளவுக்கு கலைந்து போனபிறகு, குடும்பத்தின் நெருங்கிய உறுப்பினர்கள் மட்டும் இருக்கிற சூழ்நிலை. அடுத்த நாள் வந்தது.

அடுத்த நாள்தான் சடங்கு என்று தீர்மானித்திருந்தார்கள் போலும். அதனால் கல்யாணத்தன்று இரவு அங்கேயே தங்கினாலும்கூட அவளைப் பெண்பிள்ளைகளின் நடுவில் தான் வைத்துக் கொண்டார்கள்.

அவளுடைய பெற்றோரிடம் மட்டும் ஏதோ குசுகுசுவென்று பேசினார்கள். அவர்களும் பதிலாக ஏதோ சொல்லிவிட்டு அன்றைக்குக் கிளம்பிப் போனார்கள்.

மறுநாள் காலையிலே வந்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் பெண்வீட்டார் அழைத்துக் கொண்டு போனார்கள். தங்கள் வீட்டில் அன்று மாலை வரை வைத்து இருந்துவிட்டு பிறகு மாப்பிள்ளைவீட்டார் வந்து இவர்களை அழைத்துக் கொண்டு போனார்கள்.

புறப்படும்போது மட்டும்... அம்மா, ''அழைப்பு முடிந்தது மாப்பிள்ளை. இனிமேல் எப்ப வேணும்னாலும் வரலாம்'' என்றார்.

''கண்டிப்பா... ரெண்டு நாளுக்கு ஒருமுறை கூட்டிட்டு வந்துடறேன். கவலைப்படாதீங்க'' என்றான் பாலகுமாரன். லட்சுமியும் திருமலையும் கண்களில் நீர்தளும்ப ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''உங்களுக்குக் கஷ்டமாத்தான் இருக்கும். ஒரே பொண்ணு. விட்டுட்டு இருக்கிறது கஷ்டமாத்தான் இருக்கும். பேசாம ஒன்னு பண்ணுங்களேன். எங்க வீட்டோடவே வந்து தங்கிடுங்களேன்'' என்றான்.

லட்சுமி அவசரமாக மறுத்தார்.

''அப்படியெல்லாம் நல்லாயிருக்காது மாப்பிள்ளை'' என்றார்.

''ஒன்னும் கவலைப்படாதீங்க அத்தை. நான் உங்களுக்கு மருமகன் இல்ல... மகன். அப்படின்னு நினைச்சுக்குங்க. எப்படிடா மாப்பிள்ளைகிட்ட கேட்கறது அப்படின்னெல்லாம் நினைக்காம, என்ன வேணுமோ கேளுங்க. கண்டிப்பா நானும் ஒரு மகனா உங்களைப் பார்த்துக்குவேன்'' என்றான்.

மிகவும் மனம் நெகிழ்ந்த நிலையிலே திருமலையும் லட்சுமியும் தலையாட்டிக் கொண்டார்கள். அவர்களின் நெருங்கிய உறவினர்களும் ஒரு ஐந்தாறு பேர் அங்கே இருந்தார்கள். எல்லாருமாக அவளை வழியனுப்பியபோது அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்வுகள் எல்லாம் ஜெயந்திக்குள் வெடித்து எழுந்தன.

ஜெயந்தி ஓடிப்போய் அம்மாவைக் கட்டிக் கொண்டு அழுதாள். பிறகு அப்பாவின் தோள் மேல் சாய்ந்து கொண்டு அழுதாள். பெற்றோர்கள் இருவரும் அவளைத் தட்டிக் கொடுத்து தைரியப்படுத்தி அனுப்பி வைத்தார்கள்.



உண்மையில் இப்போது போய் இறங்கி அந்த வீட்டில் காலெடுத்து வைக்கும்போதுதான் தனக்கென்று ஒரு புதிய வாழ்க்கை இருக்கிறது. அந்த வாழ்க்கை எப்படி இருக்குமோ என்ற கவலை அவள் மனதில் தோன்றியது.

இதுவரை அதையெல்லாம் அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

தோழிகளிடம் மட்டும் அடிக்கடி சொல்லுவாள், ''இது என்னடி அநியாயம். பெண்களை மட்டும் வேரோடு பிடுங்கி இன்னொரு இடத்தில நடற மாதிரி கொண்டு போறாங்க. அதேசமயம் மாப்பிள்ளை மட்டும் தன் வீட்டை விட்டு விலகறதில்லை'' என்று.

''ஆமாடி. நீதான் புரட்சிப் பெண்மணி. நீதான் வந்து எல்லாத்தையும் மாத்தப்போறியாக்கும்.'' என்று அவளுடைய தோழிகள் கேலி செய்வார்கள். பிரமாண்டமான அந்த வீட்டுக்குள் நுழையும்போது அவளுக்குப் பயமாகத்தான் இருந்தது. ஆனால், வேறு வழியில்லை.

வாழ்க்கையைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும் என்கின்ற உறுதியும் கூடவே பிறந்தது.

பாலகுமாரனுக்கும் அவளுக்குமாக ஒதுக்கப்பட்டு இருந்த அந்தப் பகுதிக்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.

அங்கே இருக்கச் சொல்லிவிட்டு சிற்றுண்டி கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பெரிய அண்ணாவுடைய மகள் போலும்... இவளைவிட இரண்டு மூன்று வயது இளையவளாக இருப்பாளாக இருக்கும். மாலதி என்று பெயர். அவள் ஓடிவந்து, ''சித்தி! வாங்க... வீட்டையெல்லாம் சுத்திக் காட்டறேன்'' என்று அழைத்தாள்.

ஜெயந்தி, திரும்பி பாலகுமாரனைப் பார்க்க... 'போயிட்டு வா' என்று கண்ணாலேயே அனுமதி கொடுக்க, கிளம்பினாள்.

உண்மையிலேயே வீடு பெரிய வீடாகத்தான் இருந்தது. அவர்கள் வீட்டுக்கு முன்னால் இருக்க கூடமே ஒரு கல்யாண மண்டபத்தின் ஒரு பகுதியைப் போல இருந்தது. அதில் இருந்து உள்ளே போனால் பிரிந்து பகுதி பகுதியாக வீடு அமைந்திருந்தது. அரைவட்ட வடிவத்தில் வெளியில் இருந்து பார்த்தால் தெரிந்த அந்தக் கட்டடம் உள்ளே போய்ப் பார்க்கும்பொழுது ஒரு விதத்தில் பாராட்டும் படியாகத்தான் இருந்தது. சமையல் அறை, டைனிங் ஹால், பொதுக்கூடம் என்று இருந்தாலும்கூட ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பகுதிகள் இருந்தன.

''சித்தி, இது எங்களோட போர்ஷன்'' என்று காண்பித்தாள் மாலதி.

அதிலே ஒரு பெரிய படுக்கை அறை, ஒரு சின்ன ஹால், அது இல்லாமல் அவர்கள் உறவினர்கள் யாராவது வந்தால் தங்குவதற்கென்று ஒரு அறையும் இருந்தது.

இப்படித்தான் நான்கு சகோதரர்களுக்கும் தனித்தனியாக அறைகள். இதுதவிர அவர்களுக்கு ஒரே ஒரு சகோதரியாம். அவருக்கும் அந்தப் பக்கத்திலே ஒரு பகுதி இருந்தது. அப்போது இவள் நினைத்துக் கொண்டாள், இவங்களோட சகோதரியை மட்டும் வெளியே விடாம வச்சிக்கிட்டு இருக்காங்களே என்று.

அப்போதுதான் மாலதியின் முகத்தில் செம்மை தோன்றியது. ''உங்க அத்தையும் இங்கதான் இருக்காங் களா?'' என்று ஜெயந்தி கேட்டவுடனேதான் அந்த வெட்கம்.

''ம்... அத்தை இருக்காங்க. மாமா இருக்காங்க. அவங் களுக்கு ஒரு மகனும்கூட இருக்காங்க'' என்றாள்.

ஜெயந்திக்கு லேசாகப் புரிகிற மாதிரி இருந்தது. 'இதெல்லாம் பெரிய வீட்டு சொத்து விவகாரங்களாக இருக்கும்போல இருக்கிறது. அத்தை மகன், மாமன் மகள்



என்று இங்கேயே திருமணம் செய்து கொள்வார்கள் போலிருக்கிறது. இதெல்லாம் அவ்வளவு நல்லதல்ல என்று இவர்களுக்கு யார் சொல்வது?' என்று எண்ணிக் கொண்டாள்.

ஒருவழியாக எல்லா அறைகளையும் பார்த்துவிட்டு திரும்பி வந்தவர்கள், சமையல் அறைக்குப் போனார்கள். அங்கே கோவிந்தசாமியினுடைய மனைவியும் நாராயண சாமியினுடைய மனைவியும் நின்றுகொண்டிருந்தார்கள்.

''நான் ஏதாவது ஹெல்ப் பண்ணட்டுமா?'' என்றாள் ஜெயந்தி.

அவர்கள் இரண்டு பேரும் களீர் என சிரித்தார்கள்.

''உதவியா? இப்போ நீ எங்களுக்கு ஒரு உதவியும் செய்ய வேண்டாம். நீ போயி பாலகுமாரனுக்கு உதவி செய். அவனுக்குத்தான் இப்போ உதவி தேவை'' என்று கிண்டல் வேறு செய்தார்கள். செய்துவிட்டு அவளிடத்திலே ஒரு சம்புடத்தைக் கொடுத்து, ''இது நிறைய பலகாரம் இருக்கு. கொண்டு போய் உங்க போர்ஷன்ல வச்சுக்கோ. எப்ப பசிக்குதோ அப்ப சாப்பிடுவியாம்'' என்றார்கள்.

அவள் அதை வாங்கிக் கொண்டு தங்களது அறைக்குப் போனாள். ஒருவழியாக எல்லாருமாக அவளைக் தேவி செய்து கொண்டு அவளைத் தயார் செய்து கொண்டிருந்த அந்த காலகட்டமும் வந்தது. பாலகுமாரனின் சகோதரர் களின் மனைவிமார்கள் மூன்றுபேருமாகச் சேர்ந்து அவளை அலங்கரித்தார்கள். அலங்காரம் என்றால் ஏதோ நகை ஸ்டேண்டைப் போல என்னென்ன நகைகளைப் பூட்ட வேண்டுமோ, அதையெல்லாம் பூட்டினார்கள்.

''இதெல்லாம் உனக்குதான்'' என்றார்கள்.

ஜெயந்தி மலைத்துப்போய் பார்த்தாள்.

''ஆமாம் பிள்ள... உனக்குத்தான்'' என்றார்கள்.

அவளை அவன் இருக்கும் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஜெயந்தியும் அச்சமும் ஆவலும் நிறைந்தவளாக அந்த அறைக்குப் போனாள். பாலகுமாரன் ஏதோ செய்தித்தாளை வைத்துக் கொண்டு படிப்பவன் போல அமர்ந்து கொண்டிருந்தான்.

இவள் வந்தவுடனே வரவேற்றான்.

''உட்கார்'' என்று அருகிலே அமர்த்திக் கொண்டான்.

''ஜெயந்தி! எனக்கு உன்னைப் பத்தி ஒரு ரகசியம் தெரியும்'' என்றான்.

அவள் கொஞ்சம் அச்சத்தோடு அவனைப் பார்த்தாள்.

''ஆமாம். நீ பெரிய பொய் சொல்லியிருக்கே. தெரியுமா?'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க... அவன் கலகலவென்று சிரித்தான்.

''நானா, என்ன பொய்?'' என்று கேட்டாள்.

அவன் ஏதோ சொல்ல வந்தவன், மெல்ல பேச்சை மாற்றியவன் போல, ''இல்ல... நீ ரொம்ப அமைதி. அப்படீன்னு எல்லாரும் சொல்லிக்கிட்டு இருக்காங்க. ஆனால், நீ நல்லா வாயடிப்பேன்னு எனக்குத் தெரியும்'' என்றான்.

அவ்வளவுதானா என்று அவள் நிம்மதிப் பெருமூச்சு விட, அவன் குறும்பாகப் பார்த்தான். உண்மையாகவே அவளைப் பற்றிய அந்த ரகசியம் அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.

## அத்தியாயம் 4

ஜெயந்தி அன்றைக்குத் தீர்மானமாக முடிவெடுத்து விட்டாள்.



திருமணமாகி வந்து பத்து நாட்களாகி இருந்தன.

ஜெயந்தியும் பாலகுமாரனும் விருந்துக்கு என்று உறவினர் வீடுகளுக்கெல்லாம் இந்த ஒரு வாரமாக போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள்.

அதனால் பொழுது போனது தெரியவில்லை என்றாலும் கூட ஜெயந்திக்கு இன்னொரு விதத்தில் வருத்தமாக இருந்தது. என்னவென்றால், அவளை எந்த வேலையும் செய்ய விடமாட்டேன் என்றார்கள், அவர்களுடைய வீட்டிலே.

''இப்பதானே கல்யாணமாகி வந்திருக்கே. கொஞ்ச நாளைக்குப் பேசாம இரு. அப்புறமாக செஞ்சாப் போகுது'' என்றார் கோவிந்தசாமியின் மனைவியும் வீட்டின் மூத்தவருமான ரத்னாம்மா.

இளம்வயதில் ரத்னா என்று அழைத்திருப்பார்கள் போலும். இப்போது ரத்னாம்மா என்று அழைக்கிறார்கள்.

கிருஷ்ணசாமி மனைவி மாணிக்கமும் நாராயணசாமி மனைவி வித்யாவதியும் சகோதரி அம்பிகா அத்தையும் எல்லாருமாக அவளை ஒரேயடியாக வேலை செய்ய வேண்டாம் என்றுதான் சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்கு ஜெயந்தி ஒரு முடிவோடு இருந்தாள்.

இந்த வீட்டுக்கு வந்து பத்து நாட்கள் ஆகி விட்டன. இந்த வீட்டில் தானும் ஒரு உறுப்பினர் என்ற முறையில் இனியாவது பொறுப்புகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

ஜெயந்திக்கு அதேசமயம் ஒரு பயமும் ஏற்பட்டது. ஏனென்றால், அந்த வீட்டில் கிட்டத்தட்ட முப்பது பேர் இருந்தார்கள். இதில் வேலையாட்கள் வேறு இரண்டு மூன்று பேர். இத்தனை பேருக்குமாக அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள். அத்தனை வேலைகளையும் அவர்கள்

எப்படிப் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். இதில், தா
எந்த அளவுக்குச் செய்ய முடியும் என்பது ஒ
கேள்விக்குறியாக இருந்தது.

தன் வீட்டில் தான் ஒரே மகள். அதுவுமில்லாம
அவர்கள் வீட்டில் இப்படி விதவிதமாக வேலைகள் செய்
கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஏதாவது ஒ
எளிமையான டிபன். எளிமையான உணவு ஒரு கா
குழம்பு, பொரியல் என்று வைத்துக் கொள்வார்கள்.

இந்த வீட்டில் அடுப்படிப் பக்கம் போனாலே ஏதோ ஒ
கல்யாண வீட்டுக்குப் போவது போல இருந்தது. அடுப்
ஒரு டானா வடிவில் பெரிதாக இருந்தது. இரண்டு மூன்
கேஸ் ஸ்டவ்கள் வைத்திருந்தார்கள்.

ஒரே நேரத்தில் பல வேலைகள் நடைபெற்று
கொண்டிருந்தன. காலையில் அவர்கள் எல்லாரும் பா
ரூமில் குளித்து வெளிவருவதே திருவிழா போல இருந்த
ஒவ்வொரு ரூமுக்கும் தனியாக அட்டாச்ட் பாத்ரூ
இருந்தாலும் பொதுப்படையாக சமையல்கட்டுக்கு
பின்புறம் இருந்த நான்கு பாத்ரூம்களில்தான் எல்லாரு
குளித்தார்கள்.

ஏனென்றால், வயல்களில் இருந்து வரக்கூடி
தென்னங்கீற்று, மட்டைகள் மீதங்கள்... என்றெல்லா
பயன்படுத்தி தண்ணீர் அடுப்பு போட்டு அதில்தா
எல்லாரும் குளித்தார்கள்.

இவளை மட்டும் நீ அங்கேயே குளித்துக்கொள் என்
சொல்லி விட்டார்கள்.

எல்லா பாத்ரூம்களிலும் ஹீட்டர் இருந்தாலும்கூட
அவர்களின் சிக்கன நடவடிக்கையைப் பார்த்தபோ
அவளுக்கு ஒரு பக்கம் ஆச்சரியமாகவும் இருந்த
மதிப்பாகவும் இருந்தது.



இன்றைக்குக் காலையில் ஆறு மணிக்கு விழித்து விட்டாள். அரை மணி நேரத்தில் குளித்துத் தயாராகி அடுக்களைக்குப் போனாள்.

''அக்கா'' என்றாள்.

கோவிந்தசாமியினுடைய மனைவி ரத்னாம்மாவை அக்கா என்று அழைப்பதே அவளுக்கு கொஞ்சம் கூச்சமாக இருந்தது. மாலதிக்கும் அவளுக்கும் அநேகமாக மூன்று நாலு வயதுதான் வித்தியாசம் இருக்கும்.

கிட்டத்தட்ட தனக்குத் தாய் போல இருந்தாலும் அக்கா என்றுதானே அழைத்தாக வேண்டும். அதனால் அவளாகவே ஒரு புதிய நடைமுறையை ஏற்படுத்திக் கொண்டாள். பெரிய அக்கா, நடு அக்கா, சின்ன அக்கா என்று அழைக்க ஆரம்பித்தாள்.

முதலில் அவர்கள் சிரித்தாலும் அதை ஏற்றுக் கொண்டார்கள். ''பெரியக்கா, நானும் ஏதாவது வேலை செய்கிறேன்'' என்றாள்.

அவர்கள் மூன்று பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டார்கள். அம்பிகாவும் அந்த நேரத்துக்கு வந்து சேர்ந்து கொண்டார்.

''நீ என்னத்தை செய்யப் போறே... நீ போய் பாலகுமாரனை கவனி'' என்றார்கள்.

அவள் செல்லமாக சிணுங்கினாள்.

''அதான் தினம் கவனிக்கிறேனே... அவர் தூங்கிவிட்டு இருக்காரு. எப்படியும் எழுந்திருக்க ஒரு மணி நேரமாவது ஆகும். ஒண்ணுமே செய்யாம சாப்பிடறதுக்கு கஷ்டமாக இருக்கு'' என்றாள்.

''சரி, என்ன செய்யறே... என்ன வேலை தெரியும்?'' என்றார்கள்.

''நான் பெரிசா வீட்ல வேலை செஞ்சதில்ல... ஆனா இங்க பழகிக்கிறேன்'' என்றாள்.

''அப்படின்னா... சரி, வெங்காயம் நறுக்கத் தெரியுமா?'' என்று கேட்டார்.

அவளுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. 'வெங்காயம் நறுக்குவது பெரிய வேலையா... அதுகூடத் தெரியாதா... என்று கேட்கிறார்கள்' என்று எண்ணிக் கொண்டு. ஆனால் எண்ணத்தை முகத்தில் காட்டாமல், ''ம்... நறுக்கறேன்'' என்றாள் ஜெயந்தி.

''சரி, இந்தா'' என்று ஒரு அரிவாள்மணையைக் கொண்டு வந்து வைத்தார்கள்.

''இல்ல... எனக்கு கத்தியில் நறுக்கித்தான் பழக்கம்'' என்றாள்.

''சரி... இந்தா'' என்று அவளுக்கு ஒரு கத்தியையும் நறுக்குவதற்காக ஒரு பலகையையும் கொடுத்தார்கள்.

அவள் தயாராக அமரவும், ஒரு சின்னக்கூடை நிறைய வெங்காயம் பக்கத்தில் வந்து அமர்ந்தது. அவள் திகைத்துப் போய் அவர்களைப் பார்த்தாள்.

அவர்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

''பின்னே என்ன... நம்ம வீட்ல பத்தே பத்து வெங்காயம் நறுக்கினா போதும்னு நினைச்சியா? இந்தா இந்த கூடை நிறைய நறுக்கி குடு'' என்றார்கள்.

அவள் உண்மையிலேயே அதிர்ச்சியாகிப் போனாள்.

''இத்தனையுமா?'' என்றாள்.

''ஆமா... பின்னே அத்தனை பேருக்கும் இதிலே ஒரு கிண்ணம் உப்புமாவுக்கு... இதுல சாம்பாருக்கு... இதுல ரசத்துக்குன்னு எடுத்தா இதுல எவ்வளவு இருக்கும்'' என்றார் ரத்னாம்மா.

சரி என்று அவள் நறுக்க ஆரம்பித்தவுடனே அவர்கள் எல்லாரும் கனீர் என சிரித்தார்கள். அவளுக்கு கல்லூரியில் நடந்த ராகிங் ஞாபகத்துக்கு வந்தது.



வீட்டிலும்கூட பெண்கள் வாய்ப்பு கிடைத்தால் ராகிங் செய்கிறார்களே என்று எண்ணிக் கொண்டாள்.

''நீங்க எல்லாரும் என்னைக் கேலி செய்யறீங்க'' என்றாள் சிணுங்கலாக.

அவர்கள் சிரித்தார்கள். ரத்னாம்மா வந்து அவள் அருகில் அமர்ந்தார்.

''சரி... சரி. பயந்துக்காதே. கொஞ்சம் கொஞ்சமா பழகிக்குவியாம். ஒண்ணுமே செய்யாம இருக்கிறதுக்கு கஷ்டமா இருக்குல்ல. உன்னால முடிஞ்சது. இந்தா இந்த சின்ன கிண்ணம் நிறைய நறுக்கி குடுத்துட்டு ஓடிப்போய் பாலுவைக் கவனிப்பியாம்'' என்றார்.

மற்றவர்கள் எல்லாரும் அவளைக் கனிவுடன் பார்த்தார்கள்.

''சரி'' என்று அவள் உற்சாகமாக வெங்காயம் நறுக்குவதை ஒரு கணம் பார்த்தார்கள்.

''இந்தா மாணிக்கம்! புதுசா வந்திருக்கும் புள்ள... புதுப்பொண்ணு வெங்காயம் நறுக்கறதை வேடிக்கைப் பார்த்துட்டு நின்னா மத்த வேலை எல்லாம் ஆக வேண்டாமா? ஊட்டுக்காரருக்கு ராகிக் கூழ் கொடுக்க வேண்டாம். ஓடு'' என்றாள்.

ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கு ஏற்ற வகையில் அங்கே காலைப் பலகாரம் தயாராகிக் கொண்டு இருந்தது.

இப்போதுதான் அவள் அந்த வீட்டினுடைய நடைமுறைகளை கவனிக்க ஆரம்பித்தாள். எட்டு மணிக்கு மேலாக ஒவ்வொருவராக டைனிங் டேபிளுக்கு வந்தார்கள். 'நல்லவேளையாக டைனிங் டேபிளாவது வைத்திருக்கிறார்களே... பழைய காலம் போல மணைபோட்டு இலை போட்டுதான் சாப்பிடுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்காமல்...' என்று எண்ணிக் கொண்டாள். ஜெயந்தி.

முதலிலே கோவிந்தசாமி வந்தார். அவருக்கு இட்லி முக்கியமான உணவாம். அதுகூட வேறு ஏதாவது வைத்துக் கொள்ளலாமாம். இட்லியும் உப்புமாவும் அன்றைக்குச் செய்திருந்தார்கள். சட்னி, சாம்பார் வேறு இருந்தது. கோவிந்தசாமி முதலில் எட்டு மணிக்கு கிளம்பிப் போனார்.

அதற்குப் பிறகு கிருஷ்ணசாமியும் நாராயணசாமியும் எட்டரை மணிக்கு வந்தார்கள். அம்பிகாவின் கணவர் ஜெகந்நாதனும் வந்தார்.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில் வீட்டில் இருந்து பள்ளிக்கூடத்துக்கு செல்கிற குழந்தைகள் எல்லாம் வந்தார்கள்.

பெரிய டைனிங் டேபிள். கிட்டத்தட்ட பத்து பேர் அமர்ந்து சாப்பிடலாம் என்பதால் வேகவேகமாக ஒவ்வொருவருக்கும் உணவு பரிமாறி அவரவர் வீட்டுக் குழந்தைகளை அவரவர்கள் தயார்படுத்தி அனுப்புவதைப் பார்க்க அவளுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது.

எட்டரை ஆகி விட்டது.

குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கு கிளம்பிச் சென்றபின்...

குழந்தைகள் கிளம்பியதற்குப் பிறகுதான் ஆண்களும் ஒருவழியாக கிளம்பியதற்குப் பிறகுதான் ஆண்களும் ஒருவழியாக கிளம்பியதற்குப் பிறகுதான்

ஆண்களும் ஒருவழியாக கிளம்பியதற்குப் பிறகுதான் பெண்கள் மறுபடியும் ஒரு முறை முகம் கழுவிவிட்டு வந்தார்கள்.

"அப்பா... பரபரப்பா இருக்கு" என்றாள் ஜெயந்தி.

"பின்னே... பெரிய குடும்பம்னா என்ன நினைச்சுக் கிட்டே... எல்லாரையும் நேரத்துக்கு அனுப்பணும். எல்லாருக்கும் வயிறு வாடாம நேரத்துக்கு குடுக்கணும். அதுதானே நம்ம வேலையே..." என்றார் ரத்னாம்மா.

"ஆமாமாம்..." என்றாள் ஜெயந்தி.

"சரி... சரி. நீ இங்க பராக்கு பார்த்திட்டு இராம போய் பாலுவைக் கவனி" என்று மறுபடியும் அவளை நெட்டித் தள்ளினார்கள்.



ஜெயந்திக்குக் கோபமாக வந்தது. 'என்ன பாலுவைப் போய் கவனிப்பது. அவர் எழுந்து குளித்துவிட்டு வரமாட்டாரா?' என்று!

பெண்கள் எல்லாரும் விழுந்து விழுந்து கணவன்மார்களுக்குப் பக்கத்திலேயே நின்று உபசரிப்பதைக் கவனித்திருந்தாள். அதேபோல பாலகுமாரனும் எதிர்பார்க்கலாம் அல்லவா என்று எண்ணிக் கொண்டு அறைக்குப் போனாள்.

ஆனால், பாலகுமாரன் எழுந்து குளித்து முடித்துவிட்டு அங்கேயே இருந்த சின்ன அலமாரியில் இரண்டு சாமி படங்களை வைத்திருந்தார்கள். அதை கும்பிட்டுவிட்டு பூஜை அறைக்கு வெளியே வந்து கொண்டிருந்தான்.

"ஐய்யய்யோ... ஸாரி... நான் உங்களுக்குக் காபி கொடுக்கவே இல்ல" என்றாள் ஜெயந்தி பரபரப்பாக.

"நீ புதுசா வீட்டை அப்சர்வ் பண்ணப் போயிட்டே. எல்லாம் அண்ணி கொடுத்தனுப்பிட்டாங்க. மாலதி கொண்டு வந்து குடுத்துட்டுப் போச்சு" என்றான்.

அவளுக்கு வெட்கமாகப் போய் விட்டது.

ரத்னாம்மா மீது மதிப்புகூடத் தோன்றியது. தன்னை ஒருபுறம் சமாளித்துக் கொண்டே கொழுந்தனுடைய தேவையையும் கவனித்திருக்கிறாரே என்று.

"ஏங்க... எல்லாரும் எப்படிப் பரபரப்பாக வேலை செஞ்சுகிட்டு இருக்காங்க..." என்றாள்.

"ஆமாம்... நீயும் நாளையில இருந்து பரபரன்னு பறக்க வேண்டியதுதான்" என்றான்.

"ஆமாங்க... நான் இன்னிக்கு இவ்ளோ வெங்காயம் அரிந்து கொடுத்தேங்க" என்றாள்.

அவன் சிரித்தான்.

"இவ்ளோ வெங்காயம்னு ஆச்சரியமாச் சொல்றே."

''எங்க வீட்ல அந்த இவ்ளோ வெங்காயம் நறு
நாளைக்குப் போதும். தெரியுமா?'' என்றாள்.

''அது சரி. அங்க மூனே பேரு. இங்க முப்பது பேருக்
மேல் இருக்காங்க இல்லே'' என்று பேசிக் கொண்டே பூஜை
அறைக்குள் போய் பூஜை செய்துவிட்டு அவனும் டைனி
டேபிளுக்கு வந்தான்.

பெண்கள் எல்லாரும் அவனைச் சூழ்ந்து நின்றுகொண்
கேலி செய்தார்கள்.

''என்னப்பா புது மாப்பிள்ளை... இன்னிக்குத்தா
டைனிங் டேபிளுக்கு வரணும்னு ஐயாவுக்குத் தோணிச்சா
என்றார் இரண்டாவது அண்ணி.

''நானா வரமாட்டேன்னு சொன்னேன். எங்க இங்
வந்திருவானோன்னு அங்கேயே குடுத்துக் குடுத்
அனுப்பிச்சுட்டீங்க. எனக்கே பொறுக்கல... இன்னிக்
எல்லாரையும் ஒரு தடவை பார்த்துடலாம்னு இங்கே
வந்தேன்'' என்றான் பாலகுமாரன்.

''ஆமாமாம். இனிமேல் அப்பப்ப இப்படி
பார்க்கறதுக்குத்தான் வருவே'' என்று சிரித்தார்கள்.

''சும்மா இருங்கண்ணி. இந்தக் கதையெல்லா
வேண்டாம். எல்லா அண்ணன்மார்களின் கதை தெரிஞ்சு
தானே எனக்கு. பத்து நாள் பதினைந்து நாள் ஏதோ ஃப்ரீ
விடுவீங்க. அதுக்கப்பறம் ஓடு... கடைக்கு... நாலு
எட்டரை மணிக்கு பொட்டியைக் கட்டிட்டு ஓ
வேண்டியதுதான்'' என்றான்.

''நீங்கெல்லாம் முதலாளிகள். தொழிலாளிகளுக்
முன்னாடி போய் முதலாளிகள் நின்னாத்தானே வேல
வாங்க முடியும்'' என்றார் அம்பிகா.

''ஆமாங்கத்தை... ஆமாம்'' என்று சொல்லிவிட்டு அவ
சாப்பிட ஆரம்பித்தான்.



''உனக்கு என்னப்பா வேணும்'' என்று கேட்டார்கள்.

''இந்த இட்லி... இட்லி இருக்குமே. பெரிய அண்ணனுக்குச் செஞ்ச இட்லி. குடுங்க. வீட்டு இட்லி சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு...'' என்று ஆசையாக வாங்கிக் கொண்டான்.

''பொங்கல் இருக்கு. உப்புமா இருக்கு...''

''எல்லாத்தையும் கொஞ்சம் கொஞ்சம் வையுங்க'' என்றான்.

ரத்னாம்மா எடுத்து தானே பரிமாறாமல், ''இந்தா புள்ள, இங்க வா... பரிமாறு'' என்று அவள் கையிலே கொடுத்தார்கள்.

''அவதான் தினம் பரிமாறப் போறாளே... வழக்கம் போல் நீங்க பரிமாறுங்க'' என்றான் அவன். ரத்னாம்மாவின் முகம் மலர்ந்தது.

''சரிடா... ராஜா'' என்று அவர் பரிமாற ஆரம்பித்தார்.

இதெல்லாம் அன்றைக்கு ரசிக்கும்விதமாக இருந்தது ஜெயந்திக்கு.

அங்கே பாசப் பரிமாற்றம் இருந்தது. உழைப்பும் இருந்தது. இதையெல்லாம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது என எண்ணிக் கொண்டாள்.

ஆனால், ஒரே வாரம்தான். வேண்டுமானால் ஒரு பத்து நாட்கள் என்று சொல்லலாம். பத்தே நாட்களில் அவளுக்கு அந்த நடைமுறை பெரிய கேள்விக்குறியாக இருந்தது. அவளுடைய மனம் அடியோடு மாறிப்போய் விட்டது. அவளுடைய மனத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடிய தன்னுடைய எண்ணங்களை அவள் பாலகுமாரனிடம் சொன்னபோது பாலகுமாரன் கொஞ்சம் அதிர்ச்சியும் ஆச்சரியமாகத்தான் அவளைப் பார்த்தான்.

பாலகுமாரனும் ஜெயந்தியும் காரில் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஜெயந்தியின் அம்மா வீட்டை நோக்கி கார் போய்க்கொண்டிருந்தது.

முதல் நாள் இரவு ஜெயந்தி கணவனிடம், ''ஏங்க... அம்மா அப்பாவைப் போய் பார்த்துட்டு வரணும்'' என்று கேட்டு இருந்தாள்.

''சரி, நாளைக்குப் போகலாம்'' என்றான்.

அவள் மகிழ்ச்சி அடைந்தாள். அடுத்த நாள் காலை கோவிந்தசாமி டைனிங் டேபிளில் அமர்ந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது பாலகுமாரன் தயங்கித் தயங்கி வந்து அவர் எதிரிலே நின்றான்.

''என்னடா, தம்பி! உட்காரு'' என்று அவர் எதிரே கையைக் காட்டினார். அவனும் அமர்ந்தான்.

ஜெயந்தியும் மற்ற அக்காமார்களுமாக இருவருக்குமாகப் பரிமாறினார்கள்.

பாலகுமாரன், பெரியண்ணன் முகத்தை தயங்கித் தயங்கிப் பார்த்தான்.

அவருக்கும் புரிந்தது போலும், தம்பி ஏதோ கேட்க வருகிறான் என்று.

''என்னடா... என்னமோ கேட்கணும் போலிருக்கு, கேளு'' என்றார்.

''இல்லே. ஜெயந்தி அவ அம்மா வீட்டுக்குப் போகணும்னு சொன்னா...'' என்று இழுத்தான்.

அவர் இடது கையால் தனது மீசையை நீவிக்கொண்டார்.

''அடப்பயலே... இதுக்கெல்லாம் எங்கிட்ட சொல்லிக் கிட்டா இருக்கணும். கூட்டிட்டுப் போயிட்டு வா'' என்றார்.



அவன் மகிழ்ச்சியானான்.

''கடையைத் திறந்து வச்சிட்டு அந்தக் கடை சூபர்வைசர் வந்ததும் சொல்லிட்டு வந்து கூட்டிட்டுப் போ. மேனேஜரா வேணும்னா அங்கே அனுப்பி வைக்கிறேன்'' என்றார்.

அவன் பொறுப்பிலே ஒரு ஸ்வீட் மற்றும் பிஸ்கட்ஸ்... நிறையத் தின்பண்டங்களை விற்கக்கூடிய ஒரு கடை இருந்தது.

மற்ற அண்ணன்மார்களிடத்திலே மூன்று இடங்களில் ஹோட்டல்கள் பொறுப்பில் இருந்தன. ஹோட்டல் வேலை சற்று கடினமானது என்பதால் பாலகுமாரனுக்கு இப்போது அந்த வேலையைக் கொடுக்கவில்லை.

''சரிண்ணா...'' என்று அவன் உற்சாகமாகச் சொன்னான்.

அதற்குப்பிறகு சற்றுநேரம் வியாபார விஷயங்களைப் பேசினார்கள். பிறகு அவர் எழுந்து கைகழுவி விட்டுத் திரும்ப வந்தவர், ''இந்தா பார்றா... பைக்கில் கீக்கில வேண்டாம். அந்த மாருதி கார் கொடுத்திருக்கில்ல, அதுல போ'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

அந்தச் சின்ன மாருதி காரில்தான் இப்போது அவர்கள் போய்க்கொண்டு இருந்தார்கள்.

வெள்ளைநிற கார்... அழகான கார்... கோவிந்தசாமி குறிப்பாக அப்படிச் சொன்னதில் ஏதோ கருத்து இருந்தாற்போல ஜெயந்திக்குத் தோன்றியது.

அவளுடைய அம்மா, அப்பாவுக்கு அவள் காரிலே போய் இறங்கினால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை நினைக்கும்போது அவளுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் பெரியண்ணா... ஏதோ, 'பாருங்க... உங்க பொண்ணை நாங்க எப்படி வச்சிருக்கோம்' என் சொல்வதற்காகவே இப்படிக் காரில் அனுப்புகிறார்களோ என்று தோன்றியது.

உடனே இன்னொரு மனது அவளை அதட்டியது.

'போதும்... எல்லாத்துக்கும் காரணம் கண்டுபிடிக்காதே. அப்படித்தான் இருக்கா என்ன... பெருமையா உங்க பொண்ணை எப்படி வச்சிருக்கோம் பாரு என்று அவர் சொல்வதிலே என்ன தப்பு?' என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

காரிலே போய்க்கொண்டிருக்கையில் பாலகுமாரனின் மனதில் வேறு விதமான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

தன் மனைவியைப் பற்றிய அந்த ரகசியம் தனக்குத் தெரியும் என்பதை அவளிடத்தில் இப்போது சொல்லி விடலாமா என்று நினைத்தான்.

'வேண்டாம், அவசியம் வரும்போது சொல்லிக் கொள்ளலாம்' என்று முடிவு செய்து கொண்டான்.

ஆனால்... அதேசமயத்தில் அன்றைக்கு முதல் நாள் அவள் கேட்ட கேள்வி அவன் மனத்திலே உறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

அப்படியொரு கேள்வியை அவள் கேட்டிருந்தாள்.

தங்கள் தனிமையின்போது அவளைச் சற்றுநேரம் கேலி செய்து கொண்டிருந்தான் பாலகுமாரன்.

''இன்னிக்கு நீ வெங்காயம் நறுக்கிக் குடுத்ததனால... வீடே கலகலத்துப் போச்சு போ'' என்றான்.

அவள் அவனை முறைத்தாள்.

''என்ன எல்லாரும் ஒரேயடியாய் கேலி செய்யறீங்க'' என்றாள்.

''இல்லே... இரண்டு அண்ணிகளும் சிரிச்சுக்கிட்டு இருந்தாங்க. ஒரு கிண்ணம் வெங்காயத்தை அரை மணி நேரம் நறுக்கினியாமே'' என்றான்.



''ஆமாம். எங்க வீட்ல அந்த வேலையெல்லாம் செஞ்சு பழக்கமில்லே. அம்மா சமையல் பண்ணிப்பாங்க. நான் சும்மா ஏதாவது காய்கறி நறுக்கிக் கொடுப்பேன். அதிலும் இந்த வெங்காயம் நறுக்கறது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது'' என்றாள்.

அவன் சிரித்தான். ''பிடித்தது. பிடிக்காதது எல்லாத்தையும் நீ விட்டுடணும் தாயி. இங்கத்த நிலைமைக்கு ஏற்ப அம்மா மாறிக்கணும்'' என்றான்.

''கண்டிப்பா... ஆனா, அது ஒரே நாள்ல முடியாதே! கொஞ்சம் கொஞ்சமாத்தானே மாறிக்கணும்'' என்றாள்.

'சரி, இந்த அளவு ஏற்றுக் கொள்கிறாளே...' என்று அவனும் சமாதானமானான்.

ஆனால், அவள் கைப்பிடியில் இருந்தாலும்கூட அவள் ஏதோ சிந்தனையில் இருக்கிற மாதிரி தோன்றியது.

மெல்ல அவள் தலையைக் கலைத்துவிட்டுச் சொன்னான்.

''என்ன யோசனை?'' என்றான்.

''ஏங்க... நீங்க மட்டும்தானே உங்க வீட்ல கிராஜுவேட்?'' என்றாள்.

''ஆமாம். எங்க வீட்ல நான்தான் கிராஜுவேட். என்னமோ போனாப்போகுதுன்னு என்னை மட்டும் படிக்க விட்டாங்க. ஆனால், இப்ப அடுத்த தலைமுறையில பசங்களையெல்லாம் படிக்க வச்சுடலாம்னு யோசனை பண்ணிக்கிட்டிருக்காங்க'' என்றான்.

அவள் மறுபடியும் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஹூம்... மேடம்... அடுத்த கேள்வி என்ன?'' என்றான், சிரித்துக் கொண்டு.

''இல்ல ரத்னா அக்காவுக்கு கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் இருக்கும்?'' என்றாள்.

அவன் உடனே விரல் விட்டு எண்ணுகிறாற்போல நடித்துக் கொண்டு... "இப்போ... மாலதிக்கே இருபத்தொரு வயசு. இது இருக்கும் இருபத்திரண்டு. இருபத்து மூணு வருஷம்... நானெல்லாம் அப்போ சின்ன பையன், அவங்க கல்யாணமாகி வரும்போது'' என்றான் மெல்லப் புன்னகையோடு.

''அப்ப இந்த இருபத்து மூணு வருஷமா... இதே அடுப்படியில சமையல் பண்ணிக்கிட்டு இதே ரொட்டீனை காலையில இருந்து சாயங்காலம் வரை செஞ்சுக்கிட்டு எப்படி அவங்களால இருக்க முடியுது?'' என்றாள் அவள்.

அந்தக் கேள்வியை ஏனோ அவள் தனக்குள்ளேயே எழுப்பிக் கொள்கிறாளா... ''லவ் டு திங்கிங்'' என்று சொல்வார்களே அதுபோல உரத்த சிந்தனையாக அது அமைந்திருக்கிறதா என்று ஆச்சரியமாகப் பார்த்தான்.

''என்ன சொல்றே நீ'' என்றான்.

''ஏங்க... வாழ்க்கைன்னா என்ன?'' என்றாள் அவள்.

அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

''அடப் பாவிப் பெண்ணே... நமக்கு கல்யாணம் ஆகியே இருபது நாள்கூட ஆகலை. நீ என்னடான்னா... வாழ்க்கைன்னா என்ன அப்படீன்னு தத்துவ ஆராய்ச்சியெல்லாம் செஞ்சுகிட்டிருக்கே'' என்றான்.

''தத்துவ ஆராய்ச்சி இல்லைங்க... நான் கேட்கிறது ஒரு உண்மையான கேள்வி. இருபத்து மூணு வருஷமா அவங்க இந்தக் குடும்பத்துல சமையல் வேலையைத் தவிர... வீட்டு வேலையைத் தவிர வேறு என்ன செஞ்சிருக்காங்க?'' என்றாள்.

அவன் அவளைச் சிந்தனையோடு பார்த்தான்.



''இதப்பாரு ஜெயந்தி. இந்தக் கேள்வியை அவங்களே இதுவரைக்கும் கேட்கலே. ஏன், நினைக்கக்கூட பார்க்கலே. இப்ப நீ எதுக்காகக் ஒளப்பறே...'' என்றான்.

அவள் தனக்குத்தானே சொல்லிக் கொள்வதுபோல அவனை ஆமோதித்தாள்.

''ஆமாம். நான் எதுக்குக் ஒளப்பணும்? ஆனா எனக்குள்ள இந்தக் கேள்வி ஒளம்புதே'' என்றாள்.

அவன் செல்லமாக ஒரு குட்டு வைத்தான்.

''இந்த மாதிரி கேள்வியெல்லாம் இந்த மாதிரி வீட்ல பிறக்கக்கூடாது அம்மணி'' என்று செல்லமாக அவள் காதைப் பிடித்து ஆட்டினான்.

அவள் புன்னகைத்தாள்.

மறுபடியும் அவளிடத்திலே ஏதோ கேட்க ஆரம்பித்தாள். அவன் சட்டென்று ஒரு புது மணமகனுக்கே உரிய விதத்தில் அவள் வாயை அடைத்தான்.

''இதப்பாரு... இந்தக் கேள்வியை எல்லாம் தூக்கித் தூர வை. இப்படிக் கேள்வியெல்லாம் கேட்டீன்னா... எங்க அண்ணன்மார் எல்லாம் அசந்து போயிடுவாங்க. அசந்து மட்டுமில்ல... அதிர்ச்சியாயிடுவாங்க அம்மணி'' என்றான்.

''இல்லைங்க... என்னால அது முடியாது. அதுதான் எனக்குப் பயமா இருக்கு'' என்றாள்.

அவன் சட்டென்று அவளை விலக்கி... அமர வைத்து அவள் முகத்தைப் பார்த்தான்.

''எது முடியாது?'' என்றான் கவலையுடன்.

அவள் முகத்திலும் கவலை இருந்தது.

''இல்லைங்க. என்னால இப்படிக் காலையில இருந்து நைட் வரைக்கும் சமையல் செஞ்சுகிட்டு, வீட்டு ஆம்பளைங்களை மட்டுமே கவனிச்சுக்கிட்டு, தனக்குன்னு எதுவுமே இல்லை அப்படீன்னெல்லாம் நினைச்சுட்டு என்னால இருக்க முடியாதுங்க'' என்றாள்.

அவன் கொஞ்சம் திகைத்துதான் போனான்.

''இதை நீ சொல்றியா... இல்லை, நீ படிச்சிருக்கிற படிப்பு சொல்லுதா?'' என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

''அப்போதும் நான் நினைச்சேன். அண்ணன்மார்களெல்லாம் அடிக்கடி பேசிக்குவாங்க. படிச்ச பொண்ணு வேண்டாம் அப்படீன்னு'' என்றான்.

அவள் கொஞ்சம் அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''அப்ப உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள்.

''தெரியும், தெரியும். உன்னோட ப்ளஸ் டூ படிப்பே எங்க வீட்டுக்குப் பெரிய விஷயம்தானே. உங்க அப்பா அம்மாவுக்கு அதை சொல்ல வேண்டாம்னு சொன்னதே நான்தான்'' என்றான்.

அவள் மேலும் அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''அதான் அந்த வளைகாப்பு விசேஷத்துல நான் உன்னைப் பார்த்தேனே. எனக்குப் புடிச்சது... அதான் ஜாடைமாடையா அண்ணிகிட்டே எல்லாம் சொன்னேன். ஆனா, விசாரிச்சப்பதான் இந்த விஷயம் தெரிந்தது. அந்த விஷயம் வெளியே வந்தால் நம்ம கல்யாணம் நடக்காதுன்னு நான் உங்க அம்மா அப்பாகிட்ட மறைக்கச் சொன்னேன்'' என்றான்.

அவள் இன்னும் கொஞ்சம் அதிர்ச்சியடைந்தாள்.

''ஏங்க... இதனால ஏதேனும் பிரச்னை?'' என்றாள்.

''பிரச்னைகள் ஏதும் வராமப் பார்த்துக்கறது நீயும் நானும் எப்படி நடந்துக்கறோம்கிறதப் பொறுத்திருக்கு'' என்றான்.

அவள் கொஞ்ச நேரம் சிந்தனையில் ஆழ்ந்த பிறகு சொன்னாள்.



''சரி. என்னாலே பிரச்னை வராத அளவுக்குப் பார்த்துக்கறேன். ஆனா... என்னையும் நீங்க கொஞ்சம் புரிஞ்சுக்கணும்'' என்றாள்.

''புரிஞ்சுக்கறேன்... உங்க வீட்ல நீ என்ன புத்தகம் படிச்சுக்கிட்டு இருப்பே. உனக்குன்னு சில தனிப்பட்ட கைவேலைகள் அது இதுன்னு செஞ்சிட்டு இருந்திருப்பே... அதுதானே. அதுக்கெல்லாம் நான் வசதி பண்ணித் தர்றேன். தெரிஞ்சும் தெரியாமலும் உனக்குத் தேவையான புத்தகங்கள் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணித் தர்றேன். உன்னோட கலைப்பணியையெல்லாம் தொடரலாம். ஆனா, அதே சமயத்துல அதையெல்லாம் உன்னோட ஒய்வு நேரத்துல வச்சுக்கணும். இந்த வீட்டோட எந்த ரொட்டீனும் டிஸ்டர்ப் ஆகாம நீ பார்த்துக்கணும்'' என்றான்.

அவளுக்கு இந்த நேரத்தில் அதுவே மகிழ்ச்சியாகத் தெரிந்தது. இந்த அளவுக்கு முதலில் வாய்ப்பு கிடைத்தால் போதுமே... கணவன் இந்த அளவுக்குப் புரிந்து கொள்கிறாரே... அதுவே போதுமே என்று அவளுக்குத் தோன்றியது.

''சரிங்க...'' என்றாள் உற்சாகமாக.

''எப்ப நான் சொன்னதுக்கு நீ ஒத்துக்கிட்டியோ அப்ப நீ நல்ல பொண்ணு... அதனால நீ சொன்னதுக்கு நானும் ஒத்துக்கறேன். நாளைக்கே நாம் உங்க அம்மா வீட்டுக்குப் போகலாம்'' என்று அவன் ராகம் போட்டான்.

அந்த ஒப்பந்தத்தின்பேரில்தான் இன்றைக்கு அவளுடைய அம்மா வீட்டுக்குப் போனார்கள். போய் காரை நிறுத்தி விட்டு, கணவனும் மனைவியுமாக இறங்கிப் போகும்போது, சத்தம் கேட்டு உள்ளே இருந்து ஓடிவந்த திருமலையும் லட்சுமியும் அவள் கழுத்திலும் கைகளிலும் நகைகளோடு ஒரு பெரிய குடும்பத்துப் பெண்ணைப் போல இறங்கி வருகிற தோரணையைப் பார்த்து பூரித்து தான் போனார்கள்.

அந்தக் கணத்தில் அவளுக்குத் தோன்றியது. இந்தப் பூரிப்பே தனது வாழ்வில் நிறைவை ஏற்படுத்தும் என்று.

விஷயங்கள் அப்படி இருக்கப் போவதில்லை என்பது அப்போது அவளுக்கும் தெரியவில்லை. பாலகுமாரனுக்கும் தெரியவில்லை.

அப்படி விஷயங்கள் அடுத்தடுத்து நடந்தன. அப்படி நடந்தபோது இருவருமே புயலில் சிக்கிக் கொண்ட துரும்பைப் போலத் தவித்துப் போகப்போகிறார்கள் என்பதை அப்போது அவர்கள் உணரவேயில்லை.

## அத்தியாயம் - 6

**ஜெ**யந்திக்கு ஒரே மலைப்பாக இருந்தது. மறுக்கவும் முடியவில்லை, பொறுக்கவும் முடியவில்லை. அவளுடைய மூத்தார்கள் மூன்று பேருடைய மனைவிமார்களுமாக இந்த நகையைப் போட்டுக் கொள், அந்த நகையைப் போட்டுக் கொள் என்று அவளைப் பிடுங்கி எடுத்தார்கள்.

''இந்த காசு மாலையைப் போட்டுக்கம்மா'' என்றார்கள்.

சரி... என்று வாங்கிப் போட்டுக் கொண்டாள். ''இந்தா இந்த இரட்டை வடம் போட்டுக்கிறியா, இந்த மூணு சரம் போட்டுக்கிறியா, இது முகப்பு வச்சது, நல்லாயிருக்கும்'' என்றார்கள்.

அவள், ''வேண்டாங்க... இரட்டை வடமே போட்டுக்கறேன்'' என்றாள்.

கடைசியாக கண்ணாடி முன் நின்று பார்க்கும்போது ஏதோ பழைய காலத்து பங்களாக்களில் வரும் பழைய ஜமீன்தாரிணியின் ஆவி போல அவளுக்குத் தோன்றியது. சிரிப்பாக வந்தது.

தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.



பாலகுமாரன் வந்தவன், பீரோவைத் திறந்து எதையோ எடுத்தவன், திரும்பி அவளைப் பார்த்து, ''ஆஹா... என்று சிலாகித்துக் கொண்டான்.

''எங்கே, கொஞ்சம் திரும்பி நில்லு... என்று அவள் தோளைப் பிடித்து தன்னை நோக்கித் திருப்பிக் கொண்டான்.

மேலிருந்து கீழாக ஒரு முறை பார்த்தான். அவளுக்கு வெட்கமாகவும் இருந்தது. ஆனால், அவன் பார்வையைப் பார்க்கும்போது சிரிப்பாகவும் வந்தது.

''சரிதான் போ, உன்னையும் சிக்க வச்சுட்டாங்களா'' என்றான்.

அவள் கொஞ்சம் சோகமாகத் தலையாட்டினாள்.

''ஆமாங்க, சொன்னா கேட்க மாட்டேங்கறாங்க. இத்தனை நகையையும் போட்டுக்கணுங்கறாங்க'' என்றாள்.

அவன், ''ஆமாமாம். சொன்னா கேட்க மாட்டாங்க. அதிலேயும் அவங்களோட கௌரவப் பிரச்னையாச்சே. இன்னிக்கு முதல் முதலா ஒரு கல்யாணத்துக்குப் போறே. எங்க வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம் முதன்முதலா வெளியே அழைச்சிட்டுப் போறாங்க. அவங்கெல்லாம் நகை ஸ்டேண்ட் மாதிரிதான் வருவாங்க. நீ மட்டும் வேண்டாம்னு சொன்னா கண்டிப்பா ஒத்துக்கவே மாட்டாங்க'' என்றான். அவளும் ஆமோதித்துக் கொண்டாள். ஆனால், கலீரென்று சிரித்தாள்.

'என்ன சிரிப்பு?' என ஆசையாகப் பார்த்தான்.

''ஒரு விஷயத்திலே தப்பிச்சிட்டேங்க'' என்றாள்.

''எந்த விஷயத்திலே'' என்றான்.

''ஒட்டியாணம் மட்டும் போட்டுக்கவே மாட்டேன்னு சொல்லிட்டேன்'' என்றாள்.

அவனும் கலீரென்று சிரித்தான்.

"பெரிய சாதனை தான் போ" என்றான்.

"ஒக்காதீங்க. பாருங்க... கொஞ்சம் கொஞ்சமா ஒரு நாலு கல்யாணம் கழிஞ்சவுடனே சிம்பிளா வரப்போறேனா இல்லையான்னு பாருங்க" என்றாள் ஜெயந்தி.

"ஹே... எல்லாரும் புகுந்த வீட்டுக்குப் போகும்போது எத்தனையோ சபதம் போட்டுவிட்டுத்தான் போறாங்க. பார்க்கலாம். நீ அவங்கள மாத்துறியா, இல்ல நீ அவங்க வழிக்குப் போறியா அப்படீன்னு" என்றான்.

"இல்லீங்க கண்டிப்பா நான் மாத்துவேன்" என்றாள்.

அப்போது பாலகுமாரன் சற்றே சிந்தனை வயப்பட்டான்.

"என்ன யோசனை?" என்று அவள் செல்லமாக அவன் காதைப் பிடித்துக் கிள்ளினாள்.

"இல்ல... இந்த நகை போடுற சமாசாரம் வந்து என் அண்ணிங்க மட்டுமில்ல. அண்ணன்களும் கொஞ்சம் கௌரவப் பிரச்னையா எடுத்துக்குவாங்க" என்றான்.

"ஓஹோ... அப்படியா?" என்றாள்.

"ஆமாம். ஏன்னா, அவங்க வீட்டுப் பெண்ணுங்க எல்லாம் எவ்வளவு ஆடம்பரமா வெளியே போறாங்களோ, அந்த அளவுக்குதான் இந்த பிஸினஸ் ஆளுங்களுக்கெல்லாம் அவங்க பிஸினஸ் ஸ்டிராங்கா இருக்கறதா காட்டிக்க முடியும் போல" என்றான்.

அவள் மெல்ல தலை அசைத்தாள்.

"இல்லைங்க. நான் இந்த லயன்ஸ் கிளப் மீட்டிங்குக் கெல்லாம் போயிருக்கேன். அங்கெல்லாம் வர்ற பெண் களெல்லாம் இப்பல்லாம் நிறைய நகைகளை மாட்டிட்டு வர்றதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு சிம்பிளா வர முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சிம்பிளாதான் வர்றாங்க" என்றாள்.



"நீ எங்க லயன்ஸ் கிளப்புக்கு...?" என்று அவன் கேட்க, "அதான் காலேஜ்ல..." என்று ஆரம்பித்தவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"இல்ல. பக்கத்துல ஒரு அக்கா காலேஜ்ல படிச்சிக் கிட்டிருந்தாங்க. அவங்க கூட்டிட்டுப் போவாங்க" என்றாள்.

"ஓஹோ..." என்று அவன் தலையாட்டிக் கொண்டு விஷமமாய்ச் சிரித்துக் கொண்டான்.

தன் மனைவிக்கும் தனக்கும் இடையே ஒரு நாடகம் நடக்கிறது. அந்த நாடகத்தினுடைய க்ளைமாக்ஸ் தனக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், அவளுக்குத் தெரியவில்லை என்று எண்ணிக்கொண்டபோது அவனுக்கும் சிரிப்பாகத்தான் வந்தது.

"சரிம்மா... கிளம்பு. ரொம்ப நேரம் இங்க இருந்தால் அழைப்பு வந்துடும். ஓடு, ஓடு" என்று விரட்டி விட்டான்.

அவளும் சிரித்துக் கொண்டே நகர்ந்தாள்.

திருமண வீட்டிலும் அவர்கள் ஒரு குழுவாகத்தான் போய் இறங்கினார்கள். அந்தக் குடும்பத்தினுடைய மொத்தப் பெண்களும் கிட்டத்தட்ட ஏதோ ஊர்வலம் போகிற மாடல்களைப் போல பழங்காலத்து ஜமீன்தாரிணிகள் போல இறங்கி நடக்கும்போது அவள் தயங்கித் தயங்கிப் பின்னால் நடந்தாள்.

ரத்னாம்மாள்தான், "வா. ஏன் இப்படி ஒதுங்கற..." என்று கையைப் பிடித்து தன்னோடு சேர்த்து அழைத்துக் கொண்டு போனாள்.

அவர்களுக்கு இதெல்லாம் வழக்கமாக இருந்ததாலோ என்னவோ அவர்கள் அது குறித்துக் கூச்சம் கொள்ள வில்லை.

ஆனால், அவளுக்கு அத்தனை நகையும் மாட்டிக் கொண்டு கனமான ஒரு பட்டுப்புடவையும் கட்டிக்

கொண்டு நடப்பதே சிரமமாக இருந்தது. அதைவிட எல்லா கண்களும் தன்மீது படிந்திருக்கிறது என்பதைக் கவனிக்கும் போது அதை ஜீரணித்துக் கொள்வதும் கடினமாக இருந்தது.

இதுநாள் வரையும் எங்கே விசேஷத்துக்குப் போனாலும் அவர்கள்பாட்டுக்கு ஒரு மூலையில் அமர்ந்துவிட்டு வருவார்கள். எல்லோருடைய கண்களும் தங்கள் மீது படிகிற அளவுக்கு எப்போதுமே அவர்கள் குடும்பத்தில் இருந்த தில்லை.

இப்போது எல்லோரும் தன்னைக் கவனிக்கிறார்கள் என்பதே அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

அந்த சூழ்நிலையை மனதில் வாங்கிக் கொள்வதற்கு கொஞ்ச நேரம் பிடித்தது. ஆனால், கொஞ்சமா சமாளித்துக் கொண்டாள்.

மாலதி உடன் வந்ததாலும் அவள் வயதொத்த பெண்கள் இரண்டு மூன்று பேர் அங்கே அவளிடத்திலே வந்து பேசிக் கொண்டிருந்ததாலும் கொஞ்சம் சாதாரணமாக உணர ஆரம்பித்தாள்.

ஆனாலும் மெல்ல மாலதியிடம், "மாலதி! ஆனாலும் இது ரொம்ப கனமாயிருக்கில்லே" என்றாள்.

"எது?" என்று சிரித்தாள் மாலதி.

"இந்த நகையெல்லாந்தான்" என்றாள் ஜெயந்தி.

"ஆமாக்கா... எத்தனை பேருக்கு இந்த மாதிரி நகை யெல்லாம் கிடைக்கலைன்னு கவலைப்படறாங்க. நீ என்னக்கா இப்படிச் சொல்ற..." என்றாள் மாலதி.

"இருந்தாலும் எங்க வீட்டில் இதெல்லாம் இருக்குன்னு காட்டிக்கிற மாதிரியில்ல?" என்றாள் ஜெயந்தி.

"காட்டிக்கிற மாதிரி என்ன... காட்டிக்கிறதேதான். அது உனக்குப் புரியலையா?" என்று சிரித்தாள் மாலதி.

ஜெயந்தியும் கூட சேர்ந்து சிரித்துக் கொண்டாள்.



அந்த நேரத்தில்தான் அங்கே சற்று தூரத்தில் ஒரு இளைஞன், அவளை நோக்கி கையை அசைத்தான்.

திரும்பிப் பார்த்தாள்.

யாரது, அடடே... கல்லூரியிலே தன்னோடு ஒன்றாகப் படித்த மாணவன். அவளுக்கு கொஞ்சம் பகீரென்றது.

கல்லூரியில் படித்த விஷயத்தையே இன்னும் வெளியில் விடாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம். இதில் இவன் வேறு போட்டுச் சொதப்பிவிடுவானோ என்று அவன் தன்னை நோக்கி வருவதற்கு முன்பாக தானே அவனை நோக்கிப் போய்விடலாம் என்று மெல்லத் திரும்பி கணவனிடத்தில், 'தெரிஞ்சவங்க' என்று சொல்லிவிட்டு நகர்ந்து அவனிடத்திலே போனாள்.

"ஹாய்... பிரபாகர்" என்றாள்.

"ஹாய்... என்னது இது. இப்படி வந்துருக்க..." என்று அவன் சிரித்தான்.

"எப்படி வந்திருக்கேன். எங்க புகுந்த வீட்டு வழக்கப்படி வழந்திருக்கேன்" என்றாள்.

அவன் கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தான். தலையைப் பின்னோக்கி சாய்த்து சிரித்தான்.

"நல்ல புகுந்த வீட்டு வழக்கம் போ. இன்னும் ஏதாச்சும் நகைகள் வீட்ல மிச்சம் வச்சிருக்கீங்களா?" என்று கேட்டான்.

"தெரியாது. இவ்வளவுதான் குடுத்துப் போடச் சொன்னாங்க. இன்னும் இருக்கும். இல்லாமலா இருக்கும்" என்று இவளும் சேர்ந்து சிரித்தாள்.

"அப்புறம்?"

"அப்புறம் என்ன... கல்யாணமே பண்ணிக்க மாட்டேன் சோஷியல் சர்வீஸ்ன்னு என்னென்னமோ சொல்லி கிட்டிருந்தே. இப்ப என்ன கல்யாணம் பண்ணிட்டு இப்ப

கழுத்து நிறைய லாடம் கட்ற மாதிரி மாட்டிட்டு வந்து நிக்கிறே'' என்று சிரித்தான் அவன். அவளும் சற்றே சோகம் கலந்தாற்போல சிரித்தாள்.

''என்ன செய்யறது பிரபாகர்? நாம நினைக்கிற மாதிரி ஏதாவது நடக்குதா? எங்க பேரன்ட்ஸ் எப்படியாவது கல்யாணம் பண்ணனும்னு சொல்லிக்கிட்டிருந்தாங்க. இந்த பெரிய இடத்து சம்பந்தம் வந்தவுடனே ஏதோ பெரிய வரம் கிடைத்த மாதிரி என்னைத் தள்ளி விட்டுட்டாங்க'' என்றாள்.

''இல்லையே. நீ சந்தோஷமா இருக்கிற மாதிரிதானே தெரியுது'' என்றான் பிரபாகரன்.

''அதென்னமோ உண்மைதான். என் ஹஸ்பெண்ட் நல்லவர்தான்'' என்றவள், ''பிரபாகர், ஒரு முக்கியமான விஷயம்'' என்று தயக்கத்தோடு சொன்னாள்.

''ம்...ம் சொல்லு. சொல்லு. என்ன ஹெல்ப் வேணும்னாலும் செய்யறேன்.சொல்லு'' என்றான் அவன்.

''இல்லை. என் புகுந்த வீட்ல எல்லாம் அதிகமா படிக்காதவங்க. அதனால வந்து...பேரன்ட்ஸ் வந்து... நான் காலேஜ்ல படிச்சதையே மறைச்சிட்டாங்க. காலேஜ்ல டிகிரி முடிச்சிருக்கிறேன் என்பதே அவர்களுக்குத் தெரியாது. அதனால தயவுசெய்து நீ சொல்லிறாதே'' என்றாள்.

''ஓஹோ! இப்படியெல்லாம்கூட திருட்டுத்தனம் பண்ணியிருக்கீங்களா?'' என்று அவன் மறுபடியும் சிரித்தான்.

அவள் முறைத்தாள்.

''என்ன பெரிய திருட்டுத்தனம் பண்ணினோம். படிக்காம படிச்சதா சொன்னாதான் தப்பு. படிச்சதைத் தானே இல்லைன்னு சொன்னோம். ஆக்சுவலா எங்க குவாலிபிகேஷனை கம்மி பண்ணி சொல்லியிருக்கோம். இது ஒண்ணும் ஏமாத்து இல்லை'' என்று முறைத்தபடி சிணுங்கினாற்போல் சொன்னாள்.



அவனும் சிரித்தான். ஆனால், சிரித்துவிட்டு உடனே சொன்னான். ''அப்படித் தெரியலையே. உங்க குடும்பத்துல டிகிரி முடிச்சதுதான் டிஸ்குவாலிபிகேஷனா தெரியுது'' என்றான்.

''இல்லை. அதென்னமோ அப்படித்தான்'' என்றாள் அவள் சோகமாக.

''சரியம்மா. சரி. உன்னோட லைஃப்பை நான் கெடுக்க மாட்டேன். நான் சொல்ல மாட்டேம்ப்பா...'' என்று சிரித்துக் கொண்டே திரும்பவும், அங்கு மாலதி வந்தாள்.

''அக்கா! இங்க என்னக்கா பண்ணிக்கிட்டிருக்கே?' என்றாள்.

''இல்ல... இவரு எனக்குத் தெரிஞ்சவங்க. மிஸ்டர் பிரபாகர்'' என்று அறிமுகப்படுத்தினாள்.

''இது மாலதி. எங்க பெரியம்மா... மூத்தவரோட பொண்ணு'' என்று அவளையும் அறிமுகப்படுத்தினாள்.

அவள் சிரித்தபடி அவனுக்கு வணக்கம் சொன்னாள்.

''என்ன உங்க அக்கா... இப்படி நகையெல்லாம் மாட்டிட்டு வந்திருக்காங்க. ஆனா... எங்களோடெல்லாம் பழகிட்டு இருக்கும்போது ரொம்ப சிம்பிளா இருப்பாங்க தெரியுமா? ஒரு காட்டன் புடவை. சின்னதா ஒரு செயின். கொஞ்சம் பிளாஸ்டிக் வளையல்... இப்படித்தான் நடமாடுவாங்க. தெரியுமா?'' என்றான் அவன், மாலதியை நோக்கி.

மாலதி ஒரு நிமிடம் திணறிப் போனாள். பிரபாகர் தன்னிடம் இவ்வளவு இலகுவாக நேரடியாக பேசுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''ம்...அப்படியா?'' என்றாள்.

''ம்...ம்....அப்படித்தான்'' என்றான் அவன்.

"இல்ல எங்க ஃபேமிலியில... மேரேஜுக்கெல்லாம் போகும்போது கொஞ்சம் கிராண்டா போகணும். அப்பத்தான் நினைப்பாங்க" என்றாள் தயக்கத்துடன்.

"கிராண்டான்னா, இது ஜவுளிக்கடையையும் நகைக் கடையையும் அப்படியே சுருட்டி இடுப்புல கட்டிக் கிட்டுல்ல வந்திருக்கீங்க" என்று அங்கலாய்த்தான் அவன்.

எல்லோருமாகச் சேர்ந்து சிரித்தார்கள்.

சிரித்துக் கொண்டே திரும்பிய பிரபாகரின் பார்வை மாலதியின் முகத்தில் ஆழப் படிந்து விலகியது.

மாலதிக்கும்கூட அந்தப் பார்வை எப்படியோ இருந்தது. பிரபாகர் தனக்குள்ளே அந்த நேரத்தில் ஒரு மாறுதல் ஏற்படுவதை உணர்ந்தான்.

சிந்தனையுடன் திரும்பி, தோழியைப் பார்த்தான்.

"எனக்கு—ஜெயந்தி..." என்று இழுத்தான்.

அவள் ஆச்சரியமாகப் பார்க்க, "எனக்கு உன்னைவிட இந்த மாலதி மேடத்தைதான் ரொம்ப புடிக்குது" என்றான்.

"போங்க சார்..." என்று சிரித்துவிட்டு மாலதி அந்தப் பக்கம் போக, மறுபடியும் ஜெயந்தி, பிரபாகரை முறைத்தாள்.

"பிரபாகர்—பேசாம இரு. இந்தக் குறும்புத்தனமெல்லாம் இந்த ஃபேமிலியில வச்சிக்காதே. ஆளை வச்சி அடிச்சருவாங்க" என்றாள் ஜெயந்தி.

அவன், "அப்படியா...?" என்று பயந்தாற்போல் நடித்தாலும் அவன் ஒன்றும் பயந்துவிடவில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

இரண்டு பேரும் கலகலவென்று சிரித்தார்கள்.

சிரித்துக் கொண்டே மெல்ல அவள் திரும்பிய நேரத்தில் தான் கவனித்தாள், சற்று தூரத்தில் நின்றபடி தன் கணவன், தன்னை ஒருவிதமாக பார்த்துக் கொண்டிருப்பதை.



உடனே சூழ்நிலையை இயல்பாக்கக் கருதி, "என்னங்க..." என்று அவனிடத்தில் போனாள்.

"பாருங்க— இது—" என்று பிரபாகரை அறிமுகப்படுத்தலாம் என பார்க்கும்போது அவன் பல்லைக் கடித்தபடி "அறிவிருக்கா உனக்கு. இத்தனை சொந்தக்காரங்க மத்தியிலே அந்த பையன்கிட்டே போய் என்ன வழிசல் வேண்டிக் கிடக்கு" என்று அடிக்குரலில் சொன்னதும் ஜெயந்தி திகைத்துப் போனாள்.

"இல்லை. அது என் ஃப்ரெண்ட்..."என்று ஆரம்பிக்க...

"ஃப்ரெண்டாவது மண்ணாங்கட்டியாவது. வாயை மூடிட்டு இந்தப்பக்கம் வா" என்று மெதுவாக, ஆனால் முகத்தில் சிரிப்பை வைத்துக் கொண்டு மெதுவாகத் திட்டியபடி அவளை அந்தப் பக்கம் இழுத்துக்கொண்டு போக, அவள் வருத்தத்தோடு திரும்பி பிரபாகரைப் பார்க்க... பிரபாகர் முகத்தில் குறும்புப் புன்னகை தோன்றி மறைந்ததைப் பார்த்தாள்.

அது தன் நிலைமையைப் பார்த்து வெளியிட்ட குறும்புப் புன்னகைதான் என்றுதான் நினைத்தாள். ஆனால், அந்த குறும்புப் புன்னகைக்குப் பின்னால் பிரபாகரனின் மனத்தில் ஏதேதோ திட்டங்கள் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதும், இந்தப் பிரபாகரால் தனக்கு தலைவலி காத்துக் கொண்டிருக் கிறது என்பதையும் அப்போது அவள் உணரவில்லை.

## அத்தியாயம் 7

காரில் வந்து கொண்டிருந்தார்கள்.

ரத்தினாம்மா, மாணிக்கத்தம்மாள், வித்யாவதி, அம்பிகா... இவர்களோடு மாலதியும் ஜெயந்தியும் கூட அமர்ந்து கொண்டிருந்தார்கள். அந்த மாருதி வேன், அவர்கள்

எல்லோரையும் சவுகரியமாக சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் வித்யாவதி சொன்னாள்.

''அக்கா அந்த வீட்டு... அந்த வீட்டுப் பொண்ணு இருக்காங்களே... அந்த அம்மா என்ன சொன்னாங்க தெரியுமா?'' என்று ஆரம்பித்தாள்.

''எந்த வீட்டுப் பொண்ணு?'' என்று கேட்டார் ரத்தினம்மா.

''அதுதான் மேக்கால தெரு மச்சான் இருக்காரே... அவரு மருமக'' என்று இழுத்தாள்.

''அவ பேரு தெரியாதா உனக்கு... அவ பேரு... என்னமோ பேரு... இரு... சங்கரியம்மா'' என்றார் ரத்தினம்மா.

''அந்த சங்கரியம்மாவும் அதோட ஒண்ணுவிட்டு ஓரகத்தியோ என்னமோ ரெண்டு பேருமா சேர்ந்துகிட்டு இன்னிக்கு எவ்வளவு பேசினாங்க தெரியுமா?'' என்று இழுத்தார் வித்யாவதி.

''என்னவாம்'' என்றார் ரத்தினம்மா... அசிரத்தையாக.

''இல்லை... ஒவ்வொரு குடும்பத்தையும் பத்தி கேவலமாகவே பேசிட்டு இருந்தாங்க. ஒரு குடும்பத்தைப் பத்திக் கூட அவங்க நல்லவிதமா பேசலை'' என்றார் வித்யாவதி.

உடனே ரத்தினம்மா மென்மையாக சிரித்துக் கொண்டு, ''ஓஹோ... அப்படியும் நாலும் பேர் இருக்கத்தான் செய்வாங்க. நாம எப்பவும் அவங்களையெல்லாம் மனசுல எடுத்துக்கக்கூடாது. நல்லதா பேசற நாலு பேர் கிட்டதான் நாம தொடர்பு வச்சுக்கோணும். இப்படிப் பேசறவங்க சொல்றதையெல்லாம் மனசுல வாங்கிக்கிட்டோம்னா நம்ம உடம்பு கெட்டுப் போயிரும்'' என்றார்.

ஜெயந்தி சுவாரஸ்யமாக ரத்தினம்மாவை கவனிக்க ஆரம்பித்தாள்.




உடனே வித்யாவதி சிணுங்கலாக... ''போங்கக்கா... நீங்க எப்பப் பாரு இப்படித்தான் சொல்வீங்க. நம்ம குடும்பத்துப் பத்தியே அவ என்னென்னலாம் பேசினா தெரியுமா?'' என்று ஆரம்பிக்க மறுபடியும் ரத்தினம்மா, ''நீ காதல கேட்டியா?'' என்றார்.

உடனே வித்யாவதி முகத்தைச் சுருக்கிக் கொண்டு? ''நான் காதால கேட்கலைன்னா என்ன? எல்லாரும்தானே சொல்றாங்க. அந்த வெள்ளையம்மா அத்தை வந்து சொன்னாங்க. அந்த மோகனா அத்தை வந்து சொன்னாங்க'' என்றார்.

''அவங்க சொன்னது சரி. ஆனால், அவங்க முழுக்க உண்மை சொல்றாங்கன்னு நமக்கு எப்படித் தெரியும்? அந்த அம்மா பேசறது நிஜம்தான். அதை வாங்கிட்டு இவங்க என்னென்ன சொல்லணும்னு நினைக்கிறாங்களோ அதையும் சேர்த்துக்கிட்டுக் கூட சொல்லலாம்ல'' என்றார்.

''இருந்தாலும் இருக்கும்க்கா...'' என்றார் வித்யாவதி.

''அதனாலதான் சொல்றேன். இந்த கேட்பார் பேச்சைக் கேட்டுட்டு நாம் யாரையும் தப்பா நினைக்கக்கூடாது. அப்படியே நம்மளப்பத்திப் பேசினா என்ன? நாம போய் ஒவ்வொருத்தருக்கும் விளக்கம் சொல்லிட்டு இருக்க முடியுமா என்ன? நம்ம கஷ்ட நஷ்டம் நமக்குத் தெரியும். நம்ம பிரச்னையே நமக்குச் சரியாயிருக்கு. இதுல எதுக்கு அடுத்தவங்க விஷயம்'' என்று அந்த டாப்பிக்குக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் ரத்தினம்மா, மிக லாவகமாக.

ஜெயந்தி உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டு கவனித்துக் கொண்டாள்.

''பரவாயில்லை. அனுபவம் அனுபவம்தான். ஒரு குடும்பத்தினுடைய மூத்த மருமகளானவருக்கு இப்படியொரு பெருந்தன்மையான ஒரு குணம் இல்லாவிட்டால்

இந்த குடும்பத்தை கட்டி மேய்க்க முடியாது'' என்று புரிந்து கொண்டான்.

மெதுவாக, ''ஏன் பெரியக்கா... அதுக்காக பேசறது போட்டும் என விட்ரலாமா?'' என்றாள்.

ரத்தினாம்மா இவளை நோக்கித் திரும்பி அன்பாகச் சிரித்தார்.

''என்ன செய்ய!'' என்றார்.

''ஏன் இப்படி பேசறீங்க... அப்படீன்னு கேட்கலாம்ல'' என்று கேட்டாள் இவள்.

''எந்த ஆதாரத்தில் போயி அப்படி கேட்பே?'' என்றார் ரத்தினாம்மா.

''இதுதான் அவங்க சொன்னாங்கன்னு சொல்ல வேண்டியதுதான்'' என்றாள் இவள்.

ரத்தினாம்மா கடகடவென்று சிரித்தார்.

''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா, ஜெயந்தி. இந்த மோகனா அத்தையாகட்டும். அந்த வெள்ளையம்மா அத்தையாகட்டும். பேசும்போதே எப்படி ஆரம்பிப்பாங்க தெரியுமா, 'ரத்தினாக்கா... நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே ரத்னா... நான் சொன்னேன்னு காட்டிக்காதே. எப்படியெல்லாம் அவ சொன்னா தெரியுமா?' என்பார்கள்.

அப்படிச் சொல்லும்போது இவங்கதான் சொன்னாங்கன்னு எப்படிச் சொல்லுவ?'' என்றார்.

ஜெயந்தி விழித்தாள்.

அவர்கள் எல்லோரும் மறுபடியும் சிரித்தார்கள்.

''அதான். இப்படி ஒரு இடத்து விஷயத்தை இன்னொரு டத்தில் போய் சொல்றவங்களே பெரும்பாலும், நான் ான்னேன்னு சொல்லிராதீங்க, நான் சொன்னேன்னு ட்ராதீங்க, என் பேரு வராம பார்த்துக்குங்க... இப்படித் ன் ஆரம்பிப்பாங்க. அப்படியிருக்கும்போது இவங்க



சொல்றதையெல்லாம் நம்பிக்கிட்டு நாம எப்படிப் போய் கேட்க முடியும்?'' என்றார்.

''அப்படீன்னா அவங்க சொல்றதை ஏன் காது கொடுத்து கேட்கணும்?'' என்று கேட்டாள் ஜெயந்தி.

''அதும் ஒருவிதமான டெக்னிக்குதான். நாம கேட்கலைன்னாலும், அவளுக்கு பணத்திமிரு... உடம்பு பூரா நகை போட்டிருக்காள்ல. அந்த திமிரு. பணக்கார அகங்காரம்... அப்படி இப்படின்னு எதை எதையோ சொல்வாங்க. அதனால் கேட்கிற மாதிரி கேட்டுட்டு இந்த காதில வாங்கி அந்தக் காதில விட்டுட்டுப் போய்க்கிட்டே இருக்க வேண்டியதுதான். வம்பு பேசறவங்களுக்கு எல்லாம் நாம காது குடுக்க ஆரம்பிச்சோம்னா நம்ம வாழ்க்கைதான் பாதிச்சுடும்' என்றார் ரத்தினாம்மா.

உண்மையிலேயே ஜெயந்தி மலைத்துப்போனாள்.

ஒரு படிப்பறிவு இல்லாத பெண்ணிடம் இப்படிப்பட்ட அனுபவரீதியான உண்மைகள் பொன் போன்ற வார்த்தைகளாக வெளிவரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

மெல்லப் புன்னகைத்தாள்.

''உண்மைதானக்கா... நீங்க சொல்றது கரெக்ட்தான்'' என்றாள்.

''அப்பாடா... முதல் பாடம் எடுத்தாச்சு'' என்று கிண்டல் செய்தாள் மாலதி.

எல்லாரும் மறுபடியும் சிரித்தார்கள்.

''இந்த வீட்ல மாட்டிக்கிட்டீங்கல்ல. ஜெயந்தி சித்தி! எல்லாரும் ஆளாளுக்குப் பாடம் எடுப்பாங்க'' என்றாள் மறுபடியும் கிண்டலாக.

''எத்தனை பாடம் எடுத்தா என்னடி? உனக்கு விஷயம் புரியவா செய்றது'' என்றாள் அம்பிகா அத்தை.

"போ... அத்தை! உனக்கே இன்னும் புரியல. எனக்கு மட்டும் எப்படி புரியும்னு நீ எதிர்பார்க்கலாம்?" என்று அவள் திரும்ப பதில் கொடுத்தாள்.

"இதப்பார்டி... என்ன வேணும்னாலும் பேசு. எங்க கொழுந்திலை மட்டும் விட்டுக் கொடுப்போம்னு நினைக்காதே" என்று ரத்தினாம்மா தன் மகளின் தலையில் செல்லமாக ஒரு குட்டு வைத்தார்.

அதற்கும் எல்லாரும் சிரித்தார்கள்.

"பார்த்தியாடி... எங்க அண்ணி முதல்ல எனக்கு அண்ணி. அப்புறம்தான் உனக்கு அம்மா" என்று அம்பிகா மறுபடியும் சிரிக்க, அங்கே நிலவிய அந்தக் கலகலப்பான சூழ்நிலை ஜெயந்தியின் மனதுக்கு ரொம்பவும் ரம்மியமாக இருந்தது.

அப்படியேதான் வீட்டுக்குப் போனாலும் சூழ்நிலை இருக்கும் என அவள் எண்ணினாள்.

ஆனால், வீட்டிற்குப் போனால் கதையே வேறு விதமாக இருந்தது.

"சீ, நீ போ. என்ன இங்கே செஞ்சிட்டே இருக்கே" என்று அவளைத் தள்ளிவிட்டார் மாணிக்கத்தம்மா.

"இல்லைக்கா... நானும் இன்னும் வேலை இருந்தா கொஞ்சம் செஞ்சிட்டுப் போறேன்" என்று அவள் நிற்க...

"போதும். இங்க இருக்கிற வேலைக்கெல்லாம் மத்த வேலைக்காரங்க இருக்காங்க. நீ போ. பாலு காத்துக்கிட்டு ...டிப்பான்" என்று அனுப்பி வைத்தார்கள்.

...லேசான வெட்கத்துடன் அங்கிருந்து நகர்ந்தாள் ஜெயந்தி.

வழக்கம்போல சம்புடத்தில் அவனுக்கென்று பலகாரம் ...பாட்டு வைத்திருப்பார்கள். பிளாஸ்க்கில் பால் இருக்கும். ...தை எடுத்துக் கொண்டு தங்கள் அறைக்குக் கிளம்பினாள்.

...புத்தம் புதிதாக செய்யப்பட்ட பலகாரங்கள் ஒவ்வொரு ...ஒம் சிறிய சம்புடத்தில் இருக்கும். அதை எடுத்துக் ...ண்டு போவாள்.



அப்படித்தான் அன்றைக்கும் எடுத்துக் கொண்டு போனாள்.

இன்றைய அனுபவங்களையெல்லாம் அவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையுடன் அவர்களுடைய தனி அறைக்குப் போனாள்.

அங்கே பாலகுமாரன் காத்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால், அவன் முகத்தில் ஏனோ வழக்கமான உற்சாகம் இல்லை.

அவள் உள்ளே நுழையும்போதே ஏதாவது கிண்டலாக 'வாங்க மகாராணி' என்பான். இல்லையென்றால் 'மகாநாடு முடிந்ததா?' என்பான்.

'என்ன சாப்பாடு கடையெல்லாம் கட்டி முடிச்சிட்டீங் களா?' என்பான்.

ஏதாவது ஒரு வம்புப் பேச்சு அவன் வாயில் இருந்து கிளம்பும்.

இன்றைக்கு அப்படி எந்த வம்புப் பேச்சும் கிளம்பவும் இல்லை.

ஒருவிதமான அமைதி அவனிடத்தில் இருந்தது.

ஏதோ ஒரு புத்தகத்தை பேருக்குப் புரட்டிக் கொண்டிருக் கிறான் என்பதும் தெரிந்தது.

அவளும் ஒன்றும் பேசவில்லை. தன்னுடைய ஓரகத்தி களுடன் செலவழித்த அனுபவங்கள் அவள் மனதில் நிறைவை ஏற்படுத்தி இருந்ததால் அந்த நினைவு காரணமாக அவனிடத்தில் இருந்த மாற்றத்தை அவள் கவனிக்கவில்லை.

உள்ளே நுழைந்து வழக்கமான இடத்தில் சம்புடத்தை வைத்துவிட்டு பிளாஸ்க்கில் இருந்த பாலை அருகில் இருந்த டேபிளில் வைத்துவிட்டு திரும்பி அவனைப் பார்த்தாள்.

"ஏங்க இன்னிக்கு என்ன நடந்துச்சு தெரியுங்களா?" என்று ஆரம்பித்தாள்.

அவனிடத்தில் இருந்து பதிலே இல்லை.

ஆனால், அதை கவனிக்கும் மனநிலையும் இல்லை.

அவளே தொடர்ந்து. "இன்னிக்கு ரத்தினாக்கா ஒரு பெரிய லெசன் சொல்லிக் கொடுத்தாங்க" என்றாள்.

அதற்கும் அவனிடத்தில் இருந்து பதில் இல்லை.

"என்ன லெசன்னு கேட்க மாட்டீங்களா? 'வம்புப் பேச்சுக்கு காது கொடுக்கக்கூடாது. வம்பு பேச்சை எப்படி அலட்சியப்படுத்துறது' அப்படீன்னு ரொம்ப ஈஸியா சொல்லிட்டாங்க. அதாங்க அனுபவம்ங்கறது" என்று சொல்லிக் கொண்டே கட்டிலில் அவன் எதிரே போய் அமர்ந்தாள்.

அப்போதுதான் அவன் முகத்தைக் கவனித்தாள்.

அப்போதுதான் அவள் முகத்தில் இருந்த இறுக்கம். அவள் முகத்தில் மோதி அறைந்தது.

சற்று அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

'என்னாச்சு ஐயாவுக்கு... ஏன் எப்படியோ இருக்கீங்க?' என்றாள்.

அவன் அவளை ஒரு கணம் நேராகப் பார்த்தான்.

"அதென்ன அப்படி அந்த பிரபாகரா... என்னமோ கரா... அவன் வந்துட்டு அப்படி பேச்சு..." என்றான் மறுபடியும்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"இன்னும் அதை மறக்கலையா?" என்றாள்.

"மறக்கற மாதிரியா நடந்துகிட்டே?" என்று அவன் திரும்பக் கேட்டான்.

"அப்படி என்ன பண்ணினேன். ரெண்டு வார்த்தை பேசினேன். இது ஒரு தப்பா?" என்றாள்.

"எங்க வச்சுப் பேசினே. கல்யாண வீட்ல. அத்தனை பேர் கண்ணும் புதுப்பொண்ணு புதுமாப்பிள்ளையான நம்ம



பேர்ல இருக்கும்ல. அப்படியிருக்கையில அவங்கிட்டப் போய் என்ன அஞ்சு நிமிஷம் பேச்சு" என்றான்.

"அஞ்சு நிமிஷம்லாம் ஒன்னும் பேசலை. கொஞ்ச நேரம்தான் பேசினேன். கிளாஸ்மேட்... அந்த இதுல பேசினேன்" என்றாள்.

"இதப்பாரு ஜெயந்தி! நீ முதல்ல இந்த வீட்டு கலாசாரத்தைப் புரிஞ்சுக்கணும். இந்த வீட்டுப் பெண்களெல்லாம் யாருகிட்டேயும் போயி அதுவும் ஒரு... இந்த மாதிரி யங்மேன்கிட்டே அஞ்சு நிமிஷம்... பத்து நிமிஷம்லாம் பேசிக்கிட்டு இருக்க மாட்டாங்க. அப்படியே பேசினாலும் ஒரு வார்த்தை... இரண்டு வார்த்தை பேசிட்டு நகர்ந்துடுவாங்க" என்றான் கோபமாக.

அவள் அவனை மறுபடியும் வெறித்துப் பார்த்தாள்.

"இதப் பாருங்க. இன்னிக்கு கல்யாண வீட்ல வந்ததுல இருந்து எல்லா அக்காக்களோடவும் அம்பி அக்காவோடும் தான் நான் இருந்தேன். அவங்க யாருமே இதைப்பத்தி ஒரு வார்த்தைகூட பேசல. கோபமாகவும் பேசல. நல்லதாகவும் பேசல. கெட்டதாகவும் பேசல. அதைப்போல அவங்க முதுகுக்குப் பின்னாடி பேச மாட்டாங்கங்கறதும் எனக்குத் தெரியும். நம்பிக்கை இருக்கு. நீங்க மட்டும்தான் இதைப் பேசறீங்க" என்றாள்.

அவன் அவளை அதே தீவிரத்துடன் பார்த்தான்.

"அவங்க பேச மாட்டாங்க. ஆனா, அண்ணன்களுக்கு அது பிடிக்காது. அண்ணன்கள் கண்டிப்பாக அவங்ககிட்ட சொல்வாங்க. நாளைக்கு இதப்பத்திய பிரதிபலிப்பு வரும்" என்றான்.

அவள் முகம் வாடிவிட்டது.

"நான் என்ன பெரிய தப்பு செஞ்சுட்டேன்னு இப்படி இத நீங்க பெரிசுபடுத்துறீங்க. ஏதோ ஒரு கிளாஸ்மேட் கொஞ்சம்

கலகலப்பா பேசுவாள். அவருகிட்ட நின்னு ஒரு ரெண்டு நிமிஷம் பேசினேன். இதப்போய் இவ்வளவு பெரிய தப்புன்னு சொல்றீங்க. இதுக்கு அடிப்படை காரணம் என்னான்னா உங்களுக்கு என்மீது நம்பிக்கை இல்ல'' என்றாள்.

''இது நம்பிக்கை வைக்கிற சமாசாரம் இல்ல. இந்த வீட்டு நாகரீகம் பற்றிய சமாசாரம்'' என்றான் அவன் கடுப்பாக.

அவளுக்கும் கோபம் வந்தது.

''என்ன நாகரீகம், நாகரீகம்னே பேசறீங்க. நீங்க எந்தக் காலத்துல இருக்கீங்க. இதெல்லாம் இருபது வருஷத்துக்கு முன்னாடி சொல்லியிருந்தீங்கன்னா எடுபடும். இப்ப எல்லாரும் படிச்சிருக்காங்க. எல்லாரும் நாலு பேருகிட்ட கலகலப்பா பேசறாங்க. ஆண் - பெண் வித்தியாசம் இல்லாமத் தான் எல்லாமே போய்க்கிட்டிருக்கு. என்ன நீங்க இப்படி பேசறீங்க'' என்றாள்.

அவன் சட்டென்று எழுந்து நின்றான்.

அவளை மறுபடியும் கோபமாகப் பார்த்தான்.

''நிலைமை புரியாம பேசற, ஜெயந்தி'' என்றான்.

''நான் நிலைமை புரிஞ்சுதான் பேசறேன். நீங்க முதல்ல உங்கள கரெக்ட் பண்ணிக்கோங்க. உங்களுக்கு என் மேல அடிப்படையில நம்பிக்கை இருந்தா நீங்க அவங்களுக்குப் பதில் சொல்லீங்க. ஜெயந்தி எல்லாருகிட்டேயும் கலகலப்பா பேசுவா. ஆனா... ஒழுக்கமானவ... நல்லவ என்று நீங்க எடுத்துச் சொல்லீங்க. இந்த மாதிரி சின்னசின்ன ஐந்து நிமிட பேச்சுக்களால் எல்லாம் என்னுடைய ஒழுக்கம் கேள்விக்குறியாக்கப்படும் என்றால் நான் ரொம்ப யோசிக்க வேண்டியதிருக்கும்'' என்றாள்.

''என்னத்தை யோசிப்பே...'' என்றான் அவன்.



''எதை வேணும்னாலும் யோசிப்பேன்'' என்று அவள் எழுந்து திரும்பி நின்றுகொண்டாள். அவனுக்குள்ளும் கோபம் வந்தது. சட்டென்று எழுந்து சட்டென்று அறையை விட்டு வெளியேறினான்.

அவள் செய்வதறியாது நின்றாள்.

## அத்தியாயம் 8

தலைகுனிந்து இடுப்பளவு தொங்கிய தலைமுடியை முடி போட்டு அந்த முடியின் மேலாக கொஞ்சம் மல்லிகைப்பூ தொங்க நெற்றியில் குங்குமப் பொட்டு துலங்க பளிச்சென்ற முகத்தோடும் புன்னகையோடும் வந்து நின்ற ஜெயந்தியைப் பார்த்து ரத்தினாம்மாள் உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

அவருடைய பார்வை மெல்ல வித்யாவதியைப் பார்த்து திரும்பியது. வித்யாவதியும் நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டார். எல்லோரும் ஆளுக்காள் ஒருவருடைய முகத்தை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். ஆனால், எதுவும் சொல்லவில்லை.

அந்தப் பார்வையை ஜெயா அத்தையும் கவனித்தாள். ஆனால், காட்டிக் கொள்ளவில்லை. ஜெயந்தியும் அதை கவனித்தாள். அவள் முகத்தில் குப்பென்று வெட்கம் நிழலோடியது.

முகம் சிவந்து போனது. சட்டென்று தலையைக் குனிந்து கொண்டவளாக அடுப்படியில் போய் அவசரமாக நின்றாள்.

அங்கே ஏதோ அடுப்பில் இருந்தது. அந்தப் பாத்திரத்தை எட்டிப் பார்த்தாள். சாம்பார் கொதித்துக் கொண்டிருந்தது.

கனகாரியமாக கரண்டியை விட்டு அதைத் துழாவிக் கொண்டு நின்றாள்.

ரத்தினம்மாள்தான் உடனே. "என்னடியம்மா இன்னிக்கு சீக்கிரமாக் குளிச்சிட்டு வந்துட்டே" என்று கேட்டாள்.

"இல்ல. நேரத்திலே எழுந்திருச்சேன். அதான் வந்துட்டேன்" என்றாள்.

"சரி, எனக்கு என்ன வேலை?" என்றாள், முகத்தை நிர்மலமாக வைத்துக் கொண்டு.

உடனே ரத்தினம்மாவும், "என்ன வேலை... சரி, இந்த இட்லியை அவிக்க எடு" என்று சொன்னாள்.

உடனே அவள் ஒரு பெரிய இட்லி பாத்திரம்... அவர்கள் வழக்கமாக பயன்படுத்தக்கூடிய பாத்திரம் இருந்தது. அதை எடுத்து அதில் இட்லி வார்க்க ஆரம்பித்தாள்.

ஒவ்வொரு குழியாக அந்த இட்லி மாவை ஊற்றிறபொழுது அவள் மனதுக்குள் முந்தைய நாள் நிகழ்வுகள் ஓடின.

பாலகுமாரன் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே போனவுடனேயே அவளுக்குக் கோபம் மாறி கவலை தோன்றிவிட்டது.

சட்டென்று இப்படி வெளியே கிளம்பி விட்டானே. அவர்கள் வீட்டுப் பெரியவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்ற எண்ணம் தோன்றியது.

செய்வதறியாது கட்டிலின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

கண்ணில் நீர் பெருகியது. சரசரவென்று பொங்கி வழிந்த கண்ணீரை வலது கையால் துடைத்துக் கொண்டு 'பொறுமையாக இரு ஜெயந்தி! புதிய இடம். இப்படித்தான் இருக்கும். சமாளிச்சுக்கோ ஜெயந்தி' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.



'நீ இங்கே வரும்போது இதையெல்லாம் எதிர்பார்த்துத் தான் வந்திருக்கணும். ஒரு புதிய இடத்திற்கு வரும்பொழுது பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். சட்டுன்னு, எதை வேணும்னாலும் யோசிப்பேன்னு சொல்லியிருக்கலாமா?' என்று அவளது மனசாட்சியே அவளிடத்தில் கேட்டது.

'ஆமாம். சொல்லியிருக்கக் கூடாதுதான்' என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஒரு ஐந்து நிமிடம் ஓடியிருக்கும். அதற்குள்ளாக வெளியே பேச்சு சத்தம் கேட்டது. சட்டென்று கதவோரமாக வந்து நின்று கேட்டாள்.

"என்னடா, இந்த நேரத்தில எங்கே கிளம்பிட்டே" என்று கேட்டுக் கொண்டிருந்தார் பாலகுமாரனின் மூத்த அண்ணன்.

"இல்ல... அது... வந்து..." என்று அவன் இழுத்தான்.

"போடா... போ... புள்ள தனியா இருக்குல்ல... போ... போய் பேசிக்கிட்டு இரு" என்று அவர் சொல்லிவிட்டு நிற்காமல் உள்ளே சென்று விட்டார்.

போன மச்சான் திரும்பி வந்தான் என்பது போல பாலகுமாரன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உள்ளே வந்தான்.

உள்ளே வருவதற்குள்ளாக கொஞ்சம் மனத்தையும் தேற்றிக் கொண்டான் போலும். அவள் அவனைக் கோபமாகப் பார்த்தாள்.

"அதென்ன. பேச்சு பேச்சாயிருக்கணும். எதுக்கு சட்டுனு வெளியே போறது" என்றாள்.

அவனும் அதே கோபத்தில் அவளை முறைத்தான்.

"பேச்சு பேச்சாத்தான் இருக்கணும். நீ மட்டும் என்ன... எதை வேணும்னாலும் யோசிப்பேன்னு சொல்லலாமா?" என்று கேட்டான்.

அவள் குரல் இறங்கியது.

"இல்ல... நானும் கோபத்துல..." என்று இழுத்தான்.

"நீயும் கோபத்துல அப்படிச் சொன்னே. நானும் கோபத்துல வெளியே போனேன். அதுக்கும் இதுக்கும் சரியா போச்சு. விடு..." என்று சட்டென்று சமாதானத்துக்குத் தயாரானாள்.

அவள் சமாதானக் கொடி பிடிப்பது தெரிந்து அவனும் அதற்கு ஆயத்தமானான்.

"சரி, சரி... ஃப்ரெண்ட் பார்க்க வந்தால் பேசக் கூடாதுன்னு சொன்னா எப்படி?" என்று கேட்டாள். ஆனால் அதில் முன்பிருந்த தீவிரம் இல்லை.

"நான் என்ன நம்பிக்கையில்லாமலா சொன்னேன்? நம்பிக்கைக்காக சொல்லலை. நீ வளர்ந்த விதம் வேறாக இருக்கலாம். எங்க குடும்பம் பழக்கவழக்கம் வேறாக இருக்கலாம். அதை நீ புரிஞ்சுக்கணும்ல" என்றான்.

அவள் வேகமாகத் தலையாட்டினாள்.

"இல்ல. நான் எங்க வீட்ல ஒரே பொண்ணு. நானேதான் எதுக்குன்னாலும் வெளியே போவேன். வருவேன். எல்லாத்துக்கும் எனக்கு சுதந்திரம் இருந்துச்சு. அந்த மாதிரி நினைச்சுக்கிட்டு..." என்று இழுத்தாள்.

"அதை நான் தப்புன்னு சொல்லலை. ஆனா, இந்த குடும்பத்துல அத புரிஞ்சுக்கக் கூடிய நிலைமை வரலை. அதைப் புரிஞ்சு நடந்துக்க" என்றான் அவன்.

"கஷ்டம்தான்..." என்று அவள் முணுமுணுத்துக்கொண்டு சற்று இரண்டடி தள்ளி அமர்ந்திருந்தவள், மெல்ல அவன் அருகில் நெருங்கி அமர்ந்தாள். அவன் சட்டென்று சிரித்தான். "கஷ்டம்தான்" என்று அவனும் அவளைப் போலவே சொன்னான்.

அவள் முறைத்தாள்.



"உங்களுக்கென்ன நீங்க உங்க அம்மா, அப்பா இல்லைன்னா கூட நீங்க எந்த குடும்பத்துல வளர்ந்தீங்களோ இந்த குடும்பத்திலே இருக்கீங்க. நான் வேறு ஒரு குடும்பத்தில இருந்து வந்திருக்கேன். எனக்கு கொஞ்சம் டைம் குடுக்கணும்தானே" என்றாள்.

"சரி, குடுக்கறேன். மாத்திக்கோ" என்றான்.

அவள் திரும்ப விறைத்தாற்போல அவனைப் பார்த்தாள்.

"இங்க பாருங்க. நான் இந்த குடும்பத்துக்காக அட்ஜெஸ்ட் பண்ண ட்ரை பண்றேன். ஆனா இப்பவும் சொல்றேன். ஒரு ஆண்கிட்ட கலகலன்னு பேசறதாலே ஒரு பெண்ணுடைய கௌரவம் பாதிக்கும்னு நினைக்காதீங்க. சில நேரங்கள்ல ரொம்ப உம்...ம்னு நடமாடுற பெண்கள் தான் எல்லா வேலையும் செய்வாங்க. கலகலன்னு பேசற பெண்கள் எதார்த்தமா வெளிப்படையாக் கூட இருப்பாங்க" என்றாள்.

"இருக்கலாம் ஜெயந்தி" என்று அவனும் சமாதானம் செய்ய, மெல்ல மெல்ல அந்த சமாதானம் வேறு ஒரு விதமாக முடிந்தது.

அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக அன்றைக்கு அவன் கொஞ்சம் தீவிரமாகவே இருந்தான். அதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது.

"பொண்ணே! என்ன கனவு கண்டுகிட்டு இருக்கே" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு திரும்பினாள், ஜெயந்தி. ரத்தினாம்மாள் அருகில் நின்றுகொண்டிருந்தார்.

"இட்லி வார்த்தாச்சல்ல... அடுப்பைப் பற்றவை" என்றார்.

மற்றவர்கள் எல்லோரும் கலகலவென்று சிரித்துக் கொண்டு, "அக்கா, அந்தப் பிள்ளைக்கு என்ன கவலையோ..." என்றார்கள்.

"என்னத்துக்கு கவலை? அவ சந்தோஷமாதான் இருக்கா'' என்றார் ரத்தினம்மாள்.

"இல்ல... அந்த சந்தோஷம்தான் கொஞ்சம் ஓவராப் போயி...'' என்று வித்யாவதி இழுத்தார்.

"போங்க பிள்ளைகளா... அவளைத் தொந்தரவு பண்ணிக்கிட்டு... நீ அடுப்ப பத்த வை கண்ணு'' என்று ரத்தினம்மாள் அவள் உதவிக்கு வந்தார்.

"மறுபடியும் கேலி செய்ய ஆரம்பிச்சுட்டீங்களா?'' என்றாள் ஜெயந்தி. எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள்.

"கேலியெல்லாம் செய்யலம்மா... சும்மா சொன்னோம்'' என்று சமாதானம் செய்தார் வித்யாவதி.

அதற்குப்பிறகு கலகல பேச்சு ஆரம்பித்தது.

"என்ன பாலகுமாரன் இங்க வருவானா, இல்ல அங்க கொண்டு போய் டிபன் குடுக்கிறியா?'' என்று கேட்டார் ரத்தினம்மாள்.

"இல்லக்கா. நான் அங்கேயே டிபன் கொண்டு போறேன்'' என்று அவள் அறைக்கு டிபன் எடுத்துக் கொண்டு போனாள்.

"அப்பா... நினைச்சேன். டிபன் இங்கதான் வரும்னு நினைச்சேன்'' என்றான் பாலகுமாரன்.

"எல்லாம்தான் நினைப்பீங்களே...'' என்று அவளும் கேலி செய்து கொண்டு அவன் டிபன் தட்டை எடுத்து ரிமாறினாள்.

அவன் இட்லியை வாயில் வைத்துக் கொண்டு, சரி, ''அந்த ிரபாகரன் எப்படிப் பழக்கம்னு சொன்னே'' என்றான்.

"நான்தான் சொன்னேனே காலேஜ்ல... என்றவள் க்கைக் கடித்துக் கொண்டு ஸ்கூல் டேஸ்ல பழக்கம்'' றாள்.



''ஓகோ. நீ என்ன படிச்சது கோ-எஜுகேஷன் ஸ்கூலா?'' என்று கேட்டான் அவன்.

''இல்ல. கேர்ள்ஸ் ஸ்கூல்'' என்று சொன்னவள், மாட்டிக் கொண்டாற்போல விழித்தாள்.

''கேர்ள்ஸ் ஸ்கூல்ங்கற... அப்புறம் எப்படிப் பழக்கம்?''

''இல்லைங்க. நான் கேர்ள்ஸ் ஸ்கூல்ல இருந்தாலும் நிறைய காம்பிடீஷன் எல்லாம் போவேன். பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி எல்லாம் போவேன். அப்படிப் போகும்போது...'' என்று இழுத்தவள்... ''அந்தப் போட்டிக்கெல்லாம் பிரபாகரன் வருவாப்ல. அப்புறம் பிரபாகரன் காலேஜ்க்கு போனாரு. நான் காலேஜ்க்கு போகல. ஆனாலும் அப்பப்ப எங்க வீட்டுக்கு வருவாப்பல. புக்ஸ் எல்லாம் கொஞ்சம் தருவாப்ல'' என்று அவள் கதை சொல்லி முடிப்பதற்குள்ளாக திணறிப் போனாள்.

அவள் கதை சொல்வதை அவன் சுவாரஸ்யமாக கேட்பது போல இருந்தது.

அந்தக் கண்களில் கொஞ்சம் குறும்பும் நிழலோடியது போல இருந்தது.

மெல்ல தனக்குத் தானே மானசீக கற்பனையில் கொட்டிக் கொண்டாள் ஜெயந்தி.

சும்மா நம்ம பார்வைக்கு அப்படித் தெரிகிறார். அப்படியெல்லாம் அவர் பார்க்கலை என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

உண்மையாகவே பாலகுமாரன் கொஞ்சம் குறும்பாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில பழுத்திடும்'' என்றான்.

''என்ன... என்ன சொன்னீங்க...'' என்றாள் அவள் அதிர்ச்சியாக.

''இல்ல. இந்த பிரபாகரன் மாதிரி பசங்க... இவனுக புளுகெல்லாம் எட்டு நாளையில வெளுத்திடும்னு சொன்னேன்'' என்றான்.

''பிரபாகரனை உங்களுக்கு எத்தனை நாளா தெரியும். அதுக்குள்ள எப்படிச் சொல்லீங்க'' என்றாள்.

''உன்னைக்கூட எனக்கு எத்தனை நாளா தெரியும். கொஞ்ச நாளாத்தான் தெரியும். ஆனால், உன்னைப் பத்தி எல்லாம் எனக்கு சொல்ல முடியும்ல.

ஏய்... அப்படித்தானே... எல்லா உண்மையும் சொல்ல முடியுமா?'' என்றான், மறுபடியும் அவளைச் சீண்டுவது போல.

அப்போது அவளுக்கு பகீரென்ற உணர்வு தோன்றியது. ஏதோ கனவில் தன்னைக் கிள்ளிப் பார்க்கிறானோ. பேசாமல் கல்லூரியில் படித்திருக்கிறேன் என்று சொல்லி விடலாமா என்றும் நினைத்தாள்.

''ஐயோ வேண்டாம். ஏதோ ஒரு கல்யாண வீட்டிலே ஒரு இளைஞனைப் பார்த்து சற்று நேரம் பேசியதற்கே இவர்கள் இத்தனை பெரிய சீன் போடுகிறார்களே... இதுல கல்லூரியில் படித்திருக்கிறேன் என்று வேறு சொன்னால் இன்னும் என்னென்ன பூகம்பம் வெடிக்குமோ'' என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

பாலகுமாரன் மறுபடியும் அவளை ஊடுருவிப் பார்த்தான்.

''ஏன், ஜெயந்தி. என்னமோ சொல்லணும் போல இருக்கா?'' என்றான்.

''ஆமாம்'' என்று ஆரம்பித்தவள், நாக்கைக் கடித்துக் கொண்டு, ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே'' என்றாள்.

''சரி, இன்னிக்கு சாயங்காலம் சீக்கிரம் வர்றேன். கொஞ்சம் பர்மிஷன் போட்டுட்டு வர்றேன். நாம சினிமாவுக்கு எங்காவது போலாம். என்ன...'' என்றான்.



அவளும் மகிழ்ச்சியுடன் தலையசைத்தாள்.

அந்த மாலை நேரத்துக்காக அவள் காத்துக் கொண்டிருந்தாள்.

பாலகுமாரனும் கடையிலே கொஞ்சம் தறுதறுப்பாகவே இருந்தான். சிந்தனை மட்டும் எங்கோ ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நான்கு நான்கரை மணி இருக்கும். அவனைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்த நாராயணசாமி கேட்டார். அப்போது நாராயணசாமி கடைக்கு வந்திருந்தார்.

''ஏண்டா, என்ன கையும் காலும் பரபரங்குது. மனசு இங் இல்லையாட்டம் தெரியுது'' என்றார்.

''இல்லேண்ணே... நானும் ஜெயந்திகிட்ட சினிமாவுக்கு...'' என்று இழுத்தான்.

''சினிமாவுக்கு போலாம்னு சொல்லிட்டு வந்துட்டியாக்கும். அண்ணன்கிட்ட சொல்லலையா?'' என்றார்.

''இல்ல. பெரியண்ணன்கிட்ட சொல்லல. சொன்னா என்ன சொல்வாரோன்னு தெரியலை...'' என்று இழுத்தான்.

''என்னத்த சொல்லப் போறாரு. கிளம்பு... கிளம்பு. பச்சப்புள்ள எதிர்பார்த்துக்கிட்டு இருக்கும். சொல்லாமலாவது வந்திருக்கணும். டிக்கெட் கிக்கெட் ரிசர்வ் பண்ணி வச்சிருக்கியா?'' என்று கேட்டார்.

''ம்... அதெல்லாம் நம்ம கடை குமரேசன விட்டு வாங்கி வச்சிருக்கேன்'' என்றான்.

அவர் சிரித்தார்.

''ம்... விவரமான பையன்டா. எல்லாத்தையும் ஏற்பாடு பண்ணிட்டு நின்னுகிட்டிருக்கே...'' என்று கிண்டல் செய்த சகோதரன், ''சரி, நீ கிளம்பு'' என்றார்.

அவன் கிளம்புவதற்கு முன்பு மறுபடியும், ''இல்ல நேத்து அந்த கல்யாண வீட்ல...'' என்று ஆரம்பித்தார்.

வெடிகுண்டு வரப்போகிறது என அவன் காத்துக் கொண்டிருந்த வேளையிலே அவர் மனதை மாற்றிக் கொண்டவர் போல "சரி, சரி... நீ சினிமாவுக்குப் போயிட்டு வா. அப்புறம் பேசலாம்" என்றார்.

அவனும் தன்னுடைய டூவீலரை எடுத்துக் கொண்டு ஆவலுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திகைப்படையச் செய்தது.

நடுஹாலில் பிரபாகரன் ஸோபாவில் அமர்ந்து கொண்டிருந்தான்.

சற்றுத் தள்ளி ஜெயந்தி நின்றுகொண்டு அவனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

மற்ற பெண்களெல்லாம் ஏதோ காணக்கூடாத காட்சியைக் கண்டுவிட்டது போல உள் கூடத்தில் நின்று தலையை நீட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பாலகுமாரன் முகம் சிவந்தது.

உள்ளுக்குள் கோபம் ஜிகுஜிகுவென்று இளம்பியது.

## அத்தியாயம் 9

திரைப்படம் ஓடிக் கொண்டிருந்தது. ஜெயந்தியும் பாலகுமாரனும் அருகருகே அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச நேரம் திரைப்படத்தை கவனித்தாள் ஜெயந்தி.

பேட்டை ரவுடி போன்ற ஒரு கதாநாயகனை பெரிய வீட்டுப் பெண்ணான ஒரு கதாநாயகி துரத்தித் துரத்தி காதலித்துக் கொண்டிருந்தாள்.

மனம் சலித்துப்போய் திரும்பி கணவனைப் பார்த்தாள்.

ஆனால், அவன் அவள் பக்கமே திரும்பாமல் முகத்தை வேறு பக்கமாக திருப்பினாற்போல வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.



இந்த சினிமாவுக்கு வந்திருக்கவே வேண்டாமோ என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால், வேறுவழி இருக்கவில்லை.

அவள் உள்ளத்தில் உடனே பிரபாகரனின் நினைவு எழுந்தது. இந்த பிரபாகரன் ஏன் இப்படிச் செய்கிறான் என்று அவளுக்குக் கோபம் பொங்கியது. தான் வாயிருக்காமல் உளறிவிட்டது தப்போ என்று இப்போது கவலைப் பட்டாள்.

கல்யாண வீட்டில் பார்த்தபொழுது எதார்த்தமாக அவனிடத்தில் தான் கல்லூரியில் படித்தது தனது புகுந்த வீட்டுக்காரர்களுக்குத் தெரியாது என்று சொன்னது தவறாகிப்போனதோ... அதை வைத்துக் கொண்டுதான் மிரட்டுவது போல இப்படி நடந்து கொள்கிறானோ என்று புதியதாக ஒரு கவலை அவளுக்குத் தோன்றியது.

அதற்காக எதற்காக வீட்டுக்கு வரவேண்டும் அப்படி என்ன மிக நெருங்கிய நண்பனா. இல்லையே. கல்லூரி நாட்களில் வகுப்புத் தோழன். எல்லோருடனும் கலகலப்பாக பேசுவான். பழகுவான். அதற்காக இப்படியெல்லாம் சலுகை எடுத்துக் கொள்ளலாமா என்று நினைக்க நினைக்க குழப்பம்தான் மிஞ்சியது.

தியேட்டரில் திடீரென்று கைதட்டல் ஓசை எழும்பியது.

திரும்பிப் பார்த்தாள். கதாநாயகன் ஒரே சமயத்தில் பத்து பேரை அடித்துக் கொண்டிருந்தான். இந்த அபத்தங்களுக்கெல்லாம் என்றைக்குத்தான் விடிவுகாலமோ என்று எண்ணிக் கொண்டு திரும்பி கணவனை மறுபடியும் பார்த்தாள்.

கணவன் அதேபோலத்தான் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

மனம் சலித்துப் போனது.

பிரபாகரனுடைய வருகையில் ஏதோ ஒரு அச்சுறுத்தல் இருக்கிறாற்போல அவளுக்குத் தோன்றியது.

இந்த சினிமா கதைகளில் எல்லாம் வருமே அதுபோலத் தன்னை பிளாக்மெயில் செய்கிறானோ... இப்படி எதற்காக திடீரென வீட்டுக்கு வந்து நிற்க வேண்டும். இவன் அப்படி பிரசன்னமாக வேண்டும் என்று யார் விரும்பினார்கள் என்று கோபம் பொங்கியது.

அவன் வந்த நிகழ்வு மனதிற்குள் ஓடியது.

"ஜெயந்தி! இந்தப் பக்கமாக வந்தேன். அப்படியே உங்க வீட்டுக்கு வந்துட்டுப் போகலாம்னு..." என்று இழுத்தான்.

அவளுக்கு வேறுவழியே இருக்கவில்லை.

"உட்காருங்க" என்றாள்.

சொன்னதே போதும் என்பது போல உட்கார்ந்து கொண்டான். அமர்ந்து கொண்டானே தவிர, கண்கள் அவளைப் பார்த்து பேசவில்லை. எங்கேயோ யாரையோ தேடுறாற் போல தோன்றியது.

'இல்ல... என்ன பார்க்கிறீங்க' என்பது போல ஒரு பார்வை பார்த்து விட்டு, "இல்ல வீடு நல்ல பெரிசாகத்தான் இருக்கு" என்றான்.

"ம்..." என்றாள் அவள்.

"நிறைய பேர் இருக்கீங்களோ?" என்று கேட்டான்.

"ஆமாம். கிட்டத்தட்ட முப்பது பேர் இந்த வீட்ல இருக்கோம்" என்றாள்.

அவள் அப்படிச் சொல்லும்போது, நான் ஒண்ணும் தனியாள் இல்ல. தெரிஞ்சுக்கோ என்பது போல இருந்தது.

"ஓஹோ..." என்று அவன் திரும்பிப் பார்த்தான். அதற்குள்ளாக ரத்தினாம்மாள் அங்கே வந்தார். அவள் சட்டென்று ரத்தினாம்மாள் அருகில் போய் நின்றுகொண்டு "இல்ல... இவர் என்கூட படிச்சவரு" என்றாள். பொத்தாம் பொதுவாக.



எங்கே படித்தான், எப்போது படித்தான் என்பதையெல்லாம் சொல்லவில்லை.

"அப்படியா?" என்று ரத்தினாம்மாள் மெதுவாக அவளை அந்தப் பக்கம் நகர்த்திக் கொண்டு போனார்.

"இந்தக் குடும்பத்துல இதெல்லாம் வழக்கமில்லை. சீக்கிரம் அனுப்பிரு" என்றார் மெதுவாக.

"சரிங்கக்கா... அக்கா... வந்ததுக்காக ஏதாவது காபி, டீ கொடுக்கவா" என்று கேட்டாள்.

"சரி... சரி, குடுத்திரு. அதெல்லாம் தப்பில்லை. ஆனால், சீக்கிரம் அனுப்பிச்சிடு" என்றார்.

அவளும் தலையாட்டிக் கொண்டு போய் பிரபாகரனின் எதிரில் நின்றாள். "இங்கே..." என்று அவள் ஆரம்பித்தாள்.

"ஏன் ஜென்ட்ஸ்லாம் வந்தா பிடிக்காதோ?" என்று கேட்டான். அவள் மெல்ல தலையசைத்துக் கொண்டு, "ஆமாம்" என்றாள்.

"இதப்பாரு ஜெயந்தி. இப்படி இருக்கிறவங்களுக்கு நடுவிலதான் புதுசா இந்த விஷயங்களையெல்லாம் பழக்கணும். முதல்ல கொஞ்சம் ஷாக்கா இருந்தாலும் அப்புறம் சரியாப் போயிடும்" என்றான்.

"இதெல்லாம் சொல்றதுக்கு நல்லாயிருக்கும். என்னுடைய வாழ்க்கைப் பிரச்னை" என்று சொல்ல ஆரம்பிக்கும்போதுதான் பாலகுமாரன் வந்து நின்றான்.

ஜெயந்தி கெஞ்சலான பார்வையினை பிரபாகரனைப் பார்த்து திருப்பினாள். தயவுசெய்து இங்கிருந்து போயிடு என்ற அந்த பார்வையை உணர்ந்து அவனும் எழுந்தான்.

"சரி, நானும் சும்மா இந்தப் பக்கம் வந்தேன். உன்னைப் பாக்கலாம்னு வந்தேன்" என்று சொல்லிவிட்டு திரும்பி பாலகுமாரனைப் பார்த்து "ஹலோ சார்" என்றான்.

"ஹலோ..." என்ற பாலகுமாரனின் குரலே இறுக்கமாக இருந்தது.

அதற்குள்ளாக வேலையாள் ஒருத்தர் காபி கொண்டு வந்தார்.

''காபி...'' என்று அவர் கொடுக்க... ''இல்லை. இல்லை நான் காபியெல்லாம் சாப்பிடுறதில்லை. கிளம்பறேன்'' என்று சொல்லிவிட்டு பிரபாகரன் வேகமாகப் போய் விட்டான்.

'அப்பாடா!' என்றிருந்தது ஜெயந்திக்கு. ஆனால், அந்த நிம்மதி கணவனின் முகத்தைப் பார்த்தவுடன் பறிபோனது.

அவன் முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடித்தது.

இவன் எதுக்கு இங்க வந்தான் என்று முறைத்தான் பாலகுமாரன்.

''நான் வரச்சொல்லலை'' என்றாள் ஜெயந்தி.

''இதெல்லாம் சரியில்லை...'' என்று அவன் கோபமாகப் பேச ஆரம்பிக்கும்பொழுது உள்ளே இருந்து ரத்தினாம்பாள் வந்தார்.

இவர்கள் இருவரின் முகங்களில் இருந்தும் ஏதோ புரிந்து கொண்டவர் போலத்தான் அவர் சமையல் அறையில் இருந்து வேகமாக வந்தார்.

''ஏம்பா... தம்பி! நீங்க ஏதோ சினிமாவுக்குப் போறதா கொழுந்தன் போன் பண்ணினாங்களே'' என்றார். அதற்குள்ளாக பெரியண்ணன் போன் செய்துவிட்டாரா என்று எண்ணிக் கொண்டான் பாலகுமாரன்.

''அது...'' என்று இழுத்தான்.

''நீங்க சீக்கிரம் கிளம்புங்க. நீ போய் ரெடியாகி வா. அதுக்குள்ள நான் டிபனை கட்டிக் குடுக்கறேன். ஏதாவது நொறுக்குத் தீனி சாப்பிடுவதற்கு...'' என்று நிலைமையைச் சமாளித்தார்.

வேறுவழியில்லாமல் பாலகுமாரனும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.



அதெல்லாம் இப்பொழுது நினைவுக்கு வர, ஒருவிதமாக முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டாள் ஜெயந்தி.

ஓரக்கண்ணால் பார்த்த பாலகுமாரன், என்ன நினைத்தானோ... ''இதப்பாரு ஜெயந்தி... நான் கடையில் இருந்து கிளம்பும்போதே சின்ன அண்ணன், 'நேற்றுக் கல்யாண வீட்ல...'ன்னு ஆரம்பிச்சாரு. அப்புறம் என்ன நினைச்சாரோ... 'நீ சினிமாவுக்குப் போயிட்டு வா...' அப்படின்னு சொல்லிட்டாரு. அநேகமாக வீட்டுக்குப் போனா இதைப்பற்றி கேட்பாங்க. அப்படியிருக்கும்போது அவன் வீட்டுக்கு வேற வந்திருக்கான்'' என்றான் அடிக்குரலில்.

அவள் அவனை வருத்தத்துடன் திரும்பிப் பார்த்து, ''நிஜமாங்க... நான் வரச்சொல்லலை'' என்றாள். அந்த நேரத்தில் அவளுக்குள் தோன்றியது... 'எதற்காக இவர்களுக்குப் பயந்து கொள்ள வேண்டும். நானும் காலேஜ்ல படிச்சேன் என்று சொல்லிவிட்டால் எல்லா பிரச்னையும் முடிந்து போகுமல்லவா?' என்று எண்ணிக் கொண்டாள்.

அதே சமயத்தில் கணவன் தன்னை இப்படி விரட்டுவது குறித்து அவளுக்குக் கோபமாகவும் வந்தது.

இதற்குள்ளாக முன்னால் வரிசையிலும் பின்னால் வரிசையிலும் இருந்தவர்கள் எல்லோரும் திரும்பித் திரும்பி அவர்களைப் பார்க்கவும். ''சார். ப்ளீஸ்'' என்று சொல்லவும், பேச்சை நிறுத்திக் கொண்டான் பாலகுமாரன்.

ஆக, இருவரும் அன்றைக்கும் திரைப்படத்தைப் பார்க்கவே இல்லை. அவரவர் சிந்தனையில்தான் ஆழ்ந்திருந்தார்கள்.

திரைப்படம் முடிவதற்கு முன்பாகவே அவன் எழுந்தான். அவளும் வேறுவழியின்றி எழுந்தாள்.

"நாம் இதைப்பற்றி வீட்ல பேச முடியாது. வழியில எங்காவது ஓட்டலுக்குப் போய்ப் பேசலாம்" என்றான். சரி... என்று அவளும் தலையசைத்தாள்.

இரண்டு பேருமாக நகரத்தின் முக்கிய ஹோட்டலுக்கு போனார்கள்.

"உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டான் அவன்.

"எதுவானாலும் சரி" என்றாள் அவள்.

மகிழ்ச்சியான மனநிலையில் வந்திருந்தால் ஒருவேளை இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்டிருப்பாளோ என்னவோ. முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு அவள் அமர்ந்திருந்ததைப் பார்த்து அவனுக்குப் பாவமாக இருந்தது.

"ஜெயந்தி! தயவுசெய்து புரிஞ்சுக்க" என்று அவன் ஆரம்பிக்க, அவள் முகத்தில் சலிப்பு தோன்றியது.

"நீங்க எந்தக் காலத்துல இருக்கீங்கன்னு எனக்குப் புரியலை. வீட்டுக்கு வர்றவங்கள வராதேன்னு எப்படிச் சொல்ல முடியும். அவன் வீட்டுக்கு வருவான்னு எனக்கெப்படித் தெரியும்?" என்றாள் அவள்.

"இதுக்கெல்லாம் காரணம்... நேற்று அவன்கிட்ட போய் நீ அந்த நிமிஷம் பேசினதுதான். அளவாப் பேசிட்டு வந்திருந்தீன்னா இந்தப் பிரச்னையே வந்திருக்காது" என்றான் பாலகுமாரன்.

அவன் மீண்டும் தொடக்கப்புள்ளியிலேயே வந்து நிற்பது அவளுக்குப் புரிந்தது.

லேசாக கையை உயர்த்திவிட்டுச் சொன்னாள். "இதப்பாருங்க... நான் சொல்ல வேண்டிய விளக்கத்தை எல்லாம் நேற்றே சொல்லிட்டேன். திரும்பவும் நீங்க கேட்கிறீங்க. திரும்பவும் இதே விளக்கம்தான்" என்றாள்.



"சரி. வீட்டுக்குப் போனா என்னென்ன இருக்கோ. அதை எப்படிச் சமாளிக்கப் போறோமோ?" என்றான் அவன் கவலையுடன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால், முதன்முறையாக அவள் மனதுக்குள்ளே இந்த திருமண உறவு நிலைக்குமா என்ற கவலை தோன்றியது.

## அத்தியாயம் 10

**ஜெ**யந்திக்கு அன்றைக்குப் பொழுதே போகவில்லை. ஏனென்றால், வீட்டில் இருந்தவர்கள் பெரியவர்கள் எல்லோரும் எங்கேயோ விசேஷத்துக்குப் போய் இருந்தார்கள்.

ஜெயந்தி தனது அறையில் இருந்தாள். அவளது கணவன், நான் தான் கடையைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய் விட்டான்.

பிரபாகரன் பிரச்னை அப்படியே இருந்தது. அவளுக்கும் கொஞ்சம் மனம் வருத்தத்தில்தான் இருந்தது. அதனால் அவள் கணவனிடத்தில் கொஞ்சம் கோபத்தைக் காட்டிக் கொண்டுதானிருந்தாள்.

இப்போது தனிமையில் யோசித்துக் கொண்டிருந்தாள். பிரபாகரனுடன் பேசியதே இவ்வளவு பெரிய பிரச்னையாக இருக்கிறதே இந்த வீட்டில். இவர்கள் எல்லாம் எந்தக் காலத்தில் இருக்கிறார்கள். உலகம் எவ்வளவு முன்னேறிப் போய் விட்டது. இவர்கள் அடுத்த தலைமுறையையும் இப்படித்தான் வைத்துக் கொள்வார்களோ என்றெல்லாம் அவளுக்குள் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் அந்த சத்தம் கேட்டது-

ஏதோ நாலைந்து பேர் கலாட்டாவாகக் கூச்சல் போடுவது போலத் தோன்றியது. எழுந்து வெளியே வந்தாள். மெல்ல

எந்த அறையில் சத்தம் கேட்டதோ அந்த அறையை நோக்கிப் போனாள்.

எட்டிப் பார்த்தாள்.

உள்ளே ஒரு பட்டாளமே குழுமி இருந்தது. அதில் நடுநாயகமாக கலைச்செல்வன். அம்பிகாவின் மகன் அமர்ந்திருந்தான்.

இவள் உள்ளே எட்டிப் பார்த்தபொழுது அவர்கள் எல்லாரும் ஹோ... என்று சத்தம் போட்டார்கள்.

நிரஞ்சன்... கோவிந்தசாமியின் மகன். கிருஷ்ணசாமி மகன் நிர்மல்குமாரிடம் முணுமுணுத்தான். "இந்தா... சித்தி எட்டிப் பார்க்கிறாங்க. கதவை குளோஸ் பண்ணிக்கலாமா?" என்றான்.

"ச்சே... சே... எதுக்காக குளோஸ் பண்ணணும். வேணும்னா அவங்களும் வந்த கலந்துக்கட்டும்" என்றான் நிரஞ்சன்.

அதற்குள்ளாக சுதாரித்துக் கொண்ட ஜெயந்தி... "நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டாள்.

அவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு. "சரி. வாங்க" என்றார்கள். உள்ளே போனாள்.

அங்கே இருந்த அமைப்பைப் பார்க்க சிரிப்பாக இருந்தது. எப்படியோ இருக்கின்ற பொருட்களை போட்டு ஒரு மேடை போலச் செய்து அதில் கலைச்செல்வன் ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்து கொண்டிருந்தான்.

வீட்டின் இளைய செல்வங்கள் எல்லாரும் அங்கே குவிந்து இருந்தார்கள். மாலதியும் ராதாவும் பார்வையாளர்களாக அமர்ந்திருந்தார்கள்.

மாலதி - ரத்தினம்மாளின் மகள். ராதா - அம்பிகாவின் மகள். மீதமிருப்பவர்கள் எல்லாரும் அங்கே பங்களிப்பவர்களாம்.



கலைச்செல்வன். "சித்தி! நீங்க எங்க குரூப்பா. அவங்க குரூப்பா?" என்று கேட்டான்.

அவளுக்குப் புரியவில்லை. "இல்ல... நீங்க பெரிசுகளெல்லாம் இருக்காங்களே... அவங்க குரூப்பா. இளையவர்களாக இருக்கும் எங்க குரூப்பா?" என்று கேட்டான்.

ஜெயந்தி உற்சாகமானாள். "இதில் என்ன சந்தேகம். நான் இளையவங்க குரூப்தான்" என்றாள். "சரி. அப்படீன்னா ஆடியன்ஸ்ல உட்காருங்க" என்றவன். அவளுக்கு மீண்டும் சந்தேகம் வந்தது போல. "அது சரி. நீங்க பங்கேற்பாளரா. பார்வையாளரா?" என்று கேட்டான்.

ஜெயந்தி சிரித்தாள். "பங்கேற்பதில் என்றால் எதில் பங்கேற்க வேண்டும்?" என்று கேட்டாள். "இதோ இப்ப நடக்கிற பட்டிமன்றத்தில்தான்" என்றான் கலைச்செல்வன்.

"ஐய்யோ... பட்டிமன்றம் பேசறதுக்கெல்லாம் எனக்குத் தெரியாது. நான் பார்வையாளராகவே உட்காந்துக்கறேன்" என்று அவள் போய் மாலதியின் அருகில் போய் அமர்ந்து கொண்டாள்.

"சரி. பட்டிமன்றத்திற்கு என்ன தலைப்பு?" என்று கேட்டான் நிர்மல்குமார்.

"என்னடா இது... இவ்வளவு நேரம் பேசினதையெல்லாம் மறந்துட்டு கேட்கறே" என்றான் கலைச்செல்வன்.

"பரவாயில்லை. புது வரவா வந்துருக்காங்கல்ல. அவங்களுக்குத் தெரியணும்ல... அதுக்காகக் கேட்கிறேன்" என்றான்.

"ஆகா... சித்திகிட்ட நல்ல பேர் வாங்கணுமோ" என்று சிரித்தார்கள் மற்றவர்கள்.

அப்போது ஜெயந்தி நடுவிலே புகுந்து, "இது என்ன சித்தி சித்தின்னு... எனக்கென்னவோ அந்நியமாத் தெரியுது. அக்கான்னே கூப்பிடுங்களேன்" என்றாள்.

''ஓகே இனி எல்லோருக்கும் நீங்க ஜெயந்தியக்கா'' என்று ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

''அது சரி. தலைப்பு என்ன?'' என்றாள் ஜெயந்தி.

''இந்தப் பெரியவர்களின் அறிவுரைகள் துணையாக இருக்கிறதா... தொல்லையாக இருக்கிறதா அப்படீன்னு ஒரு தலைப்பு குடுத்திருக்கிறோம்'' என்றான் கலைச்செல்வன்.

அதன் ஒரு பக்கத்தில் அகிலா, ஜானகி, மைதிலி, இவர்கள் மூன்று பேருமாம். இன்னொரு பக்கத்தில் கரிகாலன், நவநீதன், நிரஞ்சன் மூன்று பேரும் என்று இரண்டு அணியாக பிரிந்தும் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் எல்லாம் யார் யாருடைய குழந்தைகள் என்பதிலே இன்னும் குழப்பம் இருக்கத்தான் செய்கிறது. அதைத் தவிர்ப்பதற்காகவோ என்னவோ, ''முதல்ல நீங்கல்லாம் யாருன்னு அறிமுகம் செஞ்சிக்குங்க'' என்றாள் ஜெயந்தி.

உடனே கலைச்செல்வன், ''நான்தான் கலைச்செல்வன், இந்த பட்டிமன்றத்தின் நடுவர். நான் அம்பிகா - ஜெகந்நாதன் தம்பதியினரின் மூத்த மகன்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

அதைப்போல அகிலாவும் கரிகாலனும் கோவிந்தசாமி - ரத்தினாம்மாள் தம்பதியின் குழந்தைகள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். நவநீதனும் நிர்மல் குமாரும் கிருஷ்ணசாமி - மாணிக்கத்தம்மாள் மகன்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

நிரஞ்சன், ஜானகி, மைதிலி மூன்று பேரும் நாராயண சாமி - வித்யாவதியின் குழந்தைகள் என அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

மாலதியும் ராதாவும் பார்வையாளர்களாக அமர்ந்து கொண்டிருந்தனர். இரு சாராருக்கும் இடையே பேச்சு வார்த்தை ஆரம்பித்தது.



பெரியவர்கள் எப்போதுமே தொல்லைதான் தருவார்கள் என்று ஒரு அணி வாதாடியது. இன்னொரு அணி பெரியவர்கள் எப்போதும் உதவி செய்பவர்கள் என்று வாதாடியது.

ஜெயந்திக்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. பெரியவர்கள் தொல்லை செய்கிறார்கள் என்று சொல்கிற அணியில் பேசியவர் சொன்னார். ''நாம் அவசரமாக புறப்பட்டுக்கிட்டு இருப்போம். அப்ப இந்த பெரியவங்க... இருக்காங்களே, பெரியவங்க... அவங்க என்ன சொல்வாங்க. எத்தனை மணிக்கு வருவே. எங்க போறே. யார் வீட்டுக்குப் போறே. எதுக்குப் போறே என்று கேள்விகளால் துளைத்து எடுப்பார்கள். அப்ப எவ்வளவு எவ்வளவு கோபம் வரும்? காலையில் இருந்து ராத்திரி வரை இவங்க எத்தனை கேள்வி கேட்கறாங்க. அத்தனை கேள்விக்கும் பதில் சொல்லியே நாம இளைச்சுப் போறோம்ப்பா...'' என்றார்.

உடனே எல்லாரும் சிரித்தார்கள்.

எதிரணியில் பேசிய நிரஞ்சன் சொன்னான். ''இதெல்லாம் சொல்லாதீங்க. பெரியவங்க அப்படிக் கேட்கறது நல்லதுக்குத்தான். பெரியவங்க இருக்கிற வரைக்கும் நமக்கு கஷ்டம் இருக்கும். ஆனா, அவங்க இல்லைங்கறப்போதான் அவங்க அருமை புரியும். ஏன் போறே, எப்படிப் போறே, எங்க போறே என்று கேட்கிறப்போ நாம எங்க இருக்கோம் என்ற இன்ஃபர்மேஷன் அவங்களுக்குத் தெரியுது. பேப்பரை எடுத்துப் பார்த்தா பாருங்க, எத்தனை கடத்தல் செய்தி வருது. எத்தனை தற்கொலை செய்தி வருகிறது. எத்தனை காதல் பிரச்னைகள் வருது. ம்...'' என்று ஆவேசமாக வாதிட்டான்.

உடனே எதிர்அணியைச் சேர்ந்தவர்கள், ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இப்ப மேல்நாட்டைப் பாருங்க... எல்லாரும் அவங்க எல்லை தெரிஞ்சு நடந்துக்குவாங்க. யா

எந்த எல்லையில் நிக்கணுமோ அந்த நிலையில நிக்கணும்'' என்று கருத்து சொன்னார்கள்.

எதிர்அணியில் பேசியவர்கள், ''அப்படியெல்லாம் நம்ம இந்திய கலாசாரத்தில் இல்லை. மேலைநாட்ல பாருங்க. எங்க பார்த்தாலும் டிப்ரஷன். டிப்ரஷன் என்கிறாங்க. நம்ம நாட்ல அந்த காலத்தில் டிப்ரஷன் என்ற வார்த்தைக்கே இடமிருக்காது. ஏன் தெரியுமா? வீட்ல அடுக்குகளா லேயர் லேயரா பெரியவங்க இருப்பாங்க. அதுபோக வர்றவங்க போறவங்கல்லாம் வந்துட்டுப் போயிட்டு இருப்பாங்க. வீட்ல எப்போதும் மனிதர்கள் இருப்பாங்க. அப்ப தனிமையே இருக்காது. அதனால டிப்ரஷனும் இருக்காது'' என்று சொன்னார்கள். இரு தரப்பு வாதங்களும் ரொம்ப சுவாரஸ்யமாகத்தான் போனது.

ஜெயந்திக்கு இந்த குழந்தைகளுக்குள் இவ்வளவு சிந்தனையா என்று ஆச்சரியமாக இருந்தது.

மெல்ல மாலதியிடம் கேட்டாள். ''மாலதி! நீ எந்தக் கட்சி'' என்று. ''நான் கண்டிப்பா பெரியவங்க தொல்லைங்கற கட்சிதான்'' என்றாள் மாலதி.

''ஏன்?'' என்று கேட்டாள்.

''உங்களுக்கு என்னக்கா... ஒரே பிள்ளையா வளர்ந்தவங்க. ரொம்ப சுதந்திரமாக வளர்ந்தவங்க. இங்க பாருங்க. எத்தனை பெரியவங்க இருந்தாலும் அத்தனை பெரியவங்களும் ஆளுக்கொரு அட்வைஸ் கொடுப்பாங்க. இந்த அட்வைஸை சுமந்து எங்களுக்கு கூன் விழுந்துபோச்சு'' என்றாள்.

ஜெயந்தி சிரித்துவிட்டு, அவள் முதுகைப் பார்த்தாள். ''இல்லையே... நல்ல ஃபார்ம்லதானே இருக்கே'' என்றாள். ''போங்கக்கா...'' என்று என்று சிணுங்கிக் கொண்டாள்.

ஜெயந்தி ஏதோ சொல்ல ஆரம்பிக்கும்போது மறுபடியும் இங்கே பட்டிமன்றத்தில் கூச்சல் கிளம்பியது. அரட்டையும்



கேலியுமாக நடந்த இந்தப் பட்டிமன்றம் அவளுக்குள் வியப்பை ஏற்படுத்தியது.

கலைச்செல்வன் என்ன தீர்ப்பு சொல்லப்போகிறான் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். கலைச்செல்வன் எல்லாருக்கும் ஐந்து ஐந்து நிமிடங்கள் கொடுத்தான். பிறகு தொகுத்துக் கூறி, ''பெரியவங்க வேணும்தான். அவங்களெல்லாம் இருக்க வேண்டிய எல்லையோடு இருக்கணும்'' என்பது போல ஒரு நழுவலான ஒரு தீர்ப்பை கூறி முடித்தான்.

ஜெயந்தி சிரித்தாள். ''கலை. நீங்க நல்லா நழுவிட்டீங்க'' என்றாள். எல்லோரும் எழுந்து போகும்பொழுது கலைச்செல்வனிடத்தில் தனியாக நின்று கருத்து சொன்னாள்.

இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னான். ''அக்கா. இந்த வாண்டுகளை நம்பவே முடியாது. நாம இரண்டு பக்கமும் சேஃபா இருந்துக்கணும். திடீர்னு ஒரு நாளைக்கு எல்லா பெரியவங்கிட்டேயும் போய் நீங்க வெளியே போயிருந்தபோது 'இப்படி ஒரு பட்டிமன்றம் வச்சோம் தெரியுமா? அதுல இப்படி ஒரு தலைப்பு கொடுத்தோம் தெரியுமா? அதுல கலைச்செல்வன் வந்து இப்படிப் பெரியவங்களையெல்லாம்... இப்படியொரு தீர்ப்பு கொடுத்தான் தெரியுமா...' அப்படீன்னு போட்டுக் குடுத்துருவாங்க. அதனால இதெல்லாம் ஒரு என்ஜாய் மெண்டுக்கு வச்சுக்கோணும். ஆனா, எச்சரிக்கையா இருந்துக்கணும்'' என்றான் கலைச்செல்வன்.

ஜெயந்தி கடகடவென்று சிரித்துவிட்டாள். ''பரவா யில்லையே. இவ்வளவு டிப்ளமேடிக்கா இருக்கீங்களே'' என்றாள்.

''ஓ...! இல்லாட்டி இந்த ஜாயிண்ட் ஃபேமிலியில குப்பை கொட்ட முடியுமா?'' என்றான் கலைச்செல்வன்.

பிறகு மேலும் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "அக்கா! நீங்களும் இப்படியே இருக்க பழகிக்கங்க. ஜாக்கிரதை. ஒருத்தரைப் பத்தி இன்னொருத்தர்கிட்ட சொல்லிராதீங்க" என்றான்.

"எனக்கு அந்தப் பழக்கமே இல்லை" என்றாள் ஜெயந்தி.

"அப்படீன்னா ரொம்ப நல்லது. இல்லைன்னா பழகிக்கோங்க. ஏன்னா, என்னிக்கு எது பத்திக்கும்னு சொல்ல முடியாது" என்றான்.

அப்போது அருகே வந்து நின்ற மாலதி, "என்ன அக்கா இப்பத்தான் புதுசா வந்திருக்காங்க... போட்டு அறுக்கிறே" என்று கேட்டாள்.

"ஏய். அத்தான்கற மரியாதை இருக்கா உனக்கு? ம்... என்னைப் பார்த்து இப்படிக் கேட்கறே. நாளைக்கு நானே உனக்கு தாலி கட்டினாலும் கட்டுவேன்" என்றான் கலைச்செல்வன்.

"ஓஹோ! அப்படியொரு ஆசை இருக்கா உனக்கு. பார்க்கலாமே" என்றாள் மாலதி.

"ஏய்... நிஜமாதான். பெரியவங்களுக்கு அப்படியொரு திட்டம் இருக்கு தெரியுமா?" என்றான் கலைச்செல்வன்.

மாலதியின் முகம் இருண்டு போனது.

மாலதியின் முக மாற்றத்தை கலைச்செல்வன் கூர்ந்து கவனிக்கிறாப் போல ஜெயந்திக்கு தோன்றியது.

சட்டென்று இடையில் புகுந்து, "இருங்க... இருங்க... என்னை வச்சுக்கிட்டு நீங்க இருவரும் பேச்சுவார்த்தை நடத்துறாப் போல் இருக்கே" என்றாள்.

இரண்டு பேரும் அசடு வழிய சிரித்துவிட்டு, "அப்படியெல்லாம் இல்லக்கா..." என்றார்கள்.

"என்ன அத்தான்... பெரியவங்க தோரணையில அக்காவுக்கு சொல்லிக்கிட்டிருக்கே" என்றாள் மாலதி.



ஜெயந்தி புன்னகைத்துவிட்டு மாலதியிடம் சொன்னாள்.

"அவரு ஒண்ணும் தப்பா சொல்லலை. கலைச்செல்வன் எனக்கு நல்ல விஷயம்தான் சொல்லித் தர்றாரு" என்றாள்.

"அப்படி என்ன நல்ல விஷயமாம்?" என்றாள் மாலதி.

"இல்ல. இவ்வளவு பெரிய குடும்பத்துல எப்படி அடுத்தவங்ககிட்ட நடந்துக்கணும் அப்படீங்கறதைச் சொல்லித் தர்றாரு."

"ஓஹோ!" என்று தீவிரமாக கேட்டுக் கொண்டாள்.

"என்ன சொன்னாரு?" என்றாள் மறுபடியும்.

"இல்ல... ஒருத்தரைப் பத்தி ஒருத்தர்கிட்ட பேசக்கூடாது. ஜாக்கிரதையா இருந்துக்குங்க. ஜாயிண்ட் ஃபேமிலி அப்படீன்னு எனக்கு அட்வைஸ் பண்றாரு தாத்தா!" என்றாள்.

"ஆமாமாம். யாராவது கிடைச்சா இவன் பாண்டக்கிழவி மாதிரி பாயிண்ட் பாயிண்டா எடுத்து விடுவான்" என்றாள் மாலதி.

"சரிதான் போடி" என்று சொல்லிவிட்டு கலைச்செல்வன் நகர்ந்து விட்டான்.

"ஏன் மாலதி. இரண்டு பேரும் சண்டை போட்டுக்கறதப் பார்த்தா..." என்று ஜெயந்தி இழுக்க...

"அக்கா, சும்மா இருங்கக்கா... குளோஸ் ரிலேடிவ்ல கல்யாணம் பண்ணக்கூடாதுக்கா..." என்றாள் மாலதி.

'ஓ... உண்மை அதுதான்' என்று ஜெயந்தி நினைத்துக் கொண்டாலும் இப்போது தீர்மானமாக எதையும் சொல்லக்கூடாது என்று நினைத்துக் கொண்டாள்.

அப்போதுதான் மாலதி மெதுவாக அந்தச் செய்தியை ஜெயந்தியிடம் சொன்னாள்.

"நிஜமாவா சொல்றே..." என்று கேட்டாள் ஜெயந்தி.

''ஆமாக்கா... ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் டைப்ரைட்டிங் கிளாஸுக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது இது நடந்தது'' என்றாள் மாலதி.

''சொல்லு... என்ன நடந்தது?'' என்று மறுபடியும் கேட்டாள் ஜெயந்தி.

மாலதி விவரமாகச் சொன்னாள்.

ஜெயந்தி முகம் வியர்த்துப் போய் அதிர்ச்சியாகி நின்றாள்.

## அத்தியாயம் 11

கணவனிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்து யோசித்துப் பார்த்தாள் ஜெயந்தி.

ஒரு மனம் எதற்கும் சொல்லிவிடு என்று கூறியது. ஆனால், இன்னொரு மனமோ, வேண்டாம்... அவன் எதையுமே சரியான கோணத்தில் எடுத்துக் கொள்வதில்லை. அதனால் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது என்றது.

ஒருவழியாக சொல்ல வேண்டாம் என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

கணவன் புறப்பட்டு கடைக்குச் செல்லும் வரை காத்துக் கொண்டிருந்தாள்.

பிறகு நேராக சமையல் அறைக்குச் சென்றாள்.

ரத்தினம்மாளிடம், ''அக்கா!'' என்று குழைந்துகொண்டு நின்றாள்.

ரத்தினாம்மாள் வழக்கம்போல அவளைத் திரும்பிப் பார்த்து வாஞ்சையாகச் சிரித்துவிட்டு, ''என்னடி செல்லம்?'' என்றார்.

''இல்லை. எனக்கு வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கறதுக்கு கஷ்டமா இருக்கு'' என்றாள்.

''சரி. அதுக்கு என்ன பண்ணணும்? உங்க வூட்டுக்காரனை வரச்சொல்லு. சாயங்காலம் எங்காவது வெளியில போய்ட்டு



வாங்க'' என்று ரத்தினாம்மாள், ரொம்ப இலகுவாக ஒரு தீர்வைச் சொன்னார்.

ஜெயந்திக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. திருதிருவென விழித்தாள். பிறகு சொன்னாள். ''இல்லக்கா... நானும் கொஞ்சம் தனியாக வெளியே போயிட்டு வர்றேனே...'' என்று இழுத்தாள்.

''அம்மாடி! அந்த நினைப்பை எல்லாம் விட்டுடு... யாராவது துணையோடுதான் போகணும். நீ பெரிய வீட்டுப் பொண்ணுன்னு எல்லாருக்கும் தெரியும். போற வர்ற வழியில ஏதாவது பிரச்னை ஆச்சுன்னு வச்சுக்க... வம்பு. கழுத்துல கையில பதினஞ்சு இருபது பவுன் தேறும். உனக்காக இல்லைன்னாலும்... நமக்காக இல்லைன்னாலும் நம்ம கழுத்துல லாடம் மாதிரி மாட்டிட்டுத் திரியறமே... இந்த நகைகளுக்காகவாவது... யாராவது ஏதாவது வம்பு செய்தா என்ன பண்ணுவ?'' என்றார்.

அவள் லேசாகப் புன்னகைத்தபடி, ''அதாங்கக்கா... சரி... நான் தனியாப் போகலை. மாலதி கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் போறால்ல. அவ கூட போயிட்டு அப்படியே எங்க வீட்ல தலையைக் காண்பிச்சுட்டு வரட்டுமா?'' என்றாள்.

''கம்ப்யூட்டர் கிளாஸ்ல நீயும் போய் சேரப்போறியா? அப்படீன்னா அதுக்கு உங்க வூட்டுக்காரன கேட்கணுமே'' என்றார் அவர் விடாப்பிடியாக.

''இல்லல்லை. நான் சேரல. சும்மா மாலதி கூட துணைக்குப் போறேன்'' என்றாள்.

''சரி. நடந்து போயிட்டு வாங்க'' என்றார் ரத்தினாம்மாள்.

''இல்லக்கா... எனக்கு டூ வீலர் ஓட்டத் தெரியும். நான் நம்ம ஸ்கூட்டி... சபாரி... ஏதோ ஒண்ணு எடுத்துக்கிறேனே'' என்றாள்.

''சரி. பசங்கள கேட்டுக்கோ... குடுத்தாங்கன்னா எடுத்துக்குங்க. பத்திரம்'' என்றார்.

பிறகு சகோதரியிடம், ''ஆமாம். பாவம். அவ நல்லா சுதந்திரமாக போயிட்டு வந்துகிட்டு இருந்தவ. அவளை இந்த வீட்ல அடைச்சுப் போட்டாலும் கஷ்டமாத்தான் இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டார்.

அப்படி அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது தப்பித்து விடுவோம் என அவளும் இடத்தை விட்டு வெளியேறி நேராக மாலதியிடம் போனாள்.

''மாலதி! நீ எத்தனை மணிக்கு கம்ப்யூட்டர் இன்ஸ்டிக்கு புறப்படுவே?'' என்றாள்.

மாலதி, ''அக்கா... இன்னும் அரை மணி நேரத்துல'' என்றாள்.

''சரி, நானும் உன்கூட வர்றேன்'' என்று அவளும் சொல்லிவிட்டு திரும்ப எத்தனிக்கும்போது, ''என்னது, நீங்களுமா?'' என்று ஆச்சரியப்பட்டாள் மாலதி.

''ஆமாம். என்ன பெரிய ஆச்சரியமா இருக்கு... இந்த வீட்ல கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வர்றது அவ்வளவு பெரிய விஷயமா?'' என்று சலித்துக் கொண்டாள் ஜெயந்தி.

மாலதி சிரித்தாள். ''இப்பதானே ஆரம்பிச்சிருக்கு. போகப் போக பாருங்க... நொந்துருவீங்க'' என்றாள்.

அவளைப் பார்த்து முறைத்த ஜெயந்தி, ''இதப்பாரு மாலதி! ஏற்கெனவே நான் கடுப்புல இருக்கேன். நீ வேற ஏத்திவிடாதே'' என்று சொல்லிவிட்டு, ''நீ தான் நேத்து அந்த விஷயத்தைச் சொன்னியே'' என்றாள்.

உடனே மாலதி முகம் மாறியது. ''ஆமாக்கா...'' என்றாள் கவலையாக.

''அதுக்காகத்தான் நானும் வர்றேன். புரியுதா?'' என்றாள்.

''ஓ... அப்படீன்னா சரி'' என்று உற்சாகமானாள் மாலதி.



''சரி. நான் போய் டிரஸ் மாத்திட்டு வர்றேன்'' என்று நகர்ந்த ஜெயந்தி, திரும்ப வந்து, ''இதப் பார்... இந்த விவகாரத்தையெல்லாம் பெரியவங்ககிட்டயெல்லாம் இப்போதைக்கு சொல்லாதே. அப்புறம் கம்ப்யூட்டர் இன்ஸ்டிக்கே போகக்கூடாதுன்னு சொல்லிடுவாங்க'' என்றாள் ஜெயந்தி.

மாலதி, ''ஆமாக்கா... அதனாலதான் நான் யாருகிட்டேயும் சொல்லல. கலைக்கிட்டேயோ... நிரஞ்சன்கிட்டயோ... கரிகாலன்கிட்டயோ... இவங்ககிட்ட சொன்னாலும் பிரச்னை பண்ணிடுவாங்க. அதனாலதான் நான் உங்ககிட்ட சொன்னேன்'' என்றாள்.

ஜெயந்தி, ''சரி. சரி. பார்த்துக்கலாம்'' என்று அவளுக்குத் தைரியம் கொடுத்துவிட்டு தன் அறைக்குப் போனாள்.

அப்படிப் போகும்போது மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். 'அவங்ககிட்ட சொன்னா பிரச்னை வேறு மாதிரியாப் போயிருக்கும். இப்ப நீ எங்கிட்ட சொல்லியிருக்கே. இது எப்படிப் போகப்போவுதோ தெரியவில்லை' என நினைத்துக் கொண்டு புடவையை மாற்றிக் கொண்டிருந்தாள்.

அப்படி மாற்றும்போது மாலதி முதல் நாள் தன்னிடத்தில் சொன்ன அந்த விஷயம் நினைவில் ஓடியது.

''அக்கா! என்ன நடந்துச்சு தெரியுமா?''

ஏதோ சுவாரஸ்யமாகச் சொல்லப் போகிறாள் என்று நினைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தாள் ஜெயந்தி.

''அக்கா! உங்களப் பார்க்க வந்தாரே அந்த பிரபாகரன்...'' என்று அவள் சொன்னவுடனேயே ஜெயந்திக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

''எந்த பிரபாகரன்? நம்ம வீட்டுக்கு வந்தாரே அவரா?'' என்றாள்.

''ஆமாக்கா. எனக்கு வேற எந்த பிரபாகரனை தெரியும்? அவர் என்ன பண்ணினாரு தெரியுமா?'' என்றாள்.

''என்ன பண்ணினாரு?''

''நான் ரெகுலரா இந்த கம்ப்யூட்டர் கிளாஸுக்கு போறேனே... அது ஒண்ணுக்குத்தானே நம்ம வீட்ல போனாப் போகுதுன்னு அலெவ் பண்ணியிருக்காங்க. நடந்து போலாம்னு போய்க்கிட்டு இருந்தேன்க்கா... நேர்று அந்த லாலா கடை கார்னர் இருக்குல்ல. அந்த கார்னர்ல இவர் பைக்கை வச்சுக்கிட்டு நின்னுக்கிட்டு இருந்தாரு'' என்றாள்.

''ஓ...'' என்றாள் ஜெயந்தி.

''சரி. நமக்கு பழக்கமில்லை. நம்மை அடையாளம் தெரியாதுன்னு நான் கண்டுக்காத மாதிரி நடந்துகிட்டு இருந்தேன். ஆனா, அந்த பைக் கிட்ட போனவுடனே, ஹலோ மேடம்னு கூப்பிட்டாரு.

அப்புறம் நானும், என்னங்க சார்... அப்படீன்னு கேட்டுட்டு ஒரு நிமிஷம் நின்னேன். நிக்கும்போதே எனக்குப் பயமா இருந்தது.

'மேடம். நான் உங்ககிட்ட பேசணும்.' அப்படீன்னாரு.

'எங்கிட்டேயா?' என்று நான் கேட்டேன்.

'ஆமாங்க. உங்ககிட்டதான்...' அப்படீன்னு திருப்பித் திருப்பி சொன்னாருக்கா.''

''நீ என்ன சொன்னே?'' என்றாள் ஜெயந்தி.

'''அப்படியெல்லாம் பேச முடியாதுங்க. நீங்க ஏதாவது பேசணும்னா வீட்டுக்கு வந்து பேசுங்க...' அப்படீன்னு சொன்னேன். உடனே அதுக்கு அவரு கிண்டலா சிரிச்சுட்டு, 'உங்க வீட்டுக்கா. உங்க வீட்டுக்கு எப்படி வந்து பேசறது? ங்க வீட்ல நுழைஞ்சாலே விரட்டியடிக்கிறாங்க' என்றார்.



அப்புறம் எனக்கு கொஞ்சம் தைரியமாயிடுச்சுக்கா... நான் உடனே என்ன கேட்டேன். சரி, 'அப்படி எங்க வீட்ல வந்து பேச முடியாத அளவுக்கு எங்கிட்ட என்ன பேசணும்? உங்களுக்கும் எனக்கும் என்ன பழக்கம்?' அப்படின்னு கேட்டேன்.''

''உடனே அதுக்கு அவரு என்ன சொன்னாரு?''

'''பழக்கமா... முன்னபின்ன பழக்கமிருந்தாதான் பேசணுமா? இனிமே பழகிட்டாப் போச்சு...' அப்படீங்கறாருக்கா...'' என்றாள்.

ஜெயந்தி முகத்தில் கவலை கூடியது.

''அதுக்கு நீ என்ன சொன்னே?'' என்று சற்று இறங்கிய குரலில் கேட்டாள்.

மாலதி தொடர்ந்தாள். '''எங்கிட்ட பழகுறதுக்கு உங்களுக்கு என்ன சார் இருக்கு. ம்... என்க்கு வழி விடுங்க. கம்ப்யூட்டர் கிளாஸுக்கு நேரமாச்சு' அப்படீன்னேன். உடனே அவரு குறும்பா சிரிச்சுட்டு... 'சரி, சரி. போங்க' அப்படீன்னு... இந்த ஏர் இந்தியா பாணியிலே குனிஞ்சு வணக்கம்னு சொல்லி வழி விடுறாரு. அந்த கடையில நின்னுக்கிட்டு இருந்தவங்க எல்லாம் சிரிக்கிறாங்கக்கா...'' என்றாள்.

ஜெயந்தியின் முகம் இருண்டுபோனது.

''ஏன்க்கா... உங்களுக்குத் தெரிஞ்ச ஃப்ரெண்ட்தானே அவரு?'' என்றாள் மாலதி.

''ஆமாம். தெரிஞ்ச ஃப்ரெண்ட்தான். அதுக்காக வயசுப் பொண்ணுகிட்ட வழியில் இப்படியெல்லாம் பேசணுமா என்ன?'' என்றாள்.

''அதாங்க்கா... எனக்கும் பயமாயிருக்கு. தினமும் இப்படி வந்து ஏதாவது தொல்லை குடுப்பாரோ... அப்படீன்னு இருக்குக்கா'' என்றாள்.

ஜெயந்திக்கு திடீரென்று... ஒருவேளை தன்னைப் பற்றி அவளிடத்தில் ஏதோ சொல்வதற்காக வழியில் நிறுத்தியிருப்பானோ என்று தோன்றியது.

''எதைப் பத்தி பேசணும்னு சொன்னாரா?'' என்று கேட்டாள்.

''இல்லைக்கா... அப்படியெல்லாம் சொல்லல'' என்றாள் மாலதி.

அப்போதைக்கு ஏதோ சாதாரணமாக கேட்டுக் கொள்வது போல கேட்டுக் கொண்டாலும் ஜெயந்திக்கு உள்ளூர அந்த சிந்தனை ஓடிக் கொண்டே இருந்தது.

வேலியில் ஓடும் ஓணானை மடியில் கட்டிக் கொண்டாற் போல இந்த பிரபாகரனிடம் நின்று ஐந்து நிமிடம் பேசியது தவறாகப் போய் விட்டது போலிருக்கிறதே. ஒருபுறத்தில் கணவனுக்கு அது பிடிக்கவில்லை. இன்னொரு புறத்தில் அவனே தனது பலவீனத்தை புரிந்துகொண்டு மிரட்டுகிறாற் போல இருக்கிறது என்ற கவலையாகிப் போனாள்.

என்ன ஆனாலும் சரி, தன்னை வேண்டுமானாலும் அவன் மிரட்டிப் பார்க்கட்டும். என்ன ஆகிறது என்று பார்த்து விடலாம். மாலதியை அப்படி மிரட்டுவதற்கு விடக்கூடாது என்று சங்கல்பம் செய்து கொண்டாள்.

அதனால்தான் இரவெல்லாம் யோசித்துவிட்டு காலையிலே மாலதியுடன் தானும் போவதாக முடிவு கட்டினாள். காலையிலேயே எழுந்து கலைச்செல்வியிடம் இருந்த ஆக்டிவா வண்டியை ஒரு நாளைக்கு இரவலாக கேட்டு வாங்கிக் கொண்டு செல்ல... கேட்டும் விட்டாள்.

எல்லாம் தயாரானதற்குப் பிறகுதான் போய் ரத்தினாம்மாளிடம் அனுமதி கேட்டாள். இப்போது நடந்ததெல்லாம் நினைவுக்கு வர, கடவுளே! இது என்ன சோதனை. இதை எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்ற கவலையுடன் தான் புறப்பட்டாள்.



மாலதியும் அவளும் புறப்பட்ட பின்னர், மறுபடியும் ரத்தினாம்மாளிடம் சொல்லிவிட்டு வந்தார்கள்.

கொஞ்ச தூரம் போனவுடனே மாலதி சொன்னாள். ''அக்கா! பாருங்க. இன்னிக்கும் நிக்குறாரு'' என்றாள்.

ஜெயந்தி எங்கோ பார்ப்பது போல ஓரக்கண்ணால் அந்தக் கடையைக் கவனித்தாள்.

பிரபாகரன் மிகவும் அழகாகவும் டீக்காகவும் உடை உடுத்திக் கொண்டு அங்கே நின்றுகொண்டிருந்தான்.

ஜெயந்தி வருவதைப் பார்த்தவுடனே சட்டென்று வந்து கையைக் காட்டினான்.

ஜெயந்தி சடக்கென்று பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினாள்.

''என்ன பிரபாகரன்?'' என்றாள்.

''ஜெயந்தி, நீயும் வந்துட்டியா? ரொம்ப நல்லதாப் போச்சு'' என்று அவன் கிண்டலாக சொன்னான்.

ஜெயந்தி முறைத்தபடி, ''உங்களுக்கு என்ன வேணும் பிரபாகரன்?'' என்று கேட்டாள்.

''எனக்கு என்னென்னமோ வேணும்'' என்றான் பிரபாகரன்.

''இதப்பாருங்க பிரபாகரன். நீங்க எங்கூட படிச்சவரு'' என்று சொன்னாள் ஜெயந்தி.

அந்த நேரத்தில்கூட கல்லூரியில் படிச்சவர் என்று சொல்லாமல் அதை சாமர்த்தியமாக மறைத்ததைப் பார்த்து குறும்பாகப் பார்த்து சிரித்தான் பிரபாகரன்.

அவள் அதை கண்டுகொள்ளாதது போல தொடர்ந்தாள்.

''நீங்க எங்கூட படிச்சவருதான். அதுக்காக வயசுப் பிள்ளையை வழியில நிறுத்திப் பேசறது, கமெண்ட் அடிப்பது... இதெல்லாம் நல்லாயில்லை பிரபாகரன்'' என்றாள்.

"சரி, எனக்கு அவங்கிட்ட பேச வேண்டாம். உங்கிட்ட நான் பேசணும்" என்றான்.

சட்டென்று திரும்பிய ஜெயந்தி. "சரி, மாலதி நீ போ, நான் இவரிடம் பேசி அனுப்பிச்சுடுறேன்" என்று சொல்லி மாலதியை அனுப்பி விட்டாள்.

பிரபாகரன் அவளைப் பார்த்து குறும்பாகச் சிரித்தபடி, "நீ என் அவங்கள அவசரப்பட்டு அனுப்பினே" என்றான்.

அவள் ஒருவிதமான கையாலாகாத கோபத்துடன், "பிரபாகரன்! உங்க நோக்கம் என்னன்னு எனக்குப் புரியல" என்றாள்.

"சொல்லிவிடட்டுமா?" என்று கேட்டான் பிரபாகரன்.

"என்னத்த சொல்லப்போறீங்க?" என்று அவள் கேட்க, அவன் சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டவுடனே ஜெயந்தியின் முகம் வெளிறிப்போனது.

"இதப்பாருங்க பிரபாகரன், கல்யாணமாகி இருக்கிற ஃபேமிலி பற்றி உங்களுக்குத் தெரியாது. பெரிய சர்க்கிள் அவங்க. வெட்டு. குத்து எதுக்குமே தயங்க மாட்டாங்க" என்றாள்.

பிரபாகரன் அவளை ஆழமாகப் பார்த்தபடி, "இந்த விஷயம்னு வரும்போது வெட்டு, குத்துக்கு யாரும் பயப்பட மாட்டாங்கன்னு உங்களுக்குப் புரியாதா? ஆமாமாம். உங்களுக்கெங்கே புரியும்?" என்றான் பிரபாகரன்.

"வேண்டாம் பிரபாகரன். இது எந்தவிதத்திலும் சரியில்ல. அதிலும் குறிப்பா எங்க வீட்டுக்காரருக்கு தெரிஞ்சது... உங்களை ஒரு வழி பண்ணிடுவாரு" என்று கெஞ்சுவது போல சொன்னாள்.

அவன் மேலும் அவளை அதட்டுவது போல முகபாவத்தோடு பேசியதையும், ஜெயந்தி அதற்கு



நேர்மாறாக வேண்டாம் பிரபாகரன் என்று கெஞ்சுவது போல பேசியதையும் இரண்டு ஜோடி கண்கள் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தன.

ஏதோ ஒரு டாகுமெண்ட் வேண்டும் என்று தனது சகோதரன் கேட்டதற்காக அதை எடுக்க வேண்டும் என்று அவசரமாக மாருதி காரை எடுத்துக் கொண்டு வந்த பாலகுமாரன், சற்று தொலைவிலேயே நிறுத்தி ஜெயந்தியும் பிரபாகரனும் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தான்.

அவன் முகத்தில் ரத்தம் பாய்ந்தது. சிவந்து போனது. பல்லைக் கடித்துக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்.

பிரபாகரனைப் பார்த்து பேசிக் கொண்டு திரும்பிய ஜெயந்தி காரில் இருந்து இறங்குகிற கணவனைப் பார்த்து முகமெல்லாம் வெளிற அதிர்ந்துபோய் நின்றாள்.

## அத்தியாயம் 12

அந்த பெரிய கூடம் நிறைய பெண்கள் எல்லோரும் நிறைந்து இருந்தார்கள். ஒரு பக்கத்தில் ரத்தினாம்மாள், மாணிக்கம்மாள், வித்யாவதி, அம்பிகா, மாலதி, அகிலா, ஜானகி, மைதிலி, ராதா என்று எல்லோரும் ஒரு பக்கமாக கலக்கத்தில் இருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்னொரு புறத்திலே ஆண்கள் எல்லோரும் நாற்காலி களில் அமர்ந்திருந்தார்கள். கோவிந்தசாமி நடுநாயகமாக அமர்ந்திருந்தார். சோபாவில் இன்னொரு பக்கத்திலே கிருஷ்ணசாமி அமர்ந்திருந்தார். எதிரில் இருந்த சோபாவிலே நாராயணசாமி அமர்ந்திருந்தார்.

இன்னொரு பக்கத்தில் அம்பிகாவின் கணவர் ஜெகந் நாதன் அமர்ந்திருந்தார். எல்லாரும் பார்க்கும் வகையில் எதிராக ஜெயந்தி நின்றுகொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை தெரிந்தது. கொஞ்சம் தள்ளி அவளது கணவன் ஒரு சோபாவின் விளிம்பில் அமர்ந்திருந்தான். வீட்டில் இருந்த இளைஞர்கள் எல்லோரும் ஆங்காங்கே கிடைத்த இருக்கையில் ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

''என்னத்துக்கு எல்லோரும் நிக்கறீங்க. உட்காருங்க'' என்றார் கோவிந்தசாமி. குரலிலே ஒரு கடுப்பு தெரிந்தது.

பெண்கள் எல்லோரும் தயங்கியபடியே எதிர்ப்புறம் இருந்த சோபாவிலே அடைந்து கொண்டார்கள்.

இளம்பெண்கள் அந்த நீல சோபாவிற்குப் பின்னாலே நின்றுகொண்டார்கள்.

ஏதோ ஒரு தர்பாரிலே சபை கூடி வழக்கு விசாரணை நடைபெறுவது போல அங்கே ஒரு காட்சி தோன்றியது. தோன்றியது என்ன, உண்மைகூட அதுதான். ராஜா என்று ஒருவர் இல்லையென்றாலும்கூட ராஜாவைப் போல அங்கே கோவிந்தசாமி அமர்ந்து கொண்டிருந்தார்.

இத்தனைக்கும் காரணம், முதல் நாள் ஜெயந்தியும் மாலதியும் சென்றபோது பிரபாகரனிடம் நின்று பேசிவிட்டு வந்ததுதான்.

பிரபாகரனிடம் பேசிக்கொண்டே திரும்பிய ஜெயந்தியினுடைய கண்கள் அப்படியே விரிந்தன. பயம் அதில் தொற்றிக் கொண்டது என்றால் காரை அறைந்து சாத்திவிட்டு கணவன் இறங்கி அவளை நோக்கி வந்தபோது அவளது படபடப்பு மேலும் அதிகமாகிப் போனது.

இமைக்க மறந்தவளாக அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

இந்த சந்தடிச்சாக்கிலே பிரபாகரன். ''சரி, ஜெயந்தி. நான் அப்புறம் வர்றேன்'' என்பது போல வண்டியை எடுத்துக் கொண்டு நேர்எதிர் திசையிலே போய் விட்டான்.



இப்போது ஜெயந்திக்கு தர்மசங்கடமாகப் போய் விட்டது. தான் ஏதோ குற்றம் செய்து கொண்டிருந்தபோது கையும்களவுமாக பிடித்துவிட்டோம் என்பது போல வருகிற கணவனைப் பார்த்தவுடன் அவளது மனத்தில் சொல்லவொண்ணா வேதனை தோன்றியது.

தெருவே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இறங்கி வந்த பாலகுமாரன், ''என்ன அவங்கிட்ட இங்க வச்சு பேச்சு'' என்றான்.

''இல்லீங்க. நான் விவரம் சொல்றேங்க'' என்று அவள் ஆரம்பிக்கும்போது, ''பேசாம சாதாரணமா எங்கூட வந்து கார்ல ஏறு. ஓ... வண்டியில வந்தியா. சரி, வண்டியில பின்னாடியே வந்து சேரு. இங்க நின்று ஏதும் விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்காத. உள்ள அண்ணன் உட்கார்ந்துகிட்டு இருக்காங்க'' என்றான்.

அவளுக்கும் இன்னும் பீதி கிளம்பி விட்டது. ''எந்த அண்ணன்?'' என்றாள்.

''ம்... பெரிய அண்ணன்தான்'' என்று சொல்லிவிட்டு அவன் வேகமாகத் திரும்பிப் போய் தன்னுடைய காரை எடுத்தான்.

அவளும் உடனே பதறியடித்துக் கொண்டு இரவல் வாங்கிய ஆக்டிவாவை எடுத்துக் கொண்டு அவன் பின்னாலேயே போனாள்.

போகும்போதே எங்காவது வண்டியைக் கொண்டு போய் விட்டு விடுவோமோ என்பது போல உள்ளே பயம் இருந்தது. வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போனாள்.

கார் வீட்டுக்குள்ளே நுழைந்தது. பின்னாலேயே வண்டியும் நுழைந்தது.

கோவிந்தசாமி இறங்கி வீட்டுக்குள் போன தோரணை யிலேயே ஒரு வித்தியாசம் தெரிந்தது. அவனிடம் ஒன்றும் பேசவில்லை. கடிந்து கொள்ளவில்லை. கோபம் காட்ட வில்லை. அந்த கடுகடுப்பே அவனைக் கொல்வது போல இருந்தது.

திரும்பி சகோதரனைப் பார்த்துவிட்டு, ''டேய்! 8 மணிக்கு மேல பேசிக்கலாம்பா...'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

பாலகுமாரன் அவசரமாக தலையாட்டுவதைப் பார்த்து அவளுக்குக் கோபமாக இருந்தது. 'நான் அப்படி என்ன தவறு செய்துவிட்டேன். இல்லை... நீ என்ன தவறு செய்தாய் எனக் கேட்க மாட்டார்களா. இவர்களாகவே ஒரு முடிவுக்கு வந்து விடுவார்களா?' என்று கோபம் பொங்கிக் கொண்டே இருந்தது.

நேராகத் தங்கள் அறைக்குப் போனார்கள். அங்கே வைத்து பாலகுமாரனிடம் அவள், ''என்னங்க...'' என்று ஆரம்பித்தபோது, ''பேசாதடி...'' என்றான் அவன்.

அவன் ம... போட்ட விதத்திலேயே அவளுக்கு அடி விழுந்தது மாதிரி இருந்தது.

''விவரம் புரியாம பேசாதீங்க'' என்று அவள் லேசாக குரல் எழுப்ப ஆரம்பித்தாள்.

பக்கத்தில் வந்து பல்லைக் கடித்துக் கொண்டு, அவள் தோளை அழுத்திப் பிடித்தபடி சொன்னான். ''இங்கே யெல்லாம் சத்தம் போடக்கூடாது. ஏதாவது பேச வேண்டி யிருந்தால் அமைதியா சத்தமில்லாம பேசணும்'' என்றான் அடித் தொண்டையில் குரலெடுத்து.

வேமாக எழும்பிய அவள் குரல் அப்படியே உள்ளே அமுங்கியது.



''நீங்க. என் பக்கத்து நியாயத்தையும் கேட்கணும்'' என்றாள் மெல்லிய குரலில்.

''நியாயமே இல்லைங்கறேன். அதுல இந்தப் பக்கம் நியாயம், அந்தப் பக்கம் நியாயம் என்ன இடக்குது?'' என்றான் அவன்.

அவளுக்குள் கோபம் பொங்கியது.

''என்ன செய்யப் போறீங்க?'' என்றாள்.

அவன் தோளைக் குலுக்கினான்.

''தெரியலை. எல்லா விளக்கத்தையும் எங்க அண்ணனிட்ட சொல்லு'' என்றான்.

''முதல்ல நான் உங்ககிட்ட சொல்றேன்'' என்றாள் இவள்.

''நான் கேட்கத் தயாரா இல்ல. ஜெயந்தி'' என்றவன், அவசரம் அவசரமாகப் போய் அவர்களுடைய அலுவலக அறை... - அந்த மாளிகையிலும் அவர்களுக்கென்று ஒரு அலுவலக அறை இருந்தது. அதற்குள்ளாகப் போய் ஏதோ பத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே போனான்.

அண்ணனும் அதற்குள்ளாக வெளியிலே வந்து காத்துக் கொண்டிருந்தார்.

சர்ரென்று இளம்பிப் போய் விட்டார்கள்.

அவர்கள் போனதற்குப் பிறகு அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கட்டிலில் அமர்ந்து முழங்காலுக்குள் முகத்தை முட்டுக் கொடுத்தபடி தேம்பித் தேம்பி அழுதாள்.

சற்று நேரம் கழித்துதான் ரத்தினாம்மாள் வந்து எட்டி பார்த்தார்.

''என்னம்மா நடந்தது?'' என்று கேட்டார்.

அவர் முகத்திலும் ஒரு கலவரமான முகபாவம் தெரிந்த

''பெரியக்கா...'' என்று இவள் ஆரம்பித்தாள்.

''இதப்பாரு... அந்தப் பையன் அங்க வந்தானா?'' என்று கேட்டார். அவர் அழுத்தமான குரலில்.

அவள் மேலும் கீழுமாகத் தலையை ஆட்டினாள்.

''எதுக்கு வந்தான்?'' என்றார் அவர்.

''தெரியல... ஆனா, என்னைப் பார்க்க வரலை...'' என்றாள் ஜெயந்தி.

''பின்னே?'' என்று அவள் ஆரம்பிக்க... பழி தன்னோடு போகட்டும் என்று நினைத்தாளோ என்னவோ...

''பெரியக்கா... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க. எந்த தப்பும் நடக்கல. நான் ஆக்கவலா அந்த பிரபாகரன்கிட்ட சண்டை போடத்தான் போனேன்'' என்றாள்.

''எதுக்கு சண்டை போடணும்?'' என்று கேட்டார் ரத்தினம்மாள்.

சட்டென்று விடையைச் சொல்லிவிடலாமா என்று நினைத்தாள். ஆனால், இன்னொரு பக்கம் மாலதியினுடைய அச்சம் தோய்ந்த முகம் தெரிந்தது. அவள் பாவம், கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் போய்க்கிட்டிருக்காள்.

அவளுடைய பேரையும் கெடுத்துவிட்டு அவளுக்கு அந்த வாய்ப்பும் கிடைக்காதபடி செய்துவிடக்கூடாது என்று நினைத்தபடி ''இல்லைங்கக்கா... அன்னிக்கு வீட்டுக்கு வந்தான். இன்னிக்கு நானும் மாலதியும் போய்க்கிட்டிருந்த போது வழியிலே குறுக்கிட்டு கையைக் காட்டி நிறுத்திப் பேசினான். இந்த மாதிரியெல்லாம் தொந்தரவு பண்ணாதே அப்படீன்னுதான் நான் சொல்லிக்கிட்டிருந்தேன். அந்த நேரத்தில இவங்க வந்தாங்க. பார்த்துட்டாங்க'' என்றாள்.

இவள் சொன்னதைக் கேட்டு ரத்தினம்மாள் முகத்திலே ஒரு நம்பிக்கையின் அடையாளமே தோன்றவில்லை. அவருக்கே சந்தேகம் போல தோன்றியது.



''இல்லை, இனர்று இன்னிக்கு கம்ப்யூட்டர் கிளாஸுக்கு போறேன்னு ஆரம்பிக்கவே...'' என்று முணுமுணுத்துக் கொண்டே இடத்தை விட்டு நகர்ந்து சென்றார்.

அப்போதுதான் ஜெயந்திக்குப் புரிந்தது. வழக்கமில்லாத வழக்கமாக தான் வெளியே போக வேண்டும் என்று கேட்டதை இவர்கள் பிரபாகரனை சந்திக்கப் போவதாக எடுத்துக் கொண்டார்களோ. இது என்ன அநியாயமாக இருக்கிறது என்று அவள் மனத்திலே எத்தனையோ கேள்விகள் எழுந்தன.

ஏதோ ஒரு பெரிய குற்றவாளியைப் போல தன்னை அவர்கள் நினைப்பதாக உணர்ந்தாள். அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

சரி, ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்றால், இந்தப் பெரியவர்கள்... மூத்த பெண்கள் தன்னை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டு ஏதோ ஒருவிதத்தில் தனக்கு ஆறுதலாக இருப்பார்கள் என்று அவள் எண்ணியதற்கு மாறாக அத்தனை பேரும் பயந்து நடுங்குகிறாற்போல அவளுக்குத் தோன்றிது.

நேராக அவள் சமையல் அறைக்குப் போனாள்.

''இப்படித்தான் இந்த வீட்டில் நடக்குமா?'' என்று கேட்டாள்.

''எப்படித்தான் என்ன நடக்குது?'' என்று கேட்டார் மாணிக்கத்தம்மாள்.

''ஒரு பக்கத்து நியாயத்தைத்தான் கேட்பீங்களா? இன்னொரு பக்கத்துல என்ன நடந்ததுன்னு கேட்க மாட்டீங்களா?'' என்று கேட்டாள்.

அவர்கள் எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு ரத்தினம்மாள் சொன்னார்.

''ஜெயந்தி! அடிப்படையில் நீ ஒண்ணு புரிஞ்சுக்கோணும். காலாகாலத்துக்கும் நாம ஒரு குடும்பத்துக்கு கட்டுப்பட்டவங்க. அந்த குடும்பத்தோட மான அவமானம் நம்மளோடது. அதைக் காப்பாத்த வேண்டிய கடமை நம்மளோடது. அப்படி இருக்கும்போது எல்லாரும் பெரியவங்களுக்குக் கட்டுப்படத்தான் வேணும்'' என்றார்.

உடனே ஜெயந்தி கேட்டாள்.

''அப்படி நான் கட்டுப்படாம என்ன செஞ்சேன்?'' என்றாள்.

''என்ன செஞ்சேன்னு உனக்கே தெரியும். எதெல்லாம் இந்த வீட்டு வழக்கமில்லையோ, அதெல்லாம் இந்த வீட்டுல ஆரம்பிச்சா பெரியவங்களுக்குப் பிடிக்காதுதானே!'' என்றார் மாணிக்கத்தம்மாள்.

அதற்குள்ளாக வித்யாவதி இடையிலே புகுந்து, ''பாரு ஜெயந்தி! எப்படியிருந்தாலும் இன்னிக்கு சாயந்தரம் அண்ணன் உங்கிட்ட கேட்கப் போறாங்க. பெரியவரு. நீ அதுக்கு தகுந்த பதில் தயாரிச்சு வச்சுக்கணும். இல்லைன்னா, கஷ்டம்தான்'' என்றார்.

அவள் சட்டென்று முகத்தைத் தூக்கிக்கொண்டு தன்னுடைய அறைக்குப் போய் விட்டாள்.

கொஞ்ச நேரத்திலேயே ரத்தினாம்மாள் வந்தார். ''இந்த குடும்ப வழக்கமெல்லாம் பிடிபடறதுக்கு கொஞ்ச நாள் ஆகும். ஆனா, அதுக்காக வயத்தக் காயப்போடக்கூடாது. சாப்பிடு'' என்று அவளைச் சாப்பிட வைத்தார்.

அன்று மாலை வரை சாப்பாடு, காபி, டிபன்... இதெல்லாம் சரியாக நடந்தது.

ஆனால், யாருமே அவளைப் புரிந்துகொண்டவர்களாகவோ அவள் மீது சற்றும் அனுதாபம் காட்டுபவராகவோ அவளுடைய நியாயம் என்ன... அவளுடைய



பக்கம் என்ன என்று கேட்பவர்களாகவோகூட இருக்கவில்லை.

அந்த கணத்தில் ஜெயந்திக்கும் தோன்றியது. இவர்களுக்குப் புரியாது. புரிய வைக்கவும் முடியாது. அதற்கான முயற்சி எடுப்பதே வியர்த்தம் என்று தோன்றியது.

அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டு ஆழ்ந்து யோசித்தபடி அமர்ந்திருந்தாள்.

எப்போதுமே இதற்குள்ளாக பாலகுமாரனிடம் இருந்து ஒரு மூன்று நான்கு அழைப்புகளாவது வந்து விடும். அழைப்புகளும் வரவில்லை. அதுவேறு அவளுக்கு உறுத்தலாக இருந்தது. மறுபடியும் மறுபடியும் அவள் மனத்தில் இந்த திருமணம் இல்லைன்னு யார் கேட்டார்கள் என்ற எண்ணம்தான் தோன்றியது.

இதற்கெல்லாம் காரணமான அந்தப் பிரபாகரன் மட்டும் கிடைத்தால்... இன்னும் கோபம் பொங்கியது.

அப்போதுதான் இந்த எண்ணம் தோன்றியது. பிரபாகரனை ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும். அப்படியே பிரபாகரன் தன்னை மிரட்டுவதாக வைத்துக் கொண்டாலும் அதற்கான காரணம் ஒன்று இருக்கிறதல்லவா? அந்தக் காரணத்துக்காகத்தானே பயப்பட வேண்டியதிருக்கிறது.

அந்தக் காரணத்துக்கே நாம் இன்றைக்கு முடிவு கட்டிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அதற்குபிறகு மனம் தெளிவாகியது. சரி, வரட்டும். என்ன செய்வார்கள். கேள்வி கேட்பார்கள். எல்லாரும் சுற்றி நின் கொண்டு கேள்வி கேட்பார்களா? கேட்கட்டுமே. நானு பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பது போ வீம்பாகத்தான் முகத்தை வைத்துக் கொண்டாள்.

விம்பாக வைத்துக் கொண்டது மட்டுமல்ல... அந்த முடிவிற்குப் பிறகு அவள் எழுந்து சாதாரணமாக எழுந்து நடமாடவும் ஆரம்பித்தாள். அவளது இந்தச் செயல் அந்த வீட்டிலே ஒரு புதுமையாகத் தோன்றியது போலும்.

அந்த வீட்டு மூத்தப் பெண்கள் எல்லாம் ஒருவரை யொருவர் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டார்கள். கொஞ்சம் உள்ளூரப் பயந்தவர்களாகவும் இருந்தார்கள்.

வரட்டும் அந்த நேரம் என்று காத்துக்கொண்டிருந்தாள் ஜெயந்தி. அந்த நேரம்தான் இப்போது வந்திருந்தது. அந்த நேரத்துக்காக காத்திருந்தவள்தான் தன்னுடைய கணையை எடுத்து வீசுவதற்காக அத்தனை பேருக்கும் நடுவிலே தயாராக காத்துக் கொண்டிருந்தாள். இதோ கணை புறப்பட்டு வந்தே விட்டது.

## அத்தியாயம் 13

**கேள்விகளுக்காகக்** காத்துக் கொண்டிருந்தாள் ஜெயந்தி.

கோவிந்தசாமி தனது கனீரென்ற குரலிலே கேட்டார்.

''என்ன அம்மணி. அந்த பிரபாகரன் யாரு? நம்ம வீட்ல பொதுவா வயசுப்புள்ளைகளைப் பார்க்கறதுக்கு பசங்கெல்லாம் வர்றது வழக்கமில்ல. ஏதோ கல்யாண வீட்ல பார்த்தே... பேசுனே. அந்த மட்டோடு விட்டுட்டு வர்ற வேண்டியது தானே. அவன் எதுக்காக வீட்டுக்கெல்லாம் வர்றான்?'' என்றார்.

ஜெயந்தி பணிவாகவே ஆரம்பித்தாள்.

''பெரியத்தான். நான் கண்டிப்பா அவர வரச்சொல்லலை. கல்யாண வீட்ல பார்த்துப் பேசினாப்பல... ஆனா, திடீர்னு எப்படியோ வீட்டைக் கண்டுபுடிச்சு வந்தாப்ல'' என்றாள்.



பெரியவர்களெல்லாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அது சரி. எதுக்காக வீட்டைக் கண்டுபுடிச்சு வரணும்?'' என்று கேட்டார் கோவிந்தசாமி.

''அதான் எனக்குத் தெரியாதுன்னு சொல்றேனே. நான் வரச்சொல்லலை. அந்த ஆள் வந்ததையும் விரும்பல'' என்றாள் ஜெயந்தி.

பேசிக்கொண்டே திரும்பி பாலகுமாரனைப் பார்த்தாள். பாலகுமாரனிடம் ஒரு ஆதரவான பார்வையாவது இருக்குமா என்று அவள் மனம் ஏங்கியது. ஆனால், அவனோ உனக்கும் எனக்கும் தொடர்பில்லை என்பதுபோல ஒரு விட்டேற்றியாக முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஜெயந்தியின் கண்கள் அவனிடம் கேள்வி கேட்டன. 'இப்படி உங்கள் மனைவியை நிறுத்தி வைத்துக்கொண்டு விசாரணை செய்கிறார்களே... இது உங்களுக்கு அவமானமாக இல்லையா?' என்று கெஞ்சாமல் கெஞ்சின.

பாலகுமாரனுக்கு அது புரிந்ததோ இல்லையோ... அல்லது புரிந்தும் புரியாதது போல நடந்துகொண்டானோ என்னவோ... எதையும் காட்டிக் கொள்ளாமல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டான்.

''பார் அம்மணி. அந்த பிரபாகரன் வீடு தேடி வந்தது மட்டுமில்லாம வழியில வச்சு உங்கிட்டே பேசியிருக்கான். நீ மட்டுமில்லாம மாலதியையும் அப்ப வண்டியில கூட்டிட்டுப் போயிருக்கே. இந்த தெருக்காரங்க எல்லோருக்கும் நம்ம குழந்தை குட்டிகளைப் பத்தி தெரியும். அந்தப் பொண்ணு நாளைக்கு கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு. அப்படியிருக்கப்போ... நீ போய் இப்படி

பசங்கிட்ட பேசிக்கிட்டு இருந்தின்னா... நம்ம குடும்ப கௌரவம் என்ன ஆகறது?'' என்று கேட்டார் கிருஷ்ணசாமி.

ஜெயந்தி மிகப் பரிதாபமாக அவருடைய முகத்தைப் பார்த்தாள்.

திரும்பி மாலதியைப் பார்த்தாள். அக்கா, வேண்டாம் என்பது போல கெஞ்சுவது போல பார்த்தாள்.

சரி, பழி தன்மீதே வரட்டும் என நினைத்தவளாக, ''நான் தான் சொல்றேனே... அந்த ஆள் தேவையில்லாம வீட்டுக்கு வந்தாரு. வழியில நின்னு நான் வருவேனான்னு பார்த்துக்கிட்டிருக்காருன்னு மாலதி சொன்னாள். அதனாலதான் நானே வர்றேன் கூடன்னு சொல்லி நேரடியாகப் போய், இனிமேல் இப்படிப் பெண்கள் போற வழியில எல்லாம் நின்னுக்கிட்டு தொல்லை குடுக்காதீங்கன்னு சொல்றதுக்காகத் தான் போனேன்'' என்றாள்.

''ஓகோ... இதுவேற நடந்துச்சோ...'' என்றார் ஜெகந்நாதன்.

''ஆமாம். மாலதிகிட்ட நேற்று அவர் பேசியிருக்காரு'' என்றாள் ஜெயந்தி.

உடனே எல்லோரும் மாலதியைப் பார்த்தார்கள். மாலதி வெலவெலத்துப் போனாள்.

''எதுக்கு மாலதியை எல்லாரும் குத்தவாளியாப் பார்க்கறீங்க. நானே சொல்றேன்... என்ன நடந்தது அப்படீன்னு...'' என்றாள் ஜெயந்தி.

திரும்பவும் எல்லாரும் திரும்பி இவளைப் பார்த்தார்கள். ஜெயந்தி அப்போது, ''மாலதியை வழியில மறிச்சு ஜெயந்திகிட்ட நான் பேசணும்னு கேட்டிருக்காரு. அதனாலதான் நான் போனேன். இன்னிக்கு 'எதுக்காகப் பேசணும். என்னத்தப் பேசணும். உங்ககிட்ட பேசறதுக்கு எனக்கு ஒண்ணும் இல்ல. இனிமேல் வந்து என்னைத்



தொல்லை பண்ணாதீங்க' அப்படீன்னு சொல்றதுக்காகத் தான் போனேன்'' என்றாள்.

ஆண்கள் எல்லோரும் நம்பாதவர்கள் போல் அவளைப் பார்த்தார்கள்.

''ஏன் அம்மணி! இதை நீ எங்ககிட்ட சொல்லியிருக்கலாம்ல... இந்த மாதிரி அந்தப் பையன் எனக்குத் தொல்லை குடுக்கிறான். தயவுசெய்து இனிமேல் தொல்லை கொடுக்காமல் இருக்க ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க. அப்படீன்னு சொல்லியிருக்கலாம்ல'' என்று கேட்டார்கள்.

ஜெயந்தி மறுபடியும் அவர்களை ஒரு கையாலாகாத பார்வை பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''சொல்லியிருக்கலாம். ஆனா... உங்களுக்குத் திடீர்னு கோபம் வந்து இத வேற மாதிரி... அடிதடின்னு ஆரம்பிச்சுட்டா என்ன பண்றதுன்னு எனக்குப் பயமாப் போச்சு'' என்றாள்.

அதற்கு அவர்கள் அமைதியாக உட்கார்ந்து கொள்ள, கோவிந்தசாமி மட்டும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு ''அதுவும் இருக்குது...'' என்று இழுத்தார்.

''அதனாலதான் சொல்லல'' என்றாள்.

ஆனால், நாராயணசாமி மட்டும் ஆழமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையின் வீச்சு கொஞ்சம் ஜெயந்தியை அசைத்துதான் பார்த்தது.

''ஏன் அம்மணி. நீ சொல்றதெல்லாம் உண்மைதானே. அதுல எந்த மாற்றமுமில்லையே'' என்று கேட்டார் நாராயணசாமி.

''நான் சொல்றதெல்லாம் உண்மைதான். நான் சொல்லாத உண்மையும் இருக்கு. அதையும் சொல்லிடறேன்'' என்று நிமிர்ந்தாள்.

''அது என்னம்மணி...'' என்று கேட்டார் கிருஷ்ணசாமி.

"எங்க வீட்ல இந்த குடும்பத்தோட சம்பந்தம் செஞ்சபோது ஒரு உண்மையை மறைச்சுட்டாங்க" என்றாள்.

அங்கே திடீரென்று ஒரு அதிர்ச்சியான அமைதி நிலவியது. எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இந்தப் பெண் எந்த குண்டைத் தூக்கிப் போடப் போகிறாளோ என்பது போல எல்லோருக்கும் உள்ளாக ஒரு கலவரம் தோன்றியது போலும்.

ஜெயந்தி அசராமல் அவர்களைப் பார்த்தாள். பிறகு தனது சம்பிரம் குறையாமல் சொன்னாள்.

"நான் வெறும் ப்ளஸ் டூ முடிச்சதா உங்ககிட்ட சொல்லியிருக்காங்க. ஆனால், உண்மையிலே நான் காலேஜ் படிச்சருக்கேன்" என்றாள்.

இளைஞர்கள் முகத்தில் ஒருவிதமான புன்னகை தோன்றியது. இது என்ன பெரிய விஷயம் என்பது போல. ஆனால், அதற்குப் பிறகு ஜெயந்தி படபடவென்று கொட்டிய வார்த்தைகள்தான் அங்கே பெரிய ஒரு அலையைக் கிளப்பியது என்று சொல்லலாம்.

"எங்க அப்பா அம்மாகிட்டே சொன்னேன். இப்படியெல்லாம் மறைக்க வேண்டாம் அப்படீன்னு. அதனால வந்த வினைதான் இத்தனையும். ஆனா, அவங்க அப்ப சொன்னாங்க, 'குடும்பத்துல பெரிய படிப்பு படிச்ச பொண்ணு வேண்டாம்னு நினைக்கிறாங்க. அதனாலதான் நீ காலேஜ் படிச்ச விவரத்தையெல்லாம் நாங்க மறைக்கிறோம்' அப்படீன்னு சொன்னாங்க. 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை பண்றது வழக்கம்தான். நீ போய் நல்லவிதமாக நடந்துகிட்டேன்னா அவங்க திருப்தியானதுக்கப்புறம் ஒரு நாள் உண்மையைச் சொல்லிக் கலாம்' அப்படீன்னு சொன்னாங்க. அத நம்பிதான் இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்" என்றாள்.



ஜெயந்தி மேலும் தொடர்ந்தாள்...

"ஆனால், அந்த ஒரு பொய்தான் இப்போது விளையாடப் போச்சுன்னு புரியுது. என்னா... பிரபாகரன்கிட்ட கல்யாண வீட்ல உளறிட்டேன். 'என் அம்மா அப்பா நான் காலேஜ்ல படிச்ச விஷயத்தை புகுந்த வீட்ல சொல்லலை. தயவுசெய்து அதைச் சொல்லிடாதே...' அப்படீன்னு ரிக்வெஸ்ட் பண்ணிக் கிட்டேன். அதனால விளைஞ்ச வம்புதான் இது" என்றாள்.

எல்லோரும் இவள் பேசுவதை அதிர்ச்சிகரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாலும் பாலகுமாரன் முகத்தில் மட்டும் அந்த அதிர்ச்சி எதுவும் தோன்றாமல் இருப்பதையும் அவள் கவனித்துக் கொண்டாள்.

"அந்தப் பிரபாகரன் என்ன காரணத்துக்காக வந்தான் என்பது தெரியாது. ஆனா... அவன் இதை ஒரு பெரிய விஷயமா வச்சுக்கிட்டு என்னை பிளாக்மெயில் பண்றமாதிரி நான் விரும்பாதபோதும் இந்த வீட்டுக்கு வந்தான். வழியில வச்சு மாலதிகிட்ட பேசியிருக்கான். ஏதோ ஒரு விஷயம் அவன் கையில இடைச்சதனாலதானே என்னை அங்கங்க மிரட்டிக்கிட்டு இருக்கான். அதான் நான் இந்த விஷயத்தைச் சொல்லிட்டேன்" என்றாள்.

மறுபடியும் அங்கே அமைதி நிலவியது.

இத்தனைக்கும் நடுவில் ஒரு விஷயம் உண்மையாகவே ஜெயந்திக்குப் பிடித்திருந்தது. அவளை ஆச்சரியப்பட வைத்தது. அவர்கள் யாரும் கசகசவென்று பேசுவதில்லை. முக்கியமான விஷயத்தை கோவிந்தசாமி மட்டுமே பேசினார்.

அவர் பேசினால் சரி என்பது போல மற்றவர்கள் எல்லாம் அமைதியாக அமர்ந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கட்டுப்பாடு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை தெரிந்தது. கொஞ்சம் தள்ளி அவளது கணவன் ஒரு சோபாவின் விளிம்பில் அமர்ந்திருந்தான். வீட்டில் இருந்த இளைஞர்கள் எல்லோரும் ஆங்காங்கே கிடைத்த இருக்கையில் ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

''என்னத்துக்கு எல்லோரும் நிக்கறீங்க. உட்காருங்க'' என்றார் கோவிந்தசாமி. குரலிலே ஒரு கடுப்பு தெரிந்தது.

பெண்கள் எல்லோரும் தயங்கியபடியே எதிர்ப்புறம் இருந்த சோபாவிலே அடைந்து கொண்டார்கள். இளம்பெண்கள் அந்த நீல சோபாவிற்குப் பின்னாலே நின்றுகொண்டார்கள்.

ஏதோ ஒரு தர்பாரிலே சபை கூடி வழக்கு விசாரணை நடைபெறுவது போல அங்கே ஒரு காட்சி தோன்றியது. தோன்றியது என்ன, உண்மைகூட அதுதான். ராஜா என்று ஒருவர் இல்லையென்றாலும்கூட ராஜாவைப் போல அங்கே கோவிந்தசாமி அமர்ந்து கொண்டிருந்தார்.

இத்தனைக்கும் காரணம், முதல் நாள் ஜெயந்தியும் மாலதியும் சென்றபோது பிரபாகரனிடம் நின்று பேசிவிட்டு வந்ததுதான்.

பிரபாகரனிடம் பேசிக்கொண்டே திரும்பிய ஜெயந்தியினுடைய கண்கள் அப்படியே விரிந்தன. பயம் அதில் தொற்றிக் கொண்டது என்றால் காரை அறைந்து சாத்திவிட்டு கணவன் இறங்கி அவளை நோக்கி வந்தபோது அவளது படபடப்பு மேலும் அதிகமாகிப் போனது.

இமைக்க மறந்தவளாக அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

இந்த சந்தடிச்சாக்கிலே பிரபாகரன். ''சரி, ஜெயந்தி. நான் அப்புறம் வர்றேன்'' என்பது போல வண்டியை எடுத்துக் கொண்டு நேர்எதிர் திசையிலே போய் விட்டான்.



இப்போது ஜெயந்திக்கு தர்மசங்கடமாகப் போய் விட்டது. தான் ஏதோ குற்றம் செய்து கொண்டிருந்தபோது கையும்களவுமாக பிடித்துவிட்டோம் என்பது போல வருகிற கணவனைப் பார்த்தவுடன் அவளது மனத்தில் சொல்லவொண்ணா வேதனை தோன்றியது.

தெருவே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இறங்கி வந்த பாலகுமாரன், ''என்ன அவங்கிட்ட இங்க வச்சு பேச்சு'' என்றான்.

''இல்லீங்க. நான் விவரம் சொல்றேங்க'' என்று அவள் ஆரம்பிக்கும்போது, ''பேசாம சாதாரணமா எங்கூட வந்து கார்ல ஏறு. ஓ... வண்டியில வந்தியா. சரி, வண்டியில பின்னாடியே வந்து சேரு. இங்க நின்று எதும் விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்காத. உள்ள அண்ணன் உட்கார்ந்திட்டு இருக்காங்க'' என்றான்.

அவளுக்கும் இன்னும் பீதி கிளம்பி விட்டது. ''எந்த அண்ணன்?'' என்றாள்.

''ம்... பெரிய அண்ணன்தான்'' என்று சொல்லிவிட்டு அவன் வேகமாகத் திரும்பிப் போய் தன்னுடைய காரை எடுத்தான்.

அவளும் உடனே பதறியடித்துக் கொண்டு இரவல் வாங்கிய ஆக்டிவாவை எடுத்துக் கொண்டு அவன் பின்னாலேயே போனாள்.

போகும்போதே எங்காவது வண்டியைக் கொண்டு போய் விட்டு விடுவோமோ என்பது போல உள்ளே பயம் இருந்தது. வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போனாள்.

கார் வீட்டுக்குள்ளே நுழைந்தது. பின்னாலேயே வண்டியும் நுழைந்தது.

கோவிந்தசாமி இறங்கி வீட்டுக்குள் போன தோரணை யிலேயே ஒரு வித்தியாசம் தெரிந்தது. அவளிடம் ஒன்றும் பேசவில்லை. கடிந்து கொள்ளவில்லை. கோபம் காட்ட வில்லை. அந்த கடுகடுப்பே அவளைக் கொல்வது போல இருந்தது.

திரும்பி சகோதரனைப் பார்த்துவிட்டு, ''டேய்! 8 மணிக்கு மேல பேசிக்கலாம்பா...'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

பாலகுமாரன் அவசரமாக தலையாட்டுவதைப் பார்த்து அவளுக்குக் கோபமாக இருந்தது. 'நான் அப்படி என்ன தவறு செய்துவிட்டேன். இல்லை... நீ என்ன தவறு செய்தாய் எனக் கேட்க மாட்டார்களா. இவர்களாகவே ஒரு முடிவுக்கு வந்து விடுவார்களா?' என்று கோபம் பொங்கிக் கொண்டே இருந்தது.

நேராகத் தங்கள் அறைக்குப் போனார்கள். அங்கே வைத்து பாலகுமாரனிடம் அவள், ''என்னங்க...'' என்று ஆரம்பித்தபோது, ''பேசாதடி...'' என்றான் அவன்.

அவன் டீ... போட்ட விதத்திலேயே அவளுக்கு அடி விழுந்தது மாதிரி இருந்தது.

''விவரம் புரியாம பேசாதீங்க'' என்று அவள் லேசாக குரல் எழுப்ப ஆரம்பித்தாள்.

பக்கத்தில் வந்து பல்லைக் கடித்துக் கொண்டு, அவள் தோளை அழுத்திப் பிடித்தபடி சொன்னான். ''இங்கே யெல்லாம் சத்தம் போடக்கூடாது. ஏதாவது பேச வேண்டி யிருந்தால் அமைதியா சத்தமில்லாம பேசணும்'' என்றான் அடித் தொண்டையில் குரலெடுத்து.

வேமாக எழும்பிய அவள் குரல் அப்படியே உள்ளே அமுங்கியது.



''நீங்க. என் பக்கத்து நியாயத்தையும் கேட்கணும்'' என்றாள் மெல்லிய குரலில்.

''நியாயமே இல்லைங்கறேன். அதுல இந்தப் பக்கம் நியாயம், அந்தப் பக்கம் நியாயம் என்ன இடக்குது?'' என்றான் அவன்.

அவளுக்குள் கோபம் பொங்கியது.

''என்ன செய்யப் போறீங்க?'' என்றாள்.

அவன் தோளைக் குலுக்கினான்.

''தெரியலை. எல்லா விளக்கத்தையும் எங்க அண்ணன்கிட்ட சொல்லு'' என்றான்.

''முதல்ல நான் உங்ககிட்ட சொல்றேன்'' என்றாள் இவள்.

''நான் கேட்கத் தயாரா இல்ல. ஜெயந்தி'' என்றவன், அவசரம் அவசரமாகப் போய் அவர்களுடைய அலுவலக அறை... - அந்த மாளிகையிலும் அவர்களுக்கென்று ஒரு அலுவலக அறை இருந்தது. அதற்குள்ளாகப் போய் ஏதோ பத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே போனான்.

அண்ணனும் அதற்குள்ளாக வெளியிலே வந்து காத்துக் கொண்டிருந்தார்.

சர்ரென்று கிளம்பிப் போய் விட்டார்கள்.

அவர்கள் போனதற்குப் பிறகு அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கட்டில் அமர்ந்து முழங்காலுக்குள் முகத்தை முட்டுக் கொடுத்தபடி தேம்பித் தேம்பி அழுதாள்.

சற்று நேரம் கழித்துதான் ரத்தினாம்மாள் வந்து எட்டிப் பார்த்தார்.

''என்னம்மா நடந்தது?'' என்று கேட்டார்.

அவர் முகத்திலும் ஒரு கலவரமான முகபாவம் தெரிந்தது.

''பெரியக்கா...'' என்று இவள் ஆரம்பித்தாள்.

''இதப்பாரு... அந்தப் பையன் அங்க வந்தானா?'' என்று கேட்டார், அவர் அழுத்தமான குரலில்.

அவள் மேலும் இறுமாகத் தலையை ஆட்டினாள்.

''எதுக்கு வந்தான்?'' என்றார் அவர்.

''தெரியல... ஆனா, என்னைப் பார்க்க வரலை...'' என்றாள் ஜெயந்தி.

''பின்னே?'' என்று அவள் ஆரம்பிக்க... பழி தன்னோடு போகட்டும் என்று நினைத்தாளோ என்னவோ... ''பெரியக்கா... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க. எந்த தப்பும் நடக்கல. நான் ஆக்கவலா அந்த பிரபாகரன்கிட்ட சண்டை போடத்தான் போனேன்'' என்றாள்.

''எதுக்கு சண்டை போடணும்?'' என்று கேட்டார் ரத்தினாம்மாள்.

சட்டென்று விடையைச் சொல்லிவிடலாமா என்று நினைத்தாள். ஆனால், இன்னொரு பக்கம் மாலதியினுடைய அச்சம் தோய்ந்த முகம் தெரிந்தது. அவள் பாவம், கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் போய்க்கிட்டிருக்காள்.

அவளுடைய பேரையும் கெடுத்துவிட்டு அவளுக்கு அந்த வாய்ப்பும் கிடைக்காதபடி செய்துவிடக்கூடாது என்று நினைத்தபடி ''இல்லைங்கக்கா... அன்னிக்கு வீட்டுக்கு வந்தான். இன்னிக்கு நானும் மாலதியும் போய்க்கிட்டிருந்த போது வழியிலே குறுக்கிட்டு கையைக் காட்டி நிறுத்திப் பேசினான். இந்த மாதிரியெல்லாம் தொந்தரவு பண்ணாதே அப்படீன்னுதான் நான் சொல்லிக்கிட்டிருந்தேன். அந்த நேரத்தில இவங்க வந்தாங்க. பார்த்துட்டாங்க'' என்றாள்.

இவள் சொன்னதைக் கேட்டு ரத்தினாம்மாள் முகத்திலே ஒரு நம்பிக்கையின் அடையாளமே தோன்றவில்லை. அவளுக்கே சந்தேகம் போல தோன்றியது.



''இல்லை, திடீர்னு இன்னிக்கு கம்ப்யூட்டர் கிளாஸுக்கு போறேன்னு ஆரம்பிச்சயே...'' என்று முணுமுணுத்துக் கொண்டே இடத்தை விட்டு நகர்ந்து சென்றார்.

அப்போதுதான் ஜெயந்திக்குப் புரிந்தது. வழக்கமில்லாத வழக்கமாக தான் வெளியே போக வேண்டும் என்று கேட்டதை இவர்கள் பிரபாகரனை சந்திக்கப் போவதாக எடுத்துக் கொண்டார்களோ. இது என்ன அநியாயமாக இருக்கிறது என்று அவள் மனத்திலே எத்தனையோ கேள்விகள் எழுந்தன.

ஏதோ ஒரு பெரிய குற்றவாளியைப் போல தன்னை அவர்கள் நினைப்பதாக உணர்ந்தாள். அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

சரி, ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்றால், இந்தப் பெரியவர்கள்... மூத்த பெண்கள் தன்னை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டு ஏதோ ஒருவிதத்தில் தனக்கு ஆறுதலாக இருப்பார்கள் என்று அவள் எண்ணியதற்கு மாறாக அத்தனை பேரும் பயந்து நடுங்குகிறாற்போல அவளுக்குத் தோன்றிது.

நேராக அவள் சமையல் அறைக்குப் போனாள். ''இப்படித்தான் இந்த வீட்டில் நடக்குமா?'' என்று கேட்டாள்.

''எப்படித்தான் என்ன நடக்குது?'' என்று கேட்டார் மாணிக்கத்தம்மாள்.

''ஒரு பக்கத்து நியாயத்தைத்தான் கேட்பீங்களா? இன்னொரு பக்கத்துல என்ன நடந்ததுன்னு கேட்க மாட்டீங்களா?'' என்று கேட்டாள்.

அவர்கள் எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு ரத்தினாம்மாள் சொன்னார்.

''ஜெயந்தி! அடிப்படையில் நீ ஒண்ணு புரிஞ்சுக்கோணும். காலாகாலத்துக்கும் நாம ஒரு குடும்பத்துக்கு கட்டுப் பட்டவங்க. அந்த குடும்பத்தோட மான அவமானம் நம்மளோடது. அதைக் காப்பாத்த வேண்டிய கடமை நம்மளோடது. அப்படி இருக்கும்போது எல்லாரும் பெரியவங்களுக்குக் கட்டுப்படத்தான் வேணும்'' என்றார்.

உடனே ஜெயந்தி கேட்டாள்.

''அப்படி நான் கட்டுப்படாம என்ன செஞ்சேன்?'' என்றாள்.

''என்ன செஞ்சேன்னு உனக்கே தெரியும். எதெல்லாம் இந்த வீட்டு வழக்கமில்லையோ, அதெல்லாம் இந்த வீட்ல ஆரம்பிச்சா பெரியவங்களுக்குப் பிடிக்காதுதானே!'' என்றார் மாணிக்கத்தம்மாள்.

அதற்குள்ளாக வித்யாவதி இடையிலே புகுந்து, ''பாரு ஜெயந்தி! எப்படியிருந்தாலும் இன்னிக்கு சாயந்தரம் அண்ணன் உங்கிட்ட கேட்கப் போறாங்க. பெரியவரு. நீ அதுக்கு தகுந்த பதில் தயாரிச்சு வச்சுக்கணும். இல்லைன்னா, கஷ்டம்தான்'' என்றார்.

அவள் சட்டென்று முகத்தைத் தூக்கிக்கொண்டு தன்னுடைய அறைக்குப் போய் விட்டாள்.

கொஞ்ச நேரத்திலேயே ரத்தினாம்மாள் வந்தார். ''இந்த குடும்ப வழக்கமெல்லாம் பிடிபடறதுக்கு கொஞ்ச நாள் ஆகும். ஆனா, அதுக்காக வயத்தக் காயப்போடக்கூடாது. சாப்பிடு'' என்று அவளைச் சாப்பிட வைத்தார்.

அன்று மாலை வரை சாப்பாடு, காபி, டிபன்... இதெல்லாம் சரியாக நடந்தது.

ஆனால், யாருமே அவளைப் புரிந்துகொண்டவர் களாகவோ அவள் மீது சற்றும் அனுதாபம் காட்டுப வராகவோ அவளுடைய நியாயம் என்ன... அவளுடைய





பக்கம் என்ன என்று கேட்பவர்களாகவோகூட இருக்க வில்லை.

அந்த கணத்தில் ஜெயந்திக்கும் தோன்றியது. இவர் களுக்குப் புரியாது. புரிய வைக்கவும் முடியாது. அதற்கான முயற்சி எடுப்பதே வியர்த்தம் என்று தோன்றியது.

அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டு ஆழ்ந்து யோசித்தபடி அமர்ந்திருந்தாள்.

எப்போதுமே இதற்குள்ளாக பாலகுமாரனிடம் இருந்து ஒரு மூன்று நான்கு அழைப்புகளாவது வந்து விடும். அழைப் புகளும் வரவில்லை. அதுவேறு அவளுக்கு உறுத்தலாக இருந்தது. மறுபடியும் மறுபடியும் அவள் மனத்தில் இந்த திருமணம் இல்லைன்னு யார் கேட்டார்கள் என்ற எண்ணம்தான் தோன்றியது.

இதற்கெல்லாம் காரணமான அந்தப் பிரபாகரன் மட்டும் இடைத்தால்... இன்னும் கோபம் பொங்கியது.

அப்போதுதான் இந்த எண்ணம் தோன்றியது. பிரபாகரனை ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும். அப்படியே பிரபாகரன் தன்னை மிரட்டுவதாக வைத்துக் கொண்டாலும் அதற்கான காரணம் ஒன்று இருக்கிற தல்லவா? அந்தக் காரணத்துக்காகத்தானே பயப்பட வேண்டியதிருக்கிறது.

அந்தக் காரணத்துக்கே நாம் இன்றைக்கு முடிவு கட்டிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அதற்குபிறகு மனம் தெளிவாகியது. சரி, வரட்டும். என்ன செய்வார்கள். கேள்வி கேட்பார்கள். எல்லாரும் சுற்றி நின்ற கொண்டு கேள்வி கேட்பார்களா? கேட்கட்டுமே. நானு பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பது போ வீம்பாகத்தான் முகத்தை வைத்துக் கொண்டாள்.

வீம்பாக வைத்துக் கொண்டது மட்டுமல்ல... அந்த முடிவிற்குப் பிறகு அவள் எழுந்து சாதாரணமாக எழுந்து நடமாடவும் ஆரம்பித்தாள். அவளது இந்தச் செயல் அந்த வீட்டிலே ஒரு புதுமையாகத் தோன்றியது போலும்.

அந்த வீட்டு மூத்தப் பெண்கள் எல்லாம் ஒருவரையொருவர் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டார்கள். கொஞ்சம் உள்ளூரப் பயந்தவர்களாகவும் இருந்தார்கள்.

வரட்டும் அந்த நேரம் என்று காத்துக்கொண்டிருந்தாள் ஜெயந்தி. அந்த நேரம்தான் இப்போது வந்திருக்கிறது. அந்த நேரத்துக்காக காத்திருந்தவள்தான் தன்னுடைய கணையை எடுத்து வீசுவதற்காக அத்தனை பெருக்கும் நடுவிலே தயாராக காத்துக் கொண்டிருந்தாள். இதோ கணை புறப்பட்டு வந்தே விட்டது.

## அத்தியாயம் 13

**கேள்விகளுக்காகக்** காத்துக் கொண்டிருந்தாள் ஜெயந்தி.

கோவிந்தசாமி தனது கணீரென்ற குரலிலே கேட்டார்.

"என்ன அம்மணி. அந்த பிரபாகரன் யாரு? நம்ம வீட்ல பொதுவா வயசுப்புள்ளைகளைப் பார்க்கறதுக்கு பசங்கெல்லாம் வர்றது வழக்கமில்ல. ஏதோ கல்யாண வீட்ல பார்த்தே... பேசனே. அந்த மட்டோடு விட்டுட்டு வர்ற வேண்டியது தானே. அவன் எதுக்காக வீட்டுக்கெல்லாம் வர்றான்?" என்றார்.

ஜெயந்தி பணிவாகவே ஆரம்பித்தாள்.

"பெரியத்தான். நான் கண்டிப்பா அவர வரச்சொல்லலை. கல்யாண வீட்ல பார்த்துப் பேசினாப்பல... ஆனா, திடீர்னு எப்படியோ வீட்டைக் கண்டுபுடிச்சு வந்தாப்ல" என்றாள்.



பெரியவர்களெல்லாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அது சரி. எதுக்காக வீட்டைக் கண்டுபுடிச்சு வரணும்?" என்று கேட்டார் கோவிந்தசாமி.

"அதான் எனக்குத் தெரியாதுன்னு சொல்றேனே. நான் வரச்சொல்லலை. அந்த ஆள் வந்ததையும் விரும்பல" என்றாள் ஜெயந்தி.

பேசிக்கொண்டே திரும்பி பாலகுமாரனைப் பார்த்தாள். பாலகுமாரனிடம் ஒரு ஆதரவான பார்வையாவது இருக்குமா என்று அவள் மனம் ஏங்கியது. ஆனால், அவனோ உனக்கும் எனக்கும் தொடர்பில்லை என்பதுபோல ஒரு விட்டேற்றியாக முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

ஜெயந்தியின் கண்கள் அவனிடம் கேள்வி கேட்டன. 'இப்படி உங்கள் மனைவியை நிறுத்தி வைத்துக்கொண்டு விசாரணை செய்கிறார்களே... இது உங்களுக்கு அவமான மாக இல்லையா?' என்று கெஞ்சாமல் கெஞ்சின.

பாலகுமாரனுக்கு அது புரிந்ததோ இல்லையோ... அல்லது புரிந்தும் புரியாதது போல நடந்துகொண்டானோ என்னவோ... எதையும் காட்டிக் கொள்ளாமல் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டான்.

"பார் அம்மணி. அந்த பிரபாகரன் விடு தேடி வந்தது மட்டுமில்லாம வழியில வச்சு உங்கிட்டே பேசியிருக்கான். நீ மட்டுமில்லாம மாலதியையும் அப்ப வண்டியில கூட்டிட்டுப் போயிருக்கே. இந்த தெருக்காரங்க எல்லோருக்கும் நம்ம குழந்தை குட்டிகளைப் பத்தி தெரியும். அந்தப் பொண்ணு நாளைக்கு கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு. அப்படியிருக்கப்போ... நீ போய் இப்படிப்

பசங்ககிட்ட பேசிக்கிட்டு இருந்தின்னா... நம்ம குடும்ப கௌரவம் என்ன ஆகறது?'' என்று கேட்டார் கிருஷ்ணசாமி.

ஜெயந்தி மிகப் பரிதாபமாக அவருடைய முகத்தைப் பார்த்தாள்.

திரும்பி மாலதியைப் பார்த்தாள். அக்கா, வேண்டாம் என்பது போல கெஞ்சுவது போல பார்த்தாள்.

சரி, பழி தன்மீதே வரட்டும் என நினைத்தவளாக, ''நான் தான் சொல்றேனே... அந்த ஆள் தேவையில்லாம விட்டுக்கு வந்தாரு. வழியில நின்னு நான் வருவேனான்னு பார்த்துக்கிட்டிருக்காருன்னு மாலதி சொன்னாள். அதனாலதான் நானே வர்றேன் கூடன்னு சொல்லி நேரடியாகப் போய், இனிமேல் இப்படிப் பெண்கள் போற வழியில எல்லாம் நின்னுக்கிட்டு தொல்லை குடுக்காதீங்கன்னு சொல்றதுக்காகத் தான் போனேன்'' என்றாள்.

''ஓகோ... இதுவேற நடந்துச்சோ...'' என்றார் ஜெகந்நாதன்.

''ஆமாம். மாலதிகிட்ட நேற்று அவர் பேசியிருக்காரு'' என்றாள் ஜெயந்தி.

உடனே எல்லோரும் மாலதியைப் பார்த்தார்கள். மாலதி வெலவெலத்துப் போனாள்.

''எதுக்கு மாலதியை எல்லாரும் குத்தவாளியாப் பார்க்கறீங்க. நானே சொல்றேன்... என்ன நடந்தது அப்படீன்னு...'' என்றாள் ஜெயந்தி.

திரும்பவும் எல்லாரும் திரும்பி இவளைப் பார்த்தார்கள். ஜெயந்தி அப்போது, ''மாலதியை வழியில மறிச்சு ஜெயந்திகிட்ட நான் பேசணும்னு கேட்டிருக்காரு. அதனாலதான் நான் போனேன். இன்னிக்கு 'எதுக்காகப் பேசணும். என்னத்தப் பேசணும். உங்ககிட்ட பேசறதுக்கு எனக்கு ஒண்ணும் இல்ல. இனிமேல் வந்து என்னைத்



தொல்லை பண்ணாதீங்க' அப்படீன்னு சொல்றதுக்காகத் தான் போனேன்'' என்றாள்.

ஆண்கள் எல்லோரும் நம்பாதவர்கள் போல் அவளைப் பார்த்தார்கள்.

''ஏன் அம்மணி! இதை நீ எங்ககிட்ட சொல்லியிருக்கலாம்ல... இந்த மாதிரி அந்தப் பையன் எனக்குத் தொல்லை குடுக்கிறான். தயவுசெய்து இனிமேல் தொல்லை கொடுக்காமல் இருக்க ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க. அப்படீன்னு சொல்லியிருக்கலாம்ல'' என்று கேட்டார்கள்.

ஜெயந்தி மறுபடியும் அவர்களை ஒரு கையாலாகாத பார்வை பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''சொல்லியிருக்கலாம். ஆனா... உங்களுக்குத் திமுர்னு கோபம் வந்து இத வேற மாதிரி... அடிதடின்னு ஆரம்பிச்சுட்டா என்ன பண்றதுன்னு எனக்குப் பயமாப் போச்சு'' என்றாள்.

அதற்கு அவர்கள் அமைதியாக உட்கார்ந்து கொள்ள, கோவிந்தசாமி மட்டும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு ''அதுவும் இருக்குது...'' என்று இழுத்தார்.

''அதனாலதான் சொல்லல'' என்றாள்.

ஆனால், நாராயணசாமி மட்டும் ஆழமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையின் வீச்சு கொஞ்சம் ஜெயந்தியை அசைத்துதான் பார்த்தது.

''ஏன் அம்மணி. நீ சொல்றதெல்லாம் உண்மைதானே. அதுல எந்த மாற்றமுமில்லையே'' என்று கேட்டார் நாராயணசாமி.

''நான் சொல்றதெல்லாம் உண்மைதான். நான் சொல்லாத உண்மையும் இருக்கு. அதையும் சொல்லிடறேன்'' என்று நிமிர்ந்தாள்.

''அது என்னம்மணி...'' என்று கேட்டார் கிருஷ்ணசாமி.

"எங்க வீட்ல இந்த குடும்பத்தோட சம்பந்தம் செஞ்சபோது ஒரு உண்மையை மறைச்சுட்டாங்க" என்றாள்.

அங்கே திடீரென்று ஒரு அதிர்ச்சியான அமைதி நிலவியது. எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இந்தப் பெண் எந்த குண்டைத் தூக்கிப் போடப் போகிறாளோ என்பது போல எல்லோருக்கும் உள்ளாக ஒரு கலவரம் தோன்றியது போலும்.

ஜெயந்தி அசராமல் அவர்களைப் பார்த்தாள். பிறகு தனது கம்பீரம் குறையாமல் சொன்னாள்.

"நான் வெறும் ப்ளஸ் டூ முடிச்சதா உங்ககிட்ட சொல்லியிருக்காங்க. ஆனால், உண்மையிலே நான் காலேஜ் படிச்சுருக்கேன்" என்றாள்.

இளைஞர்கள் முகத்தில் ஒருவிதமான புன்னகை தோன்றியது. இது என்ன பெரிய விஷயம் என்பது போல. ஆனால், அதற்குப் பிறகு ஜெயந்தி படபடவென்று கொட்டிய வார்த்தைகள்தான் அங்கே பெரிய ஒரு அலையைக் கிளப்பியது என்று சொல்லலாம்.

"எங்க அப்பா அம்மாகிட்டே சொன்னேன். இப்படியெல்லாம் மறைக்க வேண்டாம் அப்படீன்னு. அதனால வந்த வினைதான் இத்தனையும். ஆனா, அவங்க அப்ப சொன்னாங்க, 'குடும்பத்துல பெரிய படிப்பு படிச்ச பொண்ணு வேண்டாம்னு நினைக்கிறாங்க. அதனாலதான் நீ காலேஜ் படிச்ச விவரத்தையெல்லாம் நாங்க மறைக்கிறோம்' அப்படீன்னு சொன்னாங்க. 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை பண்றது வழக்கம்தான். நீ போய் நல்லவிதமாக நடந்துகிட்டேன்னா அவங்க திருப்தியானதுக்கப்புறம் ஒரு நாள் உண்மையைச் சொல்லிக்கலாம்' அப்படீன்னு சொன்னாங்க. அத நம்பிதான் இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்" என்றாள்.



ஜெயந்தி மேலும் தொடர்ந்தாள்...

"ஆனால், அந்த ஒரு பொய்தான் இப்போது வினையாப் போச்சுன்னு புரியுது. ஏன்னா... பிரபாகரன்கிட்ட கல்யாண வீட்ல உளறிட்டேன். 'என் அம்மா அப்பா நான் காலேஜ்ல படிச்ச விஷயத்தை புகுந்த வீட்ல சொல்லலை. தயவுசெய்து அதைச் சொல்லிடாதே...' அப்படீன்னு ரிக்வெஸ்ட் பண்ணிக்கிட்டேன். அதனால விளைஞ்ச வம்புதான் இது" என்றாள்.

எல்லோரும் இவள் பேசுவதை அதிர்ச்சிகரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாலும் பாலகுமாரன் முகத்தில் மட்டும் அந்த அதிர்ச்சி எதுவும் தோன்றாமல் இருப்பதையும் அவள் கவனித்துக் கொண்டாள்.

"அந்தப் பிரபாகரன் என்ன காரணத்துக்காக வந்தான் என்பது தெரியாது. ஆனா... அவன் இதை ஒரு பெரிய விஷயமா வச்சுக்கிட்டு என்னை பிளாக்மெயில் பண்றமாதிரி நான் விரும்பாதபோதும் இந்த வீட்டுக்கு வந்தான். வழியில வச்சு மாலதிகிட்ட பேசியிருக்கான். ஏதோ ஒரு விஷயம் அவன் கையில கிடைச்சதனாலதானே என்னை அங்கங்க மிரட்டிக்கிட்டு இருக்கான். அதான் நான் இந்த விஷயத்தைச் சொல்லிட்டேன்" என்றாள்.

மறுபடியும் அங்கே அமைதி நிலவியது.

இத்தனைக்கும் நடுவில் ஒரு விஷயம் உண்மையாகவே ஜெயந்திக்குப் பிடித்திருந்தது. அவளை ஆச்சரியப்பட வைத்தது. அவர்கள் யாரும் கசகசவென்று பேசவில்லை. முக்கியமான விஷயத்தை கோவிந்தசாமி மட்டு பேசினார்.

அவர் பேசினால் சரி என்பது போல மற்றவர்கள் எல் அமைதியாக அமர்ந்து கொண்டிருந்தார்கள். அ கட்டுப்பாடு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், அந்த கட்டுப்பாட்டுக்குள்ளே ஒரு கட்டுப் பெட்டிக்கனம் இருப்பது போல அவனுக்குப் பட்டது.

இதுவரைக்கும் பேசிய அதே கம்பீரக் குரலில் தொடர்ந்து நேராக கோவிந்தசாமியின் கண்களைப் பார்த்தபடி அவன் கேட்டாள்.

"எங்க பெரியத்தான்! பட்டப்படிப்பு படிக்கறது என்ன அவ்வளவு பெரிய பாவமா? கொஞ்சம் பெண்கள் அறிவோட இருக்கறது அவ்வளவு பெரிய பாவமா?" என்று கேட்டாள்.

அவர் கொஞ்சம் திகைத்துப் போய்தான் அமர்ந்திருந்தார்.

அவளே தொடர்ந்து பேசினாள்...

"நான் இங்க கல்யாணமாகி இங்கே வரும்போது எங்க வீட்ல எங்க அம்மா அப்பாவுக்கு ரொம்ப பெருமை. என்னா... உடம்பு நிறைய நகையும் நல்ல துணிமணியும் கார்ல போக்குவரத்துமா இருப்பேனே... அதுதானே வாழ்க்கையினோட சாதனை அப்படீன்னு அவங்க நினைச்சாங்க. ஆனா, அதுக்கு மேல ஒரு விஷயம் இருக்கு அப்படீங்கறது அவங்களுக்கும் புரியலை. உங்களுக்கும் புரியலை" என்றாள்.

இளைய திலகங்களெல்லாம் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருக்க... பெரியவர்கள் எல்லாம் அதிர்ச்சியாகப் பார்த்தார்கள்.

"இங்கே வந்த கொஞ்ச நாள்லேயே எனக்கு ஒரு விஷயம் புரிஞ்சது. நீங்க இந்த குடும்பத்துக்கெல்லாம் பெண்கள் தேடலை. குடும்பத் தலைவிகளைத் தேடலை. அடிமை களைத் தேடியிருக்கீங்க. எப்படிப்பட்ட அடிமைங்க... இந்தா இந்த பெரியக்கா இருக்காங்களே... இத்தனை வருஷமா... கிட்டத்தட்ட இருபத்தேழு வருஷமா சமையல்கட்ல காலையில இருந்து சாயங்காலம் வரைக்கும் என்ன



சமைக்கலாம்னு இட்டம் போடறது. சமைச்சு குடுக்கறது. குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்பறது. எந்த விஷயத் திலும் தனக்குன்னு ஒரு கருத்து வச்சுக்காம, நீங்களெல்லாம் என்ன சொல்றீங்களோ அதுக்கு அப்படியே தலையாட்டறது. தங்களுக்குன்னு விருப்பு வெறுப்பு வச்சுக்காம... ஏதோ நாலு இடத்துக்கு நகையைப் பூட்டிட்டு பொன் விலங்கு பூட்றமாதிரி பூட்டிட்டு பதினஞ்சாயிரம் ரூபாய் பட்டை கட்டிட்டுப் போயிட்டு வர்றதுதான் வாழ்க்கைன்னு நினைச்சுட்டு இருக்காங்களே... அப்படிப் பெண்களைத் தான் தேடி இருக்கீங்க, இட்டம் போட்டு. ஏன்னா... அப்பதான் அவங்க கேள்வி கேட்க மாட்டாங்க. இல்லையா பெரியத்தான்" என்றாள்.

கோவிந்தசாமி திகைத்துப்போய் அமர்ந்திருக்கையில், "ஏய்!" என்று எழுந்தான் பாலகுமாரன்.

அவள் இடக்கையை உயர்த்தினாள்.

"இந்த குடும்பத்துல இதுவரை யாரும் இப்படிப் பேசலை. எப்படியோ என்னை நடுவில நிறுத்தி... குற்றவாளி கூண்டிலே நிறுத்துற மாதிரி நிறுத்தி புலன்விசாரணை நடத்திட்டீங்க. எனக்கு எவ்வளவு வேதனை தரும்னு உங்களுக்கு கொஞ்சம்கூட தோணலை. இப்படித்தான் இதுவரைக்கும் நடந்திருக்கும் போலிருக்கு. தயவுசெய்து பெரியவங்க என்னை மன்னிக்கணும். நான் இப்படி கேள்வி கேட்கிறேன் அப்படீன்னு கோவிச்சுக்காதீங்க. ஆனா, இப்படி கேள்வி கேட்பதற்கான உரிமைகளை பெரியவங்க குடுக்கணும். இப்படிக் கேள்வி கேட்பதற்கான சிந்தனை சின்னவங்களுக்கு வரணும். அதுக்கப்புறம் பெரியவங்க அறிவுபூர்வமாக விளக்கம் சொல்லணும். இதை சின்னவங் கேட்டு நடக்கணும். அப்படி இருந்தா அது நியாயம் கேவலம் ஒரு வயசுப் பையன் ரெண்டு தடவை சந்தி சுட்டாங்கறதுக்காக என்னை நடுவில நிறுத்தி விசாரிப்பீ

அப்பாவண்ணா... என்னைப்பத்தி என்ன தெரிஞ்சு இந்த வீட்டுக்கு கொண்டு வந்தீங்க. என் மீது என்ன நம்பிக்கை வச்சருக்கீங்க?'' என்று கேட்டாள்.

பாலகுமாரன் கூட திகைத்துப்போய் நின்றான்.

அவள் திரும்பி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''இந்த வீட்ல எல்லாரும் நான் டிகிரி முடிச்சருக்கேன்னு சொன்னதும் அதிர்ச்சியாப் பார்த்தாங்க. ஆனா, நீங்க மட்டும் எந்த அதிர்ச்சியையும் காட்டாமல் உட்கார்ந்துட்டிருந்தீங்க. அப்போ இந்த விஷயம் உங்களுக்குத் தெரிஞ்சுருக்கு, இல்லையா?'' என்று கேட்டாள்.

பாலகுமாரன் இதை எதிர்பார்க்காமல் திகைத்துப்போய் நின்றான்.

அவள் மேலும் தொடர்ந்தாள்...

''அப்போ உங்களுக்குத் தெரிந்தும் நீங்க ஏன் மறைச்சீங்க?'' என்று கேட்டாள்.

அப்போதுதான் பாலகுமாரன், தனது சகோதரனைப் பார்த்து, ''ஆமாண்ணா! எனக்குத் தெரியும்'' என்றான்.

கோவிந்தசாமி அதைவிட அதிர்ச்சியாக பார்த்தார்.

''இல்லை, நீங்க ஓரளவுக்கு படிச்ச பொண்ணுங்களத்தான் தேடுவீங்க. ஆனா, எனக்கு ஜெயந்தியை கல்யாண வீட்ல பார்த்து புடிச்சது. அதனாலதான் அவ அம்மா அப்பாகிட்ட சொல்லி நான்தான் மறைக்கச் சொன்னேன்'' என்றான்.

கோவிந்தசாமி சுத்தமாக அதிர்ந்துபோனார்.

''அண்ணா! என்னை மன்னிச்சுருங்க'' என்று பாலகுமாரன் ஆரம்பிப்பதற்குள்ளாக அவர் தனது வலது கையை உயர்த்திவிட்டு, போதும், எல்லாரும் அவங்கவங்க அறைக்குப் போங்க. அப்புறம் பேசிக்கலாம் என்பது போல எழுந்து போய் விட்டார்.



ஜெயந்தி அந்த வீட்டில் அதுவரை நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு நடைமுறையினுடைய அடிப் படையையே தொட்டுவிட்டாள் என்பதும், அது குளத்திலே கல்லைப் போட்டாற்போல வட்டவட்ட அலைகளை எழுப்பப்போகிறது என்பதும் அப்போது அவனுக்குப் புரியவில்லை.

பாலகுமாரன் அவளிடத்தில் நெருங்கி, ''ஜெயந்தி...'' என்று ஆரம்பிக்க... ''அப்புறம் பேசலாம்'' என்று ஜெயந்தி அறைக்குப் போய் விட்டாள்.

இப்போது திகைத்து நிற்பது பாலகுமாரனின் முறை ஆயிற்று.

## அத்தியாயம் 14

மிகவும் தனிமையை உணர்ந்தான் பாலகுமாரன்.

அன்றைக்கு நடு ஹாலில் நிறுத்தி ஜெயந்தியை விசாரித்த அந்த நிகழ்வு நிகழ்ந்து ஒரு வாரம் ஆகியிருந்தது.

அன்றைக்கு இரவே தங்கள் அறைக்கு வந்தவுடனே ஜெயந்தி அவனைக் கேட்ட கேள்விகள் இன்றும் அவன் நெஞ்சில் மோதி அறைந்தன.

''ஏங்க, அப்போ இத்தனை நாளா இந்த விஷயம் தெரிஞ்சிருக்கு'' என்றாள் காட்டமாக.

''எந்த விஷயம்?'' என்றான் அவன், சமாளிப்பதற்குத் தயாரானவன் போல.

''நான் காலேஜ்ல படிச்சிருக்கேன் என்கிற விஷயம் தான்'' என்றாள்.

''ஆமாம்'' என்றான் பாலகுமாரன் குரலே எழும்பாமல்.

இந்த அரை மணி நேர இடைவெளியிலே அவள் தன் பெற்றோருடன் பேசி இன்னொன்றையும் கண்டுபிடித்து வைத்திருந்தாள்.

முதலில் அனுமானத்தில் கூறிய அந்த வார்த்தைகள்தான் உண்மை என்பதை இப்போது அவன் ஆதாரத்துடன் தெரிந்து வைத்திருந்தான்.

பாலகுமாரனுக்கு அவளைப் பிடித்துப் போனதால் அந்த விஷயத்தைச் சொல்ல வேண்டாம் என்று உண்மையாகவே பெற்றோரிடம் சொல்லியிருக்கிறான் என்பது புரிந்தது.

ஏதோ தன்னைக் காப்பாற்றுவதற்காக சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல அவை என்று அவளுக்குத் தெரிய வரவும், அவள் உள்ளத்தில் ஒரு வெறுமை தோன்ற ஆரம்பித்து இருந்தது.

கண்களில் வெறுமை நிரம்பியிருக்க அவளைப் பார்த்துக் கேட்டான்.

"ஏங்க இந்த உண்மை தெரிஞ்சுதான் பிரபாகரன் என்னை பிளாக் மெயில் பண்ற மாதிரி பேசிக்கிட்டு இருந்தான். அவனை சமாளிப்பதற்காக நான் ரொம்பவும் கஷ்டப்பட வேண்டியதிருந்தது. இத்தனை நடந்த பிறகும் உன் பிரச்னை என்ன அப்படீன்னு நீங்க கேட்டீங்களா?'' என்று கேட்டாள்.

பாலகுமாரன் வெடித்து எழுவான் என்று எதிர்பார்த்த தற்கு மாறாக அவன் நீண்டதொரு பெருமூச்சுடன் அதை உள்வாங்கிக் கொண்டான். பிறகு சொன்னான்.

''இதப்பாரு ஜெயந்தி! நான் எனக்குத் தெரியுங்கிறதா கொஞ்ச நாள்ல உங்கிட்ட சொல்லிடலாம் அப்படீன்னு தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா, பிரபாகரன்கிட்ட இதை உளறிக் கொட்டியிருப்பேன்னோ அவன் இதைக் காரணமா வச்சுக்கிட்டுதான் உன்னை வந்துவந்து பார்த்து மிரட்டிக்கிட்டிருக்கிறான் அப்படீன்னோ எனக்கென்ன தெரியும்'' என்றான்.



அதில் பாதி உண்மை இருந்தது என்பதையும், மீதி பாதி வேறு விதமான உண்மை என்பதையும் அவளால் அப்போது சொல்ல முடியவில்லை.

தன்னை மட்டும் பார்ப்பதற்காக பிரபாகரன் வரவில்லை என்பதைச் சொன்னால் இந்த வீட்டில் இன்னொரு குழப்பம் உருவாகும் என்பது அவளுக்குத் தெரிந்தது.

ஆனால், அவளது கோபமெல்லாம் இப்போது ஒரே விஷயத்தின் மேல்தான் குவிந்திருந்தது. எல்லோருமாகச் சேர்ந்து ஏதோ ஒரு இளைஞனை இரண்டு முறை சந்தித்து பேசியதாலேயே தன்மீது அவநம்பிக்கை கொண்டது மட்டுமல்லாமல், தன்னுடைய ஒழுக்கத்தையே சந்தேகிப்பது போல பேசிவிட்டார்களே என்பதுதான் அவளுக்கு ஆழ்ந்த வருத்தத்தை தந்தது.

அவள் பாலகுமாரனிடம் கேட்டாள். ''ஏங்க! உங்களுக்கு உங்க வொய்ஃப்பை நிறுத்திவச்சு கேள்வி கேட்கிறாங்க... அப்படீங்கறதுல ரோஷமே வரலையா?'' என்று கேட்டாள்.

பாலகுமாரன் லேசாகத் திகைத்துப் போனாற்போல தோன்றினாலும், ''ரோஷம் வந்தது. ஆனால், நீயும் அவர்களது கேள்விகளுக்கு ஏத்தமாதிரிதானே நடந்துகிட்டே'' என்றான்.

''விஷயமே என்னை மீறிக்கூட நடந்திருக்கலாம் அப்படீங்கறது தோணவே இல்லையா?'' என்றாள் அவள்.

''இல்லையே... ஒவ்வொரு தடவையும் நீ சொன்ன விளக்கங்கள் அப்படியொரு சிந்தனையைக் குடுக்கற மாதிரி இல்லையே. அதுக்கான வாய்ப்பே நீ குடுக்கலையே'' என்றான் பாலகுமாரன்.

அதற்குப்பிறகு முகம் வாடிப்போனவளாக சற்று நேரம் அமைதியாக அமர்ந்து கொண்டாள் ஜெயந்தி.

இவள் படபடவென்று பேசினாலேயே தேவலை என்பது போல பாலகுமாரனுக்குத் தோன்றியது.

"ஜெயந்தி!" என்றான் மெல்லிய குரலில்.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

அவங்க கேள்வி கேட்டதுகூட வலியைக் கொடுக்கலைங்க. "எனக்கு உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லாம போச்சே என்பதுதான் என் மனசுல பெரிய வலியை ஏற்படுத்தியிருக்கு. இட்ஸ் நாட் ஏ மேட்டர் ஆஃப் கோஸ்டின்ஸ். இட்ஸ் தி மேட்டர் ஆஃப் பிலீவ்" என்றாள் அவள்.

அவன் அவளைப் பார்த்தான். அவனிடத்திலே அதற்கான பதில் இல்லை. அவள் கேள்வியில் இருந்த வீரியம் அவனைத் தாக்கியது.

பாலகுமாரன் அதை வேறுவிதமாகக் கையாள ஆரம்பித்தான்.

"என்னவோ இருக்கட்டும் ஜெயந்தி. ஆனா, நீ எங்க அண்ணனைப் பார்த்து அந்த மாதிரி கேள்விகளையெல்லாம் கேட்டிருக்கக் கூடாது" என்றான்.

"ஏன் கேட்கக்கூடாது. அவங்களோட உண்மையான நோக்கமே அதுதானே. இப்ப போய் அங்க என்ன பேசிக்கிட்டு இருக்காங்கன்னு கேட்டுப் பாருங்க. என்னைப் பத்திதான் பேசிக்கிட்டிருப்பாங்க. இப்பவும் நான் சொல்றேன். உங்க குடும்பத்தோட நோக்கமே... படிப்பறிவில்லாத பெண்களா பார்த்துக் கொண்டு வருவதன் நோக்கமே அடிமைகளாக வச்சுக்கத்தான். நீங்க வாங்கிக் கொடுக்கிற நகைகளையெல்லாம் பூட்டிக்கிட்டு, நீங்க வாங்கிக் குடுக்கற பட்டுப்புடவையைப் போர்த்திக்கிட்டு கார்ல போய் கல்யாணம்... காட்சின்னு உலா வந்துகிட்டு சுயசிந்தனையே இல்லாம இருக்கறதுதான் அழகுன்னு வச்சிருக்கீங்க நீங்க.



அவங்களுக்கும் ஒரு சிந்தனை இருக்கும். விருப்பம் இருக்கும் அப்படீங்கறது இன்னிக்கு வரைக்கும் உங்களுக்குத் தோணலையே" என்றாள்.

"இதான். இந்த படிச்ச பொண்களைக் கல்யாணம் பண்றதுதால வர்ற விவகாரம்" என்றான் பாலகுமாரன்.

"இஸ் இஸ் கால்டு டைவர்டிங்... நீங்க டைவர்ட் பண்றீங்க. என் கேள்விக்கு பதில் சொல்லலை. என் கேள்விக்கான பதிலைச் சொல்லுங்க" என்றாள் ஜெயந்தி.

"இதப்பாரு ஜெயந்தி. இதுநாள் வரைக்கும் இந்த வீட்ல இதுதான் வழக்கமா இருந்துருக்கு. இதை நாங்க யாரும் கேள்வி கேட்டதில்லை. இன்னொரு விதமா வேணும்னா யோசிச்சுப் பாரேன். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு... விருப்பம்... தன்னுடையது அப்படீன்னு ஆரம்பிச்சா குடும்பங்கிற ஒண்ணு எப்படி இருக்கும். ஹஸ்பெண்ட் ஒருபக்கம், வொய்ஃப் ஒரு பக்கம்னு போயிட மாட்டாங்களா?" என்றான்.

ஜெயந்தி ஒருவிதமான கசப்பான புன்னகை ஒன்றை உதிர்த்தாள்.

"ரொம்ப அருமையான தப்பித்தலுங்க இது. ஆண்களுக்கு மட்டும் விருப்பு வெறுப்பு இருக்கலாம். ஆனா... பெண்களுக்கு இருக்கக்கூடாது. இல்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம்... யாராவது ஒருத்தர் விட்டுக் கொடுத்தால்தான் குடும்பம் நடத்த முடியும்" என்றான் பாலகுமாரன்.

"ம்... இங்கதாங்க தப்பு பண்றீங்க. ஏன் இரண்டு பேரும் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாது? ஏன் இரண்டு பேருடைய அடிப்படையான விருப்பங்களை நிறைவேத்திக்கக் கூடாது? அந்த ஆங்கிள்ல யோசிக்கவே மாட்டீங்களா?" என்றாள்.

''என்னமோ எப்படியோ ஒரு பெரிய குழப்பத்தை இந்த வீட்ல ஆரம்பிச்சு விட்டுட்டா. இனி அது எங்கெங்கு போய் முடியுமோ'' என்ற பாலகுமாரன், ''இப்ப பேசினா பிரச்னை தான் வளரும். நாம கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறம் பேசலாம்'' என்று சொல்லி விட்டான்.

அவளுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் ஒருபக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு படுத்து விட்டான். அவளும் இன்னொரு பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு படுத்து விட்டாள்.

காலையில் எழுந்து பார்க்கும்போது பாலகுமாரன் அதிர்ந்து போனான். ஏனென்றால், ஜெயந்தி அங்கே இல்லை. பதிலாக ஒரு கடிதம் இருந்தது. அந்த கடிதத்தை எடுத்துப் படித்தான்.

'அன்புள்ள கணவருக்கு...

நமக்குத் திருமணமாகி சில நாட்கள்தான் ஆகியிருக்கிறது. ஆனால், இங்கு அடிப்படையிலேயே எங்கோ கோளாறு இருக்கிறது. என்னுடைய சிந்தனைகள் வேறாகவும் இந்தக் குடும்பத்தினுடைய அடிப்படை எண்ணங்கள் வேறாகவும் இருக்கிறது. என்னால் இந்தக் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்துக்கு நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இல்லையென்றாலும் எப்போதாவது இந்த மாதிரிப் பிரச்னைகள் இந்த வீட்டில் வரத்தான் செய்யும். இதை நான் இப்போது ஆரம்பிக்கவில்லை என்றால் இன்னும் யாராவது... இன்னும் கொஞ்ச நாளிலாவது ஆரம்பிக்கத்தான் செய்வார்கள்.

பெரியவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால், அதே சமயத்தில் ஒரு குடும்பம் என்ற அமைப்பிலே தனிப்பட்ட மனிதர்களுடைய விருப்பங்கள் நசுக்கப்படுமானால், அதுவும் தியாகம் என்ற



பெயரிலே பலி வாங்கப்படுமானால் அங்கே உண்மையான நேசம் இருக்காது.

நான் இப்படித்தான், என்னுடைய சிந்தனைகள் இப்படித் தான் இருக்கும் என்பதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடிந்தால் இன்னொரு நாள் நாம் எங்காவது சந்திப்போம்.

இந்தக் கடிதத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்றிருந்தது.

பாலகுமாரன் திகைத்துப் போனான். அவனுக்கு உள்ளூர ஒரு விஷயம் விளங்கியது.

ஜெயந்தி எழுப்பியிருக்கும் கேள்விகள் சாதாரண கேள்விகள் அல்ல. ஜெயந்தி பிடித்திருக்கிற கொடி ஒரு பெரிய யுத்தத்தின் அடையாளமாக இருக்கிறது. ஜெயந்தியின் கேள்விகளில் உள்ள நியாயங்கள் அவனுக்குப் புரிந்தது.

அதனால்தான் அவளிடத்தில் ஓங்கிப் பேசவும் முடிய வில்லை. இருந்த இந்த கொஞ்ச காலத்தில் அவள் தன்மீது அன்பைப் பொழிந்தாள். தன்னை அப்படியே ஏற்றுக் கொண்டாள்.

ஒரு இளைஞனுக்கும் யுவதிக்கும் இடையிலே நடக்கக்கூடிய எல்லாவித பரிமாற்றங்களையும் அவள் இயல்பாக அவனுக்கு வாரி வாரி வழங்கினாள். ஆனால், பதிலுக்கு அவன் என்ன செய்தான் என்ற யோசனை அவன் மனத்துக்குள்ளே தோன்றியது.

ஒருவேளை சகோதரர்களுடன் தான் அமர்ந்து பே வேண்டிய காலக்கட்டம் வந்துவிட்டதா. இவள் கேட்கின் மாற்றங்கள் எல்லாம் வீட்டில் ஒரே நாளில் நிகழ்ந்து விடும குடும்பத்திலே சிதைவு ஏற்படுத்துமா. இவர்களையெல்ல

விட்டுவிட்டு தன்னால்தான் வெளியே போக முடியுமா என்ற கேள்விகளெல்லாம் அவன் உள்ளத்தில் மோதின.

இழக்கவேண்டியது ஒன்று இருந்தால் அவன் ஜெயந்தியைத்தான் இழக்கத் தயாராக வேண்டும். ஏனென்றால், பெற்றவர்கள் போனதற்குப் பிறகு தன்னை கண்ணும் கருத்துமாய் உயிரைக் கொடுத்து வளர்த்தவர் தன்னுடைய பெரிய சகோதரர். தாயும் தந்தையுமாய் இருக்கிற கோவிந்தசாமியையும் ரத்தினம்மாளையும் மீறி தன்னால் எதையும் செய்ய முடியாது.

மீறிச் செய்வதென்ன... அவர்களை லேசாக புண்படுத்துகிற நோக்கம்கூட தனக்கு இல்லை என்பதை ஜெயந்திக்கு எப்படியாவது புரியவைக்கத்தான் வேண்டும்.

இப்படியெல்லாம் நடக்கும் என்பது தெரிந்திருந்தால் விளையாட்டாக கல்லூரியில் படித்ததை மறைத்திருக்க மாட்டோமே என்று ஏங்கிப் போனான் அவன்.

அறையை விட்டு வெளியே வருவதற்குக்கூட தயங்கிக் கொண்டு... ஜெயந்தி போய்விட்டாள் என்பதை எப்படிச் சொல்வது என்ற தயங்கியபடிதான் வெளியே வந்தான்.

ரத்தினம்மாள் முதற்கொண்டு வழக்கம்போல் சமையல் அறையில் எல்லோரும் வேலையில் இருந்தாலும் எப்போதும் இல்லாத ஒரு அசாதாரண அமைதி நிலவியது.

பெண்கள் எல்லாரும்கூட கொஞ்சம் சிந்தனை வயப்பட்டவர்களாக இருந்தார்கள். ஒருவேளை இத்தனை நாளாக அந்தப் பெண், அவர்களுக்குள் எழும்பாத கேள்விகளையெல்லாம் இந்தப் பெண்ணின் கேள்விக்கணையால் எழும்பிவிட்டனவோ என்று அவனுக்கும்கூட ஒரு கணம் சந்தேகம் தோன்றியது.

"அண்ணி..." என்று போய் நின்றான் தயக்கத்துடன்.

திரும்பி, "என்னப்பா?" என்றார் ரத்தினாம்மாள்.



"ஜெயந்தி இந்த லெட்டரை வச்சுட்டு வீட்டுக்குப் போயிட்டா" என்றான்.

அவர்கள் எல்லோரும் அதிர்ந்துபோய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"படி" என்றார்கள்.

படித்தான். ரத்தினாம்மாள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, "படிச்சபுள்ள... என்னென்னமோ நினைச்சு மனசை குழப்பிக்குது. நீ எதுக்கும் அண்ணன்கிட்ட சொல்லு" என்றார்.

அவன் அண்ணனிடம் போய் விஷயத்தைத் தெரிவித்தபோது, வழக்கமாக இல்லாத முறையில் மிக அமைதியாக இந்த விஷயத்தை வாங்கிக் கொண்டார்.

கிணற்றிலே போட்ட கல்லைப் போல அந்த விஷயம் அந்த வீட்டிலே எல்லாருடைய மனத்தையும் அழுத்திக் கொண்டிருக்க... ஜெயந்தி போய் ஒரு வாரம் ஆகியிருந்தது.

பாலகுமாரன் தனிமையில் துவண்டு கொண்டிருந்தான். ஆனால், மெல்ல மெல்ல ஒரு மௌனப் புரட்சி நடந்து கொண்டிருப்பதை அவன் உணரவில்லை.

அன்றிரவு கோவிந்தசாமியிடம் போய் மாலதி நின்றாள்.

"அப்பா! நான் உங்ககிட்ட பேசணும்" என்றாள்.

அவர் திரும்பி அவள் முகம் பார்த்தார்.

மாலதி பேச ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் 15

கனவுள் கலைந்த போதும்
கண்ணில் நீர் நிறைந்தபோதும்
உணர்வுகள் உடைந்தபோதும்
உள்ளத்தில் உருவம் மட்டும்
உடையவே இல்லை.

கையில் கிடைத்த ஒரு நோட்டுப்புத்தகத்தில் இந்த கவிதையை எழுதிவிட்டுக் கண்ணீருடன் முகத்தை நிமிர்த்தினாள் ஜெயந்தி.

கணவனைப் பிரிந்து வந்து பத்து நாட்கள் ஆகியிருந்தன. பெரிய சூட்கேஸ் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து அன்றைக்கு தன் வீட்டில் வந்து இறங்கியபோது அம்மாவும் அப்பாவும் பதைத்துப் போனார்கள்.

''என்னடி ஜெயந்தி, என்ன ஆச்சு?'' என்றார்கள்.

அவள் அந்த நேரத்திலும் மெல்லப் புன்னகைத்தவாறு, ''என்ன ஆச்சு, உங்க குழந்தை அழுகுது'' என்றாள்.

லட்சுமி கணவனைத் திரும்பிப் பார்த்தார். ''இவளுக்கு இந்த நேரத்துல ஜோக் பாருங்க'' என்றார்.

''ஏன் எந்த நேரத்துல அடிக்கணும். இந்த நேரத்துலதான் அடிக்கணும். அதனால்தான் வள்ளுவர் இடுக்கண் வருங்கால் நகுக... அப்படீன்னு சொல்லியிருக்காரு'' என்றாள் ஜெயந்தி.

அவர்களுக்கு பாவம் அது புரியவில்லை. சொன்னதற்குப் பிறகுதான் அவளுக்கும் உறைத்தது.

''என்னம்மா?'' என்றார், திருமலை கவலையோடு.

''அதாம்...பா... பெரிய சூட்கேஸோடுதானே வந்துருக்கேன். பார்த்தாலே தெரியுதுல்ல. போனா மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோட... என்கிற மாதிரி நானும் திரும்பி வந்துட்டேன்'' என்றாள்.

''என்னம்மா... விளையாடறீயா?'' என்றார் அவர் கோபத்துடன்.

''நான் விளையாடலைப்பா... நீங்க எல்லாரும் சேர்ந்து விளையாடிட்டீங்க. நான் முதல்லேயே அந்தக் குடும்பத்தினுடைய விவரமெல்லாம் சொன்னப்பவே சொன்னேன். வேண்டாம், பொய் சொல்லாதீங்க அப்படீன்னு. இப்ப அந்த ஒரு சின்ன பொய் ஏதோ



விஸ்வரூபம் எடுத்து என் வாழ்க்கையோட விளையாட ஆரம்பிச்சுடுச்சு'' என்று தன் வீட்டில் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னாள்.

லட்சுமி ஓ வென்று அழ ஆரம்பித்து விட்டார்.

''அம்மா! ப்ளீஸ். அழுது ஊரைக் கூட்டாதீங்க. குடும்பப் பிரச்னை குடும்பத்துக்குள்ளேயே இருக்கட்டும்'' என்றாள் ஜெயந்தி.

உடனே லட்சுமி குரலைக் குறைத்துக் கொண்டார். ஆனால், அழுகையை நிறுத்தவில்லை.

திருமலை கவலையுடன் பார்த்தார். ஜெயந்தி தொடர்ந்து அப்பாவை ஆதரவாகப் பார்த்துவிட்டு சொன்னாள்.

''அப்பா, கவலைப்படாதீங்க. எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கு. நான் ஒரு பிரச்னையைக் ஜெயித்தான் விட்டிருக்கேன். ஆனாலும் அதுக்கு ஒரு விடை கிடைக்கும்கிற நம்பிக்கை இருக்குப்பா... சப்போஸ் விடை கிடைக்கலைன்னாகூட இந்த மாதிரி கேள்வியெல்லாம் எழும்பும் அப்படீங்கறது அந்த வீட்டுப் பெரியவங்களுக்கு புரியணும்ப்பா...'' என்றாள்.

திருமலை ஒரு பெருமூச்செறிந்தார்.

''அம்மா ஜெயந்தி! எப்பவுமே நீ சொல்றது எங்களுக்குப் புரியாம தான் இருந்தது. இப்ப கொஞ்சம் அதிகமாகவே புரியாம இருக்கு. ஆனா, ஏதோ விவகாரம் பண்ணிட்டு வந்துட்டேன்னு மட்டும் புரியுது'' என்றார்.

''சரி, வந்த புள்ளையை வாசல்லேயே வச்சு பேசிக்கிட்டிருக்கோம். இந்தா... லட்சுமி! உள்ளே அழைச்சுட்டுப் போய் சாப்பிட வை'' என்றார்.

ஜெயந்தி உள்ளே போனாள்.

சாப்பிடாவிட்டால் இருவரும் கவலைப்படுவார்கள் என்பதாலேயே செயற்கையாக உற்சாகத்தை வரவழைத்தார்

போல, ''என்ன டிபன் பண்ணியிருக்கே. எங்கே குடு பார்ப்போம்'' என்று ஆர்ப்பாட்டமாக அமர்ந்தாள்.

வேண்டுமென்றே கொஞ்சம் நன்றாகவே சாப்பிட்டாள். அந்த நேரத்தில் உண்மையில் உள்ளே குச்சி வைத்துக் குத்தினால்தான் போகும் என்பது போல உணர்வுகள் முட்டிக் கொண்டு நின்றன. என்றாலும், பெற்றோர்கள் இருவரும் பரிதவித்துப் போவார்களே என்பதற்காகவும், நேற்று இரவில் இருந்து சரியாக உணவு எடுத்துக் கொள்ளவில்லை என்பதாலோ என்னவோ அவளுக்கு வயிற்றுக்கு இப்போது சாப்பாடு வேண்டும் என்பது போல இருந்தது.

எப்போதோ யாரோ சொன்ன விஷயம் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

''இந்த வயிறு இருக்கே... இது மானங்கெட்ட வயிறு. எந்த ராஜா, எந்தப் பட்டணம் போனா என்ன, அதுபாட்டுக்கு நேரத்துக்கு வேணுங்கறதைக் கேட்கும்' என்று!

அதுபோல இப்போது அவளுக்குத் தோன்றியது. அதற்குப்பிறகு ஒவ்வொரு நொடியையும் கழிப்பது அவளுக்குப் பெரிய கடினமான காரியமாக இருந்தது.

சினிமாக்களில் வரும் காட்சிகளை அவள் கேலி செய்திருக்கிறாள். திரும்பின பக்கமெல்லாம் அந்த உருவமே தெரியுமா என்று கேலி செய்வாள்.

இப்போது அவள் விஷயத்தில் உண்மையாகி இருந்தது. கணவனோடு வாழ்ந்த காலம் மிகக் குறுகிய காலம்தான் என்றாலும், அந்த காலக்கட்டத்தில் அவள் மீது நேசத்தையெல்லாம் பொழிந்திருந்தான் பாலகுமாரன்.

அந்த பெரிய குடும்பத்தின் இடையிலும் தங்களுடைய தனிமையின்போது அவளை எந்த விதத்திலும் குறைவாக நடத்தவில்லை. அவளுடைய விருப்பங்களை மதித்துதான்



நடத்தினான். மற்றவர்களுக்குத் தெரியாமல் வரைவதற்கான வரைவு பொருட்கள், படிப்பதற்கு புத்தகங்கள் என்றெல்லாம் ரகசியமாக வாங்கி வந்து கொடுத்துக் கொண்டுதான் இருந்தான்.

அதெல்லாம் யானையைப் பிடிப்பதற்காக ஒரு குழியை வெட்டி அதற்கு மேலே ஒரு தட்டியைப் போட்டோ அல்லது மூங்கில்களைப் போட்டோ இலைதழைகளைப் பரப்பி வைப்பார்களே... அதுபோல ஒமே ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டிவிட்டு மேலே இட்டு நிரப்பினாற் போலதான் அவள் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது.

அவளுக்கு என்ன செய்வதென்றே இப்போது தெரியவில்லை. ஆனால், ஒன்று அவளுக்கு நன்றாகப் புரிந்தது. திருமணம் என்னவோ நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருந்தாலும், அதில் அவளது விருப்பங்கள் மதிக்கப்பட்டு இந்தத் திருமணம் நடக்கவில்லை என்றாலும், திருமணத்துக்குப் பிறகோ அல்லது முன்போ எப்போதோ ஒரு கட்டத்தில் பாலகுமாரன் அவள் உள்ளத்தில் புகுந்து தான் விட்டான். பாலகுமாரனை தான் முழுமையாக நேசிக்கிறோம் என்பது இந்தப் பிரிவின் கணத்தில் புரிந்தது, அவளுக்கு.

'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' என்று கேட்டாளாமே.' சீதை ராமாயணத்திலே. இப்படியெல்லாம் ஒரு பெண் இருப்பாளா என்று அப்போதெல்லாம் அவளுக்குத் தோன்றியிருந்தது.

இந்த பத்து நாட்களின் பிரிவு பெருந்தீயாகத்தா அவளைத் தகித்தது. அவன் குரலைக் கேட்க மாட்டோம பேச மாட்டோமா என்று ஏங்கித் தவித்தாள்.

எனக்கு எதற்கு இத்தனை வீம்பு? பேசாமல் ஒ போனைப் பண்ணி, 'நான் வந்துடறேங்க'ன்னு சொன் போதும். அடுத்த நிமிடம் அவன் ஓடோடி வந்து தன்

போவான் என்று நிச்சயமாக அழைத்துக் கொண்டு அவளுக்குத் தோன்றியது.

உடனே இன்னொருபுறத்திலே, கிருஷ்ணசாமி மாமாவிடம் பெரிய பெரிய கேள்விகளைக் கேட்டு இருக்கிறோம். அந்தக் கேள்விகள் தனது வயதுக்கு மீறிய கேள்விகள் மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தையே அசைத்துப் பார்க்கக்கூடிய கேள்விகள். அப்படிக் கேள்விகளைக் கேட்டிருக்கக்கூடாது என்பதுதானே அவனது கோபம். இன்னொன்றும் அவளுக்குத் தோன்றியது.

கண்டிப்பாக தன்னுடைய சகோதரர்களையோ அண்ணிமார்களையோ அவன் எதிர்த்து நிற்க மாட்டான். அவர்கள் அவன் மீது பொழிந்த அன்பு எந்தவிதத்திலும் குறைபாடுடையது அல்ல. யாரையாவது இழக்க வேண்டும் என்றால், அவன் அநேகமாக தன்னைத்தான் இழக்க நேரிடும் என்று அவளுக்குள் தோன்றியது.

கிட்டத்தட்ட தன் கணவனின் எண்ணத்தைதான் தானும் எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை. உடனே தன் மனத்தில் இன்னொரு விதமாக சமாதானம் செய்து கொண்டாள்.

இருக்கட்டும், அப்படியொரு பிரிவு நேர்ந்தால் நேரட்டும். அப்படியாவது சிந்திப்பார்களில்லையா? தன்னுடைய திருமண வாழ்க்கையில் அடி விழுந்துதான் அந்த வீட்டில் சிந்திக்கிற மனநிலை வரும் என்றால் வரட்டும்.

இவர்கள் வீட்டிலும்தானே பிள்ளைகள் இருக்கிறார்கள். பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னொரு வீட்டிற்குப் போனதற்குப் பிறகு அவர்களை இதுமாதிரி நடத்தினால் இவர்கள் பேசாமல் இருப்பார்களா? எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் விட்டுப்போய்விடக்கூடாது. கேட்கப்படத் தான் வேண்டும்.



நம்ம நாட்டுக்காக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களெல்லாம் சுதந்திரம் கிடைக்குமா, கிடைக்காதா என்று கேள்விக்குறியாக இருந்தாலும் நம் பங்கை நாம் செய்ய வேண்டும் என்றுதானே போராடினார்கள். அதில்கூட அவளுக்கு இன்னொரு கருத்தும்கூட இருந்தது.

அவளுக்கு மிக நெருங்கிய தோழி ஒருத்தியினுடைய தாத்தா விடுதலைப் போராட்ட வீரர். அவர்கள் அவளிடத்திலே சொல்லியிருக்கிறார்...

''அம்மா, வெளியே தெரிஞ்சது பெரிய பெரிய தலைவர்களின் கதைகள் மட்டும்தான். அவர்களுடைய தியாகம் மட்டும்தான். ஆனால், ஊருக்கு ஊர் எத்தனை தியாகிகள். எத்தனை பேர் எவ்வளவு தியாகங்கள் செய்திருக்கிறார்கள் தெரியுமா? சில தியாகங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாது. அப்படிப்பட்ட தியாகங்களையெல்லாம் செய்தவர்கள் இருக்கிறார்கள். செண்பகராமன்னு ஒருத்தர் இருந்தாரு. அவரு கோட்டையில போய் கொடி ஏத்திட்டு வந்துட்டாரு. சின்னப் பையன்தான்... அது மாதிரி எத்தனையோ பேர் எவ்வளவோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அதெல்லாம் வெளியில வரவேயில்லை'' என்று!

அதுமாதிரி அந்தக் குடும்பத்தில் ஒரு மாற்றம் வர வேண்டும் என்பதற்காக தன்னுடைய பிரிவு ஒரு தியாகமாகவே இருக்கட்டுமே என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

தன் மனப்பான்மையை நினைத்து அவளுக்கே வேடிக்கையாக இருந்தது. என்ன இது, ஏதோ சுதந்திர போராட்டத்துக்குத் தயாராகிற வீராங்கனை போல. இப்படியெல்லாம் லேசாக கலாட்டா செய்து அந்தக்

குடும்பத்திலே ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியுமா, என்ன?

எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து பாலகுமாரன் மனதைக் கரைத்து "விட்டுப்பா... இப்படிப்பட்ட பொண்ணுங்க எல்லாம் குடும்பத்துக்கு ஆகாது வேற பெண்ணைப் பார்க்கலாம். டைவர்ஸ் வாங்கிக்கலாம்' என்று... அப்படி முடிவு ஏதாவது செய்தாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தோன்றியது.

ஒரு பிரச்னையின் பல்வேறு கோணங்களை அலசிப் பார்ப்பதாக நினைத்துக்கொண்டுதான் அவள் இப்படியெல்லாம் யோசித்தாள். ஆனால், அந்த டைவர்ஸ் என்ற வார்த்தை அவள் மனத்தில் விழுந்த கணத்திலேயே கண்ணில் இருந்து தாரதாரவென நீர் கொட்டியது.

இவ்வளவு தூரம் பாலகுமாரனை தனது மனம் சார்ந்து இடக்கும் என்பது அவளுக்கே புரியவில்லை. பாவம், அம்மாவும் அப்பாவும் தினமும் கோயிலுக்குப் போய் அவளுக்காக விளக்கேற்றிவிட்டு வருகிறார்கள்.

"ஒரு மண்டலத்துக்கு விளக்கேத்துறேன்னு வேண்டியிருக் கேண்டி... துர்க்கைக்கு" என்று சொல்லிவிட்டு லட்சுமி விளக்கேற்றப் போயிருந்தார். அந்த தனிமையில் தான் இப்போது நிம்மதியாக அமர்ந்து துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

காதலர்கள் காத்திருப்பது துக்கம் என்றாலும் அதை அனுபவித்துக் காதலிப்பார்களாமே... சின்ன சின்ன பிரிவுகளைக்கூட அனுபவித்துக் காதலிப்பார்களாமே... அப்படித்தான் இப்போது தன்னுடைய பிரிவும். அந்த ஆழ்ந்த வேதனையிலும் அவள் மனதுக்குள்ளே கணவனுக்காக ஏங்குகிற ஏக்கத்தில் ஒரு ஆனந்தம் இருந்தது. தன்னை அறியாமல் தனக்கான அந்த சின்ன மேஜை மீது கவிழ்ந்து தலை வைத்து அழுதாள்.



அந்த சமயத்தில் அந்த அறை வாசலில் யாரோ நிற்கிறாற்போல இருந்தது. நிமிர்ந்து பார்த்தாள். "அக்கா!" என்று மாலதியும் அகிலாவும் அன்பாக அவளை அழைத்தபடி அங்கே நின்றுகொண்டிருந்தார்கள்.

தன்னை மீறிய உணர்ச்சிப் பெருக்கத்துடன் "மாலதி, அகிலா" என்று எழுந்து அவர்களை நோக்கி ஓடினாள், ஜெயந்தி.

அந்த இளம் நெஞ்சங்கள் இடையே கண்ணீரோடு கூடிய ஒரு மகிழ்ச்சியும் பரவியது. "அக்கா, என்ன நடந்துச்சு தெரியுமா?" என்று மாலதி இப்போது ஜெயந்தியிடம் பேச ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் 16

"**போடி** ரொம்ப போரடிக்குது..." என்றாள் ஜானகி. நாராயணசாமி - வித்யாவதி இவர்களின் இரண்டாவது பெண்.

"ஆமாடி" என்றாள் மைதிலி. அவர்களின் மூன்றாவது குழந்தை.

ஜானகிக்கு பன்னிரண்டு வயது. மைதிலிக்கு பத்து வயது.

"ஏண்டி! ஜானகி... ஏன்... இப்படி நம்ம செட் எல்லாரும் முகத்தை தூக்கிக்கிட்டு அலைஞ்சுக்கிட்டு இருக்காங்க" என்றாள்.

ஒரு வாரமாகவே அந்த வீட்டில் நிலவுகிற சூழ்நிலை அந்தக் குழந்தைகளுக்குப் பிடிக்கவில்லை. பெரியவர்கள் எல்லாம் அதிகம் பேசாமல் நடமாடிக்கொண்டிருந்தார்கள்.

இளையவர்களோ எப்போதும் குழுகுழுவாகப் பிரிந்து அடித்துக்கொள்வார்கள். அடிப்படையில் எல்லோருக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிற மாதிரிதான் பெரியவர்கள்

அவர்களை வளர்த்தார்கள் என்றாலும் வேண்டுமென்றே அவ்வப்போது கட்சி சேர்ந்து கொள்வார்கள்.

இருப்பதிலேயே அதிக வயதுடையவன் கலைச்செல்வன். அம்பிகா - ஜெகந்நாதனின் மகன். அவனுக்கு ஒரு தங்கை ராதா என்று.

கிருஷ்ணசாமி - மாணிக்கம்மாள் இருவருக்கும் நவநீதன், நிர்மல்குமார் என்று இரண்டு ஆண்மக்கள்.

கோவிந்தசாமி - ரத்தினாம்மாள் இருவருக்கும் மாலதி, அகிலா, கிரிதரன் என்று மூன்று குழந்தைகள்.

இவர்கள் அவ்வப்போது குழு பிரிந்து கொள்வார்கள். பெரியவர்கள் அவ்வளவாக இவர்கள் விஷயத்தில் தலையிட மாட்டார்கள்.

எப்போதாவது ஜானகிக்கும் மைதிலிக்கும் இடையே வேண்டுமானால் அடிதடி நடக்கும். மற்றவர்கள் பிரித்து விடுவார்கள். அதிலும் இரண்டு பேரும் பெண்குழந்தைகளாக இருந்தால் பெரிய அளவில் அடிதடி இருக்காது.

ஜெயந்தி அந்த வீட்டைவிட்டுப் போன பிறகு, அந்த வீட்டிலேயே ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

மாலதி வந்து பேசிய மறுநாள், கோவிந்தசாமி ரத்தினாம்மாளிடம் கேட்டார். "இந்தா ரத்னா... இங்க வா. உட்காரு" என்றார்.

ரத்தினாவும் போய் அருகில் அமர்ந்தாள்.

"மாலதி உங்கிட்ட சொன்னாளா?" என்றார்.

"ஆமாங்க... மாலதி எல்லாம் சொன்னா" என்றார்.

"அப்படின்னா ஜெயந்தி நல்ல விஷயமாகத்தான் போயிருக்கா" என்றார்.

ரத்தினாம்மாள் கணவன் முகத்தைப் பார்த்தாள்.

உண்மையில் ஜெயந்தி போட்ட வெடிகளில் அவருமே கொஞ்சம் அதிர்ந்து போயிருந்தார். அதனால் ஜெயந்தியைப்



பற்றி கணவரிடம் பேசவே பயந்தவராக வாயைத் திறக்காமலே இருந்தார். எப்போதுமே வீட்டில் பிரச்னை என்றால் ரத்தினாம்மாதான் மெதுவாக கோவிந்தசாமியிடம் போய், நேரம் பார்த்து அந்த பிரச்னை பற்றிப் பேசி அவரை சமாதானப்படுத்தி வீட்டில் நல்ல சூழ்நிலை நிலவச் செய்வார்.

ஆனால் ஜெயந்தி, நீங்கள் வசதி குறைவான இடத்தில் என் பெண்களைத் தேடிப்பிடிக்கிறீர்கள் தெரியுமா என்ற ஒரு பெரிய கேள்வியைப் போட்டு அதற்கு ஒரு அதிர்ச்சிகரமான பதிலை அவளே சொல்லிவிட்டுப் போயிருந்தாள் என்பதால் ரத்தினாம்மாளுக்குக்கூட கடந்த இரண்டு மூன்று நாட்களாக அதில் உண்மை இருக்குமோ என்ற எண்ணம் தோன்றியிருந்தது.

கோவிந்தசாமி உண்மையில் அதிர்ந்துதான் போயிருந்தார். ஏனென்றால், அவர்கள் சகோதரர்கள் எல்லாம் பேசி வைத்துக் கொண்டு வசதி குறைவான இடத்தில் பெண்கள் எடுப்பதற்கு அடிப்படையான காரணமே அதுதான். அடிமைகளாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை என்றாலும் அடங்கி இருப்பார்கள். குடும்பத்தைக் கொண்டு செல்வதற்கு நன்றாக இருக்கும் என்பதற்காக அவர்கள் நாகரீகமான வார்த்தைகளைப் போட்டு விளக்கிக் கொண்டார்கள்.

இப்போது யோசித்துப் பார்த்தால் அடிப்படையில் அடக்கி வைப்பதற்காகத்தான் அப்படி பெண் எடுத்தோமோ என்று அவருக்குத் தோன்றியது. ஆனால், சகோதரர்களிடம் அடிக்கடி சொல்வார்.

"வசதியான பொண்ணுங்களெல்லாம் நாளைக்கு நம்மளப் பிரிச்சுடும்ப்பா" என்று சொல்வார். சகோதரர்களுக்கு இடையே நிலவிய அந்தப் பாசம்கூட ஒருவேளை அவர்களை இப்படி முடிவெடுக்கச் செய்வதற்குக்

காரணமாக இருந்திருக்குமோ என்னமோ. கோவிந்தசாமி, கிருஷ்ணசாமி இவர்களுக்கெல்லாம் ஒரு கருத்து என்ன வென்றால், பெண்களுக்கு என்ன சந்தோஷம்... நல்ல நகைகள், புடவைகள், வசதியான வாழ்க்கை... இதுதானே என்பதுதான் அவர்களுடைய எண்ணமாக இருந்தது. அதைத் தவிர அடுத்த கட்டத்துக்குப் பெண்கள் செல்வார்கள் என்ற எண்ணமே அவர்களுக்குத் தோன்றாமல் இருந்தது.

ஜெயந்தி இப்போது எழுப்பிய கேள்விகள், அவரை கொஞ்சம் தாக்கியிருந்தன.

''ஏன்... ரத்னா... அந்த பொண்ணு என்னமோ கேட்டிச்சல்லே'' என்றார். அமைதியாகச் சிரித்தார்.

ரத்தினாம்மாள் கொஞ்சம் தயக்கத்துடன் அவரைப் பார்த்தார்.

''என்னென்னமோ யோசிக்குதுங்க. இந்தக் காலத்துப் புள்ளைங்க. எனக்கு ஒண்ணும் சொல்லத் தெரியலீங்க'' என்றார்.

அப்போதுதான் இதுநாள் வரை செய்யாத அந்தக் காரியத்தை கோவிந்தசாமி செய்தார்.

''இங்க... வா... ரத்னா. பக்கத்துல உட்காரு'' என்றார்.

''பக்கத்துலதானே உட்கார்ந்திருக்கேன்'' என்று முணு முணுத்தார் ரத்தினாம்மாள்.

''இல்லல்லே... இன்னும் கொஞ்சம்'' என்றபடி குறும்பாகச் சிரித்தார்.

''இது என்னங்க இது. பகல்ல'' என்று ரத்தினாம்மாள் நெளிய.. கதவைச் சாத்திட்டு வா. உங்கிட்ட பேசணும்'' என்றார்.

உடனே ரத்தினாம்மாள் கொஞ்சம் வெட்கத்துடன் போய் கதவைச் சாத்திட்டு வந்தார்.



''சொல்லுங்க?'' என்றார்.

கோவிந்தசாமி எழுந்து நின்று தன் இடக்கையால் மனைவியை அணைத்து எழுப்பினார். இதுநாள் வரை தன் மனதில் கேட்கத் தோன்றாத ஒரு கேள்வியை மனைவியைப் பார்த்து கேட்டார். வலது கையால் அவரது முகவாயைத் தொட்டு தூக்கினார்.

''ஏன்... ரத்னா... கல்யாணமாகி வந்து இத்தனை வருஷத்துல உனக்குன்னு வேறு சந்தோஷம் வேணும்னு தோணியிருக்கா?'' என்றார்.

திகைத்துப்போன ரத்தினாம்மா, கண்களை மலங்க மலங்க விழித்தவாறு இடதுபக்கமும் வலது பக்கமும் தலையை ஆட்டினார்.

''இல்லீங்க... நான் அப்படி யோசிச்சதே இல்லீங்க'' என்றார்.

பகல் நேரங்களில் எப்போதும் விலகியே இருப்பார். பெரியதாக மனைவியை அணைத்துக்கொள்ள வேண்டும், கொஞ்ச வேண்டும், அவளுடைய தேவைகள் என்ன என்று கேட்க வேண்டும், இது உனக்குப் பிடிக்கிறதா இல்லையா என்றெல்லாம் கேட்க வேண்டும் என்று அவருக்கு ஏனோ தோன்றவே இல்லை.

'குடும்பங்கறது என்ன... வேண்டும்ங்கறதை வாங்கிப் போடுறோம். செய்றாங்க. சாப்பிடுறாங்க. நாலு இடத்துக்குப் போயிட்டு வர்றாங்க. கேட்ட பொருளை வாங்கித் தர்றோம். இதுக்குமேல என்ன சந்தோஷம் இருக்க முடியும்?' என்றுதான் அவர் நினைத்துக் கொண்டிருந்தார்.

இந்தச் சிறு பெண், தனது மனத்திலே என்னென்னவோ சிந்தனைகளை தோற்றுவித்துவிட்டாளே. இன்னும் ஏதோ தேவை அவர்களுக்கும் இருக்கலாம் அல்லவா என்று எண்ணிக்கொண்டார்.

"இல்லே ரத்னா! பயப்படாம சொல்லு. நான் உன்னை சந்தோஷமாத்தான் வச்சருக்கேனா?'' என்று கேட்டார்.

சட்டென்று ரத்தினாம்மாள், கோவிந்தசாமியின் மார்பில் சாய்ந்துகொண்டு கண்ணீர் வடித்தார்.

''என்னங்க புதுசுபுதுசா என்னென்னவோ பேசறீங்க. நான் எங்கேயோ சாப்பிடறதுக்குக் கஷ்டப்பட்ட குடும்பத்துல இருந்தேன். என்னைக் கொண்டு வந்து குடும்பத்துக்கு தலைவியா வச்சு, இங்க எல்லா வசதிகளும் செஞ்சு கொடுத்து என்னை நல்லாதானே வச்சருக்கீங்க. எதுக்காக இப்படியெல்லாம் சந்தேகம் வருது?'' என்று தேம்பினார்.

கோவிந்தசாமி சிந்தனைவயப்பட்டவராக மெல்ல மனைவியின் தலையைக் கோதிக் கொடுத்தார்.

"இல்லை. ரத்னா... அந்த பொண்ணு சரியாதான் கேள்வி கேட்டது. எப்பவாவது பெண்களை நீங்கள் தனி மனுஷிகளா நினைச்சிருக்கீங்களா அப்படீங்கற மாதிரி கேள்வி கேட்டுது பார்த்தியா? இதுக்கு நாலு அடி சாட்டையில் அடிச்சிருக்கலாம் போலிருந்தது'' என்றார்.

ரத்தினாம்மாள் சட்டென்று அவரது வாயைப் பொத்தினார்.

"இல்லைங்க. நீங்க அப்படியெல்லாம் நினைக்காதீங்க. நீங்க உங்களைப் பொறுத்தவரைக்கும் சரியாதான் செஞ்சிருக்கீங்க" என்றார்.

கோவிந்தசாமி மறுபடியும் அவர் முகத்தை உயர்த்தி, ''எப்படிச் சொல்றே...?'' என்றார்.

"இல்லைங்க. நீங்க இந்த வீட்டுக்கு மூத்த மகன். உங்க அப்பா, அம்மா. உங்களுக்கும் கீழ மூணு பேரையும் ஒரு பொண்ணையும் ஒப்படைச்சுட்டுப் போயிட்டாங்க. நீங்க உங்க அளவுக்கு அவங்களயெல்லாம் எந்த வகையில்



ட்ரெயினிங் கொடுக்கணுமோ அந்த வகையில் குடுத்தீங்க. அதே மாதிரி இந்தக் குடும்பத்த பிரிக்காதது மாதிரி வேணும்னு தேடித் தேடி கொண்டு வந்தீங்க. ஒண்ணும் தப்பில்லைங்க. இன்னும் சொல்லப்போனா... எங்களைப் போல ஏழைப் பொண்ணுங்களுக்கு வாழ்க்கை தானே குடுத்திருக்கீங்க. அதுல ஒண்ணும் தப்பில்லைங்க'' என்று திரும்பத் திரும்ப சொன்னார்.

''நமக்கும் மூணு குழந்தைங்க இருக்கு. அதை மட்டும் பார்த்துட்டு போலாம்னு நினைக்காம இத்தனை பேருடைய வளர்ச்சிக்கும், இத்தனை பேரோட சந்தோஷத்தையும் தானே நீங்க நினைச்சீங்க. அதனால உங்க பக்கத்துல நீங்க தப்பு செய்யலைங்க'' என்றார்.

கோவிந்தசாமி மனதில் தோன்றியிருந்த குற்ற உணர்ச்சிக்கு அவரது வார்த்தைகள் பெரிதும் ஆறுதலாக இருந்தன என்றாலும்கூட அவர் தனக்குத் தானே முனகிக்கொண்டார்.

''இல்லை ரத்னா... அந்தப் புள்ள கேட்ட கேள்வி கரெக்ட் தான் ரத்னா. இதுவரைக்கும் உன்னுடைய தேவை என்ன, உனக்குன்னு ஏதாவது ஆசை இருக்கான்னு கேட்டிருக் கேனா? இல்லையே... நீயும் வாயைத் திறக்கலை. எதுவும் கேட்கலை... அதுக்காக...'' என்று ஒரு குற்ற மனப்பான் மையில் அவர் தவித்துப் போனார்.

அந்தக் கணத்தில் ரத்னாம்மாளுக்கு ஜெயந்தி மீது கோபம் கூட வந்தது. 'எப்போதும் நிமிர்ந்து கம்பீரமாக நடமாடும் தன் கணவரை இப்படி யோசிக்கச் செய்து... குற்ற மனப்பான்மையில் தவிக்கச் செய்து கூனிக் குறுகிப் போக செய்து விட்டாளே அந்தப் பெண்...' என்று!

''இதப் பாருங்க. அவ கிடக்குறா... அவ ஏதோ புரியா பேசிட்டா. அதுக்கு நீங்க ஏன் தப்பு செஞ்ச மாதிரி நினை கறீங்க. உங்களைத் தவிர யார் இருந்திருந்தாலும் இ

குடும்பத்தை நிமிர்த்தியிருக்க முடியாதுங்க'' என்றபடி அவரைப் பெருமிதமாய் பார்த்தார்.

அந்த நேரத்தில் தன் முழு உயரத்துக்கும் கம்பீரமாக எழுந்து நின்றார் கோவிந்தசாமி.

''அது என்னமோ நிஜமா இருக்கலாம் ரத்னா. ஆனா... அந்தப் பொண்ணு கேட்ட கேள்வி கரெக்ட்தான்'' என்று திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டார்.

ரத்னாம்மாளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பல நாட்களுக்கு பிறகு அவர் ஏதோ ஒரு இளம்பெண்ணைப் போல தன் கணவனைக் கட்டிலில் அமர்த்தி தன் வயிற்றிலே அவர் முகத்தை அழுத்திக் கொண்டு தலையைக் கோதிக்கொடுத்துக் கொண்டு, ''இதப்பாருங்க... ஒரு ராஜ்ஜியத்தை ஆளுகிற ஒரு ராஜா... எத்தனையோ சாணக்கியத்தனமாகத்தான் இருந்தாகணும். ஒருவேளை நீங்க எங்களை தனி மனுஷிகளாக அலைய விட்டிருந்தீங் கன்னா... இந்தக் குடும்பம் இன்றைக்கு உருப்பட்டிருக்காது. இன்னிக்கு இந்த தலைமுறை வேணும்னா இப்படி யோசிக்கலாம். ஆனா, அந்த தலைமுறைக்கு இந்த யோசனை வரவேண்டிய அவசியம் இருக்கலை. நாங்க எல்லாரும் சந்தோஷமாகத்தான் இருக்கோம். நானாகட்டும் மாணிக்க மாகட்டும், வித்யாவாகட்டும், அம்பியாகட்டும் எங்க எல்லாருக்கும் உங்க யாரு மேலேயும் எந்தக் குறையு மில்லைங்க'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

கோவிந்தசாமி பல நாட்களுக்குப் பிறகு ஒரு பகல் நேரத்தில் தனது மனைவியின் தொடுதலை நாடியவராக அவருடைய வயிற்றிலேயே முகத்தைப் புதைத்துக்கொண்டு கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தார். பிறகு நிமிர்ந்தார்.

ஒரு நீண்ட பெருமூச்செறிந்தார். அப்போது அவர் மனதிலே ஒரு எண்ணம் பளிச்சிட்டது. முகத்திலே ஒரு



தீர்மானமும் தெரிந்தது. ஏதோ முடிவெடுக்கிறார் என்பது ரத்னாம்மாவுக்குத் தெரிந்தது.

எப்போதும் போல என்ன முடிவு, ஏன் எடுக்கிறீர்கள் என்று கேட்கத் தோன்றாதவராகத்தான் நின்று கொண்டிருந்தார்.

கோவிந்தசாமி மட்டும் அப்போது வழக்கமில்லாத வழக்கமாக, ''ரத்னா... நான் ஒரு முடிவு எடுக்கறேன்...'' என்று ஆரம்பித்தார்.

ரத்னா சட்டென்று அவரது வாயைப் பொத்தினார்.

''நீங்க எப்பவும் போல உங்க முடிவுகளை எடுத்துக் கிட்டுப் போய்க்கிட்டே இருங்க. வேணும்னா ஜெயந்திக்கு பாலகுமாரன் விளக்கம் சொல்லட்டும். நீங்க எனக்கு விளக்கம் சொல்லணும்னு அவசியம் இல்ல'' என்றார்.

அன்பையெல்லாம் முகத்தில் தேக்கியபடி அவருடைய முகத்தை நிமிர்த்தி, அவர் நெற்றியிலே இரண்டு மூன்று முறை தன்னுடைய இதழ்களைப் பதித்துவிட்டு லேசான வெட்கத்துடன் அங்கிருந்து விலகிச் சென்றார் ரத்தினாம்மாள்.

''இதப் பார்... ரா... இவளுக்கு இந்த வயசுல...'' என்று மெல்ல தனக்குள் சிரித்துக் கொண்டார் கோவிந்தசாமி.

## அத்தியாயம் 17

''போடி... ரொம்ப போரடிக்குது'' என்று சொன்ன ஜானகியும் மைதிலியும் ஒருவரை ஒருவர் சோகமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

''சரி, வாடி... வெளியேயாவது போய் விளையாடலாம்'' என்று வெளியே வந்தார்கள்.

அதே நேரத்தில் மாலதி, ''கலை அத்தான்'' என்று அழைத்துக் கொண்டு கலைச்செல்வனை நோக்கிப் போனாள்.

''என்ன மாலு...?'' என்று நின்றான் கலைச்செல்வன்.

''அத்தான்! உண்மையில் என்ன நடந்துச்சு தெரியுமா?'' என்று ஜெயந்தியும் தானும் போக வேண்டி நேர்ந்ததைப் பற்றியெல்லாம் விளக்கமாகச் சொன்னாள்.

கேட்கக் கேட்கக் கலைச்செல்வனுக்குக் கோபத்தில் முகம் சிவந்தது.

''இதை எதுக்கு ஜெயந்தி அக்காகிட்ட சொன்னே. எங்கிட்டேயே சொல்லியிருக்க வேண்டியதுதானே'' என்றான்.

''இல்லை அத்தான். உங்ககிட்ட சொன்னா... நீங்க ரொம்ப கோபமாகப் போயி ஏதாவது பிரச்னை பண்ணிடு விங்க. பிரச்னை பெரிசாகக்கூடாது அப்படீங் கறதுக்காகத் தான் ஜெயந்தி அக்காகிட்டே சொன்னேன்'' என்றாள்.

''ஓ... நல்லா யோசிச்சீங்க போங்க. இப்ப பிரச்னை வேற மாதிரியாப் போயி... இப்ப ஜெயந்தி அக்கா வீட்டை விட்டே போக வேண்டியதாப் போச்சே'' என்றான் கலைச்செல்வன்.

''அதுதான் அத்தான் எனக்கு ரொம்ப கவலையா இருக்கு. இதை எப்படி சரிபண்றது?'' என்றாள்.

''என்னவோ போ... இந்த பெரிசுங்ககிட்ட எப்படிப் புரிய வைக்கறது?'' என்றவன், ஒரு பெருமூச்செறிந்துவிட்டு, ''ஒரு வகையில பார்த்தா ஜெயந்தி அக்கா கேட்டதெல்லாம் கரெக்ட்தான்'' என்றான்.

''ஆமாம். அது எல்லாத்துக்கும்தான் தெரியும். என்ன செய்யறது?'' என்றாள் மாலதி.



''சரி. நீ வொர்ரி பண்ணிக்காத. இந்தப் பிரச்னையை இனி நான் பார்த்துக்கறேன்'' என்றான் கலைச்செல்வன்.

மாலதி முகத்தில் கவலையைத் தேக்கியவளாக, ''அத்தான்! பார்த்து... மறுபடியும் பிரச்னை பெரிசாகாத மாதிரி ஹேண்டில் பண்ணுங்க'' என்றாள்.

அவன் முறைத்தான். முறைத்துவிட்டு, ''சரி, அவ்வளவு கவலைப்படறேல்ல... நீ வா, ரெண்டு பேருமா போவோம். போயி அந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம்'' என்றான்.

''சரி. நான் கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் போகும்போது சொல்றேன். நீங்களும் வாங்க'' என்றாள்.

''சரி'' என்றான் கலைச்செல்வன்.

இவர்கள் இருவரும் நின்று முகத்தில் விதவிதமாக பாவங்களைத் தேக்கியபடி கையை ஆட்டி ஆட்டிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே ஏதோ வேலையாக தங்கள் பகுதியை விட்டு வெளியே வந்த அம்பிகா நின்று, அதை ஒரு நிமிடம் பார்த்தாா்.

அதே சமயத்தில் ஜெகந்நாதனும் பின்னாலேயே வெளியே வந்தார். அம்பிகா, ஜெகந்நாதனுக்கு கண்ணைக் காட்டி, பார்த்தீங்களா என்பது போல புன்னகைத்தாள்.

ஜெகந்நாதன் உடனே, ''அடி போடி. எப்பவும் பேசறது தானே'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

அம்பிகா சிந்தனையோடு சமையல் அறைக்குப் போனாள்.

அங்கே இன்னொரு விதமான காட்சியைப் பார்த்தாள்.

இன்றைக்கு என்னவோ ரத்னா அண்ணி முகத்தில் ஒரு வித்தியாசம் தெரிந்தது. லேசான ஒரு மகிழ்ச்சி. அதோடு கூட ஒரு வெட்கம், ஒரு படபடப்பு எல்லாம் இருந்த மாதி[ரி] தோன்றியது. அதைவிட அதிசயம்... அப்பளம் பொரித்து[...]

கொண்டிருந்த ரத்னா அண்ணி, பாட்டு வேறு பாடினார், மெல்லிய குரலில்.

ரத்னா அண்ணி பாடுவதைக் கேட்டு எத்தனை நாளாச்சு என்று எண்ணிக் கொண்ட அம்பிகா, திரும்பிப் பார்த்தாள். இன்னொரு புறத்திலே பகல் நேரத்துக்கான உணவை எடுத்து அங்கங்கே ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த மற்ற இருவரும், அதாவது மாணிக்கம்மாவும் வித்யாவதியும்கூட ஒருவரை ஒருவர் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

அப்போதுதான் மாணிக்கம்மாள், ரத்னாம்மாவிடம் கேட்டார், "ஏன்... ரத்னாக்கா... என்ன விசேஷம்?" என்று!

அவர்களைத் திரும்பிப் பார்த்த ரத்தினாம்மாள், வெட்கத்துடன் புன்னகைத்தார்.

"உலக அதிசயம் நடந்துச்ச தெரியுமா?" என்றார்.

"என்ன அதிசயம்? எனக்கும் சொல்லுங்களேன்" என்று அருகில் வந்து நின்றாள் அம்பிகாவதி.

"நீ போ. உன்னை வச்சுட்டுப் பேச முடியாது" என்று கேலியாகச் சொன்னார் ரத்தினாம்மாள்.

"அதெல்லாம் இத்தனை நாளா எல்லாந்தானே பேசிக்கிட்டோம். இன்னிக்கு மட்டும் ஏன் மறைக்கறீங்க. சொல்லுங்க" என்றாள்.

"சரி... சரி, விடு. ஆனா... நான் பேச ஆரம்பிச்சா நீயே அந்தப் பக்கம் போயிடுவே" என்று மறுபடியும் சொன்னார் ரத்தினாம்மாள்.

பிறகு மாணிக்கம்மாளையும் வித்யாவதியையும் அருகில் அழைத்து, "என்னாச்சு தெரியுமா, உங்க பெரியத்தான்... கல்யாணமாகி இத்தனை நாள் கழிச்சு என்னைப் பக்கத்துல உட்கார வச்சு..." என்று ஆரம்பித்தவுடனேயே அம்பிகா, "ஓகோ... சரி சரி!" என்று தானே போய் விட்டார்.



"என்னாச்சு தெரியுமா?" என்று மறுபடியும் தொடர்ந்தார் ரத்தினாம்மாள்.

"கல்யாணமாகி இத்தனை நாள் கழிச்சு... என்னைப் பக்கத்துல உட்கார வச்சு... 'ஏன்... ரத்னா! நீ சந்தோஷமா இருக்கியா. உனக்குன்னு ஏதாவது விருப்பு வெறுப்புகள் இருக்கா. நான் எதுவும் உன்னைச் சரியாக கவனிக்காம விட்டுட்டேனா?'ன்னு கேட்குறாங்க" என்றார்.

மாணிக்கம்மாளும் வித்யாவதியும் மெல்லச் சிரித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு மாணிக்கம்மாள் கேட்டார், "இது இன்னிக்குத் தான் உங்களுக்கு நடந்துச்சா?" என்று!

உடனே ரத்தினாம்மாள், ஆச்சரியத்தை முகத்தில் தேக்கியபடி, "அப்படீன்னா... உங்களுக்கு?" என்று கேட்டார்.

மாணிக்கம்மாள் வெட்கத்துடன் சிரித்துக் கொண்டு, "உங்க பெரிய கொழுந்தன் நேத்தே என்னைக் கேட்டாச்சு" என்றார்.

உடனே ரத்னாம்மாள், வித்யாவதியின் முகத்துக்கு தன்னுடைய பார்வையை பாயச் செய்தார்.

வித்யாவதியும் சிரித்துக்கொண்டே, "உங்க சின்ன கொழுந்தன் முந்தாநேத்தே கேட்டாச்சு" என்றார்.

"அடிப்பாவிகளா... ரெண்டு நாளும் ரெண்டு அமுக்கினிகளும் உள்ளேயே வச்சுக்கிட்டிருந்திங்களா? எங்கிட்ட சொல்லவேயில்லை" என்று கேட்டார், ரத்தினாம்மாள் பொய்க்கோபத்துடன்.

"இல்லக்கா... நாங்க சொல்லணும்னுதான் நினைச்சோம். ஆனா, பெரியத்தான் உங்ககிட்ட அப்படியெல்லாம் பேசுவாரோ மாட்டாரோ... அப்படியிருக்கையில நாங்க சொல்லப்போயி, இவரு மட்டும் எதுவுமே கேட்கலை

வேன்னு நீங்க நினைச்சுக்கக்கூடாதே அப்படீன்னுதான் நாங்க சொல்லலை. ஆனா, எப்படியிருந்தாலும் இன்னிக்குச் சொல்லிடலாம்னுதான் இருந்தோம்'' என்றார்.

''ஓகோ... அதுக்குள்ள நானே போட்டு உடைச்சுட்டேனாக்கும்'' என்றார் ரத்தினாம்மாள்.

''சரி... சரி... வேலையைப் பார்த்துக்கிட்டே பேசலாம்'' என்ற மாணிக்கம்மாள் திரும்பி, பொருட்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக் கொண்டே சொன்னார்.

''ஏன்... ரத்தினாக்கா. நல்லா யோசிச்சுப் பாருங்க. இந்த மனுஷங்க இத்தனை நாளா நம்மளைப் பார்த்து இப்படிக் கேட்டிருப்பாங்களா... நல்லவங்கதான். நம்மளை சந்தோஷமாக வச்சுக்கிட்டாங்கதான். அதெல்லாம் இல்லைன்னு சொல்லலை. ஆனா...'' என்று இழுக்க... வித்யாவதி தொடர்ந்தார்.

''ஆமா... அந்தப் புள்ளை கேட்டாப்ல நமக்கெல்லாம் இந்த நல்ல பட்டுப்புடவை, நல்ல நகை... சந்தோஷமான வாழ்க்கை இதே போதும்னு நினைச்சோம் இல்லை'' என்றார்.

உடனே ரத்தினாம்மாள் தயக்கமில்லாதவராக சொன்னார்.

''ஆமாடி. நாமெல்லாம் சோத்துக்கில்லாத வீட்ல இருந்து வந்தோம். நேராநேரத்துக்குச் சோறு கிடைக்கறதும், இந்தப் பணத்தையெல்லாம் பார்க்கறதும் நல்ல வசதியான இடத்தில இருக்கிற மாதிரி... அதுவே நமக்கு பெரிய சந்தோஷம், அப்படீன்னு நினைச்சுக்கிட்டோம்'' என்றார்.

உடனே மாணிக்கத்தம்மாள், ''அதெல்லாம் என்னமோ உண்மைதானக்கா... நாளைக்குப் பொழுது எப்படி விடியும், நாளைக்கு சாப்பாட்டுக்கு நம்மகிட்ட காசு இருக்கா இல்லையா... அப்படீங்கற கவலையில்லாம நம்மளை



வச்சிருந்தாங்க இல்லையா... எத்தனை பேரு அப்படிக் கஷ்டப்படறவங்க உலகத்துல இருக்காங்க. அதையும் நாம நினைச்சுப் பார்க்கணும்லக்கா... தடிதடியா நகையைப் போட்டுக்கிட்டு நல்லவிதமா பட்டு. எங்க போகணும்னாலும் கார்... இப்படித்தானேக்கா இருந்தோம் நாம்... அதுக்கு நாம நன்றி சொல்லத்தான் வேணும்'' என்றார்.

ரத்தினாம்மாள் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''இப்ப அதுல எல்லாம் சந்தேகம் இல்ல. ஆனா, அந்த ஜெயந்தி புள்ளை வேறு என்னமோ கேட்குது. அது என்னன்னா... இதெல்லாம் குடுத்து எங்களுக்கு மனசுன்னு ஒன்னு இருக்குங்கறத மறைச்சிடுறீங்களே... இதால எங்க வாய அடைச்சுடுறீங்களே... அப்படீன்னு கேட்கறா'' என்றார்.

உண்மையாகவே மாணிக்கத்தம்மாளுக்குப் புரியவில்லை. அவர் வெகுளி, பாவம்! ஆனால், வித்யாவதிக்கு கொஞ்சம் புரிந்தது.

''அக்கா! ஜெயந்தி கேட்டதுலேயும் கொஞ்சம் நியாயம் இருக்கு. இத்தனை நாளு நாம சாப்பாடு ஆக்கிப் போட்டோம். போகச் சொன்ன இடத்துக்குப் போனோம். குழந்தைகளைப் பெத்தோம். வளர்த்தோம். ஆனால், நமக்குன்னு ஒரு தனிப்பட்ட ஆசை வச்சுக்கிட்டோமா, அவங்களை மீறி ஏதாவது செஞ்சருக்கோமா, இல்லை அவங்களுக்குப் பிடிக்காத விஷயத்தைப் பேசியிருக்கோமா, அப்படீன்னா நமக்குன்னு ஒரு வாழ்க்கை வாழவில்லையே'' என்று கேட்டார்.

உடனே ரத்தினாம்மாள் சிந்தனைவயப்பட்டவராக... ''உண்மைதான். நம்ம காலக்கட்டத்துக்கு அது கரெக்டாத் தான் இதுவரை போச்சு. அப்படியெல்லாம் நாம கேள்வி கேட்காம இருந்ததால்தான் இத்தனை நாளா நாம் கூட்டுக்

குடும்பமாக நிம்மதியாக இருக்கோம். இதிலும் எத்தனையோ நல்லது இருக்குடி...'' என்றார்.

''கண்டிப்பாக்கா... கூட்டுக் குடும்பமா இருக்கறதுல எத்தனையோ நல்லது இருக்கு. விட்டுக் கொடுக்கறது இருக்கு. அதெல்லாம் நாங்க சொல்லலை. ஆனா, அவ சொன்னமாதிரி நமக்குன்னு தனிப்பட்ட விஷயங்கள் எதுவுமே இல்லையே'' என்றார் மறுபடியும் வித்யாவதி.

அதற்கு மேல் அந்த உணர்வை விரிவுபடுத்திச் சொல்ல அவருக்குத் தெரியவில்லை.

''அது சரி, போ. எல்லாரும் நமக்குப் பிடிச்சது, நமக்கு வேணுங்கறதுன்னு கிளம்பியிருந்தா குடும்பம் என்னாகிறது. குடும்பம்னா கொஞ்சம் தியாகம் பண்ணித்தான் ஆகணும்'' என்றார்.

''அதை அந்தப் பொண்ணு மறுக்கலையே... விட்டுக் கொடுத்துட்டு அதே சமயத்திலே அடுத்தவங்களுக்கு என்ன தேவைங்கறதை யோசிக்கணும்னுதானே சொல்லுது. இதப்பாருங்க. இந்த ஒரு வாரமா நம்ம பிள்ளைங்க நம்மகிட்ட சரியா பேச மாட்டேங்கறாங்க. முகத்தைத் தூக்கிக்கிட்டுப் போகுதுங்க. ஏதாவது கேட்டா, சுருக்கமா பதிலு. ஒரு கலகலப்பு... சண்டை... சச்சரவு எதுவுமே இல்லையே. வீடே அமைதியா இருக்கு. எனக்கென்னமோ இத்தனை நாளா அவங்க கேட்க நினைத்திருந்த கேள்வியைத்தான் ஜெயந்தி கேட்டுட்டா... அப்படீன்னு தோணுது'' என்றார்.

உடனே வித்யாவதி சொன்னார். ''அதுமட்டுமில்லக்கா. அவங்க கேட்க வேண்டிய கேள்வி மட்டுமல்ல, நாம கேட்க வேண்டிய கேள்வியையும் சேர்த்து கேட்டுட்டாப் போலத்தான் இருக்கு'' என்றார்.



அதற்கடுத்து என்ன சொல்வதென்று யோசித்தாற் போல... வித்யாவதியும் மாணிக்கத்தம்மாவும் ஒருவர் ஒருவரை பார்த்துக் கொண்டிருக்க... ரத்னா சிந்தனை வயப்பட்டாற்போல சொன்னார்.

''எது எப்படின்னாலும் சரி, வித்யா! அந்தப் புள்ளைய ரொம்ப நாளைக்கு அங்க விட்றக்கூடாது. பாலகுமாரனைப் பாரேன். முகமே இல்லை. சாப்பிட மாட்டேங்கறான். மூஞ்சி செத்துப்போய் கிடக்கிறான். இன்னிக்குத்தானே நல்ல பேச்சு பேசியிருக்காரு. இன்னிக்கு நைட்டோ நாளைக்கோ உட்கார்ந்து பேசி எப்படியாவது ஜெயந்தியைக் கூட்டிட்டு வந்துடணும். ஆனா, ஜெயந்தி நேருக்கு நேரா இப்படிக் கேட்டிருக்கிறா... இதை எப்படி எடுத்துக்குவாரோ... அதுவேற பயமா இருக்குது'' என்றார் ரத்தினாம்மாள்.

''ஆமாக்கா... அதை உத்தேசித்துத்தான் நானும் வாயைத் திறக்காமல் இருக்கேன். பெரியத்தானை யாருமே இதுவரைக்கும் கேள்வி கேட்டதில்லையே. இந்தப் புள்ள எடுத்தேன், கவிழ்த்தேன் என்று கேட்டிருச்சு. கேட்டதென்னமோ தப்போ ரைட்டோ... இது நமக்குத் தெரியாது. ஆனா, அவரைக் கேட்டது தப்புதானே'' என்றார் வித்யாவதி.

மாணிக்கத்தம்மாள் சிரித்தார்.

''அது சரி. வேறு யாரைக் கேட்டாலும் இங்க என்ன மாற்றம் வந்துடப் போறது. யாரையாவது கேட்டு மாற்றம் வரும்னா அது பெரியத்தான் தான். அதைத் தெரிஞ்சுகிட்டு தான் அந்தப் புள்ள கேட்டிருக்கு'' என்றார்.

உண்மையில் ஜெயந்தி தன் மனதில் இருக்கிற தாகத்தைக் கொட்டின்னாலொழிய அவரைக் கேட்டால்தான் இப்படியெல்லாம் நடக்கும் என்றெல்லாம் யோசித்து அவள் கேட்கவில்லை.

''சரி, இப்ப என்னதான் செய்யறது. எனக்கொண்ணும் புரியலை'' என்றார் ரத்தினாம்மாள்.

''என்ன செய்யறது... எங்களுக்கும் புரியலை'' என்று சொன்ன மாணிக்கத்தம்மாள், ''இன்னொரு விஷயம் தெரியுமா? மாலதிக்காகத்தான் அவள் போயிருக்கா. அந்த பிரபாகரனைப் போய் மிரட்டிட்டு வர்றதுக்காகத்தான் போயிருக்கா. மாலதி புள்ளை எங்கிட்ட வந்து எல்லாம் சொல்லிச்சு'' என்றார் மாணிக்கத்தம்மாள்.

''ஆமாம். எல்லாருக்கிட்டேயும் போய் சொல்லிக் கிட்டுத்தான் இருக்கா. அவ அப்பாகிட்டேயும் சொல்லி யிருக்கா. அவரு யோசிக்க ஆரம்பிச்சிருக்காரு. ஆனா... எப்படியும் அவங்கதானே முடிவெடுக்கணும். சட்டென்று நாம் போய் சொல்லிடக்கூடாதுல்ல'' என்றார் வித்யாவதி.

''அதைத்தான் மாத்தணுங்கறேன்'' என்றார் ரத்னா.

''எப்படி?... அந்தப் பொண்ணு என்ன கேட்டுச்சு... உங்களுக்குன்னு தனித்துவம் ஒண்ணு இருக்கான்னு கேட்டுச்சு இல்லை. நல்லா யோசிச்சுப் பாரு. நம்மளை ஒத்த ஒரு பொண்ணு அவ பத்து நாளா போய் உட்கார்ந்திருக்கா. நாமெல்லாம் என்ன முடிவு பண்ணியிருக்கோம். ஏதாவது செய்யணும்'' என்றார் ரத்தினாம்மாள்.

''சரி, இன்னிக்கு ராத்திரி அவங்கவங்க வீட்டுக்காரர் கிட்ட பேசுவோம்'' என்றார் வித்யாவதி.

''ம்... நானும் பேசறேன்'' என்று அதுவரை அந்தப் பக்கம் இருந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாற் போல கேட்டுக் கொண்டிருந்த அம்பிகாவதி, சிரித்துக்கொண்டே உள்ளே வந்தார்.

''ஓகோ... நீ போகலையாடீ...'' என்று கேட்டார் ரத்தினாம்மாள்.

''அப்புறம் ஏதோ சுவாரஸ்யமா ஏதோ சொல்லிக்கிட்டு இருக்கீங்க. எப்படிப் போறது?'' என்றார் அம்பிகாவதி.



''சரி, இப்ப எல்லோருமா இன்னிக்கோ நாளைக்கோ அவங்கவங்க வீட்டுக்காரர்கிட்ட பேசறோம்'' என்று அவர்கள் முடிவெடுத்தார்கள்.

அவர்கள் முடிவெடுத்த அதே சமயத்திலே அந்த வீட்டுச் சிறுவர்கள் எல்லாரும் இன்னொரு இடத்திலே கூடி மாநாடு போட்டு அவர்களும் அதே முடிவை எடுத்தார்கள்.

## அத்தியாயம் 18

''டேய்! கரெக்டா போடு'' என்றான் பாலகுமாரன்.

''கரெக்டாதான் போடறேன்'' என்றாள் ஜெயந்தி.

இரண்டு பேருமாக ஷட்டில்காக் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் குடும்பத்திற்கென்று இருபத்தைந்து ஏக்கருக்கு மேல் ஒரு பெரிய தென்னந்தோப்பு அவர்கள் ஊரில் இருந்து ஒரு மணி நேரத்தில் போகிற மாதிரி ஒரு கிராமத்தில் வாங்கி வைத்திருந்தார்கள், அவர்கள் குடும்பத்தினர்.

பாலகுமாரனும் ஜெயந்தியும் இப்போது இரண்டு நாட்களாக அங்கேதான் தங்கியிருந்தார்கள். அந்தத் தென்னந்தோப்பின் ஓரமாக ஒரு சின்ன கால்வாய்கூட ஓடியது. சூழ்நிலை மிகவும் ரம்மியமாக இருந்தது.

அந்த அதிகாலை நேரத்தில் சற்றுநேரம் வாக்கிங் போல தென்னந்தோப்பின் ஒரு பகுதியைச் சுற்றி வந்தவர்கள் இப்போது ஷட்டில்காக் விளையாடுவோம் என்று விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தத் தென்னந்தோப்பின் ஒரு ஓரத்திலே அழகான ஒரு தொட்டில்கட்டு வீடு இருந்தது.

எங்க குடும்பம் ரொம்ப பெரிசு என்று அடிக்கடி கிருஷ்ணசாமி சொல்லிச் சிரிப்பார். அதுபோல அந்த பெரிய

குடும்பத்தினர் வந்தால் தங்குவதற்கு ஏற்ற வகையில் அங்கே நிறைய அறைகளோடு இரண்டு மாடியாக அந்த தோட்டிக்கட்டு வீடு இருந்தது. சுற்றிலும் இருந்த இடத்தில் மிக அழகிய தோட்டம்கூட அமைத்திருந்தார்கள்.

எல்லா வகையான மலர்ச்செடிகளும் அங்கே பயிரிடப்பட்டு இருந்தன. நான்கைந்து அடி உயரத்தில் உயரமான செம்பருத்திச் செடிகள், மல்லிகை, முல்லைக் கொடிகள்... அதுபோக காய்கறி வகையறாக்கள்கூட ஒரு பக்கம்... கீரை ஒரு பக்கம் என்று எல்லாமே அங்கே வைத்துக்கொண்டிருந்தார்கள்.

தினந்தோறும் காலையிலே அங்கே இருந்து ஒரு மாருதி வேனில் வீட்டுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் வந்து சேரும். அப்படியே அந்த மாருதி வேன், நாள் முழுவதும் கடைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு இரவு அங்கே சென்று விடும். அதற்கென்று தனியாக ஒரு வயதான ஆளையும் அமர்த்தி இருந்தார்கள்.

அவருக்குத் தென்னந்தோப்புக்கு அருகிலேயே அந்தப்புறத்திலே சற்றுத் தள்ளி ஒரு சிறிய அழகான, வீடு கட்டிக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் பிள்ளைகளுக்கு கல்லூரியில் படிப்பதற்கான செலவுகளைச் செய்து கொடுத்திருந்தனர். அந்த குடும்பத்தையே மொத்தமாக பராமரிக்கும் பொறுப்பை இவர்கள் எடுத்துக் கொண்டதால் அந்தக் குடும்பத்தினரும் தென்னந்தோப்பை மிக அழகாக பராமரித்து வந்தார்கள்.

ஜெயந்தியும் பாலகுமாரனும் அந்தத் தென்னந்தோப்புக்கு வந்தவுடனேயே அவர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்று தடபுடல் படுத்திவிட்டார்கள். அந்த டிரைவரின் பெயர் கண்ணையன். அவரது மனைவியின் பெயர் ரஸ்வதி. கண்ணையனும் சரஸ்வதியும் அவர்கள் இருவரையும் தாங்கிப் பார்த்துக் கொண்டார்கள்.



இரண்டு நாட்களாக எந்தவொரு வசதிக் குறைவு மில்லாமல் நேராநேரத்துக்கு உணவு மற்றும் வசதிகள் என்று அவர்களுக்கு நடந்து கொண்டிருந்தன. எல்லாவற்றையும் விட அழகிய விஷயம் என்னவென்றால், இங்கிதம் தெரிந்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

அழைத்தால் மட்டுமே வந்தார்கள். ஆனால், என்ன தேவை என்று புரிந்துகொண்ட அவர்கள் கேட்பதற்கு முன்பாகவே ஏற்பாடு செய்வதிலும் அவர்கள் வல்லவர்களாக இருந்தார்கள்.

இந்த இரண்டு நாட்களும் பாலகுமாரனும் ஜெயந்தியும் உலகத்தை மறந்து கழித்தார்கள். இரண்டு மாதங்களுக்கும் குறைவாகவே அவர்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றாலும் கூட அந்த இரண்டு மாதத்தில் நிகழ்ந்த குழப்பங்கள் மாலதியை இன்னும் கவலைக்குள்ளாக்கி இருந்தது.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது அப்படியொரு பிரிவு இடையில் வந்ததா என்று ஆச்சரியப்படும் அளவுக்கு இந்த இரண்டு நாட்களும் அவனுக்கு சொர்க்கமாகத் தெரிந்தது.

பாலகுமாரன் தங்கள் வீட்டில் இருந்ததைவிட இங்கே சுதந்திரமாக இருந்ததாலோ என்னவோ அவளைச் சீண்டிக் கொண்டே இருந்தான்.

நேற்றுகூட செஸ் விளையாடலாம் வா என்று அமர வைத்துக்கொண்டு செஸ் விளையாடுகிறேன் என்ற பெயரில் அவளைச் சீண்டிக் கொண்டே இருந்தான். அவள் ஆச்சரியமாக அவளைப் பார்த்தாள். ''செஸ் எல்லாம் விளையாடுவீங்களா?'' என்று கேட்டாள்.

''என்ன முறைக்கறே... எனக்கு சீட்டு விளையாடத் தெரியும். ஷட்டில்காக்... பேட்மிண்டன்... வாலிபால் பிளேயர் நான் தெரியுமா... அதைச் சொன்னேன். நீதான்

வேற ஏதோ நினைச்சுக்கிட்டே... அதுக்கு நானா போறப்பு?'' என்றாள்.

அவன் களீரென்று சிரித்தான்.

அவள் அருகே வந்து அவன் தலையைக் கலைத்து எழுந்து அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். வேண்டுமென்றே விட்டு விட்டு கவனித்தாள். பிறகு கேட்டாள்.

''நான் என்ன நினைச்சேன்னு நினைச்சீங்க'' என்றாள்.

''நான் என்ன நினைச்சேன்னு நீ நினைச்சே...'' என்றான் அவன் திருப்பி.

மறுபடியும் அவள் சிரித்தாள்.

''ஐயோ, போதுங்க. நான் உண்மையிலேயே என்னென்ன விளையாட்டு தெரியும்னுதான் கேட்டேன்'' என்றாள்.

''அதான்... நேற்றிலிருந்து ஆரம்பிச்சுருக்கேனே. என்னென்ன விளையாட்டு தெரியும்னு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விளையாட்டு சொல்லித் தரேன்'' என்றான்.

''ச்சே... உங்ககிட்ட பேசவே முடியாது'' என்று அவள் கோபித்துக் கொள்ள, ''சரி, வா... உட்காரு... விளையாடு'' என்றான்.

அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. அவன் செஸ் விளையாட்டில் நல்ல திறமையுள்ளவனாகவே இருந்தான்.

ஜெயந்தி கேட்டாள். ''ஏங்க... நீங்க டிஸ்ட்ரிக்ட் பிளேயர்... அந்த மாதிரியெல்லாம் போயிருக்கலாமே'' என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

''அப்படித் தோணலை ஜெயந்தி! என்னை விட்டுப் பிரிஞ்சு இருக்கிறதுன்னா அண்ணாக்களுக்கெல்லாம் ரொம்பக் கஷ்டம். அதை நினைச்சே நானும் எந்தப் போட்டிகளிலும் போய் கலந்துக்கலை'' என்றான் பாலகுமாரன்.



சொல்லும்போதே ஒரு குற்ற உணர்வு தெரிந்தது.

ஏற்கெனவே அந்த வீட்டை கலக்கியது போதும் என்று ஜெயந்தி தீர்மானித்து இருந்ததால் இப்போது அவனை ஆதரவாகப் பார்த்தாள்.

''பரவாயில்லைங்க. ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்க்கை முறை. இதுல குறை சொல்றதுக்கு எதுவும் இல்லை. அப்படித்தான் நாம் எடுத்துக்கணும்'' என்றவள், பெருமூச்சு விட்டபடி சொன்னாள்.

''என்னதான் இருந்தாலும் நான் பெரிய அத்தானை அப்படியெல்லாம் பேசியிருக்கக்கூடாது'' என்றாள்.

''சரி, அதையே எத்தனை தடவை சொல்லுவே... விடு'' என்றான் பாலகுமாரன்.

''இல்லைங்க...'' என்று மறுபடியும் அவள் ஆரம்பிக்க, ''அதான் பேசி முடிச்சாச்சுல்ல... விடு'' என்றான்.

அவர்கள் செஸ் விளையாட்டைத் தொடர்ந்தார்கள் என்றபோதும் ஜெயந்திக்கு அந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது.

மாலதியும் அகிலாவும் தன்னைப் பார்க்க வந்த நாள். அப்போது மாலதி ஜெயந்தியிடம் சொன்னாள்.

''இதோ பாருங்க... ஜெயந்தியக்கா! நான், பெரியப்பா, எல்லா சித்தப்பாகிட்டேயும் போயி நீங்க எனக்காகத்தான் வந்தீங்க. அப்படீங்கற விஷயத்தைச் சொன்னேன். அப்பா ரொம்ப வருத்தப்பட்டாங்க'' என்றாள்.

''ஐய்யய்யோ... நீ எதுக்கு சொன்னே?'' என் கேட்டாள்.

''ஏன் ஜெயந்தியக்கா... உங்களை எல்லாரும் தப் பேசி... நீங்க என்னமோ பெரிய தப்புப் பண்ணின மா நடுவில நிறுத்தி வச்சு விசாரிச்சு... ச்சே... இதெல்லாம் எங்க வீட்ல எங்களுக்குப் பிடிக்கறதேயில்லை. நல்லவே நீங்க கேள்வி கேட்டீங்க'' என்றாள்.

ஜெயந்தி வருத்தத்துடன் மாலதியைப் பார்த்தாள்.

"கேஸ் கேட்டு என் வாழ்க்கையையே சிதறடிச்சுட்டு நிக்கறேனே" என்று மெல்ல முணுமுணுத்தாள்.

மாலதி அவளை அன்புடன் கட்டிக்கொண்டாள்.

அகிலா தங்கள் வீட்டில் இருந்து கொண்டு வந்திருந்த பலகாரப் பையை ஒருபுறம் வைக்கிற அந்த நேரத்திலே மாலதி, மெல்ல ஜெயந்தியின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு சொன்னாள்.

"அக்கா! நாங்க அப்படியெல்லாம் விட்ரமாட்டோம். கண்டிப்பா பெரியவங்க வந்து கூட்டிட்டுப் போறமாதிரி ஏற்பாடு செய்வோம்" என்றாள்.

ஜெயந்தி நம்பிக்கையில்லாதவள் போல பார்த்தாள்.

"ஆமாக்கா... நீங்க இப்ப வந்தவங்க. இருந்தாலும் ஒரு பிரச்னையைச் சொன்னவுடனே அதை சீரியஸா எடுத்துக் கிட்டு எனக்காக வந்து கெட்ட பெயர் வாங்கிட்டு... அத்தனை பிரச்னைக்கும் நடுவிலேயும் என்னைக் காட்டிக் கொடுக்காம இருந்தீங்களே... அதுக்கு நான் எப்படி நன்றி சொல்றது?" என்றாள்.

உடனே ஜெயந்தி, "நான் காட்டிக்கொடுக்காம இருந்த தெல்லாம் இப்போ வீணாப்போச்சே. நீ போய் எல்லார் கிட்டேயும் சொல்லியாச்சே" என்றாள்.

"பரவாயில்லைக்கா... அதுவொண்ணும் பிரச்னை இல்ல. கலையத்தான் கிட்ட சொன்னேன். கலையத்தானும் நானும் போயி அந்த பிரபாகரனை வார்ன் பண்ணிட்டு வந்துட்டோம். பிரபாகரன் இனி தொல்லை பண்ண மாட்டாரு" என்றாள்.

மறுபடியும், "அது மட்டுமில்லக்கா... பாலு சித்தப்பா கிட்டேயும் எல்லா விவரத்தையும் சொன்னேன். அவரும் போய் பிரபாகரன்கிட்ட பேசியிருப்பார் போலிருக்கு.



இனிமே பிரபாகரனால எந்தத் தொந்தரவும் இருக்காது. நான் இதை முதல்லேயே செஞ்சிருக்கலாம். ச்சே... எனக்கு அறிவே இல்லாமப் போச்சு. எங்க கலையத்தான் போய் கைவைச்சிருவாங்களோன்னுதான் நான் உங்ககிட்ட சொன்னேன். உங்க ஃப்ரெண்டாச்சே. அடிதடி ஆயிடக் கூடாதேங்கற பயம்தான். வேற ஒண்ணும் இல்லை" என்றாள்.

"சரியம்மா... போனது போகட்டும் விடு..." என்ற ஜெயந்தி, இவளை ஒருபக்கமாக அமரச்செய்து தானும் அமர்ந்து கொண்டாள். தங்கள் வீட்டில் செய்திருந்த ரவா லட்டை எடுத்து அவர்களுக்குப் பரிமாறினாள்.

"நீங்க கொண்டுவந்த பலகாரத்தை குடுத்தா நல்லாயிருக் காதில்ல. இது நானே செஞ்ச ரவா லட்டு" என்றாள்.

மாலதியும் அகிலாவும் அதை ஆசையாக உண்டுவிட்டு சொன்னார்கள்.

"அக்கா... நீங்க இல்லாம இந்த ஒரு வாரமா வீடே நல்லாயில்லை" என்றார்கள்.

ஜெயந்தி வாஞ்சையாகச் சிரித்துவிட்டுச் சொன்னாள்.

"என்ன... நான் புதுசா வந்தவதானே. ரெண்டு மாதத்துக்கு முன்னாடி நான் இல்லாமத்தானே நீங்க அந்த வீட்ல இருந்தீங்க" என்றாள்.

"ஆமாக்கா... இருந்தோம். ஆனா, நீங்க வந்ததுக்கப்பறம் ஒரு மாற்றம் இருந்துச்சு. எங்க பிரச்னைகளை உங்ககிட்ட சொல்ல முடிந்தது. எங்களுக்கு ஒரு மாரல் சப்போர்ட் மாதிரி நீங்க இருந்தீங்க. அதில்லாம... நீங்க ரெண்டு பேரும் நடமாடிக்கிட்டிருக்கிறதப் பார்த்தா ரொம்ப நல்லாயிருக்கும். வீடும் கலகலப்பாக இருந்துச்சு" என்றாள்.

ஜெயந்தியின் கண்களில் நீர் நிறைந்தது. மாலதியின் கண்களிலும் நீர் நிறைந்தது.

பிறகு மெதுவான குரலில் கேட்டாள். "ஏன்... மாலதி பெரியக்காளுக்கு ரொம்ப கோபமா? நான் ரொம்ப அளவுக்கு மீறிப் பேசிட்டேனா? அவரைப் போய் அப்படியெல்லாம் கேள்வி கேட்டுட்டேன். உங்க வீட்ல அவருகிட்ட யாருமே அப்படிப் பேசியிருக்க மாட்டாங்க. நான் ஏன் இப்படிச் செஞ்சேன்னு எனக்கே தெரியலை. என்னை அறியாமலே கோபம் பொத்துக்கிட்டு வந்துடுச்சு. படபடவென்று எங்க வீட்ல பேசற மாதிரி பேசிட்டேன்" என்று வெகுவாக வருத்தப்பட்டாள்.

"கரெக்ட்... க்கா! நீங்க உங்க வீட்ல பேசற மாதிரி பேசினது நல்லது. இப்படியெல்லாம்கூட கேள்வி வரும் அப்படீன்னு இப்பத்தான் அவங்களுக்குப் புரியுது. ஆனா... நீங்க எப்படியோ ஒரு குளத்திலே கல்லைப் போட்ட மாதிரி போட்டாலும் அதோட விளைவுகள் எல்லாம் நல்லாதான் நடந்துக்கிட்டு இருக்கு" என்றாள் மாலதி.

ஜெயந்தியின் கண்களில் ஆச்சரியம் தோன்றியது.

"விளைவுகளெல்லாம் நல்லா நடந்துச்சா... என்ன சொல்றே..." என்றாள்.

"ஐயோ... அதை ஏன் கேட்கறீங்க" என்று மாலதியும் அகிலாவும் கலகலவென்று சிரித்தார்கள்.

"ஒரே ரொமான்ஸ்தான்கா... வீடு ஃபுல்லா... இந்த கோவிந்தசாமி அப்பா இருக்காரே..." என்று தனது தந்தையினுடைய பெயரைச் சொல்லிச் சிரிக்கவும், மற்றவர்களும் சிரித்தார்கள்.

"நாங்க தனியாப் பேசும்போது இப்படித்தான் பேசிக்குவோம்" என்று கிசுகிசுத்தாள் மாலதி.

"கோவிந்தசாமி அப்பா இருக்காரே அவரு... ரத்தினாம்மாகிட்டே போய் ரொமான்ஸ்... இந்த கிருஷ்ணசாமி



சித்தப்பா... அடேயப்பா... ஒவ்வொருத்தரும் அவங்கவங்க வீட்டுக்காரம்மாகிட்டே போய் ரொமான்ஸ்..." என்றாள்.

"ரொமான்ஸ்லா...?" என்று ஆச்சரியமாக ஜெயந்தி பார்க்கவும், "ஆமாக்கா உங்களுக்கு விஷயம் தெரியாதில்லை. இப்பத்தான்... இத்தனை வருஷம் கழிச்ச இந்த பெரியவங்களெல்லாம் போய் அவங்கவங்க ஃஷெல்ப்...ன்னு பொம்மைகளை வச்சிருக்காங்களே... தலையாட்டி பொம்மைகள். அவங்ககிட்டப் போய், "நிஜமாவே நீங்க சந்தோஷமா இருக்கீங்களான்னு கேட்டிருக்காங்க" என்றாள்.

ஜெயந்தி அப்படியே வாயைப் பிளந்து கொண்டு நின்றாள். "ஆமாக்கா... கேட்டிருக்காங்க. அதுக்கு காரணம் என்ன தெரியுமா, நீங்க போட்ட வெடி" என்று கலகலவென்று சிரித்தார்கள்.

ஜெயந்தியின் முகம் மலர்ந்தது.

இன்னொரு புறத்திலே பாலகுமாரன் எப்படியிருக்கிறானோ என்ற கவலையும் தோன்றியது.

"அவரு... அவரு... எப்படி இருக்கிறாரு?" என்றாள் கவலையும் வெட்கமும் தோய்ந்த முகத்தோடு.

"அவரு தானே... இந்தாங்க. செல்போனு. இதுல பேசுங்க. நீங்க கூப்பிட மாட்டீங்களான்னு அங்க காத்துக்கிட்டு இருக்காங்க." என்று மாலதியும் அகிலாவும் செல்ஃபோனைக் கொடுத்து விட்டு மெதுவாக அந்தப்பக்கம் நகர்ந்தார்கள்.

ஏதோ கேட்பதற்காக வந்த ஜெயந்தியின் அம்மாவையும் அப்பாவையும்... "உஷ்... அந்தப்பக்கம் போகலாம் வாங்க..." என்று சைகை காட்டி இழுத்துக் கொண்டு போனார்கள்.

செல்போனை எடுத்து காதுக்கு கொடுத்த ஜெயந்தி... அவளே எதிர்பாராத விதமாக "என்னங்க" என்றாள்.

அப்புறம் அவனும் குரல் உடைந்துபோக கண்களில் கண்ணீர் தேங்க "டேய்! ஜெயந்தி" என்றான்.

## அத்தியாயம் 19

தேம்பித் தேம்பி அழுது விட்டாள் ஜெயந்தி.

"டேய்! ஜெயந்தி, அழாதேடா... அழாதேடா... என்று அந்தப் பக்கம் தவித்துப் போனான் பாலகுமாரன்.

"எங்கே திரும்பினாலும் உங்களைப் பார்த்த மாதிரி இருக்கு... நீங்க நிக்கற மாதிரி இருக்கு" என்று அவள் தேம்ப... அவன் அந்தப் பக்கம், "எனக்கு மட்டுமென்ன... இங்கேயும் சாப்பிடப் பிடிக்கலை. தூங்கப் பிடிக்கலை... எங்க திரும்பினாலும் உன்னைப் பார்க்கறமாதிரி இருக்கு. உன் குரல் கேட்கற மாதிரி இருக்கு. ஆனாலும் உன் மேல கோபம்" என்றான்.

அவள் திகைத்துப்போய், "ஏன், ஏன்? பெரியத்தான்கிட்ட நான் தப்பா பேசிட்டேனே... அதனாலயா?" என்றாள்.

"அது வேற டாபிக்... அதை அப்புறமாப் பேசிக்கலாம். இப்ப நமக்குள்ள நடக்க வேண்டியதை மட்டும் பேசுவோம்" என்றான் பாலகுமாரன்.

"அப்படி... நான் என்ன தப்பு செஞ்சேன்? திடீர்னு கிளம்பி வந்தேனே... அதைச் சொல்றீங்களா?" என்றாள் அவள் தேம்பிக் கொண்டே.

"ஹே... அதுவும்தான். அதுக்கு பெரிய தண்டனை குடுக்க வேண்டியதிருக்கு. அத அப்புறம் பேசிக்கிறேன். என்னோட கோபம் எல்லாம் எதுமேல தெரியுமா? எப்படி இப்படி பத்து நாளா இருக்கப் போச்சு. என் நினைப்பு வந்திருக்கணும்ல. ஏதாவது ஒரு வழியில என்னைக் காண்டாக்ட் செய்ய முயற்சி செய்துருக்கணும்ல..." என்றான்.



அவள் பதில் சொல்லத் திணறிவிட்டு, "எனக்கும் தோணிச்சுங்க. ஆனா... எப்படி காண்டாக்ட் பண்றதுன்னு தான் தெரியல. அதுவும் நான் தொடர்ந்து தப்பு மேல தப்பு பண்ணிட்டேன். எல்லாத்தையும்விட பெரிய தப்பு, பெரியத் தானை அப்படி எல்லார் முன்னாலேயும் கேட்டிருக்கக் கூடாது" என்றாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்செறிந்தான்.

"சரி, விடு. பூனைக்கு யார் மணிகட்டுறதுன்னு இருந்தது. நீ மணி கட்டிட்டே. அவங்களும்தான் எல்லார் முன்னாடியும் உன்னை நிக்க வச்சு விசாரிக்க வேண்டியதில்லை. சின்ன சின்ன பசங்களை எல்லாம் வச்சிக்கிட்டு சுற்றிலும் என்னமோ பெரிய அளவில மீட்டிங் போடற மாதிரி போட்டுக்கிட்டு... இந்தப் பழக்கமெல்லாம் எங்க வீட்லேயுந்தான் மாறணும். ஓ! ஸாரி, ஸாரி... நம்ம வீட்லேயுந்தான் மாறணும்" என்று அவளுக்கு நேரடியாக இல்லாமல் வேறுவிதமாகப் பதில் சொல்லி சமாளித்தான் பாலகுமாரன். அதாவது, சமாதானம் செய்தான்.

"மாலதி உன்னைப் பார்க்க வர்றதா சொன்னாள். அதான் எங்கிட்ட பேசச் சொல்லு அப்படீன்னு சொல்லி அனுப்பிச்சேன்" என்றான்.

"தேங்க்ஸ்ங்க... தேங்க்ஸ்" என்றாள்.

"நீபாட்டுக்கு பெட்டியத் தூக்கிட்டு சர்...ன்னு போயிட்டியே. ம்... அவனவன் நிலைமையைப் பத்தி யோசிக்க வேண்டாம். இங்கே நான் என்ன பாடுபட்டுட்டு இருக்கேன்னு உனக்குத் தெரியுமா?" என்றான்.

அவளும் உடனே காட்டமாக, "நான் மட்டும் என்ன சந்தோஷமாவா இருந்தேன். நானும்தான் கஷ்டப்பட்டுட்டு இருந்தேன். எனக்குந்தான் சாப்பாடு இறங்கலை. தூக்கம்

வரலை நீங்க என்ன பண்றீங்களோ... என்ன பண்றீங்களோ என்று தவிச்சுக்கிட்டேதான் இருந்தேன்'' என்றான்.

''அப்படியொண்ணும் தவிச்ச மாதிரி தெரியலை. இல்லாட்டி பத்து நாள் நீ பேசாம இருந்துருப்பியா?'' என்றான்.

அவள் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''இந்த பத்து நாள்ல கத்தைக்கத்தையா எத்தனை கவிதை எழுதி வச்சிருக்கேன்னு நான் வரும்போது படிக்கக் காட்டறேன்'' என்றாள்.

''ஏய்... ஏய்... சோகக் கவிதையெல்லாம் வேண்டாம். ஏதாவது நல்ல கவிதையா இருந்தா படிக்கக் காட்டு.''

''எல்லாக் கவிதையுந்தான்... பிரிவுலதான் எப்போதுமே அன்பு பெருகுமாம். தெரியுமா?'' என்றாள்.

அவன் மெல்லச் சிரித்தான்.

''அதென்னமோ உண்மைதான் ஜெயந்தி. இந்த ஜெயந்திப் புள்ளை மேல இத்தனை அன்பிருக்கா... என்று இப்போது தான் எனக்கே புரிஞ்சது'' என்றவன், அவர்களுக்கேயான சில அந்தரங்கமான விஷயங்களைப் பேசி சற்று நேரம் சீண்டினான்.

அவள், ''என்ன நீங்க... போன்ல இதெல்லாம் பேசிக்கிட்டு...'' என்றாள்.

''ஆமாம். நேர்ல பேசணும்தான். ஆனா, எனக்கே என்ன பண்றதுன்னு தெரியலை. நீ வேற பெரியண்ணனை இல்லாத கேள்வியெல்லாம் கேட்டுட்டே... ம்...'' என்றவன், உற்சாகமாக வேறொரு விஷயத்தையும் சொன்னான்.

''ஆனா, என்னாச்சு தெரியுமா? நீ என்னமோ எதை நினைச்சுக் கேட்டேன்னு தெரியல. ஆனா... இங்க பெரிய பெரிய வேலையெல்லாம் நடக்குது. எல்லாருகிட்டேயும் ஒரு மாற்றம் வந்திருக்குது. ஜெயந்தி, ஒரு நாலைந்து



வாக்கியம் இத்தனை சிந்தனையைத் தோற்றுவிக்குமா அப்படீன்னு எனக்கே ஆச்சரியமா இருக்கு'' என்றான்.

''நிஜமாவாங்க... அப்ப பெரியத்தானுக்கு என் மேல கோபம் இல்லையா?'' என்று கேட்டாள்.

''கோபமா... கோபப்படற மாதிரியா நீ கேட்டிருக்க... நெத்தியடியால்ல கேட்டிருக்கே. அதனால அவங்களும் யோசிக்கிறாங்க. இன்னொரு விஷயம் தெரியுமா, மூணு அண்ணன்களும் மூணு அண்ணிகிட்டேயும் இத்தனை நாள் அழிச்சு, சந்தோஷமா இருக்கீங்களான்னு கேட்டிருக் காங்க. நாங்க உங்களைச் சந்தோஷமா வச்சருக்கோமான்னு கேட்டிருக்காங்க. இதுக்குமேல என்ன வேணும்? அதனால் நீ எதுலேயும் சிக்கலைன்னாலும் விளைவுகள் என்னமோ நல்லவிதமாதான் போயிட்டு இருக்கிற மாதிரி தெரியுது'' என்றான்.

அந்த நேரத்தில் ஜெயந்தி கொஞ்சம் கவலையானாள்.

''ஏங்க! இந்த சின்னவங்க எல்லாருமா சேர்ந்து ஏதோ எதிர்த்துகிதிர்த்துப் பேசிட்டாங்களோ?'' என்றாள்.

பாலகுமாரன், ''அதை ஏன் கேட்கற ஜெயந்தி, இந்தப் பசங்கல்லாம் நேரடியாக எதிர்த்துப் பேசலை. என்னென்ன வேல செஞ்சாங்கத் தெரியுமா? அவங்கவங்க எதிர்ப்பை விதவிதமா காட்டிட்டாங்க'' என்றான்.

''அப்படியா?'' என்று அவள் ஆர்வமாகக் கேட்க...

''அப்படித்தான். அதையெல்லாம் நேர்ல பேசிக்குவோம். இப்ப வேற பேசு'' என்றான்.

''வேற என்னத்தைப் பேசறது?'' என்று அவள் தயங்க...

''அன்னிக்கு...'' என்று ஏதோ ஆரம்பித்துச் சொல்ல...

''பேசாம இருங்க'' என்று முகம் சிவந்து போனாள் ஜெயந்தி.

''இப்ப வரைக்கும் பத்து நாளா பேசாமத்தான் இருந்துட்டு இருக்கேன். இனிமேல்லாம் பேசாம இருக்

முடியாதுடா சாமி... நைட்டு... செல்போன்ல கூப்பிடறேன். என்ன... அதுக்குள்ள ஏதாவதொரு வழியை யோசிக்க வைப்போம். இந்த மாலதியும் கலையும் ஏதோ சேர்ந்துட்டு பண்ணிக்கிட்டிருக்காங்க போலிருக்கு. ஏதாவது ஒரு வழி பிறக்கும். பொறுத்துப் பார்ப்போம் ரெண்டு நாள். எந்த சேஞ்சும் வர்லைன்னா... நேரடியா நான் போயி அண்ணன் கிட்ட சொல்லிட்டு உன்னை வந்து கூட்டிட்டு வர்றேன். அதிகபட்சம் ரெண்டு நாள். அவ்வளவு தான்'' என்றான்.

''சரிங்க... சரிங்க''... என்று குதூகலமானாள் ஜெயந்தி.

''அம்மணி! இந்த ரெண்டு நாளும் செல்போனையெல்லாம் சார்ஜ் பண்ணி வச்சுக்கோ. எப்ப வேணுமானாலும் கூப்பிடுவேன்'' என்றான்.

''கூப்பிடுங்க... கூப்பிடுங்க என்று அவளும் அவன் எப்போதும் தங்கள் தனிமையில் பதில் கொடுக்கிறாற் போல தங்களுக்கே உரிய சங்கேத வார்த்தையில் ஏதோ பதில் சொல்ல, ''ம்...ஊ...வர்றேன்... வர்றேன்'' என்று அவன் சிரித்துவிட்டு போனை ஆஃப் செய்தான்.

ஜெயந்தி உற்சாகம் பொங்க நடமாடினாள்.

இரண்டு நாள் கழிந்திருக்கும். இரண்டு நாள்னு சொன்னாரே. இன்னும் சேஞ்ச் ஒண்ணும் தெரியலயே என்று அவள் உள்ளுக்குள் கவலையாக நடமாடிக் கொண்டிருக்க. இரண்டாவது நாள் மாலை அவர்கள் வீட்டு முன்னாலே சர்...சர்ரென்று கார்கள் வந்து நின்றன.

பெண் பார்க்கும்போது வந்தார்களே. அதுபோல மூன்று அண்ணன்மார்களும் தங்கள் மனைவிகளோடு வந்திறங்கினார்கள். அன்றைக்குப் போலவே இன்றைக்கும் ஜெயந்தியின் பெற்றோர்கள் இருவரும் பதைபதைத்துப் போய் வரவேற்றார்கள்.



ஜெயந்தியும் ஓடிவந்து, ''வாங்க... வாங்க... என்று வரவேற்றாள்.

அப்படி வரவேற்றபோது பெரியத்தானின் முகத்தைப் பார்ப்பதற்கே அவளுக்கு பயமாகத்தான் இருந்தது. அவசர அவசரமாக இரண்டு மூன்று சேர்கள் ஆண்கள் அமர்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, பெண்கள் அமர்வதற்குப் பாயைப் போட்டுவிட்டு அவள் சட்டென்று ஒரு காரியம் செய்தாள்.

பாலகுமாரன் சகோதரர்களுக்குப் பின்னாலே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவனும்கூட ஜெயந்தியின் இந்தக் காரியத்தை எதிர்பார்க்கவில்லை.

''பெரியத்தான். என்னை மன்னிச்சுடுங்க. நானும் வயசுக்கு மீறிப் பேசிட்டேன். எனக்கு அனுபவம் இல்லை. தெரியாத்தனமாப் பேசிட்டேன். மன்னிச்சுடுங்க...'' என்று சட்டென்று பெரியத்தானின் காலில் விழுந்தாள்.

பெரியத்தான் ஒரு நிமிடம் நெகிழ்ந்து போனார். மெல்ல அவள் தலையைத் தடவிக்கொடுத்து ''எழுந்திரும்மா... ராஜாத்தி. நீ ஒண்ணும் பெரிய தப்பெல்லாம் பண்ணிடலை'' என்றார்.

''இல்லை. பெரியத்தான். நான் அப்படியெல்லாம் கேட்டிருக்கக் கூடாது. நீங்க இந்தக் குடும்பத்துக்காக எவ்வளவோ தியாகம் செய்திருக்கீங்க. இந்தக் குடும்பத்தையே கட்டிக் காத்திருக்கீங்க. நீங்க உங்க சுயத்தைப் பத்தியே நினைக்காம எவ்வளவோ செஞ்சிருக்கீங்க. நான் அவசரப்பட்டு பேசிட்டேன். ஆனா... நீங்க உங்க சுயம்னு யோசிச்சு இருந்தீங்கன்னா இந்தக் குடும்பம் இவ்வள மேலுக்கு வந்திருக்க முடியுமா?'' என்றாள் ஜெயந்தி.

கோவிந்தசாமியின் முகம் மலர்ந்தது. ஒரு பெருமூ விட்டார்.

''அதெல்லாம் இருக்கட்டும்மா... அதெல்லாம் உண்மை தான். ஆனா, காலம் ஒரே மாதிரி இருக்காதில்லையா. எங்க காலம் மாறிடுச்சு. உங்க காலம் வேற. காலத்துக்கேற்ப நாங்களும் எங்களை மாத்திருக்கணும் இல்லையா. அப்படி நாங்க மாத்திக்கலையே. அதை நீ சரியா சொல்லிக் காண்பிச்சுட்டே'' என்றார்.

அவன் மறுபடியும் குற்ற உணர்வோட கூட ஏதோ சொல்லப்போக... ''வேண்டாம்டா... கண்ணு. இதோட விடு. இந்தப் பேச்சை விடு. பத்து நாளு நீபாட்டுக்குப் பெட்டியைத் தூக்கிட்டு வந்து உட்கார்ந்துட்டே. அந்தப் பையன் பாவம். பரிதவிச்சுப் போயிட்டான். சரி, பேக் பண்ணி வச்சுருக்கியா. உடனே கிளம்பு'' என்றார்.

ஜெயந்தியின் பெற்றோர் இருவர் முகத்திலும் அளவுகடந்த சந்தோஷம் பொங்கியது.

அவர், சிரித்துவிட்டு அவர்களைப் பார்த்து, ''அம்மா.. எங்க வீட்டுப்பொண்ணு. கூட்டிட்டுப் போக வந்திருக்கோம். அனுப்பி வையுங்க'' என்றார்.

''எங்களை என்னங்கய்யா கேட்கிறது. தாராளமா கூட்டிட்டுப் போங்க'' என்றார் ஜெயந்தியின் அப்பா.

ஜெயந்தி சந்தோஷமாக ஒரு பெரிய சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

சட்டென்று பாலகுமாரன் வந்து, அந்த சூட்கேஸை வாங்கிக்கொண்டு போனான்.

''இந்தா பாருடா... நீ அந்தக் காருக்குப் போ'' என்றார்கள்.

அந்த காரில் மூன்று நான்கு வாண்டுகள் அமர்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களை நடுவே அமர வைத்து விட்டு அந்த வாண்டுகளெல்லாம் இரண்டு பக்கமும் அமர்ந்து கொள்ள, கார் கிளம்பியது.



அவன் மெல்லிய குரலில், ''நானே எதிர்பார்க்கலை ஜெயந்தி. அண்ணன்கள் சட்டென்று கிளம்பி வருவாங்க அப்படீன்னு'' என்றான்.

அவளும் ஆச்சரியமாக, ''ஆமாங்க. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. நானும் திகைச்சுப்போய்தான் இருக்கேன்'' என்றாள்.

''இல்லை. அவங்களுக்கே தோணிருச்சுப் போலிருக்கு'' என்று ஏதேதோ சமாதானம் சொல்லப் பார்த்தாலும்கூட...

அங்கே, கோவிந்தசாமி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு தானிருந்தார்.

இந்தப் பெண்... இன்றைக்கு வந்த பெண்... எவ்வளவு துல்லியமாக தன் மனத்தில் இருந்த திட்டங்களை உணர்ந்து கொண்டாள். ஆனால், அப்படி போட்ட திட்டங்களுக்காக இப்போதும் நான் தலைகுனிந்து நிற்கப் போவதில்லை.

காரணம் என்னவென்றால், இந்தக் குடும்பம் ஒற்றுமையாக இருக்க வேண்டும், இந்த குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே நான் அப்படிச் செய்தேன் என்று எண்ணிக் கொண்டுதான் புறப்பட்டிருந்தார்.

வாடிய முகத்தோடு நடமாடிக் கொண்டிருந்த பாலகுமாரனை, கடையில் இருந்து, ''வீட்ல கொஞ்சம் ஜோலி இருக்கு. நீ போ'' என்று அனுப்பி வைத்தார்.

நாலரை மணிக்கு அங்கங்கே கடை ஆட்களைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மூன்று அண்ணன்மார்களும் வீட்டுக்கு வந்தார்கள். அண்ணிமார்கள் எல்லோரும் எங்கேயோ போவதற்கு தயாராக இருப்பதை பாலகுமாரன் உள்ளே வந்தபோதே கவனித்தான்.

ஆனால், அதில் அவனுக்கு ஆர்வம் ஏற்படவில்லை.

யாரோ எங்கேயோ போகட்டும் என்பது போல அவர்கள் கொடுத்த காபியை குடித்துவிட்டு அறைக்குப் போனான். அரை மணி நேரம் போயிருக்கும்.

கோவிந்தசாமியின் குரல் கேட்டது. "டேய்! பாலு... புறப்படு..." என்று.

பாலகுமாரன் வெளியே வந்து, "எங்கே?" என்றான்.

"என்னடா பயலே, எங்கேன்னு கேட்குறே... பத்து நாளா பொண்டாட்டியை விட்டுப்போட்டு உட்கார்ந்திருக்கிறே... எங்கிட்ட வந்து கேட்க வேண்டாமா? 'நீ ராஜகர்ப்பார் நடக்கறதுக்கு என் பொண்டாட்டிதான் கிடைச்சாளா? பத்து நாளா அவளை அனுப்பிச்சுட்டு நான் ஒருத்தன் பிரிஞ்சு உட்கார்ந்திருக்கேன்னு கொஞ்சமாவது யோசிச்சிங் களான்னு கேட்க வேண்டாம்" என்றார்.

பாலகுமாரன் திகைத்தான்.

"சரி, விடு. நீ அப்படி கேட்கலைன்னாலும் நீ அப்படி கேட்டதா நினைச்சுட்டு நான் செய்ய வேண்டிய காரியத்தை செய்ய வேண்டாமா? வாடா... போய் அந்த புள்ளயக் கூட்டிட்டு வரலாம்" என்றார்.

சட்டென்று பாலகுமாரன் அண்ணன் அருகில் வந்து, "அண்ணா! வேண்டாண்ணா... நீங்க போயி...?"

"டேய். என்ன நான் போயி... நான் எப்படி இந்த குடும்பத்துக்கு தலைவனோ அதேமாதிரி தப்பு நேர்ந்தாலும் உடனே மன்னிப்பு கேட்டு திருத்திக்கிறதும் நானாகத்தான் இருக்கணும். நான் சொல்லி மத்தவங்கள திருத்துவதைவிட என்னைப் பார்த்து மத்தவங்க திருந்தணும்டா... நான் மட்டும் ஒரு தப்பை செஞ்சிட்டு தலைநிமிர்ந்து நடந்து கிட்டிருந்தேன்னா... நாளை இதோ இந்த அகிலாவோ, இல்லை இந்த குட்டிப் புள்ளையோ ஏதாவது தப்பு செஞ்சா எப்படி நான் நிமிர்ந்துகிட்டு கேட்கிறது" என்றார்.

பாலகுமாரன் திகைத்துப்போய் அண்ணனைப் பார்த்தான். எந்த விதமான ஈகோவும் இல்லாமல், "ஏம்புள்ள! பலகாரம்லாம் எடுத்து வச்சுட்டீங்களா. நிறைய எடுத்து



வையுங்க" என்று ரத்தினாம்மாளைப் பார்த்துக் கேட்டு விட்டு எப்போதும் போல கம்பீரமாக காரில் ஏறிய அண்ணனைப் பார்த்தான்.

அதை நினைவுகூர்ந்தே இப்போது மனைவியிடமும் பகிர்ந்து கொண்டான்.

இரண்டு பேரும் ஒரு நிமிடம் நெகிழ்ந்துபோய் அமைதியாக அமர்ந்திருந்தார்கள்.

"ச்சே...எனக்கு இடமே பத்தல..." என்று இரண்டு வாண்டுகளும் இரண்டு பக்கமும் நெருக்க, இருவரும் சற்று நெருங்கினாற்போல அமர்ந்து கொண்டார்கள்.

பத்து நாட்களுக்கு பிறகான அந்த ஸ்பரிசம் அவர்களை மெய்மறக்கச் செய்தது.

## அத்தியாயம் 20

உரத்த குரலில் பேசிக்கொண்டே வந்தான் நவநீதன்.

"என்னடா... பிக்னிக் போறீங்களா?" என்று கேட்டான்.

அந்தப் பக்கத்தில் இருந்து என்ன பதில் வந்தது என்று தெரியவில்லை.

இவன் இந்தப் பக்கம் இருந்து பதில் சொன்னான்.

"அது சரிடா... உங்க ஸ்கூலு கோ-எஜுகேஷன் ஸ்கூலு... நீங்க கேர்ள்ஸ், பாய்ஸ் எல்லாருமா... பிக்னிக் போவீங்க?

"என்னது... பழைய ஸ்கூல் ஸ்டூடண்ட்ஸா... பரவாயில்லைடா... எப்படியிருந்தாலும் கேர்ள்ஸ் அண் பாய்ஸ் போவீங்க... நான் வரலைடா..." என்றான்.

இடைவெளி விட்டுத் தொடர்ந்தான்.

"என்னது... கர்னாடகமா...? பழைய காலத் இருக்கேனா... உனக்கு எங்க நிலவரமே புரியலைடா... பாட்டுக்கு வர்றேன். ஆனால், பொண்ணுங்ககிட்ட

வேண்டாம்னு சொல்றே... இருந்தாலும் நான் உங்க கூட வருவேன். நீங்க ஒரு பத்து பசங்க... பத்து பொண்ணுங்க... அப்படீன்னு வருவீங்க. ஆனா... எங்காவது போயி சாப்பிடுவோம்னு உட்காருவோம். போட்டோ எடுப்பீங்க... அதுல ரெண்டு பொண்ணுங்க நடுவிலே விழுந்து வைக்கும். அந்த போட்டோ மட்டும் எங்க வீட்ல கிடைச்சுதுன்னு வச்சுக்குங்க... நிலவரமே வேறயா போயிரும்'' என்றான்.

மறுபடியும் கொஞ்சம் இடைவெளி கொடுத்துவிட்டு, "என்னது உனக்கு புரியலையா? எங்க வீடு வசதியான வீடு தான். இல்லைன்னு சொல்லல. ஆனா, இங்க காலம்... போறது எப்படீன்னு உனக்குத் தெரியாதுடா...'' என்றான்.

இப்போது ஸ்பீக்கரை ஆன் செய்துவிட்டுப் பேசினான்.

அந்தப் பக்கம் இருந்து அவனது நண்பன், "இதுதானே உங்க வீட்ல பிரச்னை... அப்படியென்னடா... நல்லா வசதியா இருக்கீங்க... வண்டியில வர்றீங்க... போறீங்க...'' என்று மறுபடியும் கேட்டான்.

அப்போது நவனீதன் சொன்னான். "டேய்! கிருஷ்ணா... உனக்கு விஷயம் தெரியாது. எங்க வீட்ல பெரியவங்கன்னு சில பேரு இருக்காங்க'' என்றான்.

அந்த நேரத்தில் டைனிங் ஹாலுக்கு அந்தப் பக்கமாகத் தான் நின்று பேசிக்கொண்டிருந்தான்.

அதே நேரம் டைனிங் ஹாலில் கிருஷ்ணசாமி, கோவிந்தசாமி, நாராயணசாமி அவர்களோடு பாலகுமாரனும் கூட அமர்ந்து கொண்டிருந்தான்.

நான்கு பேருமாக காலை சிற்றுண்டி சாப்பிடுவதற்காக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

நவனீதன் வேண்டுமென்று பேசினானா, இல்லை... புரியாமல் பேசினானா என்பது தெரியவில்லை.



ஆனால்... இவர்கள் கேட்க வேண்டும் என்றுதான் பேசினான் என்றுதான் பாலகுமாரனுக்குத் தோன்றியது.

இப்போது அவன் தொடர்ந்தான்.

"இல்லைடா... ரெண்டு பொண்ணுங்க... ஏதோ ஒரு பொண்ணு ஒரு ஓரத்துல தலையைக் காண்பிச்சிருந்தாகூட உடனே எங்க வீட்ல ஒரு பெரிய விசாரணையே நடக்கும்டா... என்னா எல்லாம் பெரியவங்க, மூணு குடும்பம்... இல்ல... நாலு குடும்பம்... இல்ல... அஞ்சு குடும்பம்... எல்லா குடும்பத்தையும் உட்கார வச்சு ஒரு மாநில மாநாடே போட்டு இந்தப் பொண்ணு தலை எப்படி இதுக்குள்ள வந்துச்சு... அப்படீன்னு கேட்பாங்கடா...'' என்றான்.

அந்தப் பக்கம் கிருஷ்ணா, கடகடவென்று சிரித்தான்.

"டேய்! ஜோக் அடிக்காதேடா'' என்றான்.

"ஜோக் இல்லைடா... நான் உண்மையைச் சொல்றேன். எங்க பெரியப்பாவைக் கேட்காம எதுவுமே நடக்காது. அதுமட்டுமல்ல... அவங்களுக்கு வியாபாரம் தெரியும். எங்களையெல்லாம் பொத்திப் பொத்தி வளர்க்கத் தெரியும். ஆனா, நான் இப்படிச் சொல்றேன்னு அவங்களத் தப்பா சொல்றேன்னு நினைக்காதே. எங்க மேல குண்டூசி பட்டாகூட துடிச்சுப்போயிருவாங்க. ஆனா, அதேசமயத்துல எங்களுக்கும் சில ஆசைகள் இருக்கும், எங்களுக்கும் சில சுதந்திரங்கள் தேவையிருக்கும் என்பது புரியாதுடா. பேசியும் புரியவைக்க முடியாதுடா... அவங்க வந்து எப்படீன்னா... பெரிய சிறகை விரிச்சு எங்களைப் பத்திரமாக பாதுகாக்கிறதா நினைச்சு... அன்பைப் பொழியறாங்க. ஆனால் சில நேரத்துல அந்த அன்புகூட மூச்சை முட்டச் செய்யும் என்பது அவங்களுக்குப் புரியலை'' என்றான்.

"டேய்... டே...டே...டேய்! லெக்சர் அடிக்காதேடா... ரொம்ப கஷ்டமாயிருக்குது'' என்றான் கிருஷ்ணா அந்த பக்கம்.

''இல்லைடா... நான் உண்மையைச் சொல்றேன். எங்க நிலைமையைப் புரிஞ்சுக்கோ... பசங்க மட்டும் போறீங்களா... சொல்லு. நான் வர்றேன். நாளைக்கு யாராவது பார்த்துட்டு வந்து சொன்னாகூட எங்க பெரியப்பா ஒண்ணும் கேட்க மாட்டாங்க. எங்க அப்பாவும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. ஆனா... பொண்ணுங்ககூட எங்காவது பேசிட்டோம்னு வச்சுக்கோ... அப்படித்தான் எங்க வீட்ல ரீசன்டா ஒரு பிரச்னை நடந்துச்சு. அவ்வளவு ஏன். இந்தமாதிரி தெரிஞ்சவங்ககிட்ட பேசிட்டது தெரிஞ்சதுனால... எங்க சித்தி கோவிச்சுக்கிட்டு... பாவம் அவங்க; இப்ப அவங்க வீட்ல இருக்காங்க'' என்றான்.

''அது சரிடா. அதெல்லாம் உங்க குடும்ப விவகாரம்'' என்றான் கிருஷ்ணா.

''ஆமாம். எங்க குடும்ப விவகாரம்தான். ஆனா, எந்த அளவு பிரச்னை போகும்னு சொல்றதுக்காகச் சொன்னேன். ஸாரிடா... நான் வர முடியாதுடா'' என்று சொல்லிவிட்டு போனை ஆஃப் செய்துவிட்டு டைனிங் ஹாலுக்கு வந்து இவர்கள் அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு அதிர்ச்சியானவன் போல நடித்துக்கொண்டு அங்கிருந்து போய் விட்டான்.

உண்மையில் பாலகுமாரனுக்கு குபீரென்று சிரிப்பு வந்தது.

'இந்தப் பய எப்படி நாடகம் போடறான்' என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

பெண்களும்கூட பரிமாறுவதற்காக நின்றுகொண்டிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நேரடியாகச் சொல்வதற்குப் பதிலாக குழந்தைகள் விதவிதமாக தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகிறார்கள் என்பது அவர்களுக்கும் புரிந்தது.



முதல் நாள் அப்படித்தான் வித்யாவதி வீட்டில் அவருடைய இரண்டு மகள்களும் தனியாக குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். உடனே வித்யாவதி, 'என்னடா நிரஞ்சன்?'' என்று கேட்டார். ''நானும் ஜானகியும் மைதிலியும் எதையும் பேசிக்குவோம். அதையெல்லாம் உங்ககிட்ட சொல்லணும்னு என்ன இருக்கு?'' என்றான்.

''ஏன்டா... சொல்லக்கூடாதா, அப்படி என்ன பேசிக்கறீங்க?'' என்று கேட்டார் வித்யாவதி.

''நாங்க ஒண்ணும் பேசலைம்மா. நாளைக்கு என்ன நம்ம வீட்ல மெனுவா இருக்கும். ஒவ்வொரு நாளும் ஒருத்தருக்கு புடிச்சதைப் போடுவீங்க இல்ல... அது மாதிரி நாளைக்கு என்ன பண்ணுவீங்க... அப்படீன்னு பேசிக்கிட்டு இருந்தோம்'' என்று சொல்லி அந்தப் பக்கம் போய் விட்டார்கள்.

ஆனால், வித்யாவதி விடுவேனா என்று அந்தப் பக்கம் போய் நின்றுகொண்டாள்.

அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று காது கொடுத்துக் கேட்டார்.

அப்போது ஜானகி சொல்லிக் கொண்டிருந்தாள்.

''அண்ணா! வீடு பழைய மாதிரியே இல்ல'' என்று.

அதற்கு நிரஞ்சன் சொன்னான். ''எப்படி இருக்கும்? நம்ம வீட்டுக்கு வந்தவங்களை அனுப்பிச்சுட்டு நாமெல்லாம் கவலையில்லாம சாப்பிட்டுக்கிட்டு இருக்கோமே... அது எப்படி வீட்ல அமைதி இருக்கும்? பாரேன். அந்தப் பெரியம்மா... அம்மா... இன்னொரு பெரியம்மா... ரெண்டு பெரியம்மாக்களும் கொஞ்சமாவது ஜெயந்திக்காவை கூட்டிட்டு வர முயற்சி பண்ணலாம்ல... அப்படியே கல்லுப் பிள்ளையார் போல அவங்கவங்க வேலையைப் பார்த்துட்டு இருக்காங்க'' என்றான் நிரஞ்சன்.

உடனே ஜானகி. "பொண்ணா... அவங்களுக்கு என்னென்னா அதிகாரம் இருக்கு. அம்மா... பெரியம்மா போய் பேசினா மட்டும் உடனே பெரியப்பாக்களெல்லாம் கேட்கப் போறாங்களா? உங்க வேலையப் பாருங்க அப்படீன்னு சொல்வாங்க" என்றாள்.

உடனே நிரஞ்சன், "ஆமாம். பாவம்" என்று சொல்லிக் கொண்டே போனார்கள்.

வித்யாவதி யோசனையுடன் நின்றுகொண்டிருந்தாள்.

"ஓ... இப்படியும் இருக்குமோ. இந்தக் குழந்தைகள் சொல்வதைப் போல நமக்கு இந்த வீட்டில் ஒரு அதிகாரமும் இல்லையோ. இருந்திருந்தால் இப்படி பத்து நாட்களுக்கு மேலாக ஜெயந்தியை அனுப்பிவிட்டு அமர்ந்திருக்க மாட்டோமோ என்று எண்ணிக் கொண்டாள்.

இவருக்கு இப்படி ஒரு அனுபவம் என்றால் மாணிக்கம் மாவுக்கு வேறு விதமான அனுபவம்.

கோவிந்தசாமி, ரத்தினாம்மாவுக்கு அங்கே வேறுவித மான அனுபவம்.

அகிலாவும் மாலதியும் அவர்களைக் கேட்காமலேயே போவது என்று முடிவு செய்தார்கள்.

முடிவு செய்துவிட்டு நேராக ரத்தினாம்மாளிடம் வந்தார்கள்.

"அம்மா!" என்றார்கள்.

"என்ன?" என்றார் ரத்தினாம்மாள்.

"அம்மா, நானும் மாலதி அக்காவும் போய் ஜெயந்தியக் ாவை பார்க்கப் போறோம்" என்றாள் அகிலா.

"ஏய். விளையாடாதீங்கடி..." என்று அதிர்ந்துபோனார் த்தினாம்மாள்.



"என்ன விளையாடுறது. நீங்களெல்லாம்தான் விளையாடிக்கிட்டு இருக்கீங்க. ரெண்டு பேரும் பாவம். ஜெயந்திக்கா அவங்கபாட்டுக்கு இருந்தவங்களை... வீடு தேடி பொண்ணு கேட்டு கல்யாணம் பண்ணிக் கூட்டிட்டு வந்து இங்க உட்கார வச்சுட்டு... என்ன தப்பு பண்ணினாங்க. ப்ரெண்ட் வழியில பார்த்து பேசினாராம். அதுக்காக பெரிய விசாரணை பண்ணி அவங்களை அனுப்பிச்சுட்டீங்க. கொஞ்சம் யோசித்துப் பாருங்க. எனக்கும் கல்யாணம் பண்ணிவைக்கிறோம்னு பேசிக்கிட்டு இருக்கீங்க. அந்த வீட்ல... என்னை இப்படி நடுவில நிறுத்திவச்சு பத்து பேரு சுத்தி உட்கார்ந்து விசாரணை பண்ணினா... நீங்க எப்படி எடுத்துக்குவீங்க?" என்று கேட்டாள்.

உடனே ரத்தினாம்மாள், "என்னத்த எடுத்துக்கிறது. அப்படி எடுத்துக் கோக்க ஒண்ணும் இல்ல. விசாரணை பண்ணினா சொல்ல வேண்டியதுதான்" என்றார்.

"அது உங்க காலம். எங்க காலத்துல அப்படியெல்லாம் விசாரணை பண்ணினா ஒத்துக்க மாட்டோம்" என்றாள் மாலதி.

"ஏண்டி... ஒத்துக்க மாட்டீங்க?" என்றார் ரத்தினாம்மாள்.

"அம்மா, உங்க காலத்துல வீட்டுக்கு வெளியே போக மாட்டீங்க. எல்லாமே ஆண்கள் வாங்கிக் கொண்டு வந்து போடுவாங்க. இன்னிக்கு உலகம் அப்படியா இருக்கு நாங்களெல்லாம் படிச்சுக்கிட்டு இருக்கோம். வெளியே போறோம். நாலு பேரை பார்ப்போம். பேசுவோம் அப்படியிருக்கும்போது ஏன் பேசினேன்னு இதை ஒ பெரிய பிரச்னையா பண்ணி எங்கள அவமான படுத்தினாங்கன்னா... அதை எப்படி ஏத்துக்க முடியும்? ம்... என்று கேட்டாள்.

ரத்தினாம்மாளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

மாலதி அம்மாவின் அருகில் வந்து அமர்ந்தாள். மெல்ல அம்மாவின் தலையைத் தடவிக் கொடுத்துவிட்டு, கன்னத்தோடு கன்னம் வைத்துக் கொஞ்சினாள்.

"ஐயோ... அம்மா... நீங்கல்லாம் நல்லவங்கம்மா. நீங்களாகட்டும், வித்யாவதி அம்மாவாகட்டும், மாணிக்கத் தம்மா அம்மாவாகட்டும்... நீங்கெல்லாம் ரொம்ப நல்லவங்க. உங்க உலகமே இந்த வீடு அப்படீன்னு இருந்திட்டீங்க. நாங்க உங்களை குறை சொல்லலை. உங்க வாழ்க்கையை நீங்க வாழ்ந்துட்டீங்க. ஆனா எங்க காலத்துல... எங்க வாழ்க்கையில நாங்க வாழ வேண்டாமா? கண்டிப்பா ஜெயந்திக்கா மாதிரிதான் நானும் கேள்வி கேட்பேன். உண்மையைச் சொல்லப்போனா... நாங்கல்லாம் இத்தனை நாள் எப்படிக் கேட்கறது... எப்படிடா... இதைக் கண்ட்ரோல் பண்றதுன்னு நினைச்சுட்டிருந்தோம். ஜெயந்திக்கா ஆரம்பிச்சு வச்சுட்டாங்க. இன்னொண்ணு தெரிஞ்சுக்குங்க... பெரியவங்க இன்னிக்கு பிரச்னை பண்ணிக்குவீங்க. நாளைக்கு கூடுக்குவீங்க. ஆனா, நாங்க இளைஞர்கள்... சின்னவங்க எல்லாரும் எப்போதும் ஒற்றுமையா இருக்கப்போகிறோம்" என்றாள்.

உடனே ரத்தினாம்மாள், கடகடவென்று சிரித்தார்.

"ஆமாண்டி... வீட்ல ரகளை எப்பவும் அல்லோல கல்லோலப் படுது. நீங்க ஒத்துமையா இருக்கப் போறீங்களா?" என்று கேட்டார்.

உடனே மாலதி அம்மாவை ஆதங்கத்துடன், அன்புடன் பார்த்தாள்.

"அம்மா, நீங்க எங்களைப் புரிஞ்சுக்கவே இல்ல. நாங்க த்தம் போடுவோம், சண்டை போடுவோம். ஆனா ஏதாவது



ஒரு விஷயத்துல வெளியிடத்துல யாரையாவது விட்டுக் கொடுத்திருக்கிறோமா, நல்லா கவனிச்சுப் பாரு. இதுவரைக்கும் யோசிச்சுப் பாரு" என்றாள்.

ரத்தினாம்மாளுக்கு உண்மை எனப்பட்டது.

ஒரு நிமிடம் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்து விட்டார்.

"அது உண்மைதான். நீங்க எப்பவுமே வெளியாட்களுக்கு விட்டுக் கொடுப்பதில்லை" என்றார்.

"அப்படித்தாம்மா... எங்களுக்குள்ளே ஒரு ஒற்றுமை இருக்கு... ஏன்னா... எங்களுக்குள்ளே ஒருத்தருக்கு ஒருத்தர் மேலே நம்பிக்கை இருக்கு. இன்னொரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிட்டு வரும்போது அவ மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கணுமா, வேண்டாமா?"

"என்னடீ பெரிய பேச்செல்லாம் பேசற" என்றார் ரத்தினாம்மாள்.

"என்னம்மா, நான் பெரிய பேச்சு பேசறேன். எனக்குப் பத்தொன்பது வயசாச்சு. மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சுட்டீங்க. அப்படியிருக்கும்போது என்னுடைய எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்கணும்னு எனக்குன்னு ஒரு சிந்தனை இருக்கும்ல. அதுமாதிரி ஜெயந்திக்காவும் எத்தனை ஆசையோட... எத்தனை சிந்தனையோட வந்தாங்களோ. ஆனா, வந்த கொஞ்ச நாளைக்குள்ளாகவே அவங்களை கேள்வி கேட்டு அவங்களோட மனசை நோகடிச்சுட்டீங்களே. அதெப்படி நம்பிக்கையே இல்லாம அந்தக் கேள்விகளையெல்லாம் அப்பா கேட்டாரு?" என்றாள்.

உண்மையிலேயே ரத்தினாம்மாள் திகைத்துப் போனார்.

"என்னடி என்னன்னவோ பேசறீங்க" என்றார் பதற்றத்துடன்.

"அம்மா! உண்மையைத்தாம்மா பேசறோம். நீங்க இதையெல்லாம் அப்பாகிட்ட கேட்டிருக்கோணும்" என்றாள்.

ரத்தினாம்மாள் நீண்டதொரு பெருமூச்சுவிட்டபடி சொன்னார் "இதுவரைக்கும் எனக்கு அந்த வழக்கமே இல்லாமப் போச்சேடி" என்று.

"பரவாயில்லை. நேரடியாகக் கேட்க வேண்டாம். சாடைமாடையாக் கேட்டிருக்கலாம்ல" என்றாள்.

"என்னமோ இதுவரைக்கும் கேட்கலைடி. இனிமேல் வேணும்னா பார்க்கறேன். முயற்சி பண்ணி" என்றார் ரத்தினாம்மாள்.

"கண்டிப்பாக முயற்சி பண்ணு. நீயா பர்மிஷன் வாங்கிக் குடு. இல்லைன்னா நாங்களா போயிட்டு வருவோம். நீ என்னவோ சொல்லு... என்ன வேணும்னாலும் சொல்லிக்கோ" என்றாள்.

அதற்குப் பிறகு யோசனையில் ஆழ்ந்த ரத்தினாம்மாள், மெதுவாக, "எங்க, இந்தக் குழந்தைங்க ஜெயந்தியைப் போயி பார்த்துட்டு வர்றோம்னு சொல்லுதுங்க" என்பது போல மேலோட்டமாக பேசி பர்மிஷன் வாங்கிக் கொடுத்தார்.

அதற்குப் பிறகுதான் மாலதி, பாலகுமாரனிடம் போய் பேசினாள்.

"சித்தப்பா, நடந்ததெல்லாம் என்ன தெரியுமா...?" என ஆரம்பித்து ஜெயந்தி தனக்காகத்தான் வாதாடச் சென்றாள் என்பதையெல்லாம் விரிவாகச் சொல்லிவிட்டு, "நாங்க போயி ஜெயந்திக்காவப் பார்க்கப் போறோம்" என்றாள்.

எல்லா குழந்தைகளும் இரண்டு பேர், மூன்று பேராகச் சேர்ந்து கொண்டு அன்றைய நடத்தைக்கு தங்களுடைய எதிர்ப்புகளை தெரிவிக்கிறார்கள் என்பதை கோவிந்தசாமி, கிருஷ்ணசாமி... எல்லாருந்தான் புரிந்துகொண்டிருந்தார்கள்.



அன்றைக்கு காரில் போகும்போது வழக்கமில்லாத வழக்கமாக கோவிந்தசாமி, "இந்தா நாராயணசாமி, கிருஷ்ணசாமி! ரெண்டு பேரும் எங்கார்லேயே வாங்க" என்றார்.

மூன்று பேரும் ஒரே வண்டியில் போகும்போது... அப்படிப் போகும்போது பெரும்பாலும் குடும்ப விஷயங்களைப் பேசுவார்கள் என்பதால் டிரைவரை இறக்கி விடுவார்கள். அவர்கள் மூவரில் ஒருவர்தான் காரை ஓட்டுவார்.

அன்றைக்கு நாராயணசாமிதான் காரை ஓட்டினார். கோவிந்தசாமி பின்ஸீட்டில் அமர்ந்தவர், கடகடவெனச் சிரித்தார்.

மற்ற இருவரும், "என்னண்ணா?" என்று கேட்டார்கள்.

"அட... போ! வீட்டையே கலக்கிப் போட்டாளே... அந்த ஜெயந்திப் புள்ள..." என்றார்.

அவர்களும் ஆச்சரியமாப் பார்க்க, "ஆமாங்கறேன்... அந்த சின்னப்பையன் நவனீதன் என்ன ஜாடை பேசறான் பார்த்தியா? இந்த மாலதி புள்ளையும் அகிலா புள்ளையும் நான் நிக்கறது தெரியாம ரத்தினாம்மாகிட்டே வாங்கு வாங்குன்னு வாங்கறாங்க... ம்... பெரிய புரட்சியே பண்ணிட்டா" என்றவர், "ஏம்ப்பா... ஒருவேளை அந்தப் பொண்ணு கேட்ட கேள்வியெல்லாம் சரிதானே... நாம அடிமனசுல அப்படியொரு எண்ணந்தானே வச்சருக்கிறோம்" என்றார்.

"ஆமாண்ணா... அடி மனசுல என்ன... வெளிப்படையாகவே குடும்பத்தை கண்ட்ரோல்ல வைக்கணும்னு நினைச்சோம்" என்றார் நாராயணசாமி.

"ஏம்ப்பா... அது தப்பா?" என்று ஆழ்ந்த குரலில் கேட்டார் கோவிந்தசாமி.

நாராயணசாமி வாயைத் திறக்கவில்லை.

சற்றுநேரம் கழித்து கிருஷ்ணசாமிதான் சொன்னார். “நம்போ வாட்டோ தெரியல. ஆனா... நம்ம கடுமையான விதிகளையெல்லாம் கொஞ்சம் தளர்த்தணும் போல இருக்கு” என்றார்.

அன்றைக்கெல்லாம் யோசனை செய்ததுக்கு அப்புறம் தான் கோவிந்தசாமி, பாலகுமாரனை அழைத்து இன்னிக்கு நாம கொஞ்சம் வெளியே போகணும் என்பது போல சொன்னார்.

## அத்தியாயம் 21

“விடுங்க” என்று ஓடினாள் ஜெயந்தி.

அவள் ஓடிப்போய் ஷட்டில்காக் விளையாடுவதற்கான நெட்... அதை எடுக்கையிலே பின்னால் இருந்து அணைத்துக்கொண்டான் பாலகுமாரன்.

“என்னங்க... விளையாட விடமாட்டேங்கிறீங்க...” என்று அவள் தடுமாறினாள். அவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவளை தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான்.

கொண்டு வந்ததற்குப் பிறகு, “போதும் விளையாடியது. போலாம் வா” என்று அந்தத் தோட்டத்துக்குள்ளாகவே ஒரு பக்கமாக இருந்த அந்த சிமெண்ட் பெஞ்ச் மேல் அமர்ந்தான்.

அவளும் அருகிலே அமர்ந்தாள். அப்போதுதான் தங்கள் வீட்டில் இளசுகளெல்லாம் சேர்ந்து செய்த புரட்சியைப் பற்றியெல்லாம் விரிவாகச் சொன்னான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டு லயித்துப் போய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பிறகு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.



“என்னால்தானே இத்தனை பிரச்சனையும்” என்றாள்.

அவன் செல்லமாக அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

“உன்னால இல்ல. நீ ஒரு கருவி. நீ போயிருந்தாலும் இந்த மாதிரி பிரச்னை வந்திருக்கத்தான் செய்யும். ஏற்கெனவே குழந்தைகளுக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் இல்லையென்றால் இப்படி நீ சொன்னவுடனே அதைப் பிடித்துக்கொண்டு ஆளுக்காளு போர்க்கொடி தூக்கியிருக்க மாட்டாங்க” என்றான்.

அவள் ஒரு பெருமூச்செறிந்தாள். பிறகு புன்னகைத்தாள்.

“நான் ஆனாலும் அப்படி வெடிச்சுருக்கக் கூடாது... இல்லைங்க...” என்றாள்.

“இல்லை... இல்ல... நீ அன்னிக்கு வெடிச்சதுதான் நல்லது” என்று அவன் சமாதானப்படுத்தினான்.

“யாருக்காவது ரொம்ப கோபம் வந்துருக்கணும்னா... பெரியண்ணனுக்குத்தான் வந்திருக்கணும். ஆனா, பெரியண்ணனே இந்த விஷயத்தை எடுத்துக்கிட்டு ரசிச்சாங்க. ஏன் தெரியுமா, அண்ணன்... பிஸினஸ்ல ரொம்ப கெட்டிக் காரங்க. அவங்க எப்போதுமே சொல்வாங்க. ‘எப்போதுமே... ஆகா... ஓகோன்னு புகழ்றவங்களை நம்பக்கூடாதுடா... எதிர்மறையா கருத்து சொல்றவங்கிட்ட தான் நாம் ஆழ்ந்து விஷயத்தை வாங்கிக்கணும்’ அப்படீன்னாரு. ஏதோ ஒரு பழமொழியாட்டம் சொல்வாரு... ‘அடிக்கடி கூட இருக்கிற நண்பன் சொல்றதைவிட எதிரி சொல்றதுல உண்மை இருக்கும்’ அப்படீன்னு சொல்வாரு. அவருடைய கம்பீரத்துக்கு யாரும் எதிர் கருத்து சொல்ல மாட்டாங்க. ஆனா, எதிர் கருத்துச் சொன்னா உள்ளுக்குள்ள ரசிப்பாரு. அதுமட்டுமல்ல... அந்த கருத்து என்னங்கறதை வாங்கிக் கிட்டு யோசிப்பாரு. அந்த விஷயத்துல அவருக்கு உன்னைப் பிடிச்சிடுச்சுன்னு வச்சுக்கியேன்” என்றான் பாலகுமாரன்.

''பிடிச்சாலும் சரிங்க. இனிமேல் நான் அப்படியெல்லாம் பேசமாட்டேன்'' என்றாள்.

''அதெல்லாம் அண்ணன் விடமாட்டாங்க. இனிமே அவங்க... எதுன்னாலும் உன்னையும் கூப்பிட்டு கருத்து கேட்பாங்க. பாரேன்'' என்றான்.

அவள் முகத்தில் ஒரே நேரத்தில் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் தோன்றியது.

''அப்படியா சொல்றீங்க?'' என்றாள்.

''ஆமாம். ஜெயந்தி. புத்திசாலியான பொண்ணுடா அது... என்று எங்கிட்டப் பாராட்டிக்கிட்டிருந்தாருன்னா பார்த்துக்கியேன்'' என்றான் பாலகுமாரன்.

வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

''நீ எவ்ளோ புத்திசாலின்னு எனக்குத்தான் தெரியும்'' என்று அவன் அவளைச் சீண்ட...

''சும்மா இருங்க...'' என்று அவர் கெஞ்சலாகச் சொன்னாலும் அவனது சீண்டல்களுக்கெல்லாம் இடம் கொடுத்தாள்.

பேசிக்கொண்டே மெல்லத் திரும்பினார்கள்.

இரண்டு மாருதி வேன்களில் பட்டாளமாக வந்திறங்கினார்கள், அவர்களுடைய இளவல்கள் எல்லோரும்.

''போச்சடா... வம்பு வந்துடுச்சு'' என்று முணுமுணுத்தான்.

''பேசாம இருங்க... ரெண்டு நாள் நல்லா என்ஜாய் பண்ணினோம்தானே... அவங்கெல்லாம் வரட்டும். வந்தாதான் நல்லாயிருக்கும்'' என்று உற்சாகமானாள் ஜெயந்தி.

சட்டென்று அவர்கள் விலகிக் கொண்டார்கள்.

''ஜெயந்திக்கா...'' என்று கூச்சல் போட்டபடி ஓடி வந்தாள் மைதிலி.



''என்னடா... எல்லாரும் கூட்டம் கூடி கௌம்பிட்டீங்க?'' என்றான் பாலகுமாரன்.

''ஏன், மாமாவுக்கு ரொம்ப இடைஞ்சல் பண்ணிட்டோமாக்கும்'' என்றான் கலைச்செல்வன்.

''ஐய்...யய்யோ... இடைஞ்சல்லாம் ஒண்ணுமில்லப்பா... ரெண்டு நாளா சிக்கிட்டு ரொம்ப அவஸ்தைப்பட்டுட்டு இருந்தேன். நீங்கல்லாம் வந்திருக்கீங்க... ஒரு விடுதலை தான்னு வச்சுக்கயேன்'' என்று சிரித்துக்கொண்டே ஜெயந்தியைப் பார்த்தான்.

''ஐயோ... ரொம்ப விடுதலை, விடுதலைன்னு இருந்தவங்க... ஜெயந்தியக்கா ஊருக்குப் போனவுடனே... ஏன் சாப்பாடு இறங்காம தூக்கம் இல்லாம வத்திப்போன பலூன் மாதிரி நடமாடிக்கிட்டு இருந்தீங்க'' என்றாள் மாலதி.

''ஐய்... யய்யோ... இவள் இருக்கிற உண்மையையெல்லாம் போட்டு உடைக்கிறாளே. போச்சடா... ஏய்... கலை கொஞ்சம் உதவிக்கு வாடா'' என்றான் பாலகுமாரன்.

''மாமா! நீங்களாச்சு... அவங்களாச்சு... என்னையெல்லாம் உதவிக்குக் கூப்பிடாதீங்க'' என்றான் கலைச்செல்வன்.

''அது சரி. என்ன... உங்களுக்கு காலேஜ் இல்லையா? போக வேண்டிய வேலையெல்லாம் ஒண்ணுமில்லையா?'' என்று கேட்டான் பாலகுமாரன்.

அவர்கள் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

அவன் புரியாமல் ஜெயந்தியைப் பார்க்க...

கலைச்செல்வன் கிண்டலாகச் சொன்னான். ''உலகமே மறந்து போச்சாக்கும். இன்னிக்கு என்ன கிழமை?'' என்று கேட்டான்.

''என்ன கிழமை?'' என்று பார்த்தான் பாலகுமாரன்.

"ஞாயிற்றுக்கிழமை, அத்தான்... ஞாயிற்றுக்கிழமை" என்றான் கலைச்செல்வன், பழைய படங்களில் வசனம் பேசுவது போல.

"ஓ! அதுகூட தெரியலைடா" என்று இன்னொரு பக்கம் கேலி செய்தான் கரிகாலன்.

"சரிடா... சரிடா... விடுங்கடா. எப்பவுமே காலையில எழுந்து வேலைக்குப் போயி திரும்பிவந்து... அப்படியே பழக்கமாகி இருக்குது. இந்த ரெண்டு நாள் ஃப்ரியா இருந்துட்டேன்" என்று அசடு வழிந்தான் பாலகுமாரன்.

"ஃப்ரியா இருந்திட்டீங்களா... உலகத்தையே மறந்துட்டேன்னு சொல்லுங்க" என்று மறுபடியும் நிர்மல்குமார் காலை வார..

"ஏன்டா... ஒரு சித்தப்பங்கிட்ட பேசற பேச்சாடா இது?" என்றான் பாலகுமாரன்.

"இந்த சித்தப்பா உறவையெல்லாம் விட்டுடுங்க. நம்மல்லாம் ஒரே இனம். இளைஞர்கள். அவங்கல்லாம் பெரியவர்கள். அவ்வளவுதான்" என்று சிரித்தார்கள்.

அதற்குள்ளாக சமையல்கட்டிலிருந்து அவர்களுக்கு சிற்றுண்டி வந்தது.

"டேய்! எல்லாம் பேசி வச்சுட்டு... ஏற்பாடு பண்ணிட்டுத் தான் வந்திருக்கீங்களா? பார்...டா கண்ணையன் சார்கூட சொல்லல" என்றான் பாலகுமாரன்.

"ஆமாம். உங்ககிட்ட சொல்லி... ஐய்யய்யோ! வரப்போறாங்களான்னு முதல்ல இருந்து கவலைப்பட ஆரம்பிச்சுட்டீங்கன்னா என்ன பண்றது? வந்ததுக்கப்பறமா மொத்தமா கவலைப்பட்டுக்கிடட்டும்னுதான் அவங்க சொல்லலை" என்றார்கள் இளைஞர்கள்.

எல்லாரும் சற்று நேரம் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.



அப்போது பாலகுமாரன் கேட்டான், "ஏன்டா... கலை, ஜெயந்திக்கு என்னடா இவ்வளவு பெரிய ஆதரவு?" என்று.

அப்போது கலைச்செல்வன் சொன்னான், "ஜெயந்தி பாவம். வந்து கொஞ்ச நாள்தான் ஆச்சு. அவங்களை புரிஞ்சுக்கறதுக்கு நாம டைம் எடுத்துக்கலை.

அவங்களுக்கும் நம்மை புரிஞ்சுக்கறதுக்கான வாய்ப்பைக் கொடுக்கலை. அதுக்குள்ள இந்த பெரியவங்க... அவங் களைப் போட்டு விசாரணை... அப்படி இப்படின்னு பண்ணினதால்தான் எங்களுக்கும் கொஞ்சம் கோபம் வந்துடுச்சு" என்றான் கலைச்செல்வன்.

"சரி... சரி... பரவாயில்லை. இப்பதான் ஒரு சமநிலைக்கு வந்தாச்சே. பெரியவங்களும் புரிஞ்சுகிட்டாங்க. நீங்களும் அதைப் பேசிக்கிட்டு இருக்கக்கூடாது" என்றான் பாலகுமாரன்.

"ஆமாம். சித்தப்பா... அது என்னமோ நிஜம்தான். இப்போ, இனி எங்க கருத்துகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கணும் அப்படீங்கற விஷயத்தை நாம புரிய வச்சாச்சு. அவங்களும் ஏத்துக்கிட்டாச்சு. அதனால இனிமே பெரியவங்களை நாம மதிச்சு நடந்துக்கணும்" என்று சொன்னான் நவனீதன்.

"ஓகே! தீர்மானத்துக்கு எத்தனை பேரு ஆதரவு? எத்தனை பேரு எதிர்ப்பு?" என்று குரல் கொடுத்தான் நிர்மல்குமார்.

"ஏகமனதா தீர்மானம்...டா..." என்றான் கரிகாலன்.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

அப்போதுதான் தன் மனத்தில் வெகுநாட்களாக இருந் அந்தக் கருத்தைக் கேட்டு விட வேண்டும் என்று நினைத் கொண்டிருந்தான் பாலகுமாரன்.

மெல்ல கலைச்செல்வனை தனியே அழைத்துக்கொ போனான்.

அதே போல ஜெயந்தியும் கிட்டத்தட்ட அதே நிலைமையில் மாலதியைத் தனியாக அழைத்துக்கொண்டு போனான்.

கலைச்செல்வனிடம் பாலகுமாரன் கேட்டான்.

“எப்பா! நான் கேட்கிறேன்னு தப்பா நினைக்கக்கூடாது. இந்த ஆபரேஷன்ல... அதாவது ஜெயந்திக்கு ஆதரவா நீங்க எல்லாருமா ஒரு ஆபரேஷன் பண்ணினீங்களே... இதுல நீயும் மாலதியும்தான் ரொம்ப தீவிரமா திட்டம் போட்டீங்களாம். கூடிக் கூடி உட்கார்ந்து பேசிக்கிட்டே இருந்தீங்களாம்” என்று கேட்டான்.

“ஆமாம். அதுக்கென்ன?” என்றான் கலைச்செல்வன்.

“இல்ல. உங்க ஜெயந்தி பிரச்னைக்காகத்தான் நீங்க பேசினீங்களா... இல்லை மாமன் மகனும் அத்தை மகளும்... வேறு ஏதாவது...” என்று இழுத்தான் பாலகுமாரன்.

கலைச்செல்வன் மறுபடியும் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

“மாமா! நீங்களே இப்படி கேட்டா நான் என்ன பண்றது? நல்லா யோசித்துப் பாருங்க. நானும் மாலதியும் ஒரே வீட்ல வளர்ந்தவங்க... கிட்டத்தட்ட ஒரு சகோதரன், சகோதரி மனப்பான்மைதான். அதுமட்டுமில்லாம... நெருங்கின உறவுல கல்யாணம் பண்ணக்கூடாதுன்னு சொல்றாங்க மாமா...” என்றான்.

பாலகுமாரனும் அதனை ஆமோதிப்பது போல புன்னகைத்தபடி சொன்னான். “ஆமாம்ப்...பா. அப்படித் தான் சொல்றாங்க” என்றான்.

கிட்டத்தட்ட மாலதியும் அதே பதிலைச் சொல்லவே... ஜெயந்தியும் பாலகுமாரனும் சற்று கிடைத்த இடைவெளியிலே பேசிக்கொண்டார்கள்.



“ஜெயந்தி ஒரு விஷயம் தெரியுமா, எனக்கு ஒரு டவுட் இருந்தது. கலை கிட்ட கேட்டேன். கலை, அப்படி யெல்லாம் ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டான்” என்றான்.

ஜெயந்தி கண்களை அகல விரித்துக் கொண்டு சிரித்தாள்.

“எங்க.. எனக்கும் இதே சந்தேகம் இருந்துதுங்க. நானும் மாலதி கிட்ட கேட்டேன். மாலதியும் அதே மாதிரியே சொல்லிட்டாப்ல” என்றாள்.

“அப்பாடா! பிரச்னை தீர்ந்தது. இதை பெரியவங்கிட்ட சொல்லிடலாம்” என்றான் பாலகுமாரன்.

அதற்குப் பிறகு அவர்கள் அங்கே செலவழித்ததெல்லாம் மகிழ்ச்சியான நேரம்தான். மாலை வரை இருந்தார்கள். இளைஞர் பட்டாளம் அந்த கால்வாயில் குளித்தும் நீந்தியும் இடையிடையே வந்த சிற்றுண்டியை அவர்கள் உண்டுகொண்டும் ஒரே கலாட்டாவாக இருந்தது.

அதற்குப் பிறகு அவர்கள் கிளம்பினார்கள்.

பாலகுமாரனும் ஜெயந்தியும் தனிமையைக் கொண்டாடிக் கொள்ளும் விதமாக அந்த கெஸ்ட் ஹவுஸ்ல தாங்கள் தங்கியிருந்த அறைக்கு போனார்கள்.

“அப்பா, மழை பெய்ஞ்சு ஓய்ந்த மாதிரி இருக்கு. இல்லைங்க” என்றாள் ஜெயந்தி.

“அப்படியும் வேணும்தான் ஜெயந்தி” என்று சிரித்தான் பாலகுமாரன்.

“ஆமாங்க” என்றவள், தன் கணவனுடைய முதுகுப் புறத்தின் பின்னால் போய் நின்று தன் இரண்டு கைகளாலும் அவனது தோள்களை வளைத்து அவன் பின்னால் சாய்ந்து கொண்டாள்.

பாலகுமாரன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

எதிரே இருந்த கண்ணாடியிலே அது பிரதிபலித்து அதைப் பார்த்து அவளும் புன்னகைத்தாள்.

"இதுவும் நல்லாத்தானே இருக்கு" என்றாள்.

"எதுவும்?" என்று அவன் குறும்பாகப் பார்க்க...

"இல்லை... இப்படி ஒரு பெரிய குடும்பத்துல வாழ்க்கைப் பட்டு கலகலன்னு இருக்கறதும் ரொம்ப நல்லாதான் இருக்கு. தனிமை உணர்வே வராது இல்லையா?" என்றாள்.

"ம்..." என்றான் பாலகுமாரன் புன்னகைத்தபடி.

"அதுமட்டுமில்லை. இன்னொரு விஷயம் தெரியுமா?" என்றாள்.

மெல்லத் திரும்பி அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு சொன்னான்.

"இந்த மாதிரி ஒரு பெரிய கூட்டத்துல இருக்கும்போது நான் எப்டா பிரைவசி கிடைக்கும்னு ஏங்கிப் போயிருவோம். அப்படி ஏங்கிப் போயி ஒரு பிரைவசி கிடைக்கும்போது அதோட வேல்யூவே தனிதான்" என்றான்.

அவள் சிரித்தாள். "ஆமாங்க..." என்றாள்.

"அப்படித்தான் பாரு. இப்பக் கிடைச்சுருக்கிற தனிமை கூட சுகமாதான் இருக்கு" என்றான்.

"என்னது... இது மணி எட்டு ... ஒன்பதுகூட ஆகலை..." என்று அவள் செல்லமாகச் சிணுங்க, "இதற்கெல்லாம் நேரம்காலம் இல்லை ஜெயந்தி. நாம இங்க வந்துருங்கிறது இட்டத்தட்ட ஹனிமூன் கொண்டாடற மாதிரி. அதுமட்டுமல்ல... அண்ணா, அடுத்த மாசம் வெளிநாடு வேணும்னாலும் போயிட்டு வாங்கடா. அனுப்பித் தர்றேன்னு சொல்லியிருக்காரு" என்றான்.

உடனே அவள் புன்னகைத்தபடி, "அவங்க ரொம்ப பெரியவங்க. அதை நாம ஏத்துக்கத்தான் வேணும். உண்மையாகவே ரொம்ப பெருந்தன்மையானவங்க" என்றாள்.



அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்து முகத்தை நிமிர்த்தி, "என்ன நீ. வந்திருக்கிறது நம்ம இரண்டு பேருக்குமான தனிமையைக் கொண்டாடறதுக்கு. நீ என்ன எப்பப் பாரு... அவங்களைப் பற்றியே பேசிக்கிட்டு... என்னைப் பத்திப் பேசு" என்றான்.

"உங்களைப் பத்தி என்ன பேசணுமாம்?" என்று அவள் கேட்க, "எவ்வளோ இருக்கு பேச... இல்லைன்னா நான் வேற மாதிரி பேச ஆரம்பிச்சுடுவேன்" என்றான்.

"இத பேசற நேரமில்லைங்க... ம்..." என்றாள் அவள்.

"அதுசரி. அந்த பத்து நாளா உன்னைப் பிரிஞ்சிருக்க எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?" என்றான்.

"தெரியுங்க" என்றாள்.

"உண்மையாகவே என்ன விலை கொடுத்தாவது... எதைக் கொடுத்தாவது உன்னைச் சமாதானப்படுத்தி கூட்டிட்டு வர்றதுன்னே தவிச்சுப் போயிருந்தேன் தெரியுமா?" என்றான்.

அவள் தனது அன்பையெல்லாம் தன் கண்களில் தேக்கி தன் கணவன் தன்மீது அன்பைப் பொழிந்து கொண்டு சொல்கிற அந்த வார்த்தைகளை ஆர்வமாகப் பார்த்து கேட்டாள்.

"என்ன விலை கொடுத்தீங்க. சொல்லுங்க பார்க்கலாம்" என்று கேட்டாள் ஜெயந்தி.

அவன் சிரித்துக் கொண்டே சொன்னான். "என்ன விலை... இதயம் சொன்ன விலை. என்னுடைய இதயம் என்ன விலை சொல்லுதோ அந்த விலையைக் கொடுக்க நான் தயாராக இருந்தேன்" என்றான்.

"ஒரே ஒரு விலைதான் இதுக்கு ஃபிக்ஸ் பண்ண முடியும்" என்றாள் ஜெயந்தி வெட்கத்துடன்.

"சொல்லு... சொல்லு..." என்றான் ஆர்வமுடன்.

அவள் அவன் மார்பில் புதைத்துக்கொண்டு, ''நீங்க உங்களையே முழுசா எனக்குக் கொடுங்க. அதுதான் நீங்க எனக்கு குடுக்கிற விலை'' என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான்.

''அந்த விலைக்கு என்ன சன்மானம் பதிலா கிடைக்கும்?'' என்று கேட்டான்.

அவளும், ''நானும் என்னையே கொடுப்பேன்'' என்றாள்.

''இந்த இதயம் சொன்ன விலை, நல்ல விலையா இருக்குதே, பரவாயில்லையே'' என்று அவன் சிரித்துக் கொண்டு அவளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தான்.

அங்கே பூக்களின் சுகந்த மணம் வீசியது. மெல்ல வெளியே பார்த்தார்கள். நிலவு தெரிந்தது. மெய் மறந்த நிலையில் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

முற்றும்